வலிமையின் ஓர் சக்தி

நம்பிக்கையின் வெளிச்சம்

இலங்கை வங்கி ஆண்டறிக்கை 2023

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

வலிமையின் ஓர் சக்தி

நம்பிக்கையின் வெளிச்சம்

மாற்றத்தின் போக்கினை அரவணைத்து இலங்கை வங்கி எப்போதும் இலங்கையின் நிதியியல் களத்திற்குள் ஓர் உருமாற்றத்தக்க சக்தியாக இருந்து வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக, மாற்றமடைந்துவரும் வர்த்தகத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு எமது வழங்கல்களை தொடர்ச்சியாக பொருத்தமாக்கிய அதே வேளையில் உறுதிப்பாடு மற்றும் மீண்டெழுந்தன்மையை உந்துவித்து மாற்றமடைந்துவரும் சந்தை இயங்கியலுக்கு மத்தியில் நாம் வெற்றிகரமாக பயணித்துள்ளோம். உறுதிப்பாட்டினை உடபுகுத்துவதற்கும் பரந்தளவில் தேசத்திற்கு ஆதரவளிப்பதற்கும் ஓர் கணிப்பிடப்பட்ட உபாயத் தொடருடன் மீட்சியை நோக்கிய எமது தேசத்தின் பாதையினை வழிநடத்தியதனால் 2023ஆம் ஆண்டில் எமது பொறுப்பின் சுமை பாரிய அளவினால் அதிகரித்தது.

உருமாற்றத்தக்க முன்னேற்றம் மற்றும் எமது பங்காளர்களுக்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பெறுமதியின் உருவாக்கலை முன்னெடுப்பதற்கு புத்தாக்கம் மற்றம் அதி நவீன தொழில்நுடபத்தினால் வலுவூட்டப்பட்ட நீடித்து நிலைத்திருக்குந்தன்மை மற்றும் சூழல், சமூக மற்றும் ஆளுகை வழக்கங்களை தழுவியுள்ளோம். எமது வலுவினை நாம் வலிமையுடன் மேலும் பலப்படுத்தும் வேளையில் தொடர்ச்சியாக சகல இலங்கையர்களுக்கும் வல்லமையின் ஓர் திடமான விசையாகவும் நம்பிக்கையின் வெளிச்சமாகவும் ஓர் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளோம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உள்ளடக்கம்

கண்ணோட்டம் → 1

தேசத்தின் நிதியியல் களத்தில் வழிகாட்டும் ஒளி

இந்த அறிக்கை பற்றி 4
ஒருங்கிணைந்த சிந்தனையின் மூலம் பெறுமதி உருவாக்கல் 7
ஒரே பார்வையில் இலங்கை வங்கி 8
செயலாற்றம் பற்றிய சிறப்பம்சங்கள் 12
பெறுமதி உருவாக்கல் பற்றிய சிறப்பம்சங்கள் 13
விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் 14

தலைமைத்துவ நுண்ணறிவு → 2

இணையற்ற நம்பிக்கையும் தலைமைத்துவமும்

தலைவரின் செய்தி 16
பொது முகாமையாளரின் மீளாய்வு 20
புதிதாக பொறுப்பேற்கும் தலைவரின் செய்தி 24
பணிப்பாளர்கள் சபை 26
கூட்டாண்மை முகாமைத்துவம் 32
நிறைவேற்று முகாமைத்துவம் 38

எமது மூலோபாயம் → 3

எமது மூலோபாய நோக்கம்

தொழிற்படும் களம் 44
பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் 49
பொருண்மையுடைய விடயங்கள் 53
மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு 57
உட்பொதிக்கப்பட்ட நிலைபேறுதன்மை 61
எமது வர்த்தக மாதிரி 64
பெறுமதிசேர் கூற்று 66

எமது செயலாற்றம் → 4

நிதியியல் வலு மற்றும் உறுதிப்பாட்டை முன்னெடுத்தல்

நிதியியல் மீளாய்வு 68
வர்த்தகப் பிரிவுகளின் செயலாற்றம் 73

பங்குதாரர் விளைவுகள் → 5

அனைவருக்குமான ஒன்றிணைக்கப்பட்ட பெறுமதி

எமது வாடிக்கையாளர்களுக்கான முதன்மைப் பங்காளர் 84
ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி 90
டிஜிட்டல் ரீதியாக அதிகாரம் பெற்ற வங்கி 98
எமது சகல செயற்பாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம் 103

ஆளுகை → 6

வலுவான ஆளுகையுடன் நிதி ஒருமைப்பாட்டை வலுப்படுத்தல்

கூட்டாண்மை ஆளுகை 111
கணக்காய்வுச் செயற்குழு அறிக்கை 122
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழு அறிக்கை 124
மனித வளங்கள் மற்றும் ஊதியச் செயற்குழு அறிக்கை 126
நிறுவனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் செயற்குழு அறிக்கை 128
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்குழு அறிக்கை 130
இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் 132

நிதியியல் அறிக்கைகள் → 7

நிதித் திறனுக்கான தரங்களின் நிர்ணயிப்பு

இலங்கை வங்கியின் நிதியியல் நடவடிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை 150
ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நாட்டம் 155
நிதியியல் அறிக்கையிடலின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று 156
சுயாதீன உத்தரவாத அறிக்கை 158
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு 159
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 160
நிதியியல் கூற்றுக்கள் - உள்ளடக்க அட்டவணை 165
இலாப நட்ட கூற்று 166
முற்றடக்க வருமானக் கூற்று 167
நிதியியல் நிலைமைக் கூற்று 168
உரிமை மாற்றங்களின் கூற்று 170
காசுப்பாய்ச்சல்கள் கூற்று 174
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 176

இணக்கப்பாட்டு பின்னிணைப்புக்கள் → 8

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு தேவைப்பாடுகள் 353
2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கமைவான இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள் 359
கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் வெளியிடப்பட்ட இல. 09 அமைவான விதிகளிளுடான இணக்கப்பாடு தேவைப்பாடுகள் 378
கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள் 384
இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் 386
மூலதனப் போதுமை 390

துணைத் தகவல்கள் → 9

GRI சுட்டி 402
சுயாதீன உத்தரவாத அறிக்கை - நிலைபேறுதன்மை 405
அமெரிக்க டொலரில் இலாபநட்டக் கூற்று 407
அமெரிக்க டொலரில் முற்றடக்க வருமானக் கூற்று 408
அமெரிக்க டொலரில் நிதியியல் நிலைமைக் கூற்று 409
காலாண்டுச் செயலாற்றம் 410
பங்கு மற்றும் தொகுதிக்கடன் தகவல்கள் 413
பத்து ஆண்டு புள்ளிவிபரச் சுருக்கம் - வங்கி 414
துணை நிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும் 416
நாடு ரீதியாக தொடர்பாளர் வங்கியியல் உறவுகள் 418
நாடு ரீதியாக பரிவர்த்தனைக் கம்பனிகள் 424
நிதியியல்/வங்கியியல் தொடர்பான சொற்களஞ்சியம் 425
கூட்டாண்மை அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டுக் கிளைகள் 430
நிறுவனத் தகவல்கள் 432

1

தேசத்தின் நிதியியல் களத்தில் வழிகாட்டும் ஒளி

நேர்மறையான கதிர்களை கொளுந்துவிடச்செய்யும் ஒளிவூட்டி வழிகாட்டும் சூரிய ஒளியின் கதிர்களைப் போலவே வெளிப்படையான மற்றும் நம்பகமான நிதியியல் சேவைகளை வங்கி வழங்குகிறது.

பரந்த அணுகல் மற்றும் ஆழமாக வேரூன்றிய இருப்புடன், உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சியின் வெளிச்சமாக வங்கி செயற்பட்டு வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதி அபிலாசைகளை நோக்கி சழிகாட்டுவதன் மூலம் பொருளா-தாரத்தை உற்சாகப்படுத்துகிறது.

இந்த அறிக்கை பற்றி



இலங்கை வங்கியின் ஆண்டறிக்கை 2023இற்கு வரவேற்கிறோம்

எமது பதினோராவது ஒருங்கிணைந்த அறிக்கை, பொருண்மையான நிதி, பொருளாதாரம், சமூகம் மற்றும் ஆளுகை விடயங்கள் தொடர்பான எமது செயல்திறன் மற்றும் எதிர்கால தோற்றப்பாடு பற்றிய ஓர் சமநிலையான மற்றும் துல்லியமான பிரதிபலிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையின் நோக்கம் முதன்மையாக எமது முக்கிய பங்குதாரர்களின் பெறுமதி உருவாக்கக் கரிசனைகளை தீர்ப்பதும் எமது வெளிவாரியான சூழல், இடர்பாடுகள் மற்றும் வாயப்புக்கள் மற்றும் எமது பங்காளர்களின் கரிசனைகள் ஆகியவற்றினால் வெளிப்படும் எமது பொருண்மையான விடயங்களை கருத்திற்கொண்டு எமது மூலோபாய குறிக்கோள்களுக்கெதிராக எமது முன்னேற்றத்தை பகிர்கிறோம்.



அறிக்கையிடல் நோக்கம் மற்றும் எல்லை

1 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரை இலங்கை வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (“குழுமம்” என்று கூட்டாக குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகள் குறித்த விரிவான நோக்கை இந்த அறிக்கை வழங்குகிறது. முக்கிய நிதி விடயங்கள் ஒருங்கிணைந்த தகவல்களை பிரதிபலிக்கின்ற அதே வேளையில் குழுமத்திற்குள் வங்கியின் மேலாதிக்கத்தைக் கருத்திற்கொண்டு நிதியல்லா விடயங்கள் வங்கியின் தொடர்பில் விவரிக்கப்படுகின்றன. அறிக்கையிடல் எல்லை முன்னைய ஆண்டிலிருந்து மாறாமல் உள்ளது மற்றும் குழுமத்தின் அளவு, கட்டமைப்பு அல்லது நிரம்பல் சங்கிலியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை.

இந்த அறிக்கையை கையொப்பமிடும் திகதிக்கு முன்னர் சபையில் ஏற்பட்ட மாற்றங்களின்படி, புதிதாக நியமிக்கப்பட்ட தலைவரின் செய்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.



பொருண்மைத் தன்மை

வெளிப்படுத்துகை அறிக்கையிடலுக்கு பொருத்தமான விடயங்களைத் நிர்ணயிப்பதற்கு இலங்கை வங்கி ஓர் இரட்டைப் பொருண்மை நோக்கினை கொண்டுள்ளது. இது பெறுமதியின் (நிதிப் பொருண்மை) உருவாக்கல் இல்லாவிடில் பாதுகாக்கும் எமது திறனை பாதிக்கும் விடயங்களையும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு சூழல், சமூகங்கள் மற்றும் சமூகத்தில் (தாக்க பொருண்மை) எமது தாக்கத்தையும் இனங்காண்கிறது. பொருண்மையான தலைப்புக்களை தீர்மானிப்பதற்கான வங்கியின் செயல்முறை மற்றும் அறிக்கையிடல் அளவீடுகளுடன் அவற்றின் ஒழுங்கமைப்பு ஆகியவை 53 முதல் 56 பக்கங்களில் உள்ள பொருண்மையான விடயங்கள் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு தரநிலைகள் மற்றும் கட்டமைப்புக்கள்

- 1938ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களும்
- 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனை தொடர்ந்த திருத்தங்களும்
- இலங்கை பட்டயக் கணக்காளர்களால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- 1987ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் மற்றும் திருத்தங்கள்
- இலங்கை பட்டையக் கணக்காளர்களின் பால் சமத்துவ அறிக்கையிடல் சட்டகங்கள்
- இலங்கை பட்டையக் கணக்காளர்களால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை செயலாட்சி 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த நடைமுறை குறியீடுகள்
- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பட்டியல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் சூழல், சமூக, ஆளுகை அறிக்கையிடல் கட்டமைப்பு
- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்பாடுகள் தொடர்பில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடுவதற்கான தேவைப்பாடுகளும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களும்

உலகளவில் சிறந்த நடைமுறைகள்

INTEGRATED REPORTING <IR>

சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு

Global Reporting Initiative GRI

சர்வதேச அறிக்கையிடல் முன்னெடுப்பின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அறிக்கையிடல் வழிகாட்டல்கள் (சர்வதேச அறிக்கையிடல் முன்னெடுப்பின் தரங்கள்)

SASB

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய கணக்கியல் தரச் சபையினால் வெளியிடப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான தொழில்துறை தரநிலை

SUSTAINABLE DEVELOPMENT GOALS

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான 2030 திட்டத்தின் இலக்குகளுக்கான உலகளாவிய குறிகாட்டி கட்டமைப்பு (A/RES/68/261)

முன்னெச்சரிக்கை கோட்பாடு

மைய வணிக நடவடிக்கைகளில் பிரதானமாக நிலைபேறுடையதன்மை தொடர்பில் வங்கியின் அணுகுமுறை முன்னெச்சரிக்கை கோட்பாட்டிற்கு அடிப்படை கரிசனையைக் கொண்டுள்ளது. நிலைபேறுடைய நிதியிடலை நோக்கிய வங்கியின் முயற்சிகள் பக்கம் 62இல் விபரிக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்பாடுகளின் சாத்தியமான எதிர்கணியமான தாக்கங்களை குறைப்பதற்கு மட்டுமல்லாமல் சூழல் மற்றும் பங்காளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை முன்கூட்டியே தீர்ப்பதற்கும் விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒருங்கிணைக்கப்பட்ட உத்தரவாதம்

முகாமைத்துவம், உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிவாரியான உத்தரவாத வழங்குநர்களின் இணைந்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் மூலம் நிதி மற்றும் நிதியல்லா தகவல்கள் இரண்டினதும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதனை நாம் நோக்காகக் கொண்டுள்ளோம். இந்த ஒருங்கிணைந்த உத்தவராத மாதிரியின் மூலம், முகாமைத்துவம், உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிவாரியான உத்தரவாத வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் உத்தரவாதத்தினை உகந்ததாகக்க நாம் முயல்கின்ற அதே வேளையில் வலுவான நெறிமுறைச் சூழல் மற்றும் இணக்கத்தை உறுதிசெய்வதற்கான பொறிமுறைகளை விருத்திசெய்கிறோம்.

கணக்காய்வுச் செயற்குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகள்

குழுவின் நிதியியல் அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறனை உறுதிசெய்யும் பொறுப்புடையது

தேசிய கணக்காய்வாளர் அலுவலகம்

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீதான வெளிவாரியான உத்தரவாதம்

கூட்டாண்மை முகாமைத்துவ அணி

அறிக்கையை தயாரிப்பதற்காக சபைக்கு பொறுப்பானவர்

தலைமைக் குழுவின் உள்ளீடு, குறுக்கு செயற்பாடு உள்ளக தகவல் மற்றும் ஏனைய தொடர்புடைய வெளிப்புற தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் வெளியிடப்பட்ட நீடித்து நிலைத்திருக்குந்தன்மை பற்றிய தகவல்கள் மெஸ்ஸர்ஸ் கே.பி.எம்.ஜி யினால் வெளிவாரியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டில் வெளியிடப்பட்ட நிதி அல்லாத தகவல்களின் பாரிய மீள் அறிக்கைகள் எதுவும் இருக்கவில்லை.

முன்னோக்கிய பார்வையுடைய கூற்றுக்கள்

குழுவின் எதிர்கால செயல்திறன் மற்றும் வாய்ப்புகள் குறித்த சில முன்னோக்கிய கூற்றுக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

எதிர்கால செயல்திறன் இல்லாவிடில் விளைவுகளின் உத்தரவாதங்களாக இந்த கூற்றுக்கள் கருதப்படமுடியாது ஏனெனில் இவை கணிக்கமுடியாத மற்றும் வங்கியின் கட்டுப்பாட்டிற்றகு அப்பாலான தோற்றம்பெற்றுவரும் இடர்நோர்வுகள், எதிர்கால நிகழ்வுகள், மாறும் சூழ்நிலைகள் மற்றும் ஏனைய காரணிகளினால் பாதிக்கப்படலாம். இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி எமது தற்போதைய எதிர்பார்ப்புக்களிலிருந்து உண்மையான முடிவுகளை இந்த நிகழ்வுகள் வேறுபடச்செய்யலாம்.

இந்த அறிக்கை பற்றி

எங்கள் புரட்சிகரமான அறிக்கையிடல் பயணம்

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சியில் ஓர் உந்து சக்தியாக வங்கியின் வகிபாகத்தினை சூரிய ஒளியின் நீடித்த கதிர்களிலிருந்து உத்வேகம் பெற முயற்சிப்பதனால் "வலிமையின் ஓர் சக்தி - நம்பிக்கையின் வெளிச்சம்" என்ற கருப்பொருளில் எங்கள் ஆண்டிற்கான அறிக்கை 2023 அமைந்துள்ளது. பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கும் மீண்டெழுவதற்கும் முழுமையான பெறுமதியை வழங்குவதற்கு பங்களித்து நாட்டிற்கான வங்கியாளராக அதன் நெறிமுறைகளுக்கு எற்ப 2023 இல் வங்கி தன் முயற்சிகளை விருத்திசெய்தது. ஒரு பொறுப்பான கூட்டாண்மை நிறுவனமாக எமது சூழல் மீதான தடத்தினை குறைப்பதற்காக அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துடன் இந்த அறிக்கை பங்காளர்கள் வாசிப்பதற்காக பல டிஜிட்டல் வடிவங்களில் மும்மொழிகளிலும் கிடைக்கிறது.



ஆண்டறிக்கை 2019



ஆண்டறிக்கை 2020




ஆண்டறிக்கை 2021



ஆண்டறிக்கை 2022

அறிக்கையிடலில் முன்னேற்றங்கள்



- தகவல்களின் அதிகரித்த தொடர்பு
- பொருண்மை மீதான அதிகரித்த கவனம் மூலம் மேம்பட்ட சுருக்கத்தன்மை
- வங்கி தனது வர்த்தக மாதிரியை மற்றும் அதன் வெளிப்புறு சூழல் மற்றும் அது எதிர்கொள்ளும் இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புக்களுக்கு பதிலளிக்கும் மூலோபாயத்தினை எவ்வாறு வடிவமைக்கிறது என்பது மீது அதிக கவனஞ்செலுத்தல்
- நிதியல்லா தகவல்களின் மேம்பட்ட விசாலம் மற்றும் உள்ளடக்கம்

வழிசெலுத்தல் சின்னங்கள்

பங்காளர்கள்

- வாடிக்கை-கையாளர்கள்
- தொழிலாளர்கள்
- பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள்
- சமூகம் மற்றும் சூழல்
- வர்த்தக பங்குதாரர்கள்
- ஒழுங்கு முறையாளளர்கள்

ஆறு மூலதனங்கள்

- நிதியியல் மூலதனம்
- தயாரிக்கப்பட்ட மூலதனம்
- மனித மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- சமூக மற்றும் உறவுகள் சார்ந்த மூலதனம்
- இயற்கை மூலதனம்

மூலோபாய தூண்கள்

- உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் நீடித்து நிலைத்திரு-க்கக்கூடிய வளர்ச்சி
- வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறப்பு
- டிஜிட்டல் சிறப்பு
- வெகுமதி அளிக்கும் கொடுகடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கொடுகடன் சொத்துப் பட்டியல்
- உயர் செயற் திறனுடைய அணியை கட்டி-யெழுப்புதல்

இடர்நேர்வு வகைகள்

- R1 கொடு கடன் இடர்நேர்வு
- R2 சந்தை இடர்நேர்வு
- R3 திரவத்தன்மை இடர்நேர்வு
- R4 மூலோபாய இடர்நேர்வு
- R5 தொழிற்பாடு இடர்நேர்வு

இந்த அறிக்கை பற்றிய உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் dgmfp@boc.lk க்கு அனுப்பிவைக்கவும்

இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்ட கையடக்க மற்றும் HTML வடிவத்தை பார்வையிட ஸ்கேன் செய்யவும்.

ஒருங்கிணைந்த சிந்தனையின் மூலம் பெறுமதி உருவாக்கல்

ஒருங்கிணைந்த சிந்தனை என்ற கோட்பாட்டை தழுவுவதனால் குறுங்கால மற்றும் நீண்ட கால விளைவுகளை சமநிலைப்படுத்த உதவும் ஒரு மனநிலையை ஊக்குவிக்கிறது. இது நிலையான பெறுமதியை உருவாக்குவதற்கான எமது இயலுமைக்கு அடிப்படையானது என்பதுடன் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பில் முழுமையான மற்றும் மூலோபாய அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

தொழிற்படும் களம்

பக்கங்கள் 44-48


பங்குதாரர்களின் மற்றும் தேவைகள் எதிர்பார்ப்புக்கள்

பக்கங்கள் 49-52

- வாடிக்கையாளர்கள்
- தொழிலாளர்கள்
- பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள்
- சமூகம் மற்றும் சூழல்
- வர்த்தக கூட்டாளர்கள்
- கட்டுப்பாட்டாளர்கள்

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

பக்கங்கள் 132-148



முக்கிய வர்த்தகப் பிரிவுகளினால் மூலோபாயத்தின் நிறைவேற்றல்

எமது மூலோபாயத்தின் முதனிலை உந்துதல்களாக வங்கியின் வர்த்தக அலுகுகள் பணியாற்றுகின்றனர்



சில்லறை வங்கியியல்

பக்கங்கள் 73-75



கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கியியல்

பக்கங்கள் 76-78



சர்வதேசம், திறைசேரி, முதலீடு மற்றும் வெளிநாட்டுத் தொழிற்பாடுகள்

பக்கங்கள் 79-82

எமது மூலோபாயத்தின் உருவாக்கம் மற்றும் வள ஒதுக்கீடு

மூலோபாய தூண்கள் பக்கங்கள் 57-60

- உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சி
- வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறப்பு
- டிஜிட்டல் சிறப்பு
- வெகுமதியளிக்கும் கொடுகடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கொடுகடன் சொத்துப்பட்டியல்
- உயர் செயற்திறனுடைய அணியை கட்டியெழுப்புதல்

வள ஒதுக்கீடுகள் பக்கங்கள் 57-60

- நிதியியல் மூலதனம்
- தயாரிக்கப்பட்ட மூலதனம்
- மனித மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- சமூக மற்றும் உறவுகள் சார்ந்த மூலதனம்
- இயற்கை மூலதனம்

இடர்நேர்வுகளை முகாமைத்துவஞ்செய்தல், வலுவான கூட்டாண்மை ஆளுகையை உறுதியசெய்த்ல் மற்றும் நீடித்து நிலைத்திருகுந்தன்மையை உட்பொதித்தல்

இடர்நேர்வு முகாமைத்துவதம்

இடர்நேர்வுகளை முகாமைத்துவஞ்செய்வதற்கு ஒரு முறையான மற்றும் செயலூக்கமான அணுகுமுறையை நாங்கள் பின்பற்றுகிறோம். இது உறுதிப்பாடு மற்றும் மீண்டெழுந்தன்மையை ஊக்குவிக்கும் அதே வேளையில் பங்குதாரர்களுக்கு தொடர்ந்து பெறுமதியை வழங்க வங்கிக்கு உதவுகிறது.

பக்கங்கள் 132-148

கூட்டாண்மை ஆளுகை

வங்கியின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரு வலுவான கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்பு வழிகாட்டுகிறது. இது தொழிற்பாடுகள் முழுவதிலும் நெறிமுறை மற்றும் பொறுப்பான நடத்தை மற்றும் வங்கியின் முக்கிய விழுமியங்கள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்திசைவாக்குதலை உறுதிசெய்கிறது.

பக்கங்கள் 111-131

நீடித்து நிலைத்திருத்தல்

எங்கள் அனைத்து செயல்பாடுகளிலும் நீடித்து நிலைதிருக்குந்தன்மை உட்பொதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான எங்கள் ஒப்பிய பொறுப்பு மூலம் நீடித்து நிலைத்திருக்கும் பெறுமதியை வழங்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். (UN SDGs)

பக்கங்கள் 61-63

பங்காளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்தல்

ஒருங்கிணைந்த சிந்தனை ஒரு வழிகாட்டும் கோட்பாடாக செயல்பட்டு வங்கியின் மூலோபாயத்தின் சீரமைப்பில் ஒரு முழுமையான நோக்கினை ஊக்குவிப்பதன் மூலம் பங்குதாரர்களுக்கான பெறுமதியை உருவாக்குகிறது. இலங்கை வங்கி அதன் பங்குதாரர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் எவ்வாறு வழங்கியது என்பது பக்கங்கள் 49 முதல் 52 வரையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

ஒரே பார்வையில் இலங்கை வங்கி

"தேசத்தின் வங்கியாளர்"

நாட்டின் முன்னணி உரிமம் பெற்ற வணிக வங்கியான இலங்கை வங்கியானது இலங்கை அரசுக்கு மட்டுமே சொந்தமானது. சொத்துக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள், வைப்புக்கல், இலாபங்கள் மற்றும் பணவனுப்பல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கித் துறையில் இலங்கை வங்கி குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளதுடன் தொழில்துறை சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் கடன்களும் முற்பணங்களிலும் 22%க்கும் அதிகமான பங்கைக் கொண்டுள்ளது.

உள்நாட்டு முறைமைசார் முக்கியமான வங்கியாக (D-SIB) எங்களது ஒப்பிய பொறுப்பானது கொடுக்கல்வாங்கல்களுக்கு அப்பாற்பட்டது - இது நீடித்த உறவுகளை உருவாக்குவதற்கும், நிதி வலுவூட்டலை வளர்ப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வழிநடத்துவதற்கும் விரிவடைகிறது. 80 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் மற்றும் சமூகத்தின் மூலக்கல்லாக, இலங்கை வங்கி அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட விரிவான வங்கியியல் தீர்வுகளை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது. வலுவான அடித்தளம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களின் குழுவுடன், நிதித் துறையின் வளர்ந்து வரும் களத்திற்குள் முன்னேற வங்கி தயாராக உள்ளது.



எமது தொலைநோக்கு

வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட புத்தாக்கமுடைய நிதியியல் தீர்வுகளை வழங்கும் வலுவான உலகளாவிய இருப்பைக் கொண்ட நாட்டின் விரும்பத்தக்க வங்கியாக இருக்க வேண்டும்.

எமது பணி

மிகவும் செயற்றினான, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட, தொழில்நுட்ப ரீதியாக அதிநவீன, நெகிழ்திறன் மற்றும் புதுமையான நிதி சேவைகளை தேசத்திற்கு உலகளாவிய அணுகலுடன் வழங்குதல், ஊழியர்களை மேம்படுத்துதல் மற்றும் பங்குதாரர்களுக்கு பெறுமதியை மேம்படுத்துதல்.

கூட்டாண்மை பெறுமதிக் கூற்று

- வாடிக்கையாளர் மையமாக இருப்பது
- அனைத்து வகையான பன்முக வடிவங்களையும் மதித்தல்
- உயர் மட்ட நெறிமுறைகள், ஆளுகை மற்றும் தொழில்முறைக்கு உறுதியளித்தல்
- துரிதம் மற்றும் புதுமைக்கு கவனம் செலுத்துதல்
- எங்கள் அனைத்து செயல்களுக்கும் பொறுப்புக்கூறல்.

சொத்துக்கள்
ரூ. 4.4
டிரில்லியன்

வைப்புக்கள்
ரூ. 3.9
டிரில்லியன்


கடன்கள் மற்றும் முற்பணங்கள்
ரூ. 2.5
டிரில்லியன்

மூலதனம்
ரூ. 251.7
பில்லியன்

மூலதன போதுமாந்தன்மை	வரிக்கு முன்னரான இலாபம்	தொழிலாளர்கள்	தொடர்பாளர் வங்கியியல் உறவுகள்	வாடிக்கையாளர்கள் தொடுமுனைகள்
15.8%	ரூ. 40.3 பில்லியன்	8,579	763	2,241

எங்கள் குழும கட்டமைப்பு மற்றும் முக்கிய வர்த்தகப் பிரிவுகள்

இலங்கை வங்கி



* தொழிற்பாட்டில் இல்லை



சில்லறை வங்கியியல்

சில்லறை வாடிக்கையாளர்கள் முதல் செல்வந்தர்கள் மற்றும் உயர் நிகர மதிப்புள்ள தனிநபர்கள் மற்றும் தொழில்முனைவோர் வரை சிறு வணிகர்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவாக கொடுகடன் வழங்கல், வைப்புக்கல், கொடுப்பனவு சேவைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வங்கியியல் தீர்வுகள் போன்ற பல்வேறு நிதி சேவைகளை நாம் வழங்குகிறோம்.



கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கியியல்

கம்பனி நிதியிடல் மற்றும் வைப்புக்கள், செயற்திட்ட நிதியிடல், வர்த்தக சேவைகள் மற்றும் கரைகடந்த வங்கியியல் வசதிகள் உள்ளடங்கலாக தனியார் துறை மற்றும் அரச துறை கமபனிகள் மற்றும் நிறுவனங்களுக்கு பல்வேறு நிதி சேவைகளை நாம் வழங்குகிறோம்.



சர்வதேச, திறைசேரி முதலீடு மற்றும் வெளிநாட்டு தொழிற்பாடுகள்

வங்கியின் சர்வதேச பிரிவு அந்நிய செலாவணி நடவடிக்கைகளை கையாளுகிற அதே வேளையில் திறைசேரி பிரிவானது திரவத்தன்மை மற்றும் நிதி முகாமைத்துவத்தை நிர்வகிக்கின்றது மற்றும் முதலீட்டுப் பிரிவு முதலீட்டு நடவடிக்கைகளை கையாளுகிறது. வங்கியின் வெளிநாட்டு கிளை நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு செயல்பாட்டு குழு பொறுப்பாகும்.


ஒரே பார்வையில் இலங்கை வங்கி

எங்கள் டிஜிட்டல் இருப்பு

www.boc.lk

எமது கால்தடம்

அதன் குறிப்பிடத்தக்க சொத்துக்கள், வைப்புத்தொகை மற்றும் கொடுகடன்கள் மற்றும் முன்பணங்களால் தீர்மானிக்கப்பட்டு உள்ளூரில் நிறுவப்பட்ட மிகப்பெரிய வங்கியாக தனது நிலையை இலங்கை வங்கி பேணுகிறது. முழுமையான வசதியுடைய மற்றும் மொபைல் கிளைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மையங்கள், தானியக்க வங்கி இயந்திரங்கள், பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்து மையங்கள் உள்ளடங்களாக தீவு முழுவதும் 2,200 க்கும் மேற்பட்ட நேரடி வாடிக்கையாளர் தொடு புள்ளிகளின் வலையமைப்பை உள்ளடக்கிய விரிவான தடத்துடன், வங்கி நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கிறது. இந்தியா, மாலத்தீவு மற்றும் சீசெல்ஸ் ஆகிய நாடுகளில் மூன்று கிளைகள், ஹுலஹ் மலேயில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுடனான கிளை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் லண்டனில் ஒரு முழு உரிமையாளரான துணை நிறுவனத்துடன் வங்கி வெளிநாடுகளில் செயல்படுகிறது.



கடல்கடந்த தொழிற்பாடுகள்


03 | 01 | 06

தொடர்பாடல் வங்கியியல் உறவுகள்

763

பரிமாற்றல் மையங்கள்

94



வட மாகாணம்
63 | 07 | 01 | 109 | 01 | 09

வட மத்திய மாகாணம்
50 | 03 | 01 | 120 | 01 | 08

வட மேல் மாகாணம்
59 | 03 | 01 | 145 | 02 | 05

மேல் மாகாணம்
131 | 37 | 02 | 434 | 01 | 09

சப்பரகமுவ மாகாணம்
49 | 02 | 01 | 133 | 02 | 09

கிழக்கு மாகாணம்
55 | 03 | 01 | 96 | 01 | 08

மத்திய மாகாணம்
65 | 07 | 01 | 154 | 02 | 13

ஊவா மாகாணம்
43 | 04 | 01 | 111 | 02 | 09

தென் மாகாணம்
65 | 03 | 01 | 178 | 03 | 07

● கிளைகள் ● மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள் ● மொபைல் கிளைகள் ● ATM/CDM/CRM ● SME மையங்கள் ● இலங்கை வங்கி கனெக்ட்



எங்களை எது வேறுபடுத்துகிறது

ரூ. 50.2 பில்லியன் வர்த்தக நாமப் பெறுமதி என்பது அதன் போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுத்திய இலங்கை வங்கி என்பது இலங்கையின் **முதற்தர வங்கியியல் வர்த்தக நாமமாகும்.**

இலங்கை என்பது சுற்றுச்சூழல் நீடித்து நிலைத்திருக்குந்தன்மை மற்றும் சமூகத்திற்கான பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஓர் நோக்கத்தால் இயக்கப்படும் வங்கியாகும். சமூகத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் நெறிமுறையான மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் வகையிலான முறையில் தனது வணிகத்தை மேற்கொள்வதில் ஓர் பெருமையான சாதனையைப் பெற்றுள்ளது.

பக்கம் 52

E

S

G

"சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தின் இலபாத்தின் மூலம் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சி" என்ற தொலைநோக்குப் பார்வையுடன் நல்லாட்சி மற்றும் சூழல், சமூகம் மற்றும் ஆளுகையில் தலைமையை நிலைநிறுத்த வங்கி உறுதிபூண்டுள்ளது.

பக்கங்கள் 103-109



உலகில் தலைசிறந்த ஆயிரம் வங்கிகளில் இடம்பெறும் ஓர் வங்கியாக இலங்கை வங்கி



ஆண்டிற்கான வங்கி 2023 (இலங்கை)



வேலை செய்வதற்கான சிறந்த மனிதவள நிறுவனம் - பூகோள மனிதவள சிறப்புத் தேர்ச்சி விருதுகள் 2023


முக்கிய குறியீடுகளில் அதன் நட்சத்திர செயல்திறனுக்காக வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது "தேசத்தின் வங்கியாளர்களாக" இலங்கை வங்கியின் மீண்டெழுந்தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

பக்கங்கள் 12-13

பல்வேறு வகையான கொடுகடன் மற்றும் வைப்பு பொருட்கள் மற்றும் ஏனைய நிதி சேவை தயாரிப்புகளுடன் வங்கி ஒரு போட்டித்தன்மையுடைய சில்லறை வங்கி வணிகம், ஒரு வலுவான கம்பனி வங்கி உரிமையை கொண்டுள்ளதுடன் அளவிடக்கூடிய வெளிநாட்டு இருப்பைக் கொண்டுள்ளது.

பக்கங்கள் 73-82

தனிநபர்கள், சில்லறை மற்றும் பெருநிறுவன நிறுவனங்களுக்கு **"கோயிங் கிரீன்"** கடன் வழங்குவதில் முன்னோடியாக நாட்டில் தலைமைப் பதவியை வகிக்கிறது, மேலும் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்ட சந்தைத் தலைவராகவும் உள்ளது.



மேல் அடுக்கு வாடிக்கையாளர் திருப்தி அளவீடுகள் மற்றும் **73 சதவீதத்திற்கு மேலாக** ஒப்பிடமுடியாத வாடிக்கையாளர் ஊடுருவல்.



வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ பதிவுகள்.

- வெளிநாடுகளில் எங்கள் தொடர்பாடல் வங்கி உறவுகள்
- உள்நோக்கிய பண அனுப்புதலில் சந்தைத் தலைவர்
- பல்வகைத்தன்மை கொண்ட பணியாளர் தளம்

செயலாற்றம் பற்றிய சிறப்பம்சங்கள்

	வங்கி			குழுமம்		
	2023	2022	மாற்றம் %	2023	2022	மாற்றம் %
நிதிச் செயலாற்றம் (ரூ. மில்லியன்)						
மொத்த வருமானம்	**542,187**	513,149	5.7	**551,867**	520,891	5.9
தேறிய வட்டி வருமானம்	**91,188**	126,346	(27.8)	**95,510**	129,769	(26.4)
நிதியியல் சேவைகள் மீதான வரிகளுக்கு முன்னரான இலாபம்	**53,006**	42,290	25.3	**54,695**	42,372	29.1
வரிக்குப் முன்னரான இலாபம்	**40,342**	30,977	30.2	**41,773**	31,053	34.5
வரிக்குப் பின்னரான இலாபம்	**26,694**	31,972	(16.5)	**27,618**	31,849	(13.3)
அரசிற்கான பெறுமதி	**25,948**	31,949	(18.8)	**26,999**	32,606	(17.2)
நிதியியல் நிலைமை (ரூ. மில்லியன்)						
மொத்தச் சொத்துக்கள்	**4,411,748**	4,336,460	1.7	**4,467,760**	4,390,769	1.8
மொத்த கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்	**2,457,772**	2,584,779	(4.9)	**2,491,981**	2,617,905	(4.8)
வாடிக்கையாளர் வைப்புக்கள்	**3,882,232**	3,334,774	16.4	**3,909,581**	3,358,198	16.4
மொத்த பொறுப்புக்கள்	**4,160,034**	4,082,276	1.9	**4,195,181**	4,118,238	1.9
மொத்த மூலதனம்	**251,715**	254,184	(1.0)	**272,579**	272,531	0.0
பங்கொன்றிற்கான தரவு (ரூபா)						
பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு	**1,068**	1,279	(16.5)	**1,103**	1,280	(13.8)
பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி	**10,069**	10,167	(1.0)	**10,858**	10,859	0.0
செயலாற்ற விகிதங்கள்						
சராசரிச் சொத்துக்கள் மீதான வருவாய்	**0.9**	0.8	0.1	**0.9**	0.8	0.1
சராசரி மூலதனம் மீதான வருவாய்	**10.6**	14.1	(3.5)	**10.1**	13.1	(3.0)
வட்டி எல்லை	**2.1**	3.1	(1.0)	**2.2**	3.2	(1.0)
வருமானத்திற்குச் செலவு	**55.7**	29.4	26.3	**56.8**	30.8	26.0
வைப்புக்களுக்கு கொடுகடன்கள்	**63.3**	77.5	(14.2)	**63.7**	78.0	(14.3)
மூலதனத்திற்கு கொடுகடன்	**32.2**	43.9	(11.7)			
மொத்த கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக கடன்பழுது ஏற்பாடு	**10.1**	10.0	0.1	**10.1**	10.0	0.1
செயற்பாடற்ற கொடுகடன்கள் (கட்டம் 3)	**5.1**	5.3	(0.2)			
கட்டம் 3 கொடுகடன்களுக்கு கடன்பழுது ஏற்பாடு (கட்டம் 3)	**60.4**	59.7	0.7			
நியதி விகிதங்கள் (%)						
திரவச் சொத்து விகிதம் (உள்நாட்டு) (குறைந்தபட்ச தேவைப்பாடு 20%)	**42.8**	21.2	21.6			
திரவக் காப்பீடு விகிதம் (ரூபாய்) (குறைந்தபட்ச தேவைப்பாடு 2023 – 100%, 2022 – 90%)	**316.0**	169.0	147.0			
திரவக் காப்பீடு விகிதம் (அனைத்து நாணயங்கள்) (குறைந்தபட்ச தேவைப்பாடு 2023 – 100%, 2022 – 90%)	**227.2**	122.8	104.4			
தேறிய நிலையான நிதியிடல் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு 2023 – 100%, 2022 – 90%)	**145.0**	137.0	6.0			
முடக்கி விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 3%)	**4.8**	4.6	0.2	**5.0**	4.7	0.3
மூலதன போதுமை விகிதம் (%)						
பொது மூலதன அடுக்கு 1 மூலதனம் (குறைந்தபட்ச தேவைப்பாடு – 8.50%)	**11.7**	11.3	0.4	**12.1**	11.4	0.8
அடுக்கு 1 மூலதனம் (குறைந்தபட்ச தேவைப்பாடு – 10.00%)	**12.8**	12.4	0.4	**13.1**	12.4	0.7
மொத்த மூலதனம் (குறைந்தபட்ச தேவைப்பாடு – 14.00%)	**15.8**	15.4	0.4	**16.2**	15.3	0.9

பெறுமதி உருவாக்கல் பற்றிய சிறப்பம்சங்கள்

	அளவீடு	2023	2022	மாற்றம்%
பொருளாதாரச் செயலாற்றம்				
பொருளாதார பெறுமதி உருவாக்கம்				
அரசிற்கான பெறுமதி	ரூ. பில்லியன்	**25.9**	31.9	(18.7)
உள்நோக்கிய பணவனுப்பல்கள் மூலம் வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள்	ஐ.அமெ.டொ. பில்லியன்	**4.8**	3.2	53.3
வலுத் துறைக்கான பங்களிப்பு	ஐ.அமெ.டொ. பில்லியன்	**3.0**	1.9	56.9
நலத்துறைக்கான பங்களிப்பு	ஐ.அமெ.டொ. மில்லியன்	**130.3**	70.0	86.2
நுண், சிறிய மற்றும் நடுத்தரதொழில்முயற்சிகள் துறைக்கான பங்களிப்பு	ரூ. பில்லியன்	**66.3**	52.6	26.1
புத்துயிரளிக்கப்பட்ட வணிக வெளிப்படுத்துகை	ரூ. பில்லியன்	**82.2**	65.4	25.7
நிதியியல் உள்ளடக்கம்				
நுண்நிதியிடல் மூலம் வழங்கப்பட்டது	ரூ. பில்லியன்	**11.0**	5.4	104.2
நுண்பாக நிதித் துறைக்கான புதிய கொடுகடன்கள்	இல.	**32,115**	21,495	49.4
பெண்களினால் முன்னெடுக்கப்பட்ட வர்த்தகங்களுக்கான நுண்பாக நிதியிடல்	வீதம்	**30**	31	(1.4)
மேல் மாகாணத்திற்கு வெளியே வாடிக்கையாளர் தொடுமுனைகள்	இல.	**1,617**	1,561	4.0
புதிய இலங்கை வங்கி கனெக்ட் முகவர்கள்	இல.	**43**	34	26.5
புதிய இலங்கை வங்கி மித்துறு அமைப்புக்கள்	இல.	**214**	130	64.6
நிறுவப்பட்ட இலங்கை வங்கி கம்மன	இல.	**4**	2	100.0
அசுவெசும நிகழ்ச்சித்திட்டத்திற்கு கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் (குறைந்த வருமானமீட்டுவோருக்கான சமூக நலன் நிகழ்ச்சித்திட்டம்)	இல.	**353,764**	பொருந்தாது	
சமூகச் செயலாற்றம்				
தொழிலாளர்கள்				
தொழிலாளர்கள் மீதான முதலீடு	ரூ. பில்லியன்	**29.8**	29.0	2.8
ஆட்சேர்ப்பு	இல.	**764**	57	1,240.4
பதவி உயர்வுகள்	இல.	**946**	588	60.9
மொத்த பயிற்சி மணித்தியாலங்கள்	மனித மணி	**275,019**	129,493	112.4
பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு	ரூ. மில்லியன்	**200.1**	73.9	170.8
தேங்கும் வீதம்	வீதம்	**95**	98	(3.1)
வாடிக்கையாளர்கள்				
வாடிக்கையாளர் தொடுமுனைகள்	இல.	**2,241**	2,166	3.5
டிஜிட்டல் தொடுமுனைகள்	இல.	**1,490**	1,461	2.3
டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களின் வளர்ச்சி	%	**11**	10	1.0
புத்துயிர்க்கப்பட்ட வர்த்தகங்கள்	இல.	**174**	40	335.0
விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பங்குபெறுவோர்	இல.	**1,000** அண்ணளவாக	1,019	18.7
சுற்றுச்சூழல் செயலாற்றம்				
சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை இணக்கப்பாட்டிற்கு ஆராயப்பட்ட கொடுகடன்கள்	இல.	**1,223**	841	45.4
புதிய பச்சைக் கொடுகடன் வழங்கல்	ரூ. மில்லியன்	**530.9**	711.6	(25.4)
மறுசுழற்சிசெய்யப்பட்ட காகிதம்	மெட்ரிக்டொன்	**52.4**	21.9	139.4
மறுசுழற்சிசெய்யப்பட்ட காகிதத்திலிருந்தான சேமிப்புக்கள்				
மரங்கள்	இல.	**891**	373	138.9
எரிபொருள்	லீற்றர்	**91,994**	38,477	139.1
மின்சாரம்	கிலோ வோட்	**209,672**	87,696	139.1
நீர்	லீற்றர்	**1,665,844**	696,745	139.1
நிலக் குப்பை	மீற்றர் கனம்	**157**	66	137.9
சூரிய வலு உருவாக்கம்	மெகாவோட்	**3,245.3**	3,219.3	0.8

விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்





1. **2023 ஆம் ஆண்டின் சிறந்த வங்கி (இலங்கை)**

   தி பேங்கர் இதழ், இங்கிலாந்து

2. **முதலாமிட வங்கி பிராண்ட் - பிராண்ட் பினான்ஸ் லங்கா**

   ரூ. 50.2 பில்லியன் பிராண்ட் மதிப்புடன் தொடர்ந்து 15 வது ஆண்டாக முதலாமிட வங்கி பிராண்டாக இலங்கை வங்கி பெயரிடப்பட்டுள்ளது.

3. **முதல் 1000 உலக வங்கிகள் 2023 - தி பேங்கர் இதழ், இங்கிலாந்து**

   உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் 2023இல் இடம்பெற்ற ஒரே இலங்கை வங்கி.

தொழில்நுட்ப புத்தாக்கம் விருதுகள் 2023

4. எமது ஸ்மார்ட்பே செயலிக்கு மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு தயாரிப்புக்கான தங்க விருது (வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள்-கொடுப்பனவு மொபைல் செயலி)
5. நிதியியல் உள்ளடக்கம் பிரிவு ஏ இல் ஆண்டின் சிறந்த வங்கிக்கான தங்க விருது.
6. லங்கா பே ஆன்லைன் கட்டண தளத்தில் சிறந்த கையகப்படுத்துபவருக்கான தங்க விருது
7. வங்கிகளுக்கிடையேயான டிஜிட்டல் கொடுப்பனவுகளில் (வங்கி நிறுவனங்கள்) ஒட்டுமொத்த சிறப்புக்கான வெள்ளி விருது
8. சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கிக்கான வெள்ளி விருது

   பீ செயலிக்காக மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு தயாரிப்புக்கான (வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் இணையவழி வங்கித்தொழில் சேவைகள்)

   ஏ பிரிவில் ஆண்டின் சிறந்த பொதுவான தன்னியக்க வங்கி இயந்திரத்தை செயல்படுத்துபவருக்கான மெரிட் விருது

9. **டராஸ் கொடுப்பனவு கூட்டாளர் செயல்திறன் விருது 2023**

   "டராஸ் கொடுப்பனவு கூட்டாளரின் செயலாற்றம் விருது 2023" "சிறந்த செயல்திறன் கொண்ட டெபில் அட்டை வளர்ச்சி 2023" விருதை இலங்கை வங்கிக்கு வழங்கியது.

10. **டேக்ஸ் விருதுகள்-இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்**

    ஆண்டறிக்கை 2022 க்கான தங்க விருது-அரச வங்கிகள் பிரிவில் சிறந்து விளங்குதல்

நீடித்து நிலைத்திருக்குந்தன்மை விருதுகள்

இலங்கை பசுமைக் கட்டிடக் கவுன்சில் இலங்கை வங்கியை

11. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வங்கித் துறையின்

    பசுமைப் வணிக தலைமைத்துவ விருது .

12. 2023 ஆம் ஆண்டின் பசுமை அர்ப்பணிப்பு சிறப்புக்கான விருது
13. இலங்கை வங்கி நகர கிளை-பசுமை செயல்திறனை மேம்படுத்தியதற்கான அங்கீகாரத்தில் வெள்ளி விருது
14. பொருளாதார பங்களிப்புக்கு நிலையான அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான சிறந்த பெருநிறுவன குடிமகன் நீடித்து நிலைத்திருக்குந்தன்மை விருதுகள் 2023
15. கார்பன் உணர்வு சான்றிதழ்-வரையறுக்கப்பட்ட தனியார் க்ளைமேட் ஸ்மார்ட் இனிசியேட்டிவ்

மனிதவள விருதுகள்

16. ஆசியா சிறந்த முதலாளி பிராண்ட் விருதுகள் 2023
17. பணியாற்றுவதற்கு சிறந்த மனிதவள அமைப்புகள்-உலகளாவிய மனிதவள சிறப்பு விருதுகள் 2023

சேவையில் சிறப்பு

18. ஸ்லிம்-கன்டார் மக்கள் விருதுகள் 2023

    2023ஆம் ஆண்டிற்கான சிறந்த வங்கித்தொழில் சேவை வழங்குநர்

    எல்எம்டீ வாடிக்கையாளர் அளவீடு சிறப்பு - இலங்கையின் சிறந்த 3 வங்கிகளில் ஒன்று



2

இணையற்ற நம்பிக்கையும் தலைமைத்துவமும்

ஏராளமான புதுப்பிக்கத்தக்க வலுவின் மூலமாக சூரிய ஒளி பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளைத் தக்க வைத்துக் கொண்டு உணவுச் சங்கிலியின் அடிப்படையை உருவாக்குவதுடன் காலநிலை சீராக்கத்திற்கு வெப்பத்தை வழங்குகிறது.

உறுதியான அடித்தளத்துடன் உறுதிப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதன் மூலம் தனிநபர்கள் மற்றும் வணிகங்களை செழிப்பை நோக்கி வழிநடத்துவதன் மூலம் நிதியியல் களத்தில் நீடித்த நம்பிக்கை மற்றும் உத்தரவாதத்தின் அடையாளமாக வங்கி செயல்படுகிறது.

தலைவரின் செய்தி

"டிஜிட்டல் மாற்றம் மற்றும் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றில் வங்கியின் மூலோபாய கவனம் 2023 ஆம் ஆண்டில் முன்னெப்போதையும் விட அதிகளவில் இருந்தது. எமது டிஜிட்டல் வங்கி முன்னெடுப்புக்களை நாங்கள் துரிதப்படுத்தி எமது வாடிக்கையாளர்களின் மாற்றமடைந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எங்கள் இணைய மற்றும் மொபைல் வங்கித் தளங்களை கணிசமாக மேம்படுத்தியுள்ளோம்."

ரொனால்ட் சி பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி
தலைவர்



பல சவால்களை எதிர்கொண்ட ஒரு ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நிதி உள்ளடக்கத்தை வளர்ப்பதற்கும், எமது நாட்டில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை ஆதரிப்பதற்கான தனது ஒப்பியபொறுப்பில் இலங்கை வங்கி உறுதியாக இருந்தது. தொழிற்பாடு களத்தில் பல சோதனைகள் இருந்தபோதிலும், வங்கி ஒரு வலுவான செயலாற்றத்தினை வழங்கி சந்தையில் அதன் தலைமை நிலையை வலுப்படுத்தி நாடு முழுவதிலும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது. எனவே, எங்கள் கூட்டுத் தீர்மானம், உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் எமது மதிப்புமிக்க நிறுவன அமைப்பை வகைப்படுத்தும் உறுதியான மனப்பான்மையின் அறிவிப்பாக 2023 ஆம் ஆண்டின் வங்கியின் இந்த ஆண்டறிக்கையை உங்களுக்கு வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தொழிற்பாட்டுக் களம்

கோவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்பட்ட ஆழமான வடுக்கள் மற்றும் மேலும் சிக்கலாக்கிய புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து படிப்படியாக ஆனால் சீரற்ற மீட்சியினால் குறிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு ஓர் சிக்கலான உலகளாவிய பொருளாதார களத்தை வழங்கியது. இந்த அபிவிருத்திகள் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை சீர்குலைப்பது முதல் சர்வதேச சந்தைகளில் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகளை அறிமுகப்படுத்துவது வரை நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. சர்வதேச பொருளாதாரச் சூழல் பற்றிய ஆழமான பகுப்பாய்வின் அடிப்படையில இந்த உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் முகமாக இலங்கை வங்கியின் மூலோபாய முன்னெடுப்புக்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டன. நாங்கள் சுறுசுறுப்பாகவும் பதிலிறுத்தும் தன்மையுடன் இருப்பதனை உறுதிசெய்யும் முகமாக எங்கள் தொழிற்பாடுகள் மற்றும் மூலோபாய இலக்குகளில் சாத்தியமான பாதகமான தாக்கங்களை முன்கூட்டியே எதிர்பார்த்து அவற்றை தணிப்பதே எங்கள் நோக்கமாக இருந்தது,

உள்நாட்டில், இலங்கையின் பொருளாதார களம் பல சவால்களால் நிறைந்திருந்தது. கட்டடவாக்கம், சுற்றுலா, தயாரிப்பு, உண்மைச் சொத்துக்கள் மற்றும் நிதி சேவைகள் உள்ளிட்ட முக்கிய துறைகள் கடுமையான பின்னடைவுகளை எதிர்கொண்டதால் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க சுருக்கத்தை சந்தித்தது. நமது தேசியப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாத இந்தத் துறைகள், தனியார் கடன் பற்றாக்குறை, அத்தியாவசிய உள்ளீடுகளின் பற்றாக்குறை மற்றும் பரவலான விநியோகச் சங்கிலி இடையூறுகள் காரணமாக பாதிக்கப்பட்டன.

இதற்கு பதிலளிக்கும் வகையில், இந்த சவால்களை எதிர்கொள்ள மட்டுமல்லாமல், எங்கள் வாடிக்கையாளர்களையும் பரந்த பொருளாதாரத்தையும் வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட தொடரான மூலோபாய நடவடிக்கைகளை வங்கி மேற்கொண்டது. இந்த பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவையும் தீர்வுகளையும் வழங்குவதன் மூலம் உறுதிப்படுத்தும் சக்தியை வழங்குவதே எங்கள் முயற்சிகளின் நோக்கமாக இருந்தது.

வலிமையின் ஒரு சக்தி

ஆண்டு முழுவதும், இலங்கை வங்கி தனது செயல்பாடுகளை மத்திய வங்கியின் மூலோபாய நாணயக் கொள்கை சீராக்கங்களுடன் உன்னிப்பாக ஒழுங்கமைத்தது. ஆண்டின் முதல் பாதியில் நிலவிய உயர் வட்டி விகிதங்கள் ஜூன் 2023 இல் 550 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டதுடன் துணைநில் வைப்பு வசதி விகிதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி விகிதம் நவம்பர் 2023 இல் முறையே 9% மற்றும் 10% ஆக குறைக்கப்பட்டது. இந்த மாற்றங்களுக்கான எமது முன்மதியுடையான பதிலானது எங்கள் கொடுகடன் மற்றும் வைப்புப் பொருட்களை மறுசீரமைக்க எங்களுக்கு உதவிசெய்து இதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிக போட்டிகரமான விகிதங்களை வழங்கியது. இந்த மூலோபாய தழுவல் பணவீக்க அழுத்தங்களை மெதுவடையச்செய்தது மட்டுமல்லாமல் வணிகங்களுக்கும் தனிநபர்களுக்கும் கொடுகடன் மிகவும் அணுகக்கூடியதாகவும் கட்டுப்படியானதாகவும் மாற்றுவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளையும் ஊக்குவித்தது.

அந்நிய செலாவணி திரவத்தன்மை சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக, ஏற்றுமதி நிதியிடல் மற்றும் பண அனுப்புகைகளை ஊக்குவிப்பது உள்ளடங்கலான வலுவான உத்திகளை வங்கி செயல்படுத்தி மேலும் நாட்டின் அந்நிய செலாவணி நிலைமையை உறுதிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தது. இந்த முயற்சிகளின் எடுத்துக்காட்டாக பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்குகளை திரட்டுவதனை எய்து அதன் மூலம் திரவத்தன்மை அழுத்தங்களை எளிதாக்கி ஒரு முக்கியமான காலகட்டத்தில் தேசிய பொருளாதாரத்தை ஆதரித்தமை அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது.

அரசாங்கத்தின் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையிலும் வங்கி முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகள் அரசிற்கான வெளிநாட்டு நாணயக் கட்னகள் மற்றும் சர்வதேச நாட்டிற்கான முறிகள் மீதான முதலீட்டின் மூலம் அரச படுகடன்களுக்கான எமது வெளிபடுத்தகையின் காரணத்தினால் கடன் மீளமைத்தல் தொடர்பில் ஓர் மூலோபாயமான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறையை அவசியமாக்கியது. இந்த முன்னெடுப்புக்களில் எமது ஈடுபாடு அரசாங்கத்தின் இறை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதாரச் சூழலக்கு பங்களிப்புச் செய்ய எய்தியதுடன் இது தேசிய பொருளாதார மீண்டெழுந்தன்மைக்கான எமது பொறுப்பினை எடுத்துக்காட்டியது.

மீண்டெழுந்தன்மையுடைய நிதிச் செயலாற்றுகை

உலகளாவிய மற்றும் உள்நாட்டிலும் குறிப்பிடத்தக்க சவால்களால் குறிக்கப்பட்ட ஒரு ஆண்டில் வங்கியின் நிதிச் செயலாற்றுகை மீண்டெழுந்தன்மையுடனும் மூலோபாய தொலைநோக்கிய அடையாளமாகவும் நிற்கிறது. வரிக்கு முன்னரான இலாபம் கடந்த ஆண்டை விட 30% வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டில் ரூ. 40.3 பில்லியனாக இருந்ததை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். நாம் கடந்து வந்த பொருளாதாரப் பின்னடைவுகளைக் கருத்திற்கொள்ளும்போது இந்த சாதனை பெருமிதத்துடன் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய ஒன்றாகும். இந்த ஆண்டு வங்கியின்

தலைவரின் செய்தி

சொத்துத் தளம் 2% இனால் அதிகரித்து எங்கள் முன்மதியுடைய முகாமைத்துவம் மற்றும் மூலோபாய முதலீடுகளுக்கு ஒரு சான்றாகும். இந்த வளர்ச்சி, மிதமானதாக இருந்தாலும், நாடு எதிர்கொண்ட பொருளாதாரச் சுருக்கங்களின் பின்னணியில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. எங்கள் மூலோபாய ஒதுக்கீடுகள் 2020 முதல் ஒரு முன்னெச்சரிக்கை அணுகுமுறை பின்பற்றப்பட்டு, இந்த சாதனையில் முக்கிய பங்கு வகித்து எங்கள் சொத்துக்களின் வளர்ச்சி சாத்தியமான பொருளாதார அதிர்ச்சிகளுக்கு மத்தியிலும் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதாகவும் மீண்டெழுந்தன்மையுடையதாகவும் இருப்பதை உறுதி செய்தது.

இந்த மூலோபாய ஒதுக்கீடுகள் எமது நிதி நிலையை வலுப்படுத்தியது மட்டுமின்றி எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள எங்களை நன்கு நிலைநிறுத்தியது. எமது அணுகுமுறை இடர்பாடு மற்றும் வெகுமதியை சமநிலைப்படுத்தும் முறையில் அளவீடு செய்யப்பட்டது எங்கள் வளர்ச்சி அபிலாசைகளை மேற்கொள்ளும் அதே வேளையில் நாம் ஓர் உறுதிப்பாட்டான நிலையில் இருப்பதை உறுதிசெய்கிறது.

ஓர் மூலோபாய முன்னுரிமையாக டிஜிட்டல் நிலை மாற்றம்

டிஜிட்டல் நிலை மாற்றம் மற்றும் நிதியியல் உள்ளடக்கம் ஆகியவற்றில் வங்கியின் மூலோபாய கவனம் 2023 ஆம் ஆண்டில் முன்னெப்போதையும் விட அதிகமாக இருந்தது. எங்கள் டிஜிட்டல் வங்கி முன்னெடுப்புக்களை நாங்கள் துரிதப்படுத்தி எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எங்கள் இணைய மற்றும் மொபைல் வங்கி தளங்களை கணிசமாக மேம்படுத்தியுள்ளோம். தடையற்ற மற்றும் பாதுகாப்பான வங்கி அனுபவங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு எமது டிஜிட்டல் நுழைவினை தொடர்ந்து மேம்படுத்துவது இந்த ஒப்பிய பொறுப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த முயற்சிகள் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், நிதிச் சேவைகளுக்கான அணுகலை ஜனநாயகப்படுத்துவதும், டிஜிட்டல் வங்கி தீர்வுகளால் அதிகமான மக்கள், குறிப்பாக சேவை இல்லாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் பயனடைவதை உறுதி செய்வதும் ஆகும்.

வணிகங்களை வலுப்படுத்துதல்

2023 ஆம் ஆண்டில், எமது நாடு எதிர்கொண்ட சமூக-பொருளாதார சவால்களை எதிர்கொள்வதில், வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு பிரிவின் நிறுவல் மற்றும் தொழிற்பாடுகள் மூலம் வங்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்தது. தொற்றுநோய் மற்றும் கூட்டாண பொருளாதார அழுத்தங்களுக்குப் பிறகு போராடிக்கொண்டிருந்த வணிகங்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய முக்கியமான தேவையை அங்கீகரிப்பதன் மூலம் இந்த முன்னெடுப்பு உருவானது. இந்த அலகு மூலமான எங்கள் அணுகுமுறை வெறும் கொடுக்கல்வாங்கல் சார்ந்தது அல்ல, இது பொருளாதார மீட்சி மற்றும் நீடித்து நிலைத்திருக்குந்தன்மையை வளர்ப்பதற்கான ஒப்பிய பொறுப்பில் ஆழமாக வேரூன்றியிருந்தது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முக்கிய வகிபாகத்தை அங்கீகரித்து, சிறிய மற்றும் நடுத்தர SME (Circle) என்ற முன்னெடுப்பின் மூலம் வங்கி தனது ஆதரவை மேலும் தீவிரப்படுத்தியது. விநியோகச் சங்கிலி இடையூறுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளால் குறிக்கப்பட்ட ஓர் ஆண்டில், SME வட்டம் சந்தை இடைவெளிகளை நிரப்புவதில் முக்கிய பங்கு வகித்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தவும், அவர்களின் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் உதவியது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான எங்கள் இலக்கிடப்பட்ட ஆதரவு நிதி உதவிக்கு அப்பாற்பட்டது. இதில் இயலளவு மேம்பாட்டு பட்டறைகள், வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் பிற தொழிற்முயற்சிகளுடனான உறவை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் ஆகியவை உள்ளடக்கப்பட்டு இவை அனைத்தும் இந்த தொழில்முயற்சிகளின் அடித்தளங்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. மாறிவரும் சந்தை இயக்கவியலுக்கு ஏற்ப மாறுவதற்கும், தொழிற்பாட்டு சவால்களை சமாளிப்பதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவுவதன் மூலம் புதுமைகளை வளர்த்து, நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து இந்த முக்கியமான துறை புத்துயிர் பெறுவதற்கு நாங்கள் பங்களித்தோம்.

நீடித்து நிலைத்திருக்குந்தன்மைக்கான கடப்பாடு

இந்த ஆண்டில், சூழல், சமூக மற்றும் ஆளுகை கரிசனைகளை அதன் செயல்பாடுகளின் கட்டமைப்பில் ஒருங்கிணைப்பதற்கான தனது உறுதிப்பாட்டை வங்கி ஆழப்படுத்தியது மற்றும் சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளுடன் வணிக நடைமுறைகளை சீரமைக்க ஒரு மூலோபாய முன்னெடுப்பை தொடங்கியது. எமது சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான ஒருங்கிணைப்பு பயணத்தின் ஒரு முக்கிய படி, எமது சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான மூலோபாயத்தை உருவாக்குவதிலும் செம்மைப்படுத்துவதிலும் சிறப்பு நிபுணத்துவத்தைப் பயன்படுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். இந்த ஒருங்கிணைப்பு உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் நுண்ணறிவுகளை உள்ளடக்குவதற்கு எங்களுக்கு உதவிசெய்து சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான எங்கள் அணுகுமுறை விரிவானதும் சர்வதேச தரங்களுடன் ஒத்துப்போகின்றன என்பதை உறுதி செய்கிறது.

மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக வங்கிக்குள் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை பிரிவின் விரிவாக்கம் ஆகும். இது எமது நீடித்து நிலைத்திருக்கும் தீர்மானம் மேற்கொள்ளலில் ஓர் மைய அங்கமாகியது. கழிவுகளை மட்டுப்படுத்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் போன்ற புதுமையான தீர்வுகளை செயல்படுத்துவதில் நாங்கள்

அர்ப்பணிப்புடன் இருக்கிறோம், ஏனெனில் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நேர்மறையான பாரம்பரியத்தை விட்டுச் செல்வது எமது நம்பிக்கையாகும்.

இறுதிக் கருத்துக்கள்

டிஜிட்டல் முறையில் அதிநவீன நிறுவனமாக மாறுவதற்கான தனது பயணத்தை துரிதப்படுத்தவும், எல்லைகளைத் தாண்டி வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக்கு வசதிபடுத்துவதற்கும் வங்கி தயாராகவுள்ளது. எங்கள் தொலைநோக்கு டிஜிட்டல் மாற்றத்திற்கான ஓர் முழுமையான அணுகுமுறையை உள்ளடக்குவதுடன் வாடிக்கையாளர் ஈடுபாட்டை மேம்படுத்துவதில் குறிப்பாக முக்கியத்துவம் அளிக்கிறது. நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற, உள்ளுணர்வு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் திறனில் வங்கியின் எதிர்காலம் உள்ளது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எங்கும், எந்த நேரத்திலும் அனைவருக்கும் வங்கிச் சேவையை அணுகக்கூடியதாகவும், வசதியானதாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கம்.

ஊழியர் குழாமின் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படும். வேகமாக மாறி வரும் டிஜிட்டல் வங்கிச் சூழலில் செழிப்பதற்குத் தேவையான திறன்களையும் அறிவையும் எங்கள் அணியினருக்கு வழங்குவதே எங்கள் குறிக்கோள். டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், இணைய பாதுகாப்பு, அதிசிறப்புடைய வாடிக்கையாளர் சேவை மற்றும் சிக்கல் தீர்க்கும் புதுமையான நுட்பங்கள் ஆகியவற்றில் சிறப்பு பயிற்சி என்பது இதில் அடங்கும். எமது ஆளணியாளரில் முதலீடு செய்வதன் மூலம், தொடர்ச்சியான கற்றல் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு எங்கள் ஊழியர்கள் தங்கள் தற்போதைய வகிபாகங்களில் தேர்ச்சி பெற்றிருப்பது மட்டுமல்லாமல் எதிர்கால சவால்களையும் வாய்ப்புகளையும் தழுவிக்கொள்ள நன்கு தயாராக இருப்பதை உறுதிசெய்கிறது.

பாராட்டு

வங்கிக்கான மூலோபாய திசையை வழங்குவதில் தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஆதரவு வழங்கிய சபையில் உள்ள எனது சக ஊழியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகிறேன். 2023 ஆம் ஆண்டில் எங்கள் சபையிலிருந்து விலகிய திரு மணில்க பெர்னாண்டோ மற்றும் திரு ஹர்ஷ விஜயவர்தன ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் திரு நரேஷ் அபேயசேகர மற்றும் பேராசிரியர் கித்சிரி எம் லியானகே ஆகியோரை சபையிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு ரசல் பொன்சேகா, முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் மற்றும் இங்கை வங்கியின் அணியினருக்கு எமது மூலோபாய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு சவால்களைக் கையாள்வதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் அவர்களின் இடைவிடாத அர்ப்பணிப்பையும் நான் பாராட்ட விரும்புகிறேன்.

எங்கள் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கம் ஒரு வழிகாட்டும் சக்தியாக இருக்கிறது என்பதுடன் மாண்புமிகு நிதியமைச்சருக்கும் நிதியமைச்சின் அலுவர்களுக்கும் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவுக்கு எனது நன்றியை பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவரது அலுவலர்கள், எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், வணிக பங்காளிகள் மற்றும் வங்கியின் இன்றுவரை பயணத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த மற்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

மேலும், அண்மையில் சபையில் இணைந்த திரு ஜயமின் பெல்பொல மற்றும் திரு ஜெஹான் இஸ்மாயில் ஆகியோரை வரவேற்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். வங்கியை வெற்றியின் உச்சத்தை நோக்கி நகர்த்துவதற்கு புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்று வரும் தலைவர் திரு காவன் ரத்நாயக்காவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில், இலங்கையின் பொருளாதார மீளெழுந்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு பங்களிக்கும் தனது ஒப்பியபொறுப்பில் வங்கி உறுதியாக உள்ளது. நாங்கள் வாடிக்கையாளர்கள், பணிக்குழாமின் மற்றும் ஏனைய பங்காளர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்வதற்கு மட்டுமின்ற அதற்கு அப்பாலும் செய்ற்படுவதை உறுதிசெய்வதற்கு எமது பலங்களை மேம்படுத்துவதற்கும், புதுமைகளைத் தழுவுவதற்கும், நீடித்து நிலைத்திருக்குந்தன்மையை வளர்ப்பதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்,



ரொனால்ட் சி பெரேரா
- ஜனாதிபதி சட்டத்தரணி
தலைவர்

13 மார்ச் 2024
கொழும்பு

பொது முகாமையாளரின் மீளாய்வு



"வாடிக்கையாளர்கள், சமூகங்கள் மற்றும் முழு நாட்டிற்கும் அவர்களுக்கு தேவை ஏற்பட்ட நேரத்தில் சேவையாற்றுவதற்கான நோக்கு தொடர்பின் மீண்டெழுந்தன்மை,, தகவமைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வங்கி வெளிப்படுத்தியது என்பதை தெரிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்."

டபிள்யூ பீ ரசல் பொன்சேகா
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி

எமது நாட்டின் வரலாற்றில், எமது நிதி நிறுவனங்களின் வலிமை மற்றும் மீண்டெழுந்தன்மை சோதிக்கப்பட்ட முக்கியமான தருணங்கள் இருந்ததுடன் இந்த காலகட்டத்தில்தான் இலங்கை வங்கியின் உண்மையான தன்மை பிரகாசமாக பிரகாசித்துள்ளது. கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சவால்கள் கிளம்பியபோதிலும், வாடிக்கையாளர்கள், சமூகங்கள் மற்றும் முழு நாட்டிற்கும் அவர்களுக்கு தேவை ஏற்பட்ட நேரத்தில் சேவையாற்றுவதற்கான நோக்கு தொடர்பின் மீண்டெழுந்தன்மை,, தகவமைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வங்கி வெளிப்படுத்தியது என்பதை தெரிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். விவேகமான இடர்பாடு முகாமைத்துவ நடைமுறைகள், பன்முகப்படுத்தப்பட்ட வருவாய் வழிகள் மற்றும் செலவுசார் செயற்றிறனுள்ள அளவீடுகளினால் சவாலான காலங்களில் பயணிக்கவும் தோற்றம்பெற்று வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் நாங்கள் எம்மை நிலைப்படுத்தி, இலங்கையில் முன்னணி வங்கியாக எங்கள் நிலைப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். எனவே, கடந்த ஆண்டு வங்கியின் செயல்திறன் மற்றும் சாதனைகள் மற்றும் வங்கியின் முன்னோக்கி செல்லும் வழி பற்றிய ஆண்டிற்கான மீளாய்வை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

முழுமையான பெறுமதியின் வழங்கல்

பல ஆண்டுகளாக இணையற்ற சவால்களை நாங்கள் அனுபவித்திருந்தாலும் தேசத்திற்கான வங்கியாளர்களாக இருப்பதற்கான எங்கள் நெறிமுறைகளுக்கு நாங்கள் எப்போதும் உண்மையாக இருந்தோம். அனைத்துத் துறைகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான எங்கள் நோக்கம்; ஒவ்வொரு நபருக்கும் தங்கள் சமூகத்திலும் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சக்தி உள்ளது என்ற எங்கள் நம்பிக்கை; மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய எதிர்காலத்தை நோக்கி பணியாற்றுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு.

அதற்கு முந்தைய ஆண்டில், முன்னெப்போதும் இல்லாத வகையில், பணவீக்க உயர்வு, உயர் வட்டி வீதங்கள், தளம்பலுடைய செலாவணி வீதங்கள், கடுமையான திரவத்தன்மை பற்றாக்குறை, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தில் இடையூறுகள் மற்றும் சமூக மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட பின்னர் 2023 ஆம் ஆண்டில் எமது முக்கிய முன்னுரிமை விடயமாக பொருளாதார புத்துயிர்ப்பு இருந்தது. பொருளாதார நடவடிக்கைகளின் உந்துசக்தியாக அது வகிக்கும் முக்கிய பங்கை இலங்கை வங்கி அங்கீகரித்து சவால்களை சமாளிக்கவும், பொருளாதார மறுமலர்ச்சிக்கு பங்களிக்கவும் செயலூக்கமான வழிமுறைகளை மேற்கொள்ள உறுதிபூண்டது. இந்த வழிமுறையில், நாங்கள் தொழில்துறைகளை ஒரு தனித்துவமான அடிப்படையில் பார்க்கவில்லை, மாறாக முக்கியமான பொருளாதாரத் துறைகளை இனங்கண்டு, மேலும் முழுமையான நோக்கை மேற்கொண்டோம்.

முதல் படியாக, நாட்டில் வலுசக்தி பாதுகாப்பை நிலைநாட்ட நாங்கள் பணியாற்றினோம். பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் வலுசக்தி பாதுகாப்பு ஓர் அத்தியாவசிய தீர்வுப்பொருளாக உள்ளது என்பதுடன் மின் உற்பத்திக்காக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும் குறைந்து வரும் அந்நிய செலாவணி ஒதுக்குகளுக்கு மத்தியில் அதன் போக்குவரத்து முறைமையை இயக்குவதற்கும் நாடு சிரமப்பட்டதால், இலங்கை வங்கி இந்த சந்தர்ப்பத்தில் முன்வந்து வலுசக்தி உறுதிப்பாட்டினை பேணுவதற்கு பல்வேறு மூலோபாய முயற்சிகளை செயல்படுத்தியது. குறுகிய கால இலாபத்திற்கு அப்பால், எரிபொருள் கப்பல் ஏற்றரவுகள் மற்றும் பொருளாதாரத்தின் பிற அத்தியாவசிய துறைகளுக்கான அந்நிய செலாவணி வெளியீட்டிற்கு வங்கி முன்னுரிமை அளித்து இது நீண்ட காலத்திற்கு தொடர்ந்திருக்கக்கூடிய கடினங்களை எளிதாக்க உதவியது. உள்நோக்கிய பண வருவாய்களை ஊக்குவிப்பதன் மூலமும் நாட்டிற்கு ஏற்றுமதி வருமான பாய்ச்சல்களை ஊக்குவிப்பதன் மூலமும் இந்த அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியை வசதிப்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான நேரத்தில் எம் நாட்டிற்கும் சேவையாற்றுவதற்கும் கணிசமான அளவு அந்நிய செலாவணியை உருவாக்கக்கூடியதாகயிருந்தது.

இரண்டாவதாக, பொருளாதாரத்தில் பாதிக்கப்படக்கூடிய துறைகளை நாங்கள் அடையாளங்கண்டு மேலும் சிக்கலான சூழ்நிலைகளில் இருந்த வணிகங்களைப் பாதுகாக்க எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டோம். வங்கியின் வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு மூலம் அடையாளங்காணப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகங்களுக்கு நிதி, ஆலோசனை சேவைகள், இடர்பாடு முகாமைத்துவ தீர்வுகள் மற்றும் பணப்புழக்க முகாமைத்துவம் உள்ளடங்கலான தனிப்பயனாக்கப்பட்ட நிதி உதவி வழங்கப்பட்டது. கவனமான முகாமைத்துவம் மற்றும் தீவிர சிகிச்சை மூலம், எங்கள் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளை நாங்கள் அடையாளங்கண்டு, மீட்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பதிலாக அவர்களின் திரவத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் செயலாற்றலை முகாமைத்துவஞ்செய்வதில் கவனம் செலுத்தினோம். 2023 ஆம் ஆண்டில் 174 வணிகங்களை எம்மால் புதுப்பிக்க முடிந்தது. இந்த முயற்சியில் எங்கள் பணிக்குழாம் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு குறித்து நான் மிகுந்த அளவிலான பெருமிதம் கொள்கிறேன்.

> **"பொருளாதாரத்தில் பாதிக்கப்படக்கூடிய துறைகளை நாங்கள் அடையாளங்கண்டு மேலும் சிக்கலான சூழ்நிலைகளில் இருந்த வணிகங்களைப் பாதுகாக்க எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டோம்."**

எங்கள் மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதன் அவசியத்தை நாங்கள் உணர்ந்து, மேலும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதன் மூலம் மருந்தாக்கல் துறையை ஆதரிப்பதில் கவனம் செலுத்தினோம்.

ஒரு சிக்கலான மற்றும் தளம்பலுடைய பொருளாதார களத்தில், வங்கியின் நிதி வலிமை மற்றும் திறன் முழு நாட்டிற்கும் ஆதரவளிக்கும் அடித்தள தூண்களாகவும், எதிர்பாராத சவால்களுக்கு எதிராக மீண்டெழுந் தன்மையினை மேம்படுத்துவதாகவும் செயல்பட்டது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு இலங்கை வங்கியின் மீண்டெழுந்தன்மை மற்றும் பங்களிப்பு உலக அளவிலும் உள்நாட்டிலும் அங்கீகரிக்கப்பட்டு உலகின் சிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாகவும் தி பேங்கர் இதழ் ஐக்கிய இராச்சியத்தினால் "ஆண்டிற்கான வங்கி 2023-இலங்கை" தரவரிசையில் இடம்பெற்றதுடன் தொடர்ந்து 15 வது ஆண்டாக இலங்கையில் முதல் தர வர்த்தக நாமமாக இன்று பிராண்ட் பைனான்ஸ் நிறுவனத்தினால் பெயரிடப்பட்டது.

நிதியியல் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாடு

இந்த ஆண்டை ஒரு நேர்மறையான குறிப்பில் நாங்கள் முடித்தது மற்றும் எங்கள் நிதியியல் செயலாற்றமானது ஓர் சவாலான பொருளாதார

பொது முகாமையாளரின் மீளாய்வு

சூழலில் வெளிப்படுத்தப்பட்ட வலிமை மற்றும் உறுதிப்பாட்டிற்கு ஓர் சான்றாகும். வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம் ரூ. 40.3 பில்லியனாக இருப்பதுடன் இது வட்டி வருமானத்தில் 15% அதிகரிப்பால் ஆதரிக்கப்பட்டது.

இருப்பினும், வட்டி செலவுகள் வளர்ச்சியை விட அதிகமாக இருந்து இது தேறிய வட்டி வருமானத்தில் 28% சரிவுக்கு வழிவகுத்து, வணிக மறுமலர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கும் முயற்சியாக வட்டி வீத உயர்வுகளின் முழு தாக்கத்தையும் அதன் வாடிக்கையாளர்களுக்கு மாற்றக்கூடாது என்ற வங்கியின் உறுதிப்பாட்டை பிரதிபலித்தது.

முக்கியமாக அதிகரித்த அட்டை தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சில்லறை வங்கி சேவைகள் காரணமாக மற்றும் தேறிய கட்டணம் முகவர் கட்டண வருமானம் 8% அதிகரித்தது. இருப்பினும், இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்வினால் ஏற்பட்ட செலாவணி இழப்புக்களால் வர்த்தகத்திலிருந்தான வருமானம் மற்றும் ஏனைய தொழிற்பாடு வருமானம் என்பவை தாக்கப்பட்டன.

அதிக இடர்நேர்வுடைய தொழில்துறைகளை அடையாளம் காணவும் அதிக இடர்நேர்வுடைய கடனாளர்களுக்கான வெளிப்படுத்துகைகளை மீள்கணிப்பிடுவதற்கு முகாமைத்துவ மேலடுக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் வங்கி முன்கூட்டியே கொடுகடன் இடர்நேர்வினை முகாமைத்துவம்செய்தது. வங்கியின் ஐந்தொகையை வலுப்படுத்துவதில் கூர்மையான கவனம் செலுத்தி, முந்தைய ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட இழப்புகளுக்கு முன்பதியுடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் விளைவாக, வணிக மறுமலர்ச்சி நடவடிக்கைகள், கடுமையான கடன் கண்காணிப்பு மற்றும் நாணய பெறுமதி உயர்வு காரணமாக, இந்த ஆண்டில் தடங்கல் ஏற்பாடுகளின் தேறிய திருப்பத்தை விளைவித்தது.

குறைந்த வட்டி வீதங்கள் இருந்தபோதிலும், வங்கியின் வைப்பு தளம் ரூ. 3.9 டிரில்லியனாக 16% அதிகரித்து, இது வலுவான வாடிக்கையாளர் நம்பிக்கையையும் பற்றுறுதியையும் எடுத்துக்காட்டியது. கடன்கள் மற்றும் முன்பணங்கள் ரூ. 2.5 டிரில்லியன் மற்றும் முதலீடுகள் ரூ. 1.7 டிரில்லியனுடன் வங்கியின் சொத்துத் தளம் ரூ. 4.4 டிரில்லியனை எட்டியது.

நிலவிய தளம்பலுடைய சந்தை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ரூபாய் திரவத்தன்மை நிலைகளை நிர்வகிக்க முற்போக்கான மற்றும் சரியான நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதன் விளைவாக நியதி திரவ சொத்து விகிதம் 45% ஆக இருந்தது. இது ஒழுங்குமுறை குறைந்தபட்ச மட்டமான 20% ஐ விட அதிகமாக இருந்தது. மூலதனமயமாக்கல் மட்டங்களும் ஒப்பீட்டளவில் ஆரோக்கியமாக இருந்தன. அடுக்கு 1 மற்றும் மொத்த மூலதன போதுமாந்தன்மை விகிதங்கள் 31 டிசம்பர் 2023 அன்று முறையே 12.8% மற்றும் 15.8% ஆக இருந்தன.

நமது சூழல், சமூக மற்றும் (ESG) சம்பந்தமான ஆளுகை ஒப்பிய பொறுப்பை வலுப்படுத்துதல்

எங்கள் சூழல், சமூக, ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், மூன்று ஆண்டு காலத்திற்கு வங்கிக்கான நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வழிகாட்டலை உருவாக்க எங்களுக்கு ஆதரவளிக்க சூழல், சமூக, ஆளுகை ஒருவரை நியமித்தோம். மத்திய வங்கியின் நீடித்து நிலைத்திருக்கக்கூடியதன்மைக்கான வழிகாட்டல் மற்றும் ஐக்கிய நாடுகளின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளுடன் நாங்கள் எங்கள் செயற்பாடுகளை ஒத்திசைவாக்கியுள்ளோம். சூழல், சமூக, ஆளுகை நடைமுறைகளை உருவாக்குவதற்கான ஓர் முழுமையான அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் எமது பங்குதாரர்களுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நேர்மறையான விளைவுகளுக்கு பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்த சவாலான காலங்களில் எங்கள் ஊழியர்கள் ஒரு வலிமை சக்தியாக இருந்து வருகின்றனர், இதனால், எங்கள் அணியை ஆதரிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக இருந்தது. எங்கள் ஊழியர்கள் செழித்து வெற்றிபெறக்கூடிய சூழலை உருவாக்க, திறந்த தகவல்தொடர்பு, தொழில்முறை மேம்பாடு, பணி-வாழ்க்கை சமநிலை, அங்கீகாரம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிற்கு நாங்கள் முன்னுரிமை அளித்தோம். பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக ஊழியர் புரள்வு உயர்ந்திருந்தாலும், எங்கள் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஈடுபடுத்துவதற்கும் நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சித்தோம்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளை நாங்கள் தீவிரப்படுத்தி மேலும் SME எனர்ஜைசர் கடன் திட்டத்தை தொடங்கினோம். இது தொடர்பாக வங்கியின் நிதியிலிருந்து ரூ. 5.0 பில்லியன் ஒதுக்கப்பட்டது.

நாட்டின் கிராமப்புறங்களை மேம்படுத்துவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட எங்கள் “BOC கம்மாண” திட்டம் 2023 ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடாத்தப்பட்டமையானது, பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வுக்கான எங்கள் ஆழ்ந்த உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது. கிராமப்புற பொருளாதாரங்களை ஊக்குவிப்பதைத் தவிர, இந்த திட்டம் மக்களிடையே நிதியியல் கல்வியறிவை மேம்படுத்துவதையும் கொள்ளையடிக்கும் கடன் நடைமுறைகள் அல்லது நிதி சுரண்டலில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் மேற்பார்வையில் தனது உறுதிப்பாட்டை மிகவும் உன்னிப்பாக எடுத்துக் கொண்ட வங்கி கார்பன் தடம் குறைக்கவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்தது. எங்கள் தொழில்துறையின் தலைவராக, சுற்றுச்சூழல் நீடித்து நிலைத்திருக்குந்தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பு என்பது எங்களுடைய தாக்கத்தை குறைப்பதைத் தாண்டி, எங்கள் பெறுமதிச் சங்கிலி முழுவதும் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த எங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துகிறோம். இந்த ஆண்டில் நாங்கள் எங்கள் பசுமை கடன் சொத்துப்பட்டியலை ரூ.530.9 மில்லியனாக விரிவுபடுத்தினோம், மேலும் எங்கள் கடன் சொத்துப்பட்டியல் மூலம் குறிப்பிடத்தக்க நீடித்து நிலைத்திருக்குந்தன்மை தாக்கங்களை வழங்க முடியும் என்ற நம்பிக்கையுடன்”. ESMS அலகு மூலம் கடன்களை மிகவும் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்தினோம். எமது நாட்டை பசுமையைப் பற்றி சிந்திக்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் இருக்க ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஹரித கேகுளு மற்றும் இ-துரு ஆகிய இரண்டு புதிய வைப்புத் திட்டங்களினை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். நேர்மறையான சுற்றுச்சூழல் மாற்றத்தை ஊக்குவிப்பதற்கான எங்கள் முயற்சிகளுக்கு கிரீன் பிசினஸ் தலைமைத்துவ விருது 2023 மற்றும் ஆண்டிற்கான கிரீன் பில்டிங் கவுன்சிலின் கிரீன் கமிட்மெண்ட் எக்ஸலன்ஸ் 2023 விருது ஆகியவை வழங்கப்பட்டன.

டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்ட எதிர்காலத்திற்கு வழி வகுத்தல்

வங்கியில் தொழில்பரப்புக் களம் மாறிவரும்போது, வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், தொழிற்பாட்டு செயல்திறனை மேம்படுத்துவதற்கும், நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கும் இலங்கை வங்கி தொடர்ந்து டிஜிட்டல் மாற்றம் மற்றும் புதுமைகளைத் தழுவியுள்ளது. டிஜிட்டல் வங்கி தளங்கள், மொபைல் கட்டண தீர்வுகள் மற்றும் பின்டெக் பங்குடமை ஆகியவற்றில் எங்கள் முதலீடுகள் வாடிக்கையாளர்களுக்கு வசதியான, பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய வங்கி சேவைகளை வழங்கியுள்ளது.

பலவிதமான அதிநவீன டிஜிட்டல் தீர்வுகளில் முன்னோடியாக இருக்கும் எமது வங்கி நாட்டின் நிதிச் சேவைத் துறையை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டு இது மற்றவர்களை விட முன்னராக எதிர்கால தீர்வுகளை வங்கி கட்டவிழ்த்துவிட உதவும் முயற்சிகளை மேற்கொள்கிறது. டிஜிட்டல் வங்கிக் களத்தில் எமது புத்தாக்கம், வாடிக்கையாளர் மையத்தன்மை மற்றும் தலைமைத்துவத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டும் லங்கா பே டெக்னோவேசன் விருதுகள் 2023 இல் எங்கள் சிறந்த டிஜிட்டல் முன்முயற்சிகளுக்காக மூன்று தங்க விருதுகள் மற்றும் இரண்டு வெள்ளி விருதுகள் வழங்கப்பட்டன.

வளர்ந்து வரும் இணைய அச்சுறுத்தல்கள், ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் வலுவான தனியுரிமை பாதுகாப்பிற்கான வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றால் இயக்கப்படும் தரவு பாதுகாப்பு மேம்பாடுகளில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம், இலங்கை வங்கி அதன் தகவல் தொழில்நுட்ப நிர்வாக செயல்முறைகளை COBIT 2019 சட்டகங்களுடன் ஒத்திசைவாக்கும் செயல்முறையைத் தொடங்கியது. இந்த சட்டகத்தை தழுவும் இலங்கையின் முதல் வங்கியாக, செயற்கை நுண்ணறிவு, மேகக் கணிமை ஓபன் பேங்கிங், பெருந்தரவு மற்றும் கட்டச் சங்கிலி உள்ளடங்கலான வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் சூழலை நோக்கிச் செல்லும்போது, எங்கள் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துவதற்காக எங்கள் தகவல் தொழில்நுட்ப வளங்களை நெறிப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

கருத்துக்களும் பாராட்டுகளும்

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளான சுருக்கத்திற்குப் பின்னர் பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவதை நாம் காணத் தொடங்கியுள்ளோம். எவ்வாறாயினும், நாங்கள் இன்னும் அச்சுறுத்துகளிலிருந்து வெளியேறவில்லை மற்றும் வெளிநாட்டுத் துறையின் சமநிலைமையின்மைகளைத் தடுக்க நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலக்களை மேம்படுத்த தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்படுவதுடன் நிதித் துறையின் அபாயத்தைத் தணிப்பதற்கான விவேகமான நடவடிக்கைகளும் தேவைப்படும். நிதி துறையின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டை மேம்படுத்த சந்தை பங்கேற்பாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் தொடர்ந்து செயற்றிறனான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு அவசியம்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவன சீர்திருத்தங்கள் மூலம், பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு பங்களிக்கும் முன்னேற்றகரமான நிதி ஒழுக்கத்தை நாம் காணக்கூடும். நாணய மற்றும் இறைக் கொள்கைகளுக்கு இடையே தெளிவான எல்லை நிர்ணயம் எதிர்பார்க்கப்படலாம். இது பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வேகமாக மீண்டு வருவதைக் குறிகாட்டுகிறது. சுற்றுலா மற்றும் அது தொடர்பான துறைகளின் மீட்சி சாதகமான அந்நியச் செலாவணி ஒதுக்கு நிலையைக் குறிக்கும் அதே வேளையில், பெரிய அளவிலான மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தற்போது எதிர்நோக்கப்படும் நிச்சயமற்ற தன்மையின் கீழ் முழுமையாக கிடைக்கப்பெறாமல் விடலாம்.

இந்த பின்னணியில், தனியார் துறை கடன் வழங்குவதில் அதிக கவனம் செலுத்தி, தனது வணிக மாதிரியை மறுசீரமைக்க இலங்கை வங்கி திட்டமிட்டுள்ளது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்களின் விளைவாக, குறைவான செயல்திறன் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சுமை குறைக்கப்படும் மற்றும் கொடுகடன் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு செயல்முறை சகல அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் தனியார் துறையில் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஒருங்கிணைந்த ஆதரவு மற்றும் கடன் வழங்குதல், முக்கிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தொழில்துறை முயற்சிகளுக்கு நிதியளித்தல் மற்றும் நாட்டின் அனைத்து துறைகளிலும் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் வங்கி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும். எங்கள் கடல்கடந்த இருப்பை விரிவுபடுத்தவும், இந்த பிராந்தியங்களில் புதிய பச்சை/நீல நதி கடன் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.


முன்னோக்கிப் பார்க்கும்போது, டிஜிட்டல் சிறப்பையும் புதுமைகளையும் ஊக்குவிப்பதில் நாங்கள் உறுதி பூண்டு ஒருங்கிணைப்புகள் மற்றும் அளவு ரீதியான வளர்ச்சிக்கான தற்போதுள்ள இயலளவு மற்றும் போட்டிமிக்க விலையிடல் மூலம் தொழில்நுட்ப அபிவிருத்திகளின் நன்மைகளை எமது வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து எமது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவையாற்றவுள்ளோம். எங்கள் டிஜிட்டல் வங்கிச் சூழலியலின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்காக அதிநவீன தொழில்நுட்பங்கள், தரவு பகுப்பாய்வு மற்றும் இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம்.

இறுதியாக, இந்த சவாலான காலங்களில் எங்கள் தலைவர் மற்றும் அனைத்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். 2023 ஆம் ஆண்டில் தேசிய பொருளாதார மறுமலர்ச்சியின் அனைத்து அம்சங்களுக்கும் முன்னுரிமை அளிக்க நாள்முழுவதும் பணியாற்றிய கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அணி மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோதனையான ஆண்டில் நிதி அமைச்சு, தேசிய கணகாய்வு அலுவலகம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளின் வழிகாட்டல் மற்றும் வழிநடத்துகைக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன், மேலும் வரும் ஆண்டிலும் அவர்களின் ஆதரவை எதிர்ப்பார்க்கிறேன்.

இறுதியாக, எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், வணிக பங்காளிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு- பல ஆண்டுகளாக உங்கள் தொடர்ச்சியான ஆதரவு, நம்பிக்கை மற்றும் பற்றுறுதிக்கு நன்றி.

எமது நாட்டின் வரலாற்றில் இந்த அத்தியாயத்தை நான் பின்னோக்கிப்பார்க்கும்போது முன்னேற்றத்திற்கான ஊக்கியாகவும், துன்ப காலங்களில் நம்பிக்கையின் வெளிச்சமாகவும் இலங்கை வங்கி ஆற்றிய முக்கிய பங்கு குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். சவால்களுக்கு முகங்கொடுக்கும்போது, நமது வங்கியின் முறியடிக்கமுடியாத மனப்பான்மை தொடர்ந்து முன்னோக்கி செல்லும் பாதையை ஒளிரச் செய்து, பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி எம்மை வழிநடத்துகிறது.



டபிள்யூ. பீ. ரசல் பொன்சேகா
பொது முகாமையாளர்/
பிரதான நிறைவேற்று அதிகாரி

27 பெப்ரவரி 2024
கொழும்பு



புதிதாக பொறுப்பேற்கும் தலைவரின் செய்தி

காவன் ரத்நாயக்க
தலைவர்

இலங்கை வங்கியின் சேவையின் 84வது ஆண்டில் தலைவராக நான் பொறுப்பேற்றுள்ள நிலையில், உங்களுக்கும், மதிப்புமிக்க இலங்கை வங்கிக்கும் சேவையாற்றும் வாய்ப்பினால் நான் பெருமையும் அடக்கமும் அடைகிறேன். இலங்கையின் மிகப்பெரிய வணிக வங்கியாக, கடந்த சில ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட பல சவால்களுக்கு மத்தியில் அதன் பங்குதாரர்களுக்கு பெறுமதி உருவாக்குவதில் வங்கி முக்கிய பங்கு வகித்தது. மூலோபாய தீர்மானம் மேற்கொள்ளளல் மற்றும் அசைக்க முடியாத உறுதிப்பாட்டின் மூலம், வங்கி பல சிக்கல்களை எதிர்கொண்டது மட்டுமல்லாமல், முன்னெப்போதையும் விட வலுவாகவும் ஆற்றல்வாய்ந்ததாகவும் உருவெடுத்துள்ளது. அதிநவீன டிஜிட்டல் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், டிஜிட்டல் வங்கி களத்தில் புதுமை, வாடிக்கையாளர் மையத்தன்மை மற்றும் தலைமைத்துவத்தில் வழிநடத்துவதில் வங்கி வெற்றிகரமாக இருந்ததுடன் வரவிருக்கும் ஆண்டுகளில் வெற்றியின் முக்கிய உந்துசக்திகளாக இவை இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

முன்னோக்கிய பாதை

எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பைப் பற்றிய ஆழமான புரிதலுடன் எனது கடமைகளை ஏற்றுக்கொள்வதுடன் தேசத்தையும் பொருளாதாரத்தையும் ஆதரிப்பதில் இலங்கை வங்கி சுமக்கும் சிறப்புடைய பாரம்பரியத்தை நிலைநிறுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். சிறு உரிமையாளர்கள் குழுக்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு நுண் நிதி கடன்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு பயனளிக்கும் வகையில் சலுகை மற்றும் அபிவிருத்திக்கான கடன்களை புதுப்பிப்பதற்கும் ஆதரவளிப்பதற்குமான முன்னெடுப்புக்களினால் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கான வங்கியின் கடப்பாடு வலுப்படுத்தப்பட்டுள்ளது. வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வட்டமானது நிதி உறுதிப்பாடு மற்றும் முன்னேற்றத்தை நோக்கிய சரியான பாதையை நோக்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வழிநடத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்தப் பிரிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு, குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு நிதியியல் முறைமை மற்றும் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை வசதிப்படுத்துவதற்கு எங்கள் ஒருங்கிணைந்த ஆதரவையும் கொடுகடன் வழங்கல் மீது கவனம் செலுத்துவோம் என்று நம்புகிறோம்.

"டிஜிட்டல்-முன்னுரிமை வணிக மாதிரியானது வங்கி தனது வாடிக்கையாளர்களை சென்றடையவும், ஒருங்கிணைப்புகளை மேம்படுத்தவும், அளவுகளில் அதிவேக வளர்ச்சியை ஏற்படுத்தவும் உதவும். இது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பலன்களை அதன் வலிமையான வாடிக்கையாளர் தளத்துடன் பகிர்ந்து கொள்ள வங்கியை நிலைநிறுத்தும்."

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவை வங்கியின் உருமாறும் மூலோபாயத்தில் முக்கிய முன்னுரிமை விடயமாகும். கடந்த சில ஆண்டுகளில், நிதியியல் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில், எங்கள் வாடிக்கையாளர் தளம் முழுவதும் அதிக டிஜிட்டல் தழுவல் நிலைகளை உந்துவதற்கு வங்கி டிஜிட்டல் உள்கட்டமைப்பில் வங்கி முதலீட்டை துரிதப்படுத்தியுள்ளது. டிஜிட்டல்-முன்னுரிமை வணிக மாதிரியானது வங்கி தனது வாடிக்கையாளர்களை சென்றடையவும், ஒருங்கிணைப்புகளை மேம்படுத்தவும், அளவுகளில் அதிவேக வளர்ச்சியை ஏற்படுத்தவும் உதவும். இது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பலன்களை அதன் வலிமையான வாடிக்கையாளர் தளத்துடன் பகிர்ந்து கொள்ள வங்கியை நிலைநிறுத்தும். இது வங்கியின் பரந்த தயாரிப்பு தெரிவுகளின் மூலம் எமது நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சென்றடைய உதவும், இதன் மூலம் அனைத்து இலங்கையர்களும் தங்கள் எதிர்கால நிதி அபிலாசைகளை நிறைவேற்றமுடியும். எங்கள் டிஜிட்டல் சேனல்களில் தொடர்ச்சியான முதலீடு, சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை உருவாக்க சேவை தரங்களை செம்மைப்படுத்தி மேம்படுத்தும். மேலும், வேலைத்தொடர் தன்னியக்கமுறை மற்றும் செயல்முறை மேம்பாடுகள் மூலம் திருப்புமுனை நேரங்களைக் குறைப்பதன் மூலம் வங்கி தனது வாடிக்கையாளர் மைய சேவையை மேம்படுத்தும். டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் தயாரிப்புகளுக்கு மாறுவதற்கான எங்கள் முயற்சிகள் எங்கள் எதிர்கால பாதையில் ஓர் முக்கிய மையமாக இருக்கும். இது வளர்ந்து வரும் சந்தைப் பங்கு மற்றும் அதிகரித்து வரும் சொத்து தளத்துடன் நிலையான வளர்ச்சிக்கான பாதையில் வங்கியை முன்னேற உதவும்.

வங்கியின் போக்கை வடிவமைப்பதில் எங்கள் அர்ப்பணிப்புள்ள பணிக்குழாம் முக்கிய பங்கு வகித்துள்ளது. எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட குழு உறுப்பினர்களைக் கொண்ட பணியாளர்களைக் கொண்டிருப்பது எங்களது வரப்பிரசாதம் ஆகும். பல ஆண்டுகளாக எதிர்கொள்ளும் சவால்களை மீறி வங்கியின் முதலிடத்தை பராமரிப்பதில் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு முக்கிய பங்கு வகித்துள்ளது. அனைத்து ஊழியர்களும் மாற்றப் பயணத்தில் முழுமையாக ஈடுபட்டிருப்பதுடன் எங்கள் நோக்குடன் இணங்குவதனை உறுதிசெய்வது எங்கள் வெற்றிக்கு முக்கியமாகும். பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மூலம் எங்கள் ஊழியர்களின் திறனை மேம்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம்.

இலங்கையின் முன்னணி வங்கியாக, முக்கிய வணிகத்தில் எங்கள் கவனத்தை செலுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்பதுடன் வங்கி அதன் சில தொடர்பில்லாத வணிக முயற்சிகளில் அதன் பங்குகளை மூலோபாய ரீதியாக விற்றுள்ளது. மேலும், எங்கள் சர்வதேச கிளைகளின் வலையமைப்பில் எங்கள் வெளிநாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்த நம்புகிறோம். தங்கள் வாழ்க்கையில் சிறந்து விளங்கிய மற்றும் பரந்த மற்றும் மாறுபட்ட அனுபவங்களைக் கொண்ட உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையின் தலைவராக நான், அவர்களின் பங்களிப்பு வங்கிக்கு கணிசமான பெறுமதி சேர்ப்பதை உறுதி செய்வேன். எங்கள் அனைத்து நடவடிக்கைகளிலும் நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை ஆகியவற்றின் மிக உயர்ந்த தரங்களைப் பேணுவதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்பதுடன் நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிப்பேன். முன்னோக்கிப் பார்க்கும்போது, முடிவற்ற சாத்தியங்கள் மற்றும் வாய்ப்புகள் எமக்கு வழங்கப்படுகிறது. புதுமைகளைத் தழுவுவதன் மூலமும், ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலமும், எமது மைய விழுமியங்களுக்கு உண்மையாக இருப்பதன் மூலமும், நம் வழியில் வரக்கூடிய எந்தவொரு தடைகளையும் நாம் சமாளிப்போம் என்று நான் நம்புகிறேன்.

பாராட்டுதல்கள்

ஓர் உற்சாகமான ஆண்டை நான் எதிர்நோக்கியுள்ள நிலையில், வங்கியை முன்னோக்கி நகர்த்துவதில் எனக்கு முன் தலைவராக கடமையாற்றிய, திரு ரொனால்ட் சி பெரேரா மற்றும் வெளியேறும் பணியாளர்களின் தொலைநோக்கு மற்றும் வழிகாட்டுதலுக்கு நன்றி தெரிவிப்பதில் பணிப்பாளர் சபையுடன் இணைகிறேன். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாய அபிலாசைகளையும் வியக்கத்தக்க செயல்திறனையும் நிறைவேள்ளுவதற்குமான இடைவிடாத முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்காக பொது முகாமையாளர் திரு ரசல் பொன்சேகா மற்றும் குழுவினரை நான் வாழ்த்த விரும்புகிறேன். கடந்த ஆண்டில் சாதித்த வெற்றியைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, பல சவால்களுக்கு மத்தியில் வெற்றிக்கான எங்கள் பாதை எங்கள் அணியின் அர்ப்பணிப்பு மற்றும் அர்ப்பணிப்பால் சாத்தியமானது என்பது தெளிவாகிறது. அவர்களின் ஆர்வம் மற்றும் சிறப்பு மீதான உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவை எமது சாதனைகளுக்குப் பின்னால் உள்ள உந்து சக்தியாகும்.

எங்கள் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கம் ஓர் வழிகாட்டும் சக்தியாக இருந்து வருகிறது என்பதுடன் தொடர்ச்சியான ஆதரவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகளுக்கான எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். வங்கியின் சாதனைப் பயணத்தில் ஓர் முக்கிய பகுதியாக இருந்த இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள், எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், வணிக பங்காளிகள் மற்றும் பிற அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

திரு ஜெயமின் பெல்போலா மற்றும் திரு ஜஹான் இஸ்மாயில் ஆகியோரை சபைக்கு வரவேற்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். எங்கள் பணிப்பாளர் சபை, முகாமைத்துவம் மற்றும் எங்கள் விதிவிலக்கான ஊழியர்களின் கூட்டு அர்ப்பணிப்புடன் வங்கியானது இலங்கையின் நிதித் துறையில் தொடர்ந்து முன்னணியில் இருக்கும் என்று நான் நம்புகிறேன். நமது நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் சேவையாற்றுவதற்கும், பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதற்கும், அனைவருக்கும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.



காவன் ரத்நாயக்க
தலைவர்

14 மார்ச் 2024
கொழும்பு

பணிப்பாளர் சபை





இடமிருந்து வலமாக:

திரு.ஆர்.எம்.பிரியந்த ரத்நாயக்க
சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பதவிவழிப் பணிப்பாளர்

மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) ஜீ.ஏ.சந்த்ரசிறி VSV
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

திரு.ரொணால்ட் சீ பெரேரா P.C.
தலைவர்-சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

திரு நரேஷ் அபயசேகர
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

பேராசிரியர் கித்சிறி எம் லியனகே
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

அம்மனி ஜானகி சேனநாயக்க சிறிவர்த்தன
செயலாளர், இலங்கை வங்கி சபைச் செயலாளர்

(31 டிசம்பர் 2023 உள்ளவாறான)

பணிப்பாளர் சபை



திரு.ரொனால்ட் சீ பெரேரா P.C.
(விலகிச்செல்லும்) தலைவர்
(சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்)

நியமனத் திகதி:
20 ஜனவரி 2023
பதவி விலகல் 13 மார்ச் 2024

திறமை மற்றும் அனுபவங்கள்

- முதல் நீதிமன்றங்கள், மேன்முறையீட்டு நீதிமன்றம், இலங்கை உயர்நீதிமன்றம் ஆகியனவற்றில் பரந்துபட்ட அனுபவமுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி.
- குடியியல், குற்றவியல் வழக்காடல், சமரசப்பேச்சு, ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் தயாரித்தல் ஆகியவற்றில் திறமை.
- வர்த்தகச் சட்டங்கள், வங்கிச் சட்டம், கைத்தொழிற்சட்டம், இடைக்காலத்தடை, மானநஷ்டம், தேர்தல் முறையீடு, குடியியல் மேன்முறையீடுகள், மறுபரிசீலனை விண்ணப்பங்கள், கட்டாணை விண்ணப்பங்கள், அடிப்படையுரிமைச் சட்ட வழக்குகள் ஆகியவற்றில் நிபுணத்துவம். அனேக வர்த்தக மத்தியஸ்தங்களிலுங்கூட இவர் ஆஜராகியுள்ளார்.
- கொழும்புப் பல்கலைக் கழகச் சட்டமாணிப் பட்டதாரியாகவும் ஐக்கிய இராச்சியத்தின் நோர்தம்பிரியா பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணிப் பட்டதாரியாகவும் உள்ளார்.

முந்தைய நியமனங்கள்

- தலைவர் மற்றும் பணிப்பாளர், இலங்கை வங்கி 2015 முதல் நவம்பர் 2019 வரை.
- தலைவர், இலங்கை வங்கி (UK) லிட்.
- தலைவர், இலங்கை மேர்ச்சன்ட் வங்கியும் பினான்ஸ் பிஎல்சி
- பணிப்பாளர், மிரேக்கா கப்பிட்டல் லான்ட் (பி) லிட், மிரேக்கா ஹோம்ஸ் (பி) லிட்.
- தற்காலிக தலைவர், தேசிய லொத்தர் சபை

ஏனைய நியமனங்கள்

நிறைவேற்றுத்தரம் சாராத தலைவர்:
- ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிட் (13மார்ச் 2024 வரை)
- புரப்பட்டி டெவலப்மன்ட் லிட்(13மார்ச்2024 வரை)
- இலங்கை வங்கி (ஐ.இ)லிட் (13 மார்ச் 2024 வரை)
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.



திரு காவன் ரத்நாயக்க
(புதிதாக பொறுப்பேற்கும்) தலைவர்
(சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்)

நியமனத் திகதி:
14 மார்ச் 2024

திறமை மற்றும் அனுபவங்கள்

- கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் றிவர்சைட் வளாக விஞ்ஞான இளமாணி (பௌதிகம்) பட்டதாரி.
- மூன்று தசாப்த தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அனுபவம்.
- தொலைத்தொடர்பு, சுற்றுலா, வங்கி, ஊடகத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புக்களில் கொண்ட அனுபவங்கள்.
- சேவைபெறுநர் தொடர்பு முகாமைத்துவம், திட்ட முகாமைத்துவம், பங்காளர் முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், தலைமைத்துவம், அரசாங்க தொடர்பாடல் ஆகியனவற்றில் நிபுணத்துவம்.

முந்தைய நியமனங்கள்

- தலைவர், தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
- தலைவர், இலங்கை துறைமுக அதிகாரசபை
- தலைவர், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதி.சபை
- லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்
- பிரதான நிறைவேற்று அதிகாரி, டயலொக் புரோட்பேண்ட் வலையமைப்பு
- குழு பிரதான கூட்டாண்மை அதிகாரி, டயலொக் அக்ஸி யாட்டா பிஎல்சி
- செயற்குழு உறுப்பினர், இலங்கை வர்த்தக சங்கம்
- பணிப்பாளர், அகிலிட்டி இனோவேசன்ஸ் லிட்
- நாட்டு பொது முகாமையாளர், ஐபிஎம் வேர்ல்ட் றிரேட் கோப்பரேசன்.

ஏனைய நியமனங்கள்

- நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், கேபிஎஸ்எல் தகவல் தொழிநுட்பம் லிட்.
- நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், கோடிங் லெஜெண்ட்ஸ் (தனி) லிட்.
- நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், ரெறாரெக் (பி) லிமிடெட்
- நம்பிக்கைப் பொறுப்பாளர், ஜெயம் விஜேரட்னம் டிரஸ்ட்
- நம்பிக்கைப் பொறுப்பாளர், டயலொக் நிறுவனம்.



திரு ஆர் எம் பிரியந்த ரத்நாயக்க
சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பதவிநிலைப் பணிப்பாளர்

நியமனத் திகதி:
28 ஏப்பிரல் 2020,
மீள் நியமனம் 29 ஏப்பிரல் 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

- 26 வருட அனுபங்கொண்ட விசேடதர உத்தியோகத்தர், இலங்கை திட்டமிடல் சேவைகள்
- இருதரப்பு பேச்சுவார்த்தைகள், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியைத் திரட்டுவது உள்ளிட்ட பலதரப்பு வங்கிச் செயற்பாடுகளில் பரந்துபட்டஅனுபவம்.
- நோர்வே விவசாயப் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை எம்.எஸ். சி பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளாதார பி.எஸ்.சி பட்டதாரி

முந்தைய நியமனங்கள்

- தலைவர், தேசிய சேமிப்பு வங்கி.
- அங்கத்தவர், தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை
- மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, பேஜிங், சீனா.
- பணிப்பாளர், மக்கள் வங்கி.
- பணிப்பாளர், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை.
- பணிப்பாளர், நிதித்துறைக் கல்வி நிறுவனம் (உத்தரவாத) லிட்
- பணிப்பாளர், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்.
- உறுப்பினர், இலங்கை விவசாய ஆராச்சிக் கொள்கைக்கான சபை.
- பணிப்பாளர், இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (எஸ்பிசி)
- பணிப்பாளர், மகாவலி அதிகாரசபை
- உறுப்பினர், தேசிய விஞ்ஞான நிறுவனத்தின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பக்கொள்கை ஆராய்ச்சிப் பிரிவுக்கான ஆலோசனைச் சபை.
- உறுப்பினர், இலங்கை பொருளாதாரச் சங்கம்
- ஆணைக்குழு உறுப்பினர், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு.
- பதவிவழி தலைவர், உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதி.

ஏனைய நியமனங்கள்

- திறைசேரியின் பிரதிச் செயலாளர்
- நிறைவேற்றுத்தரம் சாராத ஆணைக்குழு உறுப்பினர் (இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு)
- நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், இலங்கை தாமரைக்கோபுர முகாமைத்துவ கம்பனி (பிறைவேட்) லிமிடெட்
- கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், பி.டி.ஆர். இலங்கை மற்றும் திமோர் - லெஸ்தே ஆகிய தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிர்வாகதரம் சாராத பணிப்பாளர்.



மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை)
ஜீ.ஏ.சந்திரசிறி VSV
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

நியமனத் திகதி: 08 ஜனவரி 2021
பணிப்பாளர் பதவியிலிருந்து விலகல்:
07 ஜனவரி 2024

திறமை மற்றும் அனுபவங்கள்

- பொதுத் துறையில் பல முக்கிய தலைமைப் பதவிகளை வகித்துள்ள பரந்த அனுபவமும் வெளிப்பாடும் .
- இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பட்டதாரி மற்றும் பட்டதாரி, பாதுகாப்புச் சேவை ஆணை மற்றும் அதிகாரிகள் கல்லூரி, வங்களாதேசம்
- வழங்கப்பட்ட சிறப்பு அங்கீகாரங்களுள் ராணா விக்கிரம், பதக்கம், விசிஷ்ட சேவா வீபூசணய மற்றும் உத்தம சேவா பதக்கம் ஆகியவை உள்ளடங்கும்.

முந்தைய நியமனங்கள்

- இலங்கை இராணுவத்தின் தலைமைத் தளபதி உட்பட இலங்கை இராணுவத்தில் முக்கிய கட்டளை மற்றும் பணியாளர் நியமனங்களை வகித்த 35 ஆண்டுகால புகழ்பெற்ற இராணுவ வாழ்க்கை (இராணுவத்தின் 2ம் நிலை).
- இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல்.
- கூட்டுக் நடவடிக்கை கட்டளைத் தலைமையலுவலகத்தின் இலங்கை விசேட இராணுவத்தின் பிரதான உத்தியோகத்தர்.
- யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமையலுவலகத்தின் தளபதி.
- கௌரவ ஜனாதிபதியின் இராணுவ பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர்.
- யுத்த நிறைவின் பின் வடக்கு மாகாணத்தில் உள்ளக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் தகுதிவாய்ந்த அதிகாரி.
- வடக்கு மாகாண ஆளுநர்.

ஏனைய நியமனங்கள்

- நிறைவேற்றுத்தரம் சாராத தலைவர், இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (பி) லிட்.
(12 டிசம்பர் 2023 வரை)

பணிப்பாளர் சபை



பேராசிரியர் கித்சிறி எம் லியனகே
சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

நியமனத் திகதி:
31 மார்ச் 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

- இலங்கை, ஜப்பான், பின்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் கல்வித்துறையில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய உயரிய அனுபவங்கொண்ட பொறியியலாளர்.
- முக்கிய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஆலோசனைச் சபைகள், குழுக்களில் தேசிய மட்டத்திலான பங்களிப்பில் ஈடுபாடு.
- டோக்கியோ பல்கலைக்கழகத்தின் மின்சாரப் பொறியியலில் கலாநிதிப்பட்டம், அதே பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டமும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மின்சாரம் மின்னணுப் பொறியியலில் பி.எஸ்.சி (சிறப்பு) பட்டம்.
- பட்டயப் பொறியியலாளர். இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் உறுப்பினர்.
- சிரேஷ்ட உறுப்பினர், மின்சார மின்னணுப் பொறியியல் சங்கம், ஐக்கிய அமெரிக்கா.

முந்தைய நியமனங்கள்

- செயலாளர், தேசிய கொள்கைவகுப்பு அமைச்சு, பொருளாதார விடயங்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார விடயங்கள்.
- தலைவர், இலங்கைப் பொதுப் பாவனைகள் ஆணைக்குழு.
- தலைவர், பொறியியல் சேவைச் சபை.
- உறுப்பினர், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு.
- பதில் தலைவர், றுகுண பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடம்,
- தலைவர், இலங்கை தகவல் தொழிநுட்பத் தாபனத்தின் பட்டதாரிகள் கல்விப் பீடம் (சிலிட்)
- பணிப்பாளர், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தின் தகவல் தொழில்நுட்ப மத்தியநிலையம் மற்றும் கணினி மத்தியநிலையம்.
- தலைவர், பேராதனைப் பல்கலைக்கழக மின்சார மற்றும் மின்னணுப் பொறியியற் திணைக்களம்.
- பணிப்பாளர், நிதியியற்கல்வியின் மிலோட அக்கடமி
- வருகைதரு கல்வியிற் பதவிகள், டோக்கியோ பல்கலைக்கழகம், வோஷிங்டன் பல்கலைக்கழகம், ஒலுலுப் பல்கலைக்கழகம், மேஜோ பல்கலைக்கழகம்.

ஏனைய நியமனங்கள்

- சுயாதீன மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சி
- சிரேஷ்ட பேராசிரியர், மின்னியல் மற்றும் இலத்திரனியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம்



திரு. நரேஷ் அபயசேகர
சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

நியமனத் திகதி:
04 மே 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

- ஐரோப்பா மற்றும் ஆசிய வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் வலுவான இருப்பைக் கொண்டு பரிவர்த்தனை ஆலோசனை, கடன் மற்றும் தனியார் சமபங்கு அமைப்பு மற்றும் நிதியுதவியில் நிபுணத்துவம் பெற்றவர்.
- 100+ மில்லியன் அமெரிக்க டாலர் நிறுவனங்களின் இளைய சிஎ.ப்ழ க்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டவர்.
- இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் பங்களிப்பிற்காக SLASSCOM நிறுவனத்தால் தொழில்துறை தலைமை விருதைப் பெற்றவர்.
- கொழும்பு பங்குச் சந்தை மொபைல் செயலியை கருத்தாக்கம் செய்வதிலும் இலங்கை மூலதனச் சந்தையை டிஜிட்டல் மயமாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்தவர்.
- உள்ளக தணிக்கையாளர்கள் பிரிவு நிறுவனத்தை இணைந்து நிறுவினார்.
- மலேசிய ஐஎஸ்டிபி இல் சர்வதேச வரிவிதிப்பு மற்றும் சர்வதேச வரி மூலோபாயத்தில் பயிற்சி பெற்றவர்.
- ஜப்பானில் உள்ள டொயோட்டா உற்பத்தி ஆலையில் லீன் நடைமுறைகளில் பயிற்சி பெற்றார்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் (ஐக்கிய இராச்சியம்).
- ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் எம்பிஏ பட்டம் பெற்றவர்.

முந்தைய நியமனங்கள்

- லண்டன் பங்குச் சந்தை குழுமத்தின் சந்தை சேவைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய தலைமை நிதி அலுவலர்.
- இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உறுப்பினர்.
- சிஎஸ்இ மற்றும் மூலதனச் சந்தையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான கொழும்பு பங்குச் சந்தைக் கூட்டுக் குழுவின் தலைவர்.

ஏனைய நியமனங்கள்

- தலைமை நிர்வாக அலுவலர், SECQUORO இன் செயல் இயக்குநர்.
- காலணி சில்லறை விற்பனையாளர்கள் (தனியார்) லிமிடெட் நிறைவேற்றுத்தரம் சாராத இயக்குநர்.
- சொப்ட்லொஜிக் மூலதன பிஎல்சி இன் நிர்வாகவதிகாரமற்ற இயக்குநர்.



திரு ஜெஹான் இஸ்மாயில்
சுயாதீனமான நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

நியமனத் திகதி:
07 பெப்ரவரி 2024

திறமை மற்றும் அனுபவங்கள்

- முக்கியமாக ஆசியா மற்றும் மேற்குத் துருவ நாடுகள் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில் வணிக மற்றும் முதலீட்டு வங்கியில் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான பரந்துபட்ட அனுபவம்.
- பெரிய அமைப்பு தொடர்பான திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளது மற்றும் அனைத்து முதலீட்டு வங்கி ஆதரவு செயல்பாடுகளையும் அமைப்பதற்கும் நடத்துவதற்கும் பொறுப்பாக உள்ளமை.
- வருகை விரிவுரையாளர் (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) வங்கிப் பயிற்சி மற்றும் வர்த்தக நிதி கற்பித்தல்.
- 2 ஆண்டுகளுக்கும் மேலாக பயிற்சி நிர்வாகி.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிறப்பு இளமானிப் (வேதியியல்) பட்டம் பெற்றுள்ளார்.
- இங்கிலாந்தின் சார்ட்டர்ட் இன்ஸ்டிடியூட் ஆ.ப் பேங்கர்ஸ் இன் சக உறுப்பினர்.
- INSEAD இல் வெளிப்புற முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ மேம்பாட்டுச் செயற் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

முந்தைய நியமனங்கள்

- பணிப்பாளர்-பிரதான நிறைவேற்று அலுவலர், எம் பவர் கெப்பிட்டல் (வரைவுள்ளது)
- பணிப்பாளர்-பிரதான நிறைவேற்று அலுவலர், பர்ஸ்ட் ஹோல்டிங்ஸ ய பிஎல்சி
- ஒருங்கிணைப்பாளர், எச்எஸ்பிசி கொலம்பியா மற்றும் எச்எஸ்பிசி சவுதி அரேபியா.
- பிரதான நிறைவேற்று அலுவலர், எஸ்ஏபிபி செக்கியூரிற்றீஸ் (எச்எஸ்பிசி குழுமம், சவுதி அரேபியா.)
- மூத்த உபதலைவர், கோர்ப்பரேட் வங்கி எச்எஸ்பிசி இந்தோனேசியா. உலகளாவிய உறவு முகாமையாளர், கோர்ப்பரேட் வங்கி எச்எஸ்பிசி, ஹொங்கொங்.

ஏனைய நியமனங்கள்

- சுயாதீனமற்ற நிறைவேற்றுத் தலைவர், எம் பவர் கெப்பிட்டல் லிட்.
- சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத தலைவர், எம் பவர் கெப்பிட்டல் செக்யூரிற்றீஸ் லிட்.
- சுயாதீனமற்ற நிறைவேற்றுப் பணிப்பாளர், கொம்மன் வெல் (தனி) லிட்.
- சுயாதீனமற்ற நிறைவேற்றுப் பணிப்பாளர், கப்பிட்டன் (தனி) லிட்.
- சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர், லிட்டில் ஜிம் லங்கா (தனி) லிட்.



திரு. ஜயமின் பெல்பொல
சுயாதீனமான நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

நியமனத் திகதி:
22 பெப்ரவரி 2024

திறமை மற்றும் அனுபவங்கள்

- முதலீட்டு வங்கி, சொத்து முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் நிதி ஆகியவற்றில் 15 வருட சர்வதேச அனுபவம்.
- 20 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான சர்வதேச முதலீடுகளை கட்டமைத்துள்ளமை.
- ஒரு மூத்த ஆலோசகராக, அமெரிக்க வங்கிகள் மற்றும் சர்வதேச மத்திய வங்கிகளுக்கு வங்கித் துறை சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசனை வழங்கினார். மூலதனப் போதுமை முடிவுகள், மறு மூலதனமாக்கல்கள் மற்றும் வங்கியில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளின் பயன்பாடு குறித்து பாங்க் ஆ.ப் அமெரிக்கா, டிபிஎஸ் வெல்ஸ் பார்கோ மற்றும் டாய்ச் வங்கியின் இயக்குநர்கள் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதும் இதில் அடங்கும்.
- நிதி தொழில்நுட்ப துறையில் முதலீட்டாளர் மற்றும் தொழில்முனைவோர்.
- ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ பட்டம் பெற்றவர் (Cambridge, Massachusetts).
- பட்டய நிதி ஆய்வாளர் நிறுவனம் (அமெரிக்கா) மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட பட்டயங்கள் (UK). அந்த நேரத்தில் உலகின் இளைய பட்டய முகாமைத்துவக் கணக்காளர் ஆனார்.
- CIM நிறுவனத்தில் இருந்து சந்தைப்படுத்தல் துறையில் முதுகலை டிப்ளோமா பெற்றவர் (UK)

முந்தைய நியமனங்கள்

- இலங்கை முதலீட்டுச் சபைப் பணிப்பாளர், அதன் கணக்காய்வுக் குழுவின் தலைவர்.
- மணிவேர்க்ஸ் டெக்னோலொஜீஸ் (தனி) லிட் இன் நிறுவுநர்.
- கோல்ட்மன் சச்ஸ் இல் முதலீட்டு முகாமையாளர் மற்றும் சொத்துக்கள் வர்த்தகர்.
- நொமூரா நிறுவனத்தின் மூத்த ஆலோசகர்.

ஏனைய நியமனங்கள்

- ஒன்ரேறா குழுமத்தின் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்.
- ஜயரு டிபி இன் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்.



அம்மனி ஜானகி சேனநாயக்க
சிறிவர்த்தன
செயலாளர், இலங்கை வங்கி

சபைச் செயலாளர்

சுயவிபரம் 34ம் பக்கத்தில்

கூட்டாண்மை முகாமைத்துவம்



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக

அம்மணி டப்ளியூ.பீ.பி. ரத்நாயக்க, திரு. டி.எஸ். முத்துகுடாராச்சி

நிற்போர் இடமிருந்து வலமாக

திரு. எம்.ஆர்.என். ரோகன குமார, திரு. வை.ஏ. ஜயதிலக, அம்மணி பி.பி.எம். விஜேசேகர, திரு. சமீர டி லியனகே, திரு. எச். ப்ரியல் சில்வா, திரு. எம்.பி. ருவான் குமார, திரு. ஏ.ஆர்.எப். ஜோன்புள்ளே, திரு. ஜீ.ஏ. ஜயஷாந்த



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக

திரு. டப்ளியு.பி. ரசல் பொன்சேகா, அம்மணி ஜானகி சேனநாயக்க சிறிவர்தன

நிற்போர் இடமிருந்து வலமாக

திரு. நிலாந்த மினேரிப்பிட்டியகே, திரு. ஆர்.எம்.என். ஜீவந்த, திரு. பி. மதுவந்த லியனகே, திரு. எஸ். சிவாஞ்சன், திரு. கே.ஏ.டி. விஜேவர்த்தன, திரு. பி.கே.குருசிங்க, திரு. கே.ஏ. அஜித் கருணாரத்ன, அம்மணி றொஷெல் பர்னான்டோ, திரு. புத்திக்க சீலநாத

கூட்டாண்மை முகாமைத்துவம்



திரு. டப்ளியு.பீ. ரசல் பொன்சேகா
பொது முகாமையாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி

பொது முகாமையாளராக நியமனம்:
ஜனவரி 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

கூட்டாண்மை மற்றும் கடல்கடந்த வங்கி, சில்லறை வங்கி, சர்வதேச, திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கி ஆகியவற்றில் வங்கிச் சேவையில் 33 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம். பொது முகாமையாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு, நிதி மற்றும் வங்கி ஒழுக்கத்தில் தனது நிபுணத்துவத்துடன் வங்கியின் ஒட்டுமொத்த மூலோபாயத்திற்கு தேவையான சீரமைப்புகளை முன்கூட்டியே செயல்படுத்த வங்கியின் நிதி அம்சங்களை நிர்வகிக்கும் வங்கியின் பிரதான நிதியியல் அதிகாரியாக அவர் கடமையாற்றினார்.

வியாபார நிர்வாகத்தில் B.Sc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) MBA (தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா) அமெரிக்காவின் ஹார்வர்ட் வியாபார கல்லூரியில் உயர் முகாமைத்துவ கற்கை நெறி, இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் சிரேஷ்ட சக உறுக்கினரும் ஆவார்.



அம்மணி ஜானகி சேனநாயக்க சிறிவர்தன
சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் செயலாளர், இலங்கை வங்கி, சபைச் செயலாளர்

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்:
அக்டோபர் 2010

திறமை மற்றும் அனுபவங்கள்

வங்கியின் கூட்டாண்மை ஆளுகை மற்றும் கம்பனி செயலக செயற்பாடுகளில் 27 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்

தொழில் ரீதியாக LLB பட்டம் பெற்ற ஒரு சட்டத்தரணி

MBA (சிறப்பு) (கொழும்புப் பல்கலைக்கழகம்)



திரு. டி.எஸ். முத்துக்குடாராச்சி
பிரதிப் பொது முகாமையாளர் (மீள் அறவீடு கூட்டாண்மை)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்:
பெப்ரவரி 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

வங்கி செயல்பாடுகளின் பல்வேறு அம்சங்களில் 33 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

கடன் முகாமை, கடன் இடர் மற்றும் வெளிநாட்டு கிளை செயல்பாடுகளில் சில்லறை மற்றும் கூட்டாண்மை வங்கியியலில் பரந்த அனுபவம்.

பெறுந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் பி. எஸ்சி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)



திரு. வை.ஏ. ஜயதிலக
பிரதி பொது முகாமையாளர் உற்பத்தி மற்றும் வங்கியியல் அபிவிருத்தி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்:
பெப்ரவரி 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

கிளைச் செயற்பாடுகள், திறைசேரி மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள், செயற்திட்ட முகாமைத்துவம், தன்னியக்கச் செயற்பாடுகள், தயாரிப்பு உற்பத்திகள் மற்றும் செயல்முறை மேம்பாடு, கடன் செயல்பாடுகள் மற்றும் கடன் மீள் அறவிடல் ஆகியவற்றில் பலதரப்பட்ட துறைகளில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

வியாபார நிர்வாகத்தில் முதல் வகுப்பு பட்டத்துடன் BSc (சிறப்பு) (ஸ்ரீ ஜெயவர்தனபுரா பல்கலைக்கழகம்) வியாபார முதுமாணி (நிதி) பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்) இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர் மற்றும் பட்டபின் முகாமைத்துவ நிறுவகத்தில (PIM) மூலோபாய முகாமைத்துவதில் உயர் கற்கைநெறி ((ஸ்ரீ ஜெயவர்தனபுரா பல்கலைக்கழகம்).



திரு. எச். ப்ரியல் சில்வா
பிரதிப் பொது முகாமையாளர் (கிளைச் செயற்பாடுகள்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்:
பெப்ரவரி 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

நிதி, கூட்டாண்மை, சில்லறை மற்றும் அபிவிருத்தி வங்கியியல், சர்வதேச மற்றும் திறைசேரிச் செயல்பாடுகள் மற்றும் கிளைச் செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்ற வங்கியின் பல்வேறு துறைகளில் 26 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவம்.

சந்தைப்படுத்தல் BBA (சிறப்பு) பட்டம் (ருகுணைப் பல்கலைக்கழகம்) கணக்கியல் MBA (களனிப் பல்கலைக்கழகம்) தொழில்முறைச் சந்தைப்படுத்தல், முதுகலை டிப்ளோமா (சந்தைப்படுத்தல் பட்டய நிறுவனம், இங்கிலாந்து) வியாபார நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா, இலங்கைப் பட்டய வங்கியாளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் மற்றும் இலங்கைச் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் உறுப்பினர்.



திரு. ஜீ.ஏ. ஜயஷாந்த
பிரதிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கியியல்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்:
செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

கிளை வங்கிச் சயற்பாடுகள், சில்லறை கடன், திறைசேரிச் செயற்பாடுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமை, இடர் முகாமை, கடன் மீள் அறவீடு மற்றும் கூட்டாண்மை மற்றும் கடல்கடந்த வங்கிச் செயற்பாடுகள் ஆகியவற்றில் சிறப்புத் திறன்களுடன் வங்கியில் துறையில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

முதல் வகுப்புடன் BSc (விசேட) பட்டம் வணிக நிர்வாகத்தில் பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) நிதி பொருளாதாரத்தில் MA (கொழும்பு பல்கலைக்கழகம்) கடன்

நிர்வாகத்தில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர்.



அம்மணி டப்ளியு.பீ.பி. ரத்நாயக்க

பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கப்பாடு)

கூட்டாண்மை முகாமைத்துவ நியமனம்: செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

26 ஆண்டுகளுக்கும் மேலாக தனது தொழில் வாழ்க்கையில் உள்ளூர் மற்றும் சர்வதேச வெளிப்பாடுகளுடன் வணிகியியல் துறையில் அனைத்து அம்சங்களிலும் அனுபவம் பெற்றவர்.

கூட்டாண்மை மற்றும் சில்லறை கடன் மற்றும் இடர் முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றவர். வங்கிக்கான இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் வங்கிக் கருவிகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

விவசாயத்தில் BSc (சிறப்பு) பட்டம் (ருகுண பல்கலைக்கழகம்) MBA (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) வங்கி நிர்வாகத்தில் முதுகலை நிர்வாக டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) ஆளுகை, இடர் மற்றும் இணக்கப்பாட்டில் சர்வதேச டிப்ளோமா (சர்வதேச இணக்கப்பாட்டுச் சங்கம், இங்கிலாந்து) மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் மற்றும் சர்வதேச இணக்கப்பாட்டு சங்கத்தின் இணை உறுப்பினர்.



திரு. ஆர்.எம்.என். ஜீவந்த

பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேச திறைசேரி மற்றும் முதலீடு)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

திறைசேரி முகாமை, முதலீட்டு வங்கி, நிதி முகாமை, கடன் முகாமை மற்றும் சில்லறை வங்கியியல் ஆகிய துறைகளில் 21 ஆண்டுகளுக்கும் மேலான வங்கி அனுபவம்.

கணக்கியல் துறையில் BSc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) MBA (பட்டபின் முகாமைத்துவ நிறுவனம்) இலங்கை சான்றளிக்கப்பட்ட தொழில்முறை முகாமையாளர் நிறுவனத்தின் உறுப்பினர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் மூத்த சக உறுப்பினர்.

வருகைதரு விரிவுரையாளர், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்.



திரு. எம்.பி. ருவான் குமார

பிரதான நிதியியல் அதிகாரி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

நிதி முகாமை, மூலோபாய திட்டமிடல், முதலீட்டு வங்கி, வியாபார மற்றும் வெளிநாட்டு வங்கி செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்ற 21 ஆண்டுகளுக்கும் மேலான வங்கித்துறையில் அனுபவம்.

கணக்கியலில் BSc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) பொதுநலவாய நிறைவேற்று அதிகாரிகளுக்கான வியாபார நிருவாக முதுமானிப் பட்டம் (CEMBA) (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர், இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் உறுப்பினர்.



திரு. எஸ். சிவாஞ்சன்

பிரதிப் பொது முகாமையாளர் (கிளைக் கடன் செயற்பாடுகள பிரிவு - 1)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

சில்லறை கிளைச் செயற்பாடுகள், கடன், கடன் மீள் அறவீடு, அபிவிருத்தி வங்கியியல், உருமாற்றம், நுண் நிதி, சர்வதேச மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் ஆகியவற்றில் 21 ஆண்டுகளுக்கும் மேலான வங்கித்துறையில் அனுபவம்.

விஞ்ஞானத் துறையில் BSc முதல் வகுப்பு கௌரவப் பட்டம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் MBA (கொழும்புப் பல்கலைக் கழகம்)



திரு. பீ.கே. குருசிங்க

பிரதான சட்ட அதிகாரி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: செப்டம்பர் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

கூட்டாண்மை வங்கி, சில்லறை வங்கி, கடன் மற்றும் நிறுவன மாற்றம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஒரு வங்கி நிபுணராக 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

இலங்கை சட்டக் கல்லூரியின் வழக்கறிஞர்.

வணிக நிர்வாகத்தில் BSc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) பொதுநலவாய நிறைவேற்று அதிகாரிகளுக்கான வியாபார நிருவாக முதுமானிப் பட்டம் (CEMBA) (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) வியாபார மற்றும் நிதி நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா (இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம்) கடன் நிர்வாகத்தில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர்

கூட்டாண்மை முகாமைத்துவம்



திரு.எம்.ஆர்.என். ரோஹண குமார
பிரதிப் பொது முகாமையாளர்
(வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: ஜனவரி 2021

திறமை மற்றும் அனுபவங்கள்

வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு மீள் அறவீடு, சில்லறை கடன் மற்றும் கருத்திட்ட நிதி ஆகியவற்றில் நிபுணத்துவம் மற்றும் தலைமைப் பொறுப்புக்களை உள்ளடக்கியதான வங்கியில் 21 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர்.

BSc கணிதத்தில் முதல் வகுப்பு பட்டம் (களனி பல்கலைக்கழகம்) தலைமைத்துவத்தில் நிர்வாக டிப்ளோமா (வடக்கு இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம், அமெரிக்கா) இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர்.



திரு. ஏ.ஆர்.எப். ஜோன் புள்ளே
பிரதிப் பொது முகாமையாளர்
(நிதி மற்றும் திட்டமிடல்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: ஜூலை 2021

திறமை மற்றும் அனுபவங்கள்

வணிக வங்கியின் அனைத்து அம்சங்களிலும் 32 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம், திறைசேரி முகாமைத்துவம், சில்லறை வங்கி, இடர் முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு வங்கி செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றவர். சென்னை இலங்கை வங்கித் திறைசேரித் தலைவராகவும், லண்டனில் இலங்கை வங்கி (யுகே) லிமிடெட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

B.Ph தத்துவத்தில் முதல் வகுப்பு பட்டம் (யுனிவர்சிட்டா பொன்டி.ச்.பிகா சேல்ஸினா, இத்தாலி) மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர்.



திரு. நிலந்த மினேரிப்பிட்டியகே
பிரதான இடர் அதிகாரி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: ஜூலை 2021

திறமை மற்றும் அனுபவங்கள்

தலைமை, கூட்டாண்மை மற்றும் கடல்கடந்த வங்கி, கிளை செயல்பாடுகள் மற்றும் அபிவிருத்தி வங்கி, சில்லறை மற்றும் SME நிதியிடல் இடர் முகாமைத்துவம் கடனட்டைச் செயல்பாடுகள், திறைசேரிச் செயல்பாடுகள், செயற்திட்ட முகாமைத்துவம், ஈ. எஸ். ஜி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மாலைத்தீவு கிளை செயல்பாடுகள் ஆகிய துறைகள் தொடர்பான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செயல்பாடுகளில் 31 ஆண்டுகள் அனுபவம் கொண்ட தொழில்முறை வங்கியாளர்.

BSc (சிறப்பு) முகாமைத்துவம் மற்றும் எம். எஸ்சி (முகாமைத்துவப் பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) மற்றும் இலங்கை வங்கிகள் நிறுவனத்தின் இணை உறுப்பினர்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முதுகலை படிப்புத்துறை, இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் சேர்ந்த வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.



திரு. கே.ஏ.டி. விஜயவர்த்தன
பிரதிப் பொது முகாமையாளர்
(மனிதவளம்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: அக்டோபர் 2021

திறமை மற்றும் அனுபவங்கள்

கிளை வங்கியியல் கடன் மற்றும் சில்லறை வங்கியியல், மனித வள செயல்பாடுகளில் நிர்வாகம் மற்றும் கூட்டாண்மை தலைமைத்துவம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற வங்கியில் துறையில் 21 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

BSc (பொது) இரண்டாம் வகுப்பு (மேல்நிலைப் பிரிவு) கௌரவப் பட்டம் (களனி பல்கலைக்கழகம்) வியாபார முகாமைத்துவ முதுகலை டிப்ளோமா (வயம்ப பல்கலைக்கழகம்) இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை தொழில்முறைசார் வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர்.



திரு கே.ஏ.அஜித் கருணாரத்ன
பிரதிப் பொது முகாமையாளர்
(மீள் அறவீடு - மாகாணங்கள்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: டிசம்பர் 2021

திறமை மற்றும் அனுபவங்கள்

சில்லறை வங்கி, வர்த்தக நிதி, கூட்டாண்மை மற்றும் பிரிமியர் வங்கி செயல்பாடுகள் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வங்கியில் துறையில் 21 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

வணிக ஊக்குவிப்பு, நிர்வாகம் மற்றும் மனித வளத்திற்கான பொறுப்புடன் பல மாகாணங்களில் சில்லறை வங்கி மற்றும் நிர்வாக தலைமைப் பாத்திரங்களில் பலதரப்பட்ட அனுபவம்.

வணிக நிர்வாகத்தில் BSc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம்).

MBA (வயம்பா பல்கலைக்கழகம்) இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் உறுப்பினர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர்.



அம்மணி பீ.பீ.எம். விஜேசேகர

பிரதிப் பொது முகாமையாளர் (துணைச் சேவைகள்)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: மார்ச் 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

சில்லறை வங்கி, கூட்டாண்மைக் கடன், மீள் அறவீடு, கடல்கடந்த் வங்கியியல், நிர்வாக சேவைகள், சந்தைப்படுத்தல், வெளிநாட்டு கிளைகள் மற்றும் கடன் கணக்காய்வுச் செயல்பாடுகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற வங்கியின் பல்வேறு துறைகளில் 32 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

இலங்கை வங்கி (UK) லிமிடெட்டில் அவரது பதவிக்காலத்தின்போது சர்வதேச வங்கியியல் அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

MBA (சிறப்பு) (லண்டன் மெட்ரோவாலிடன் பல்கலைக்கழகம்), நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்க கழகம்) தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (மொரட்டுவ பல்கலைக்கழகம்) இலங்கை

வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர்.



அம்மணி ரொஷெல் பர்னான்டோ

பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பிரிவு 2)

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: மார்ச் 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

சில்லறை வங்கி, கூட்டாண்மை வங்கி மற்றும் வர்த்தக நிதி ஆகியவற்றில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது, குறிப்பாக கடல்கடந்த வங்கி பிரிவின் இறக்குமதி பிரிவு தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கியதானது.

இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர், இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர், இலங்கை முதுகலை மேலாண்மை நிறுவனம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்) நடத்திய முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களுக்கான நிதி நிர்வாகத்தில் பிபிஏ (சிறப்பு) (கொழும்பு பல்கலைக்கழகம்) முகாமைத்துவ மேம்பாட்டு திட்டம்.

2018 முதல் டிசம்பர் 2022 வரை சர்வதேச வர்த்தகம் முதல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தொடர்பான வங்கித் திட்டங்கள் குறித்த சான்றிதழ் பாடநெறி-முன்கூட்டிய சான்றிதழ் படிப்புக்கான வளவாளர். வங்கியாளர்களின் வர்த்தக நிதி சங்கத்தின் தலைவராக பணியாற்றுகிறார்.



திரு. பீ. மதுவந்த லியனகே

பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: டிசம்பர் 2014

திறமை மற்றும் அனுபவங்கள்

வங்கி மற்றும் நிதி துறையில் 24 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட நிதி நிபுணர்.

வங்கியில் தலைமை உள்ளகக் கணக்காய்வாளராகச் சேருவதற்கு முன்பு, கொமர்ஷல் கெரடிட் அன்ட் பிஎல்சி லிமிடெட் மற்றும் பான் ஆசியா வங்கியில் 2006 முதல் 2008 வரை உள்ளகக் கணக்காய்வாளராகப் பணியாற்றினார். லங்கா கிளியர் (பிரைவேட்) லிமிடெட், நிதி மற்றும் நிர்வாக முகாமையாளராக தேசிய காசோலை தீர்ப்பனவு இல்லத்தில் மற்றும் தகுதி வாய்ந்த உதவியாளராக எர்ன்ஸ்ட் அன்ட் யங் ஆகியவை அவரது அனுபவத்தில் அடங்கும்.

கணக்கியல் மற்றும் நிதி நிர்வாகத்தில் BSc (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்)ம. இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் மற்றும் ISACA-USA இன் சான்றளிக்கப்பட்ட தகவல் அமைப்புகள் கணக்காய்வாளர்கள் நிறுவன (CISA) உறுப்பினர்.



திரு.சமீர டி லியனகே

பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: ஆகஸ்ட் 2020

திறமை மற்றும் அனுபவங்கள்

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை நிபுணத்துவம்.

2015 ஆம் ஆண்டில் சார்ட்டர்ட் இன்ஸ்டிடியூட் ஆ.ப் மார்க்கெட்டிங் நிறுவனத்தால்(யூ.கே.) பட்டய சந்தைப்படுத்துபவர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

சந்தைப்படுத்தல் முதுகலை டிப்ளோமா, (பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனம்-இங்கிலாந்து) சிஐஎம்-இங்கிலாந்து

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மற்றும் தொழில்முறை வங்கியாளர்கள் சங்கம்-இலங்கை ஆகியனவற்றின் உறுப்பினர்.



திரு. புத்திக்க சீலநாத

பிரதான தகவல் அதிகாரி

கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான நியமனம்: செப்டம்பர் 2023

திறமை மற்றும் அனுபவங்கள்

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 25 ஆண்டுகளுக்கும் மேலான வங்கி மற்றும் தகவல் தொழில்நுட்ப அனுபவம் உள்ளது. வருவாயை அதிகரிப்பதன் மூலமும் வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துவதன் மூலமும் ஒட்டுமொத்த மதிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களுக்குள் டிஜிட்டல் மாற்ற உத்திகளை முன்னெடுத்துச் செல்வதிலும் செயல்படுத்துவதிலும் வெற்றியை நிரூபித்தமை. பயன்பாட்டு மேம்பாடு, தரவுக் கிடங்கு மற்றும் தரவு பகுப்பாய்வு உள்ளிட்ட முக்கிய களங்களில் தேர்ச்சி.

முகாமைத்துவ தகவல் அமைப்புகளில் BSc பட்டம் (அயர்லாந்து தேசியப் பல்கலைக்கழகம், டப்ளின்)

நிறைவேற்று முகாமைத்துவம்



அம்மணி ஏ.எம்.ஆர்.டி.. சுபசிங்க
உதவிப் பொது முகாமையாளர்-
அறவிடல் மாகாணங்கள்

அம்மணி ரி. பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்-
பயற்சி மற்றும் அபிவிருத்தி

திரு. கே. ஜி. சீ. தீபால்
உதவிப் பொது முகாமையாளர்-
தகவல் முறைமைகள் கணக்காய்வு

அம்மணி ஜெ. ஞானசம்பந்தன்
உதவிப் பொது முகாமையாளர்-
திறைசேரி பின்நிலை அலுவலகம்



அம்மணி ஆர். எம். எம். வீரசேகர
உதவிப் பொது முகாமையாளர்
(கிளைக் கடன பிரிவு - 1)

அம்மணி கே. பீ. மல்லிகா
உதவிப் பொது முகாமையாளர்-
விசாரணைகள்

திரு. ஐ. எஸ். என். பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்
கூட்டாண்மை உறவுகள்

அம்மணி எஸ். பீ. சீ. கே. பர்னாண்டோ
உதவிப் பொது முகாமையாளர்-
கூட்டாண்மைக் கடன்



அம்மணி வ்தினா ருவெய்ஸ்
உதவிப் பொது முகாமையாளர்-
பாதிடு, மூலோபாயத் திட்டமிடல் மற்றும்
முகாமைத்துவ தகவல் முறைமை

திரு. ஜீ. கே. ஜீ. மகிந்த பண்டார
உதவிப் பொது முகாமையாளர்-
வடமத்திய மாகாணம்

திரு. டப்ளியூ. எம். ஏ. வணிகசேகர
உதவிப் பொது முகாமையாளர்-
ஓய்வுக்குப் பின் சேவைகள்

அம்மணி பீ. எம். வித்தான ஆரச்சி
உதவிப் பொது முகாமையாளர்-
கிளைச் செயற்பாடுகள்



அம்மணி எச். எம். எம். டி. ஹேரத்
உதவிப் பொது முகாமையாளர்-
தென்மாகாணம்

அம்மணி எஸ்.எச்.எம்.எம்.பி. ஹேரத்
வதிவிட முகாமையாளர்-
மாலே

அம்மணி கே. கே. ஐ. சீ. கே. கன்னங்கர
உதவிப் பொது முகாமையாளர்-
கூட்டாண்மை அறவிடல்

திரு. எஸ். அருண குமார
பிரதான நிறைவேற்று அதிகாரி
இலங்கை வங்கி (UK) லிமிடட்



திரு. எம்.ரி.எஸ்.ஏ. பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வியாபார செயன்முறைகள் மீளமைத்தல் திட்டம்

அம்மணி எஸ் பிரபாகரன்
உதவிப் பொது முகாமையாளர்
மத்திய கடன் தொழிற்பாடுகள்

திரு.எஸ்.கே. விக்கிரமசிங்க
உதவிப் பொது முகாமையாளர்
புறக்கோட்டைக் கிளை

திரு. டீ.ஏ.எஸ்.எஸ். விமலசிறி
உதவிப் பொது முகாமையாளர்
நுகர்வோர் மற்றும் அபிவிருத்தி வங்கியியல்



அம்மணி கே. ஜே. யோகரட்னம்
வதிவிட முகாமையாளர் - சென்னை

அம்மணி என்.டப்ளியூ.ஜே.எஸ்.பி. நாணயக்கார
பிரதிப் பிரதான சட்ட அதிகாரி- அறவிடல்

அம்மணி ஜே எம் பீ டப்ளியூ. திலகரத்ன
பிரதிப் பிரதான சட்ட அதிகாரி சர்வதேச, மனிதவள மற்றும் பொது தொழிற்பாடுகள்

அம்மணி என். என். நிஷானதி
பிரதிப் பிரதான சட்ட அதிகாரி - கடன்



திரு.எஸ். பி. ஏ. எம். ஜீ. எஸ். அரம்பத்
உதவிப் பொது முகாமையாளர் - கரைகடந்த வங்கியியல்

திரு. டப்ளியூ.எம்.என்.டி. தயாவன்ச
உதவிப் பொது முகாமையாளர்- மத்தியமய தொழிற்பாடுகள்

அம்மணி கே. தீபா குமாரி
உதவிப் பொது முகாமையாளர்- கடன் இடர்

திரு. எஸ்.பீ.கே. லியனகே
உதவிப் பொது முகாமையாளர் மேல்மாகாணம் வடக்கு



திரு. டீ. எம். ஏ. மாதவ
உதவிப் பொது முகாமையாளர்- கணக்கீடு மற்றும் வரிகள்

அம்மணி டப்ளியூ.கே.எல்.பி.என். சமந்தி
உதவிப் பொது முகாமையாளர்- கிளைக் கடன் - பிரிவு 2

திரு. ஆர். எம். சமரக்கொடி
உதவிப் பொது முகாமையாளர்- சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்

திரு. வி. சிவானந்தன்
உதவிப் பொது முகாமையாளர்- வட மாகாணம்.

நிறைவேற்று முகாமைத்துவம்



திரு. ஏ. டப்ளியூ. ஆர். துஷாந்த
வதிவிட முகாமையாளர்-
சீஷெல்ஸ்

திரு. எஸ். டப்ளியூ. எம். எஸ். விஜேசிங்க
உதவிப் பொது முகாமையாளர்-
மத்திய மாகாணம்

அம்மணி எஸ். எஸ். ரி. குலசேகர
உதவிப் பொது முகாமையாளர்-
செயற்திட்ட நிதியிடல்

அம்மணி பீ சந்திரதேவ
உதவிப் பொது முகாமையாளர்-
தகவல் தொழிநுட்பம் (பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாடு)



அம்மணி டப்ளியூ. ஏ. ஜீ. எல். வீரக்கொடி
உதவிப் பொது முகாமையாளர்-
கடன் கணக்காய்வு

அம்மணி எம். ஏ. டீ. பீ. டயஸ்
உதவிப் பொது முகாமையாளர்
மனிதவளச் செயற்பாடுகள்

திரு. என். கிருஷ்ணகுமார்
உதவிப் பொது முகாமையாளர்-
வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு கூட்டாண்மை

திரு. ஐ. கே. நவரத்ன
உதவிப் பொது முகாமையாளர்-
ஊவா மாகாணம்




அம்மணி என். ஆர். டீ. என். பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்
பெருநகரம்

திரு. ஆர்.பீ.டீ.ஆர்.ஆர். ருவன்பத்திரன
உதவிப் பொது முகாமையாளர்-
சர்வதேசம்

திரு. ஐ. யூ. கே. டீ. விஜேகுணவர்தன
உதவிப் பொது முகாமையாளர்-
இலத்திரனியல் வங்கியியல்

திரு. ஓ. ஜீ. சீ. ஜீ. பண்டார
உதவிப் பொது முகாமையாளர்
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி



திரு. டீ. கே. ஆர். தெல்கொட
உதவிப் பொது முகாமையாளர்-
வடமேல் மாகாணம்

திரு. எஸ். கே. கஜநாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
மேல் மாகாணம் மத்தி

அம்மணி பீ. சீ. மார்டின்
உதவிப் பொது முகாமையாளர்-
கிழக்கு மாகாணம்

திரு. எஸ். ஏ. என். சீ. பியுமால்
உதவிப் பொது முகாமையாளர்-
டிஜிட்டல் உற்பத்தி மேம்படுத்தல்கள்



திரு. கே. டப்ளியூ. வை. பி. பிரேமரத்ன
உதவிப் பொது முகாமையாளர்-
சந்தைப்படுத்தல்

திரு. பீ. வீ. சீ. ஜீ. பி. ரணசிங்க
உதவிப் பொது முகாமையாளர்-
சப்ரகமுவ மாகாணம்

திரு. எஸ். சபேசன்
உதவிப் பொது முகாமையாளர்-
நிலைபேறுதன்மை வங்கியியல்

திரு. எம்.ஆர்.ஏ. ஷகூர்
உதவிப் பொது முகாமையாளர்
முதலீடுகள்



திரு. கே. எம். சீ. என். கொடித்துவக்கு
உதவிப் பொது முகாமையாளர்-
தகவல் தொழிநுட்பம் செயற்பாட்டு மற்றும்
தொழில்நுட்ப உதவி

அம்மணி பீ. ரி. குணதிலக்க
உதவிப் பொது முகாமையாளர்-
இணக்கப்பாடு

அம்மணி யூ. என். ஹேரத்ரன்தெனி
உதவிப் பொது முகாமையாளர்-
அரசுடமை தொழில்
முயற்சிகளினுடனான உறவுகள்

அம்மணி ஏ.ஏ.வை.கே.கே. ஜயசூரிய
உதவிப் பொது முகாமையாளர்-
வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு
(மாகாணங்கள்)



திரு. கே. சீ. மகவத்த
உதவிப் பொது முகாமையாளர்-
நிர்வாக சேவைகள்

அம்மணி கே.கே.என்.ஜே. பிரியதர்ஷிக்கா
உதவிப் பொது முகாமையாளர்
வெளிநாட்டுக் கிளைகள்

அம்மணி ஆர். பீ. எல். ஐ. ரணசிங்க
உதவிப் பொது முகாமையாளர்-
கொள்முதல்

திரு. கே. கே. சுசந்த
உதவிப் பொது முகாமையாளர்-
வர்த்தக சேவைகள்



அம்மணி பீ. ஜயதுங்க
உதவிப் பொது முகாமையாளர்-
தகவல் தொழிநுட்பம்
(பயன்பாட்டு முறைமை)

அம்மணி பீ.ரி.எஸ். பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்-
தகவல் தொழிநுட்பம்
(விநியோக வழிமுறைகள்)

இலங்கை வங்கி ஓர் சிக்கலான மற்றும்
மாறும் பேரண்டச் சூழலின் மூலம்
அதன் வழியால் பயணஞ்செய்தது.
புவிசார் அரசியல் நிகழ்வுகள்,
ஒழுங்குமுறை மாற்றங்கள், காலநிலை
மற்றும் சமூக மாற்றங்கள் மற்றும்
பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள்
உள்ளடங்கலான உள்ளக மற்றும்
வெளியக காரணிகளால் இந்த மாறும்
களம் பாதிக்கப்பட்டு இது எமக்கு
சவால்களையும் வாய்ப்புகளையும்
வழங்குகிறது.



3

எமது மூலோபாய நோக்கம்

எமது சூரிய மண்டலத்தின் மையமாக சூரியன் செயல்படுவதுபோல், நன்கு வரையறுக்கப்பட்ட ஓர் உபாயமென்பது வங்கியின் தொழிற்பாடுகளுக்கு மையமாக செயல்பட்டு அதன் அனைத்து முயற்சிகளுக்கும் திசையையும் ஆற்றலையும் வழங்குகிறது.

சூரியன் வெப்பத்தையும் ஒளியையும் வீசுவதைப்போல் நன்கு வடிவமைக்கப்பட்ட ஓர் மூலோபாயம் பொதுவான இலக்குகளைப் பின்தொடர்வதில் நல்லிணக்கம் மற்றும் ஒத்திசைவை நோக்கிய எமது பங்குதாரர்களின் முயற்சிகளை சீரமைக்கும் தெளிவையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

தொழிற்பாட்டுக் களம்

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெறுமதியை உருவாக்கும் திறனை பாதிக்கக்கூடிய பொருண்மையான இடர்நேர்வுகள் அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண பெஸ்டெல் சட்டகத்தினைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுச் சூழலை இலங்கை வங்கி தொடர்ந்து கண்காணிக்கிறது. இந்த ஆண்டில் வங்கியின் செயலாற்றம் மற்றும் மூலோபாயத்தை பாதித்த முக்கியமான காரணிகள் பின்வருமாறு.



அரசியல் மற்றும் பொருளாதார களம்

உலகளாவிய சூழ்நிலை

தொற்றுநோயின் நீண்டகால தாக்கத்தினால் தொடர்ந்தும் மீண்டு வந்து உலகப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மீண்டெழுந்தன்மையை வெளிப்படுத்தியது. கிழக்கு ஐரோப்பாவில் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் மத்திய கிழக்கிலான அபிவிருத்துகள் ஆதிக்கம் செலுத்தியதால், 2023 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் தொடர்ந்து சவால்களைச் சந்தித்தது. இந்த காரணிகள் உலகப் பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்திய அதே வேளையில் பணவீக்க மட்டங்கள் தொடர்ந்து அதிகரித்ததால் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது.

உலக பொருளாதார தோற்றப்பாடின்படி, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 3.1 சதவீதத்தை எட்டும் என்று எறிவுசெய்யப்படுகிறது. ஆசியா வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியமாக இருக்கும், மேலும் உலகளாவிய வளர்ச்சியை தொடர்ந்து உந்தி 5.4 சதவீதத்தினால் விரிவுபடுத்தும். முக்கிய பொருளாதாரங்களில், அமெரிக்கா 2023 ஆம் ஆண்டில் 0.2% மிதமான சுருக்கத்தையும் ஐக்கிய இராச்சியத்தில் 0.5% சுருக்கம், ஐரோப்பா 0.4% ஒட்டுமொத்த மிதமான விரிவாக்கத்தைக் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய முதன்மை பணவீக்கம் 2023 ஆம் ஆண்டில் 6.8% சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 5.2% சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல நாடுகளில் விலை அழுத்தங்கள் இன்னும் உயர்வாகவுள்ளதோடு மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் மோதல்கள் இதற்கு மேலும் அதிகரித்தால் பணவீக்கம் அதிகரிப்பதற்கான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

உள்நாட்டு சூழ்நிலை

2022 ஆம் ஆண்டில் மிகவும் சவாலான காலகட்டத்தை எதிர்கொண்ட பின்னர், செயற்றிறனான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தியதன் விளைவாக, இலங்கை பல பொருளாதார முனைகளில், மீண்டெழுந்தன்மை மற்றும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் மற்றும் இலங்கை அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கு ஆதரவான கொள்கைகளால் ஆதரிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஓர் சுருக்கத்தைக் கண்ட உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்து இது உள்நாட்டு பொருளாதாரத்தை நீடித்து நிலைத்திருக்கக்கூடிய மட்டங்களிலான வளர்ச்சியை அடைய உதவியது

2022 ஆம் ஆண்டில் 73.7% உச்சத்தை முதன்மை (நுகர்வோர்) பணவீக்கம் எட்டிய பின்னர், திரண்ட கேள்வியின் வீழ்ச்சி, உள்ளூர் விநியோகச் சங்கிலி உற்பத்தியில் அதிகரிப்பு மற்றும் உலகளாவிய பண்டங்களின் விலைகளின் இயல்பாக்குதல் என்பவையினால் பணச்சுருக்க வழிமுறைக்கு இட்டுச்செல்லப்பட்டது. உள்நாட்டு பணவீக்கத்தினை நிலைநிறுத்துவது பொருளாதார முகவர்களின் வாங்கும் இயலளவினை அதிகரிக்கும் என்றும் அவர்களின் கொடுகடன் திருப்பிச் செலுத்தும் திறனை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை ஓர் கடினமான ஆண்டிலிருந்து மீண்டு வருவதால், 2023 ஆம் ஆண்டில் ரூபாய் படிப்படியாக பெறுமதி உயர்வின் அறிகுறிகளைக் காட்டியது. நிலைப்பேறுடைய பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாட்டை வழிநடத்த நியாயமான திட்டமிடலுக்கு இது சமிக்ஞை செய்கிறது.


இலங்கையின் அலுவல்சார் ஒதுக்குகள் நவம்பர் மாதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3.7 பில்லியனாக இருந்ததுடன் டிசம்பர் 2023 இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 4.3 பில்லியன்களைத் தாண்டியது - இது நாடு பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்ததன் பின்னர் எட்டப்பட்ட மிக உயர்ந்த மட்டமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் இலங்கையின் செயல்திறன் திருப்திகரமாக இருந்ததுடன் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கான அணுகலை நாட்டிற்கு வழங்கியது. இது கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், வருவாயை உயர்த்துவதற்கும், ஒதுக்கு தாங்கிருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், பணவீக்கத்தை குறைப்பதற்கும், நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கும் வழிவகுத்தது.




சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் மீட்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் தவணையையும் எதிர்பார்க்கப்பட்ட இரண்டாவது தவணையையும் பெறுவதன் மூலம் இலங்கை பொருளாதார மீட்சியை நோக்கிய பாதையில் செல்கிறது என்பதையும், ஒரு முன்னோடி ஆசிய தேசமாக அதன் பொருளாதார உச்சநிலையை மீண்டும் நிலைநிறுத்த முடியும் என்பதையும் சர்வதேச சமூகத்திற்கு சமிக்ஞை செய்துள்ளது.


காலாண்டிற்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி



பணவீக்கம்: ஆண்டிற்காணடிற்கானது % கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றம்



கொடுகடன் மற்றும் வைப்பு வீதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் துறையின் தோற்றப்பாடு

2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சுருக்கம் நாணயக் கொள்கையின் படிப்படியான தளர்வினால் குறைந்தளவு கடுமையானதாக இருந்தபோதிலும் வங்கிதொழில் துறை மீண்டெழுந்தன்மையுடையதாகக் காணப்பட்டது. இது. பேரண்டப்பொருளாதார கொள்கை சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன என்பதுடன் மேலும் பொருளாதாரம் உறுதிப்பாடு அடையும் தற்காலிக அறிகுறிகளைக் காட்டுகிறது.

சொத்துத் தளம்

மொத்தச் சொத்துக்கள் (ரூபாய்)

2023	20.4 டிரில்லியன்
2022	19.4 டிரில்லியன்

கொடுகடன் சொத்துப்பட்டியல்

மொத்த கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபாய்)

2023	11.0 டிரில்லியன்
2022	11.3 டிரில்லியன்

தொழிற்படும் களம்

நிதியிடல்

வைப்புக்கள் (ரூபாய்)




இலாபகரத்தன்மை

வரிக்கு முன்னரான இலாபம் (ரூபாய்)




மூலதனம் மற்றும் திரவத்தன்மை


மூலதன போதுமாந்தன்மை விகிதம்



அடுக்கு 1 மூலதன விகிதம்



நியதி திரவச் சொத்துக்கள் விகிதம்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் கொள்கை சீர்திருத்தங்களை வெற்றிகரமாக தொடர்வதைப் பொறுத்தே குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் இலங்கை பொருளாதாரத்தின் மீட்சி தங்கியுள்ளது.

இதற்கு இறைச் செயலாற்றம் மேம்படுத்துவதற்கும், வெளிநாட்டுத்துறை இடையகங்களை வலுப்படுத்துவதற்கும் நம்பகமான நடவடிக்கைகள் தேவைப்படுகின்ற அதே நேரத்தில் விலை உறுதிப்பாடு நிதியியல் முறைமை உறுதிபாட்டினையும் உறுதிசெய்யவேண்டும். சந்தை கொடுகடன் வட்டி வீதங்களின் படிப்படியான இயல்பாக்குதல் மற்றும் முதலீட்டாளர் மற்றும் வணிக நம்பிக்கையில் முன்னேற்றங்கள் ஆகியவை முன்னோக்கிச் செல்கையில் தனியார் துறைக்கான கடன் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கிகள் போதுமான அளவு மூலதனமாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, வங்கிகளில் எதிர்கால முன்னேற்றங்களுக்கு மூலதனத்தின் போதுமாந்தன்மையை அடையாளம் காண இலங்கை மத்திய வங்கி கடுமையான மதிப்பீட்டு செயற்பாட்டை மேற்கொண்டுவருகிறது. மேலும், வணிகங்கள், குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழிலமுயற்சிகள் மற்றும் பெருநிறுவனங்களின் நிலையான புத்துயிர்ப்பில் உரிமம் பெற்ற வங்கிகளின் வகிபாகத்தை வலுப்படுத்தவும், சொத்துக்களின் தரம் பேணப்படுவதை உறுதி செய்யவும் இலங்கை மத்திய வங்கி பரந்த வழிகாட்டுதல்களை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வங்கி மீதான தாக்கம்

- சர்வதேச நாணய நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு கடன் உகப்பாக்க மூலோபாயம் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு ஆகியவை வங்கித்தொழில் துறையின் ஐந்தொகையை பாதிக்கக்கூடும்.
- மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக அளவுகோல் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டு இது கடன் புத்தகத்தின் வளர்ச்சிக்கு வாய்ப்பை உருவாக்கியது.
- வங்கிகளுக்கிடையிலான சந்தையில் நிதிகளின் போதாமை வங்கிகளுக்கிடையிலான கடன்பெறுதலை தடுக்கிறது.

தொடர்புடைய இடர்பாடுகள் R1 R2 R3 R4

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள் M1

எமது மறுமொழி

- ஒட்டுமொத்த தேசிய நலனைக் கருத்திற் கொண்டு, எரிசக்தி மற்றும் மருந்தாக்கல் துறைகளிலுள்ள முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு நிதி வழங்குதல்.
- கடன்களை திருப்பிச் செலுத்துவதில் அழுத்தத்தை எதிர்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு சரியான நேரத்தில் ஆதரவு.
- திரவத்தன்மையை பாதுகாப்பதில் எமது கவனத்தை வலுப்படுத்தியது.
- உறுதிமொழிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், அத்தியாவசிய இறக்குமதிகளை எளிதாக்குவதை உறுதி செய்யவும் எதிர்வுகூறல்கள் மீது நம்பிக்கைகொண்டிருத்தல்

மாற்றமடையும் சமூகச் சூழல்

மந்தமான பொருளாதார வளர்ச்சி, உயர்வான பணவீக்கம் மற்றும் வரி அதிகரிப்புக்கள் ஆகியவை வாழ்வாதாரங்கள் மீதான அதிகரித்த அழுத்தங்கள், வருமானம் மற்றும் சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது. வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய மக்கள் குறிப்பாக வறுமை மற்றும் சமூக விலகல் அபாயத்தில் உள்ளனர், இதற்கு இலக்கிடப்பட்ட சமூக உதவி மற்றும் ஆதரவு பொறிமுறைகள் தேவைப்படுகின்றன.

வெளிப்புற இடம்பெயர்வும் குறிப்பாக இளைய சனத்தொகையினரில் தொடர்ந்து வளர்ந்து வந்தது, இதன் விளைவாக திறமையான பணியாளர்கள் வெளியேறினர்.

இலங்கை வங்கி மீதான தாக்கம்

- கடன் வாங்குபவர்களின் திருப்பிச் செலுத்தும் திறன் குறைவதால் அதிகரித்த கொடுகடன் இடர்நேர்வு என்பதனால் சொத்துப்பட்டியலின் தரத்தில் பாதகமான விளைவுகளை விளைவித்துள்ளது.
- நிபுணத்துவமுடைய தொழிலாளர்களின் இடம்பெயர்வு மற்றும் திறமை வெளியேறல் அதிக ஊழியர்களின் வெளியேறலை ஏற்படுத்தி இதன் விளைவாக வங்கித்தொழில் துறையில் நிபுணத்துவமுடைய திறன்களைக் கொண்ட ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
- மேம்பட்ட செலாவணி விகிதங்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் அதிக வருவாய்களை அனுப்புவதால், 2023 ஆம் பணவனுப்பல்களின் பாய்ச்சல் அதிகரித்து இது வங்கியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

தொடர்புடைய இடர்நேர்வுகள்: R1 R4 R5

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M3 M4

எமது மறுமொழி

- ஊழியர்களுக்கு எந்தவொரு நிதி அல்லது நிதி அல்லாத நன்மைகளையும் வங்கி குறைக்கவில்லை மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கத்திற்கு ஏற்ப வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை (COLA) ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தது.
- வாடிக்கையாளர் முன்னுரிமைகள் மற்றும் தேசத்தின் தேவைகளை ஆதரிப்பது மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தை மேம்படுத்துதல்.

டிஜிட்டல் மாற்றம்

தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மாறிவரும் நுகர்வோர் நடத்தை மற்றும் பல்வேறு துறைகளில் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிப்பதற்கான அரசின் முன்னெடுப்புக்கள் ஆகியவற்றால் இலங்கையில் டிஜிட்டல் மாற்றம் தொடர்ந்து வேகம் பெற்றது. இந்த ஆண்டு செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ், கிளவுட் கம்ப்யூட்டிங் மற்றும் பெருந்தரவு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பைக் கண்டது - இது நாட்டின் வணிக மற்றும் பொருளாதார களம் மீது தாக்கஞ் செலுத்தியது.

மக்கள்தொகையில் பெரும் சதவீதம் பேர் ஸ்மார்ட்போன்கள் மற்றும் மொபைல் சாதனங்கள் வழியாக இணையத்தை அணுகுகின்றதனால் மொபைல் மற்றும் இணைய ஊடுருவல் விகிதங்களிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. டிஜிட்டல் வங்கித்தொழில், ஒருவருக்கொருவர் இடையிலான கடன் வழங்குதல், மொபைல் கொடுப்பனவுகள் மற்றும் பணவனுப்பல்கள் போன்ற துறைகளில் தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிகமான புத்தாக்கத்தை மேற்கொள்வதுடன் பாரம்பரிய வங்கி சேவைகளுக்கு மாற்றுத் தீர்வுகளை வழங்குவதுடன், நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் நிதி கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சேவைகளில் செயல்திறன் அதிகரிக்கப்படுகிறது.

இலங்கை வங்கி மீதான தாக்கம்

- நிதிச் சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கல் வங்கிகளின் செயல்பாட்டை மாற்றியமைத்து வருகிறது. எனவே, தானியங்கிகள் மற்றும் முறைமை மேம்பாடுகள் மூலம் அதன் செயல்முறைகளை மேம்படுத்த வங்கி முயன்று வருகிறது.
- அதிகரித்த டிஜிட்டல் மயமாக்கலுடன் சைபர் தாக்குதல்கள் மற்றும் மோசடி அபாயமும் இறுக்கமான தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு உட்கட்டமைப்புக்கான தேவைப்பாட்டை அதிகரித்துள்ளது.

தொடர்புடைய இடர்நேர்வுகள்: R4 R5

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M1

எமது மறுமொழி

- எங்கள் வாடிக்கையாளர் தளத்தின் மேம்பட்ட டிஜிட்டல் ஊடுருவல் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு.
- அதிகரித்த செயல்முறை செயல்திறன் மற்றும் செலவு சேமிப்புக்காக தொழில்நுட்பத்தினை பயன்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் நிர்வாக நெறிமுறைகளை வலுப்படுத்துதல்.

தொழிற்படும் களம்

ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

நிதி துறையின உறுதிப்பாட்டை பாதுகாக்க புதிய ஒழுங்குமுறைத் தேவைகள் அடிக்கடி அறிமுகப்படுத்தப்பட்ட மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சூழலில் வங்கி செயல்படுகிறது.

- உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் விருப்பப்படி கொடுப்பனவுகளை கட்டுப்படுத்துதல
- இறக்குமதிகளுக்கு எதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மற்றும் சில கொடுகடன் தயாரிப்புகளில் அதிகபட்ச வட்டி வீதங்கள்
- கொடுகடன் பொருட்களின் வட்டி வீதங்களைக் குறைக்க உரிமம் பெற்ற வங்கிகளைக் கோருதல்.
- கொடுகடன் பெறுதல் மீதான வரம்பு, என்பவை உள்ளடங்கும்.

இலங்கை வங்கி மீதான தாக்கம்

- ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் அறிக்கையிடலை அதிகரிக்கப்பட்டது.
- இணக்கத்தின் அதிகரித்த செலவு.

தொடர்புடைய இடர்நேர்வுகள் R1 R2 R3 R4 R5

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள் M2

எமது மறுமொழி

- உரிமம் பெற்ற வங்கிகளுக்காக மத்திய வங்கி வழங்கிய வழிகாட்டல்கள்/வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றுடனான பின்பற்றல் மற்றம் இணக்கம்.
- தொழில்முறை அமைப்புகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணக்கம்

பருவநிலை மாற்றம்

ஒரு சிறிய நாடு மற்றும் வளரும் நாடாக, இலங்கை பருவநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியது மற்றும் வெப்பநிலை உயர்வு, மழைப்பொழிவு மாறுபாடு மற்றும் கடல் மட்ட உயர்வு போன்ற பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் நாட்டின் கிட்டத்தட்ட அனைத்து பொருளாதாரத் துறைகளையும் பாதிக்கின்றன.

2022 நவம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற மாநாட்டில் இலங்கையின் பருவநிலை மேம்பாட்டுத் திட்டம் பருவநிலை பாதுகாப்பை ஊக்குவிப்பதையும், வேளாண்மை அல்லது மீன்பிடி போன்ற பருவநிலை இடர்நேர்வுகள் மிகவும் ஆளாகக்கூடிய துறைகளின் விரைவான தழுவல் மூலோபாயத்தை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டுடன், ஓர் விரிவான இடர்நேர்வு நிதி மூலோபாயத்துடன், இடர்நேர்வு தகவலறிந்த முதலீட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கி மீதான தாக்கம்

- ஓர் வங்கியாக, இன்று உலகம் எதிர்கொள்ளும் முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அதிக அழுத்தத்தில் இருக்கிறோம், மேலும் நிலைபேறுடைய கடன், உமிழ்வு குறைப்பு உத்திகள் மற்றும் காலநிலை தழுவல் மற்றும் தணிப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் தாக்கங்கள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வு அதிகரிக்கும்போது, சமூக மற்றும் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளை உள்ளடக்கிய பொறுப்பான கொடுகடன் தீர்மானங்களுக்கு பல்புடை மற்றும் இருபுடை கடன் வழங்குநர்களிடமிருந்து அதிக எதிர்பார்ப்பு உள்ளது.

தொடர்புடைய இடர்நேர்வுகள் R1 R4 R5

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள் M4

எமது மறுமொழி

- பருவநிலை மாற்றம் தொடர்பான இடர்நேர்வுகள் நிவர்த்தி செய்வதற்கும் காலநிலை மீண்டெழுந்தன்மை ஆதரிப்பதற்கும் புதிய வங்கயியல் தீர்வுகளை உருவாக்கப்பட்டது.
- எங்கள் நிலைபேறுடைய நிகழ்ச்சி நிரலில் அதிக பசுமை கோட்பாடுகள் இணைக்கப்பட்டது.
- மூலோபாயம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதலில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேறுதன்மைக் கரிசனைகளை தொடர்ந்து உட்பொதிக்கிறது.
- வளத்தை மேம்படுத்துவதற்கும், உலகினை பாதுகாப்பதற்கும் 17 நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுடன் எங்கள் நடவடிக்கைகள் ஒத்திசைவாக்கப்பட்டது.

பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்

பங்குதாரர்களின் ஈடுபாட்டுக்கான அணுகுமுறை

ஓர் மாறுபட்ட பங்குதாரர் களத்தில், எங்கள் தொடர்பாடல் வழிமுறைகளைத் திறந்து வைத்திருக்கவும், உரையாடல்கள் தொடரவும், உறவுகள் செழித்து வளரவும், எங்கள் பங்குதாரர்களுக்கு மேம்பட்ட பெறுமதியை உருவாக்கவும் வழங்கவும் நாங்கள் முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

எங்கள் வெளிப்புற பங்குதாரர்களுக்குள் வாடிக்கையாளர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல், பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள், ஒழுங்குமுறையாளர்கள் மற்றும் வணிக பங்காளிகள் உள்ளடக்கப்பட்டு பெறுமதி உருவாக்கத்திற்காக எங்களை நம்பியுள்ளனர், அதே நேரத்தில் எங்கள் உள்ளக பங்குதாரர்கள் நிறுவனத்திற்கு மையமாக இருக்கும் படிநிலையில் பல்வேறு நிலைகளிலும் பெறுமதி உருவாக்கல் வழிமுறையில் காரணிகளை நிர்ணயிப்பதிலும் எங்கள் ஊழியர்களைக் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பல முறையான மற்றும் முறைசாரா தளங்கள் மூலம் பங்குதாரர்களின் ஈடுபாடு எளிதாக்கப்படுகிறது, மேலும் பல்வேறு பங்குதாரர்களின் தனித்துவமான தேவைகளின் அடிப்படையில் எங்கள் ஈடுபாட்டு அணுகுமுறையை நாங்கள் வடிவமைக்கிறோம். பின்வரும் பகுதி நமது முக்கிய பங்குதாரர் குழுக்கள், அவர்களுடன் நாம் எவ்வாறு, ஏன் ஈடுபடுகிறோம், அவர்களின் முக்கிய கரிசனைகள் மற்றும் எமது பதிலிறுப்புக்கள் ஆகியவற்றைக் காட்டுகிறது.

தொடர்புடைய இடர்நேர்வுகள்

கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	கட்டம் 4
இனங்காணல்	**திட்டமில் மற்றும் ஈடுபடல்**	**முன்னேற்பாடு மற்றும் ஒழுங்கமைப்பு**	**கண்காணித்தல், மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடல்**
• பங்காளர்களை இனங்கண்டு முன்னுரிமைப்படுத்தல் • வளங்களை ஒதுக்குதல்	• குறிக்கோள்களை நிறுவுதல் • ஈடுபாடு முறைகளை நிர்ணயித்தல்	• பங்காளர்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்வதற்கான உபாயங்களை உருவாக்கி செயல்படுத்துதல்	• செயல்திறனை அளவிடுதல் • குறைபாடுகளைக் கண்காணித்தல் • பங்குதாரர்களுக்கு அறிக்கையிடல் • தேவைப்படும் இடங்களில் முன்னேற்றங்களைச் செய்தல்

பங்குதாரர் வரைபடம்

வாடிக்கையாளர்கள்


வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கியாக, நாம் எமது வாடிக்கையாளர்களை ஆதரிக்கிறோம் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவைகள் மூலம் அவர்களின் வாடிக்கையாளர் அனுபவத்தை வளப்படுத்துகிறோம்.

ஒழுங்குமுறையாளர்கள்

வெளிப்படையான மற்றும் தொடர்ச்சியான உரையாடலைப் பராமரிக்கும் அனைத்து தொடர்புடைய ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான தேவைகளையும் கடைப்பிடிப்பது.

சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்

நிலைபேறுடைய எமது நீண்டகால அணுகுமுறையின் மூலம், நாங்கள் செயல்படும் சமூகங்களுக்கு பெறுமதியை உருவாக்க முயற்சிக்கிறோம்.



ஊழியர்கள்

வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான முக்கிய இணைப்பான எங்கள் அணியை நாங்கள் மதிக்கிறோம். எங்கள் மனிதவளக் கொள்கைகளும் செயல்முறைகளும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் அணியை உருவாக்கவும் வளர்க்கவும் உதவுகின்றன.

பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள்

எங்கள் விரிவான உபாயங்கள் மூலம் பகிரப்பட்ட பங்குதாரர் பெறுமதி மற்றும் நிலையான வருவாயை உருவாக்குகிறோம்.

வணிக பங்காளர்கள்

எங்கள் நிலைபேறுடைய நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக அனைத்து வழங்குநர்கள் மற்றும் வணிக கூட்டாளர்களுடன் தொடர்ச்சியான மற்றும் திறந்த உரையாடலை நாங்கள் பேணுகிறோம்

● உயர் ● உயர் முதல் மிதம்

பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்

பங்குதாரர் மற்றும் நிதி வழங்குநர்கள்

எங்கள் ஒரே பங்குதாரர் அரசு மட்டுமே, எனவே, அரசாங்கத்திடமிருந்து வெளி மூலதன உட்செலுத்துதல் மட்டுமே கிடைக்கிறது.

வங்கியின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்த கடன் பத்திரதாரர்கள் கடனை வழங்கியுள்ளனர்.

நாம் ஏன் ஈடுபடுகிறோம்

முதலீட்டாளர்களின் மனோபாவங்கள் வங்கியின் வாய்ப்புகளால் பாதிக்கப்படுகின்றன, எனவே வெளிப்படைத்தன்மை, தகவலுக்கான எளிதான அணுகல் மற்றும் கரிசனைகளை புரிந்துகொள்வதற்கும் நிவர்த்தி செய்வதற்கும் திறந்த உரையாடல் முக்கியம்.

முக்கிய கரிசனைகள்

- இடர்நேர்விற்கேற்ப போதுமான வருமானம்
- வெளிப்படையான மற்றும் சரியான நேரத்தில் அறிக்கை செய்தல்
- வலுவான கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ மேலாண்மை நடைமுறைகள்
- நன்மதிப்பு
- பொறுப்பான வணிக நடைமுறைகள்

எமது மறுமொழி

- போதுமான வருமானத்துடன் பெறுமதியை உருவாக்குதல்
- இருப்புநிலை வலிமையைப் பாதுகாப்பதில் கவனஞ் செலுத்துதல்
- செயற்றிறனான எல்லை முகாமைத்துவம்
- மூலதன வளர்ச்சியை வலுப்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்
- சரியான நேரத்தில் சந்தை வெளிப்பாடுகள்

ஈடுபாடு தளங்கள்

- இலங்கை வங்கி இணையதளம் — O
- ஆண்டறிக்கை மற்றும் ஏனைய வெளியீடுகள் — A, O
- அடிக்கடி நடாத்தப்படும் கூட்டங்கள் — P
- பரந்த முதலீட்டாளர் மத்தியில் சென்று நடாத்தப்படும் கூட்டங்கள் — P
- சந்தை இடையீட்டாளர்கள் மூலமான ஈடுபாடு

உறவின் தரம்: வலுவானது

நிலைபேருடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம்



வாடிக்கையாளர்கள்

எமது வாடிக்கையாளர் பிரிவுகளில் சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், கூட்டாண்மை மற்றும் எல்லை தாண்டிய வெளிநாட்டுச் செலாவணி வாடிக்கையாளர்கள் உள்ளடக்கப்படுவதுடன் அவர்களுக்கு நாங்கள் பலவிதமான நிதி சேவைகள் மற்றும் தயாரிப்புகளை வழங்குகிறோம்.

நாம் ஏன் ஈடுபடுகிறோம்

எங்கள் செயல்பாட்டு மற்றும் வணிக சிறப்பை பிரதிபலிக்கும் சிறப்பானவையை வழங்க வாடிக்கையாளர்களுடன் நாங்கள் ஈடுபடுகிறோம், மேலும் வங்கியின் இலாபம் மற்றும் நீடித்து நிலைத்திருந்குந்தன்மையை உறுதி செய்கிறோம்.

முக்கிய கரிசனைகள்

- விரைவான மற்றும் வசதியான சேவை
- வசதியான, நம்பகமான மற்றும் பாதுகாப்பான தளங்கள்
- கடன் நிவாரணம்
- வெளிப்படையான, போட்டித்தன்மையுடைய விலை
- நிர்ணயம் - நிதி அணுகல்

எமது மறுமொழி

- வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட தீர்வுகள்
- வாடிக்கையாளர் அனுபவம் மீது கவனம் செலுத்துதல்
- டிஜிட்டல் வழங்கல்களை மேம்படுத்துதல்
- தானியக்கம் மூலம் பரிவர்த்தனை திருப்புமுனை நேரத்தைக் குறைத்தல்

ஈடுபாடு தளங்கள்

- திருப்தி ஆய்வுகள் — P
- கிளைகள் மற்றும் டிஜிட்டல் சேனல்கள் மூலம் நேரடி ஈடுபாடு — O
- வலைத்தளம் மற்றும் சமூக ஊடக தளங்கள் — O
- வாடிக்கையாளர் ஹாட்லைன் — O
- நிதி கல்வியறிவு திட்டங்கள் — O
- சந்தைப்படுத்தல், விளம்பரம் மற்றும் விளம்பரங்கள் — O

உறவின் தரம்: வலுவானது

நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம்



A ஆண்டிற்கானது | O நடைபெற்றுவருகிறது | P காலாகாலத்திற்கானது | BI ஆண்டில் இரு முறையானது | Q காலாண்டிலானது

ஊழியர்கள்

எமது அணியானது உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பரவியுள்ளதுடன் வங்கியின் செயல்பாடுகள் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிதி சேவைகளை வழங்குவதன் மூலம் பெறுமதியை உருவாக்கும் திறனை ஆதரிக்கிறது.

நாம் ஏன் ஈடுபடுகிறோம்

ஊழியர்கள் வங்கியின் முக்கிய சொத்துகளில் ஒன்றாகும், மேலும் எங்கள் வணிக உபாயத்தை நிறைவேற்றுவதில் மதிப்புமிக்க பங்களிப்புகளைச் செய்ய நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு, நியாயமான ஊதியம், வெகுமதிகள் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் திருப்தியளிப்பதற்கும் பயிற்சியை வழங்குகிறோம்.

முக்கிய கரிசனைகள்

- போட்டித்தனமையுடைய ஊதியத் திட்டங்கள்
- பாதுகாப்பான பணியிடம்
- தொழில் முன்னேற்றம்
- திறன் மேம்பாட்டுக்கான கற்றல் வாய்ப்புகள்
- சமமான வாய்ப்புகள்
- வேலை பாதுகாப்பு
- ஓய்வுக்குப் பின்னரான சலுகைகள்

எமது மறுமொழி

- உடல் மற்றும் மன நலனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்
- பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான தொடர்ச்சியான வாய்ப்புகள
- கவர்ச்சிகரமான வெகுமதி மற்றும் இழப்பீட்டு கட்டமைப்புகள்
- வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கேற்ப ஊதியத்தை சீரமைத்தல் (வாழ்க்கைச் செலவு படி)
- ஓய்வூதியப் நன்மைத் திட்டம்
- பணியாளர் கடன்களுக்கான ஒத்திவைப்பு

ஈடுபாடு தளங்கள்

- பல நிலை ஊழியர்கள் கூட்டங்கள்
- திறந்த கதவு கலாச்சாரம்
- குறை தீர்க்கும் கையாளுகை பொறிமுறை
- TVBoC மூலம் மெய்நிகர் ஈடுபாடு
- செயல்திறன் மதிப்பீடுகள்
- தொழிற்சங்கங்கள் மூலம் ஈடுபாடு
- ஆண்டு முழுவதும் நடவடிக்கை நாட்காட்டி

உறவின் தரம்: வலுவானது

நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம்



ஒழுங்குமுறையாளர்கள்

வங்கியின் முக்கிய ஒழுங்குமுறையாளர்களில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியவை உள்ளடங்கும். வெளிநாடுகளில் உள்ள கிளைகள் சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள மத்திய வங்கிகள் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

நாம் ஏன் ஈடுபடுகிறோம்

அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு சரியான நேரத்தில் தெரிவிப்பதற்கும்.

முக்கிய கரிசனைகள்

- வணிகங்கள் மற்றும் பொருளாதார புத்துயிர்ப்புக்கு ஆதரவளித்தல்
- நிதித் துறையில் நம்பிக்கையைப் பேணுதல்
- வலுவான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம நடைமுறைகள்
- நிதி உள்ளடக்கத்தை எளிதாக்குதல்

எமது மறுமொழி

- சரியான நேரத்தில் அறிக்கையிடுதல் மற்றும் போதுமான வெளிப்பாடுகள்
- அனைத்து விதிமுறைகள்/வழிகாட்டுதல்களுடன் இணங்குதல்
- பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு கட்டாய கடன் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல்
- மோசமாக பாதிக்கப்பட்ட துறைகளுக்கு தொடர்ந்து ஆதரவு
- தொழில்துறை ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை பராமரித்தல்

ஈடுபாடு தளங்கள்

- ஒழுங்குமுறை அறிக்கையிடல் — O
- நபர்களுக்கான கூட்டங்கள் — O
- தொழில்துறை மன்றங்கள் மூலம் விவாதங்கள் — O
- ஆண்டறிக்கை மற்றும் பிற வெளியீடுகள் — A Q

உறவின் தரம்: வலுவானது

நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம்



பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்

சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்

வங்கி செயல்படும் சமூகங்கள், பொது மக்கள் மற்றும் இயற்கை சூழல்.

நாம் ஏன் ஈடுபடுத்துகிறோம்

சமூகமும் சுற்றுச்சூழலும் செயல்படுவதற்கான எமது சமூக உரிமத்தின் முக்கிய கூறுகளாகும். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மீது வங்கியின் தாக்கங்கள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் சூழலின் நிலைபேறுடைய தன்மையை நாம் எவ்வாறு துணைபுரிய முடியும் என்பதைப் புரிந்துகொள்ள நாங்கள் வெளிப்படையாக ஈடுபடுகிறோம்.

முக்கிய கரிசனைகள்

- சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பங்களிப்பு
- பொறுப்பான வணிக நடைமுறைகள்
- பொருளாதாரத்தில் புத்துயிர்ப்பை ஊக்குவிக்க நிதி உள்ளடக்கம் மற்றும் அதிகாரமளித்தல்
- வங்கியின் மூலோபாயத்தை தேசிய மேம்பாட்டு நிகழ்ச்சி நிரலுடன் சீரமைத்தல்

எமது மறுமொழி

- வலுவான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள்
- வேலைவாய்ப்பு உருவாக்கம்
- நாடு முழுவதும் நிதி உள்ளடக்கத்தை எளிதாக்குதல்
- நீண்ட கால சமூகம் தொடர்பான திட்டங்களில் தொடர்ச்சியான முதலீடுகள்
- அரசுக்கு பெறுமதி உருவாக்கம்
- நாட்டின் பொருளாதார புத்துயிர்ப்புக்கு துணையாக இருத்தல்

ஈடுபாடு தளங்கள்

ஆண்டறிக்கை மற்றும் பிற வெளியீடுகள்	A O
இலங்கை வங்கி இணையதளம்	O
தொழில்துறை மன்றங்கள் மற்றும் கூட்டங்கள்	O
கிளைகள் மூலம் ஈடுபாடு	O
சமூகங்களில் முதலீடு	O
செய்தி வெளியீடுகள் மற்றும் ஊடக பிரச்சாரங்கள	O

உறவின் தரம்: வலுவானது

நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம



வணிக பங்காளர்கள்

உள்ளூர் மற்றும் உலகளாவிய வழங்குநர்கள், வணிக பங்காளர்களின் விரிவான வலையமைப்பு

நாம் ஏன் ஈடுபடுகிறோம்

எங்கள் செயல்பாடுகளை ஆதரிப்பதற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை சரியான நேரத்தில் கையகப்படுத்துவதற்கு எங்கள் வணிக கூட்டாளர்களுடன் வலுவான மற்றும் நிலையான உறவுகளை நாங்கள் பேணவேண்டும்.

முக்கிய கரிசனைகள்

- வெளிப்படையான தேர்வு மற்றும் போட்டித்தன்மையுடைய விலை நிர்ணயம்
- கொடுக்கல்வாங்கல்கள் செய்வதை எளிதாக்குவது
- சரியான நேரத்திலான கொடுப்பனவுகள்
- பாதுகாப்பான மற்றும் கணிக்கக்கூடிய கேள்வி

எமது மறுமொழி

- வெளிப்படையான தேர்வு மற்றும் போட்டி ஏல செயல்முறை
- கொடுப்பனவுத் தவறல் இல்லை
- கொள்முதல் செயல்முறையை தானியக்கமாக்குதல்

ஈடுபாடு தளங்கள்

தொடர்ச்சியான எழுத்து மூலமான தகவல்தொடர்பு	O
கிரமமான கூட்டங்கள்	P
காலாகாலத்திலான ஏல செயல்முறை	P
நிதி அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கை வெளியீடுகள்	Q A

உறவின் தரம்: வலுவானது

நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்கள் மீதான தாக்கம



A ஆண்டிற்கானது | O நடைபெற்றுவருகிறது | P காலாகாலத்திற்கானது | BI ஆண்டில் இரு முறையானது | Q காலாண்டிலானது

பொருண்மையுடைய விடயங்கள்

இரட்டைப் பொருண்மைக்கேற்ப, எங்கள் ஒருங்கிணைந்த அறிக்கை நிதி அறிக்கையிடலுக்கு அப்பால் விரிவடைகிறதுடன் நிதியல்லா செயல்திறன், இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் எங்கள் முக்கிய பங்குதாரர்களுடன் தொடர்புடைய அல்லது அவர்களினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை உள்ளடக்கி, அவை பெறுமதியை உருவாக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் எங்கள் திறனில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வங்கிக்கு பொருண்மை வாய்ந்த பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் எமது பொருண்மை நிர்ணய செயல்முறை ஆண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடயங்களுக்குள் மீளாய்வு செய்யப்படும் ஆண்டில் வங்கியின் தொழிற்படும் களத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளும் அடங்கும், இது எமது மூலோபாய அபிலாசைகளை அடைவதற்கும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெறுமதியை உருவாக்குவதற்கும் எமது திறனை கணிசமாக பாதிக்கக்கூடும்.

கீழே காட்டப்பட்டுள்ளபடி வங்கியின் மூலோபாயம் மற்றும் செயல்பாடுகளை பாதிக்கும் பொருண்மையான தலைப்புகளை அடையாளம் காண ஓர் கட்டமைக்கப்பட்ட செயல்முறையை நாங்கள் பின்பற்றுகிறோம்.

எமது பொருண்மை நிர்ணய செயல்முறை

அடையாளம்காணல்

தொழிற்படும் களம் → பங்குதாரர் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் → இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புக்கள்

கணிப்பிடுதல்

வங்கியின் மூலோபாயம் மற்றும் பங்களர்களின் தீர்மானங்கள் மீதான செல்வாக்கின் அடிப்படையில் ஒப்பீட்டு முக்கியத்துவத்தை நாங்கள் மதிப்பிடுகிறோம்.

தரவரிசைப்படுத்தல்

பொருள் சிக்கல்கள் அவற்றின் சாத்தியக்கூறுகள் மற்றும் தாக்கத்தின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

கண்காணித்து அறிக்கையிடல்

தொழிற்படும் களத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு அடையாளம் காணப்பட்ட பொருண்மையான தலைப்புகளை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம், மேலும் வங்கியின் மூலோபாயத்தை மறுசீரமைப்பதன் மூலம் பதிலளிக்கிறோம். தலைப்பு தொடர்பான முன்னேற்றத்தை பங்காளர்களுக்கும் பணிப்பாளர் சபையிற்கும் கிரமமாக தெரிவிக்கப்படுகிறது.

எமது பொருண்மையான கருப்பொருட்கள்

2023 ஆம் ஆண்டிற்கான பொருண்மை மதிப்பீடு முந்தைய ஆண்டில் அடையாளம் காணப்பட்ட பொருண்மைத் தலைப்புகள் மீது கட்டப்பட்டு இந்த ஆண்டு இந்த தலைப்புகளை நான்கு பரந்த கருப்பொருள்களின் கீழ் தொகுத்துள்ளோம். செயல்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப தலைப்புகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு மேலும் அறிக்கையிடல் எல்லைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை. மேலும், தொடர்புடைய பொருண்மை சார்ந்த விடயங்களில் பொருண்மை சார்ந்த எந்த மாற்றமும் ஏற்படவில்லை.


M1 மாறிவரும் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்தல்

M2 பொறுப்பான வளர்ச்சியை ஊக்குவித்தல்

M3 எமது பணியாளர் மீது அக்கறை

M4 ஒரு நிலையான வணிக செயல்பாட்டை வளர்ப்பது

பொருண்மையுடைய விடயங்கள்



A

M2 - 6	பொறுப்பான வங்கித்தொழில்
M4 - 3	காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தடம்

B

M2 - 3	பொறுப்பான கொள்முதல்

C

M3 - 3	பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு

D

M1 - 1	பேரண்டப் பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் கொள்கை போக்குகள்
M1 - 2	வாடிக்கையாளர் அனுபவம்
M1 - 3	வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு
M1 - 4	டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம்
M2 - 1	வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் வணிக மறுமலர்ச்சி
M2 - 2	நாம நன்மதிப்பு
M2 - 4	இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு
M2 - 5	ஒழுங்குமுறைச் சூழல், ஆளுகை மற்றும் இணக்கம்
M3 - 1	ஊழியர் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு
M3 - 2	திறமை முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் உறவுகள்
M3 - 4	தொழிலாளர் உரிமைகள் (வெளிமூலங்களிலிருந்து பெற்றல்/ ஒப்பந்தம் அடிப்படையிலானவை)
M4 - 1	நிதியியல் செயலாற்றம்
M4 - 2	சமூக பொருளாதார பங்களிப்பு மற்றும் நிதி உள்ளடக்கம்

பொருண்மையுடைய தலைப்புக்கள்	இலங்கை வங்கிக்கு ஏன் பொருண்மையுடையது	எமது மறுமொழி	தாக்கத்திற்கு உள்ளாகும் மூலதனங்கள்	தாக்கத்திற்கு உள்ளாகும் பங்குதாரர்கள்	நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளிற்கான பங்களிப்பு
M1 : மாறிவிரும் சூழலுக்கு இயைபுறல்					
1 **பேரண்டப் பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் கொள்கை போக்குகள்**	இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கும் பன்முக சவால்கள் மற்றும் தொடர்புடைய கொள்கை அபிவிருத்திகள் நிதித்துறையின் செயல்பாடுகள், செயலாற்றம் மற்றும் நிலைபேறுதன்மை ஆகியவற்றில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.	தொழிற்படும் களம் பக்கங்கள் 44 முதல் 48 வரை	நிதியியல் மூலதனம் தயாரிக்கப்பட்ட மூலதனம்	பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள் வாடிக்கையாளர்கள் ஊழியர்கள்	1 NO POVERTY 2 ZERO HUNGER 8 DECENT WORK AND ECONOMIC GROWTH
2 **வாடிக்கையாளர் அனுபவம்**	இலங்கையின் தீவிரமான போட்டியுடைய வங்கித் துறை ஆகும் முக்கிய வேறுபாடு.	எமது வாடிக்கையாளர்களுக்கான முதன்மைபங்காளர் பக்கங்கள் 84 முதல் 89 வரை	சமூக மற்றும் உறவு மூலதனம்	வாடிக்கையாளர்கள்	9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION
3 **வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு** (GRI 418 SASB FN-CB-510a.2)	டிஜிட்டல் மயமாக்கலுக்கான அதிகரித்த ஊக்கப்படுத்துதல் வாடிக்கையாளர் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு சிக்கல்கள் தொடர்பான ஏதுநிலையை அதிகரித்துள்ளது, இதன் மூலம் நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்த தேவைப்படுத்துகிறது.	டிஜிட்டல் ரீதியாக அதிகாரம் பெற்ற வங்கி பக்கங்கள் 98 முதல் 102 வரை.	சமூக மற்றும் உறவு மூலதனம்	வாடிக்கையாளர்கள்	17 PARTNERSHIPS FOR THE GOALS
4 **டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம்**	டிஜிட்டல் சிறப்பை ஊக்குவிப்பது வங்கியின் முக்கிய மூலோபாய அபிலாசையாகும்.	டிஜிட்டல் ரீதியாக அதிகாரம் பெற்ற வங்கி பக்கங்கள் 98 முதல் 102 வரை.	தயாரிக்கப்பட்ட மூலதனம்	வாடிக்கையாளர்கள் ஊழியர்கள்	


பொருண்மையுடைய தலைப்புக்கள்	இலங்கை வங்கிக்கு ஏன் பொருண்மையுடையது	எமது மறுமொழி	தாக்கத்திற்கு உள்ளாகும் மூலதனங்கள்	தாக்கத்திற்கு உள்ளாகும் பங்குதாரர்கள்	நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளிற்கான பங்களிப்பு
M2 : வளர்ச்சியை நோக்கி பொறுப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்					
1 வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் வணிக புத்துயிர்ப்பு (SASB FN-CB-240a1 SASB FN-CB-240a2)	மீள் அட்டவணைப்படுத்தல்/ மறுசீரமைப்பு வசதிகள், காசுப்பாய்ச்சல் கண்காணிப்பு மற்றும் நிதிக்கான அணுகலை வழங்குவதன் மூலம் வணிக புத்துயிர்ப்பினை ஆதரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார மீட்சியை நாங்கள் தொடர்ந்து வழிநடத்துகிறோம்.	எமது வாடிக்கையாளர்களுக்கான முதன்மை பங்காளர் பக்கங்கள் 84 முதல் 89 வரை	சமூக மற்றும் உறவு மூலதனம்	வாடிக்கையாளர்கள்	8, 9
2 நாமத்தின் நன்மதிப்பு	தொடர்ந்து இலங்கையின் முதலாமிட வங்கியியல் நாமம் என தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது, மேலும் நேர்மறையான நாமம் மற்றும் நன்மதிப்பு வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது.	எமது வாடிக்கையாளர்களுக்கான முதன்மை பங்காளர் பக்கங்கள் 84 முதல் 89 வரை	நிதியியல் மூலதனம், மனித மூலதனம், அறிவு சார் மூலதனம்	பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள்	8, 9, 10, 12, 16
3 பொறுப்பான கொள்முதல் (GRI 204)	இலங்கை வங்கி ஓர் பெரிய வழங்குநர் தளத்துடன் ஈடுபடுகிறது மற்றும் நிலைபேறுடைய நடைமுறைகளைப் பரப்புவதன் மூலம் கொள்முதலில் பொறுப்பான நடைமுறைகளை உறுதி செய்கிறது.	எமது சகல செய்றபாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம் பக்கங்கள் 103 முதல் 109 வரை.	சமூக மற்றும் உறவு மூலதனம், இயற்கை மூலதனம்	வியாபார பங்காளர்கள்	8, 12
4 இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு (GRI 205, 406 SASB FN-CB-510a.2)	ஓர் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக, இலஞ்ச எதிர்ப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு கலாச்சாரத்தை வளர்ப்பது பகிரப்பட்ட பெறுமதியின் பொறுப்பான உருவாக்கத்தில் முக்கியமானது.	ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி பக்கங்கள் 90 முதல் 97 வரை.	மனித மூலதனம், சமூக மற்றும் உறவு மூலதனம்	வாடிக்கையாளர்கள், வியாபார பங்காளர்கள், ஊழியர்கள்	8, 16
5 ஒழுங்குமுறைச் சூழல், ஆளுகை மற்றும் இணக்கப்பாடு (GRI 207, 419, 307)	தற்போதைய மற்றும் தோற்றம்பெற்று னனவரும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வது அவசியம், ஏனெனில் அவ்வாறு செய்யத் தவறினால் சட்ட, ஒழுங்குமுறை மற்றும் நன்மதிப்பு இடர்களுக்கு வழிவகுக்கிறது.	கூட்டாண்மை ஆளுகை பக்கங்கள் 111 முதல் 121 வரை இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் பக்கங்கள் 132 முதல் 148 வரை.	சமூக மற்றும் உறவு மூலதனம்	பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள், ஒழுங்கு முறைப் படுத்துனர்கள், ஊழியர்கள்	8, 16
6 பொறுப்பான வங்கித்தொழில்	பொறுப்பான கொடுகடன் வழங்கல் நடைமுறைகள் தாக்கமுடைய சமூக-பொருளாதார மாற்றத்தை இயக்கும் இலங்கை வங்கியின் திறனை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.	வர்த்தகப் பிரிவுகளின் செயலாற்றம் பக்கங்கள் 73 முதல் 82 வரை.	நிதியியல் மூலதனம், சமூக மற்றும் உறவு மூலதனம், மனித மூலதனம், இயற்கை மூலதனம்	பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள், வாடிக்கை-யாளர்கள், ஊழியர்கள், சமூகம் மற்றும் ஈடுபாடு	8, 9, 10, 12, 16

பொருண்மையுடைய விடயங்கள்

பொருண்மையுடைய தலைப்புக்கள்	இலங்கை வங்கிக்கு ஏன் பொருண்மையுடையது	எமது மறுமொழி	தாக்கத்திற்கு உள்ளாகும் மூலதனங்கள்	தாக்கத்திற்கு உள்ளாகும் பங்குதாரர்கள்	நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளிற்கான பங்களிப்பு
M3 : எமது பணியாளர் மீது கரிசனைகொண்டிருப்பது					
1 **ஊழியர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு** (GRI 403)	ஊழியர்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை ஊக்குவிப்பது ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது மற்றும் வரவின்மை, ஊழியர் புரள்வு மற்றும் பணியமர்த்தல் செலவுகளைக் குறைக்கிறது.	ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி பக்கம் 90 - 97	மனித மூலதனம்	ஊழியர்கள்	3 GOOD HEALTH AND WELL-BEING 5 GENDER EQUALITY
2 **திறமை முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் உறவுகள்** (GRI 401, 402, 404, 407)	கூட்டாண்மை மூலோபாயத்தை இயக்குவதில் ஊழியர்கள் முக்கியமானவர்கள் மற்றும் வங்கியின் மிக மதிப்புமிக்க சொத்துக்களில் ஒன்றாகும், இது ஊழியர்கள் தொடர்பான பிரச்சினைகளை திறம்பட நிர்வகிப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.	ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி பக்கம் 90 - 97	மனித மூலதனம்	ஊழியர்கள்	8 DECENT WORK AND ECONOMIC GROWTH 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE
3 **பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்பு** (GRI 405)	பன்முகத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பது வங்கியின் ஒட்டுமொத்த இலக்குகளை ஆதரிக்கும் மற்றும் அதன் நீண்டகால வெற்றிக்கு பங்களிக்கும் ஓர் நேர்மறையான பணிச் சூழலை உருவாக்குகிறது.	ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி பக்கம் 90 - 97	மனித மூலதனம்	ஊழியர்கள்	
4 **தொழிலாளர் உரிமைகள் (வெளி மூலங்களிலிருந்து பெற்றல்/ஒப்பந்தம் அடிப்படையிலானவை)** (GRI 408, 409)	நிரந்தர பணியாளர்களுடன் வங்கியால் பணியமர்த்தப்பட்ட அனைத்து வெளிமூலங்களிலிருந்து பெற்றுக்கொண்ட மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் உகந்த பணிச் சூழலை வழங்க இலங்கை வங்கி உறுதிகொண்டுள்ளது.	ஓர் வெற்றிகரமான, திறமைவாய்ந்த மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட அணி பக்கம் 90 - 97	மனித மூலதனம்	ஊழியர்கள்	
M4 : நிலைபேறுடைய வியாபார செயல்பாட்டை வளர்ப்பது					
1 **நிதிச் செயல்திறன்** (GRI 201)	வணிகத்தின் நீடித்து நிலைத்திருக்குந்தன்மையை உறுதி செய்வதிலும், பங்குதாரர்களுக்கு தொடர்ந்து பெறுமதி உருவாக்குவதிலும் முக்கியமானது.	நிதியியல் மீளாய்வு பக்கம் 68 - 72	நிதியியல் மூலதனம்	பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள் ஊழியர்கள்	7 AFFORDABLE AND CLEAN ENERGY 10 REDUCED INEQUALITIES 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES
2 **சமூகப் பொருளாதார பங்களிப்பு மற்றும் நிதியியல் உள்ளடக்கம்** (GRI 201, 202, 413, 203 SASB N-CB-240a.3 SASB FN-CB-240a.4)	சமூக பொருளாதார வலுவூட்டல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் புதிய சந்தைகளுக்கு திறந்த அணுகல், புதிய வருவாய் வழிகளை உருவாக்குதல், நற்பெயரை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.	எமது சகல செயற்பாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம் பக்கம் 103 - 109. உட்பொதிக்கப்பட்ட நிலைபேறுதன்மை பக்கம் 61 - 63.	சமூக மற்றும் உறவு மூலதனம்	ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் சமூகம் மற்றும் சுற்றாடல்	12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION 13 CLIMATE ACTION
3 **காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தடம்** (GRI 302, 305 SASB FN-CB-410a.2)	சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பது ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நற்பெயரை மேம்படுத்தவும், செலவுகளைக் குறைக்கவும், வருவாயை அதிகரிக்கவும், புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.	எமது சகல செயற்பாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம் பக்கம் 103 - 109.	இயற்கை மூலதனம்	சமூகம் மற்றும் சுற்றாடல்	

மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

பொருளாதார இயக்கவியல் மற்றும் தொழில்நுட்ப பரிணாமத்தால் வரையறுக்கப்பட்ட ஓர் களத்தில், இலங்கை வங்கி முன்னணியில் நிற்கிறதுடன் வங்கியின் எதிர்காலத்தை மறுவரையறை செய்ய தயாராக உள்ளது. எங்கள் மூலோபாயம் ஓர் வழிகாட்டல் மட்டுமல்ல் இது புதுமை, வாடிக்கையாளர் மையத்தன்மை மற்றும் நீடித்து நிலைத்திருக்குந்தன்மையுடைய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு. இந்தப் பிரிவு எமது மூலோபாய கட்டமைப்பின் முக்கிய தூண்களையும், அனைத்து குடிமக்களுக்கும் வளர்ச்சியையும் செழிப்பையும் ஏற்படுத்த நாங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளையும் கோடிட்டுக் காட்டுகிறது.



S W பெறுமதியை வெளிப் படுத்தல் O T

நமது பலத்தைப் பயன்படுத்துவது

- நாடு முழுவதும் பரவியுள்ள விரிவான கிளை வலையமைப்பை மற்றும் பரந்த அளவிலான தொடர்புடைய வங்கி வலையமைப்பு
- நாட்டில் முன்னணி வங்கி என்ற நாமப்பெயர்
- சந்தைத் தலைமை

நமது பலவீனங்களை நிவர்த்தி செய்தல்

- புதிய தலைமுறையை ஈர்ப்பது
- கட்டம் 3 கடன்களின் வெளிப்பாட்டின் இடர்நேர்வு
- மரபு அமைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ள சவால்கள்.

வாய்ப்புகளை கண்டறிதல்

- டிஜிட்டல் பயன்பாட்டை அதிகரிப்பது
- பசுமை நிதியுதவிக்கான போக்கு
- பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப கொடுகடன் கேள்வி

அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பு

- சகாக்கள் மற்றும் பின்டெக் நிறுவனங்களிடமிருந்து போட்டி
- சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல் காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள்
- திறன் வெளியேறல்

எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்குதல்

அனைத்து பௌதீக மற்றும் மெய்நிகர் தளங்களில் நிலையான மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை உறுதி செய்தல்.

சந்தைத் தலைமையைத் தக்கவைத்துக் கொள்ளுதல்

வங்கியின் நாமப் பெயர் வலிமை மற்றும் ஒப்பிடமுடியாத வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, சந்தை தலைமை நிலையை பராமரிக்க பொருத்தமான தயாரிப்புகள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவது.

டிஜிட்டல் பயன்பாட்டில் முன்னணியினை வகிக்க தலைமையேற்றல்

அதிநவீன தொழில்நுட்பத்தை மயப்படுத்துவதன் மூலம் உள்ளக மற்றும் வெளிப்புற வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மாற்றியமைத்தல்

நிலைபேறுடைய வங்கித்தொழில் சிறப்பு

பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் நிலவும் சவால்களை செயல்திறன் மிக்க மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகளைப் முன்மொழிவின் மூலம் திறம்பட எதிர்கொள்வது.

உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சி

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M2, M4

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்: 8 DECENT WORK AND ECONOMIC GROWTH, 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES, 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS

ஏன் இது முக்கியத்துவம் பெறுகிறது

உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் நீடித்து நிலைத்திருக்குந்தன்மையுடைய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பது எங்கள் பங்குதாரர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உருவாக்குகிறது, நெறிமுறை செயல்பாடுகளை உறுதி செய்கிறது மற்றும் சமூகத்திலும் சுற்றுச்சூழலிலும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வள ஒதுக்கீடு

- அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு (எரிபொருள் மற்றும் எரிவாயு) நிதியளிக்க ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3.0 பில்லியன் ஒதுக்கீடு
- சமூக ஈடுபாட்டில் ரூ.129.7 மில்லியன் முதலீடு
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 52 சூரிய சக்தியில் இயங்கும் கிளைகள்
- ESMS பரிசோதனை தொடர்பில் 1,126 அதிகாரிகளுக்கு பயிற்சி

மூலதன இணைபாடு

- நிலையான வளர்ச்சியின் பிரதான போக்கிற்கு மூலதனங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிலைபேறுடைய வழிகாட்டலுடன் இணைவது ஆகியவை மேம்பட்ட நாமம் பெயர் இருப்பு மற்றும் மூலதனம், மேலும் இயக்கவாற்றலுடனான தொழிற்படை, வணிக பங்காளிகள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் சமூகங்களுடனான மேம்பட்ட உறவுகள் மற்றும் ஒரு நேர்மறையான சுற்றுச்சூழல் தாக்கம்.

மூலதனத் தாக்கம்

நிதியியல் மூலதனம் (+ / -) | தயாரிக்கப்பட்ட மூலதனம் (+) | மனித மூலதனம் (+) | அறிவுசார் மூலதனம் (+) | சமூக மற்றும் உறவுசார் மூலதனம் (+) | இயற்கை மூலதனம் (+)

2023 விளைவுகள்

உருவாக்கப்பட்ட பொருளாதார பெறுமதி	ரூபா 144.1 பில்லியன்
கார்பன் தடம் குறைப்பு	28%
புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி	3,245.3 மெகாவோட்
நானஜுயா பயனாளிகளுக்கு உதவித்தொகை	2,872
ரான் கெகுலு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஹபனா தரம் 5 உதவித்தொகை	12,459

2024இல் கவனக்குவிப்பு

- சந்தைத் தலைமையைத் தக்கவைத்தல்
- வெளிநாட்டு கிளைகளின் செயல்பாடுகளை துரிதப் படுத்துதல்
- நிலைபேறுதன்மை ஈடுபாட்டை மேம்படுத்துதல்

வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறப்பு

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M1, M2, M4

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்: 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE, 10 REDUCED INEQUALITIES, 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

ஏன் இது முக்கியத்துவம் பெறுகிறது

நாங்கள் செய்யும் அனைத்திற்கும் எங்கள் வாடிக்கையாளர்கள் மையமாக உள்ளனர். எனவே, அவர்களின் நிதி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதற்கான அவர்களின் வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் புரிந்துகொள்ள நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

வள ஒதுக்கீடு

- சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் ரூ. 3.2 பில்லியன் முதலீடு
- 42 கிளைகள் நவீனமயப்படுத்தப்பட்டன
- வாடிக்கையாளர் சேவைதொடர்பாக 35 பயிற்சிகள் நடத்தப்பட்டன
- 1,210 வாடிக்கையாளர் விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன
- மீள் அட்டவணைப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்பின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சலுகைகள்

மூலதன இணைபாடு

- கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல், வட்டி விகிதக் குறைப்புகள் போன்றவற்றால் நிதி மூலதனம் பாதிக்கப்பட்டது.
- இந்த நடவடிக்கைகள் எங்கள் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக்கொள்ள உதவியது மற்றும் எங்கள் நாம் விம்பத்தை வலுப்படுத்தியது.
- வாடிக்கையாளர் தொடர்பு புள்ளிகளின் மேம்பாடுகள் நாடு முழுவதும் எங்கள் தடத்தை வலுப்படுத்தின.

மூலதனத் தாக்கம்

நிதியியல் மூலதனம் (-) | தயாரிக்கப்பட்ட மூலதனம் (+) | சமூக மற்றும் உறவுசார் மூலதனம் (+) | அறிவுசார் மூலதனம் (+)

2023 விளைவுகள்

தேரிய மேம்படுத்துனர் மதிப்பெண் (NPS)	33%
வாடிக்கையாளர் திருப்தி மதிப்பெண்	79%
உள்வாங்கப்பட்ட புதிய வாடிக்கையாளர்கள்	1,045,000
வாடிக்கையாளர் ஊடுருவல்	73%
வாடிக்கையாளர் தொடு புள்ளிகள்	2,241

2024இல் கவனக்குவிப்பு

- நிறைவுசெய்யும் நேரத்தை மேம்படுத்துதல்
- இளைய தலைமுறையினரை ஈர்க்கும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்

டிஜிட்டல் சிறப்பு

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M1

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்: 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

ஏன் இது முக்கியத்துவம் பெறுகிறது

வசதி மிக முக்கியமாகவுள்ள ஒரு சகாப்தத்தில், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், செயல்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும், புத்தாக்க நிதியியல் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கும் அதிநவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் நாங்கள் நம்புகிறோம்.

வள ஒதுக்கீடு

- டிஜிட்டல் உள்கட்டமைப்பில் ரூ. 1.4 பில்லியன் முதலீடு
- 163 CRMகள் நிறுவப்பட்டன
- 1,026 புதிய POS இயந்திரங்கள்
- 156 புதிய IPG வணிகர்கள்

மூலதன இணைபாடு

- சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட வங்கியின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த முதலீடுகள் செய்யப்பட்டன.
- இந்த முதலீடுகள் செலவுகளை மதிப்பிடுகின்றன, வருவாய் வழிகளை மேம்படுத்துகின்றன, வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துகின்றன மற்றும் செயல்முறைகளின் செயற்திறனையும் அதிகரிக்கின்றன.

மூலதனத் தாக்கம்

நிதியியல் மூலதனம் (-) | தயாரிக்கப்பட்ட மூலதனம் (+) | மனித மூலதனம் (+) | அறிவுசார் மூலதனம் (+) | சமூக மற்றும் உறவுசார் மூலதனம் (+)

2023 விளைவுகள்

டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் அளவு ரீதியான வளர்ச்சி	8%
மெய்நிகர் தளங்களில் சேர்க்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள்	778,427
டிஜிட்டல் முறையில் வசதிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்கள்	34%
மெய்நிகர் முறையில் வசதிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்கள்	19%

2024இல் கவனக்குவிப்பு

- செயல்முறையை நெறிப்படுத்துதல்
- தரவு சார்ந்த கலாச்சாரம்
- கிராமப்புறங்களில் டிஜிட்டல் பயன்பாட்டை மேம்படுத்துதல்

வெகுமதி அளிக்கும் கொடுகடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கடன் சொத்துப்பட்டியல்

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்: M2

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்: 8 DECENT WORK AND ECONOMIC GROWTH

ஏன் இது முக்கியத்துவம் பெறுகிறது

ஓர் ஆரோக்கியமான கடன் சொத்துப்பட்டியலென்பது நிதியியல் உறுதிப்பாட்டுக்கு ஒத்ததாகும். இது சொத்துக்களின் தரம் மற்றும் கடன் இடர்நேர்வினை திறம்பட நிர்வகிக்கும் வங்கியின் திறனை பிரதிபலிக்கிறது.

வள ஒதுக்கீடு

- ரூ. 3.4 பில்லியன் கடன் சலுகைகள் வழங்கப்பட்டன
- 58 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன
- ரூ. 38.8 பில்லியன் வாடிக்கையாளர் பணப்புழக்கத்தை வியாபார புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு பிரிவு (BRRU) நிர்வகிக்கிறது
- 21 கடனறவிடல் பட்டறைகள் நடத்தப்பட்டன
- BRRUவின் கீழ் 174 வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது

மூலதன இணைபாடு

- நிதி மூலதனம் மற்றும் மனித மூலதனம் இரண்டையும் ஒதுக்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் ஓர் பகுதியாக, வணிகங்களின் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்புக்கு வங்கி முன்னுரிமை அளித்தது.

மூலதனத் தாக்கம்

நிதியியல் மூலதனம் (+/-) | மனித மூலதனம் (+) | சமூக மற்றும் உறவுசார் மூலதனம் (+)

2023 விளைவுகள்

கடன் புத்தக பெறுமதி	ரூபா 2.5 டிரில்லியன்
கட்டம் 3 விகிதம்	5.1%
புத்தியிர் பெற்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	174

2024இல் கவனக்குவிப்பு

- கட்டம் 3 கடன்கள் மற்றும் முற்பணங்களைக் குறைத்தல்
- தனியார் துறை கடன்களை அதிகரிப்பது
- பசுமை நிதியிடலில் அதிக கவனம் செலுத்துதல்

மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

உயர் செயல்திறன் கொண்ட குழுவை உருவாக்குதல்

தொடர்புடைய பொருண்மையான கருப்பொருட்கள்

M3

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

ஏன் இது முக்கியத்துவம் பெறுகிறது

மக்களை மையமாகக் கொண்ட எமது கூட்டாண்மை கலாச்சாரம் சந்தையில் எம்மை வேறுபடுத்துகிறது என்று நாம் நம்புகிறோம். பன்முகத்தன்மையைத் தழுவுவதிலும், சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம், ஏனெனில் இது எதிர்கால பணியிடத்தில் தேவையான சிந்தனை, புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலின் பன்முகத்தன்மையை இயக்குகிறது.

வள ஒதுக்கீடு

- ரூ. 29.8 பில்லியன் ஊதியம் மற்றும் நன்மைகளில் முதலீடு
- ரூ. 200.1 மில்லியன் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு
- ரூ. 183.4 மில்லியன் ஊழியர்கள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் முதலீடு

மூலதன இணைபாடு

- ஏனைய நன்மைகளுக்கு மத்தியில், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு இணங்க, சம்பளத்தினை தயாரிக்க சலுகை விகிதங்களில் கடன்கள், முற்பணங்கள் மற்றும் நிதி மூலதனம் ஒதுக்கப்பட்டது. இத்தகைய முதலீடுகள் ஊழியர்களின் விசுவாசத்தை மேம்படுத்தவும், அதிக வாடிக்கையாளர் சேவை/அனுபவத்தை மேம்படுத்தவும், அதிக உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை ஏற்படுத்தவும் எங்களுக்கு உதவியுள்ளன.

மூலதனத் தாக்கம்

நிதியியல் மூலதனம் | மனித மூலதனம் | அறிவுசார் மூலதனம் | சமூக மற்றும் உறவுசார் மூலதனம்

2023 விளைவுகள்

தக்கவைப்பு வீதம்	95%
ஒரு பணியாளருக்கு சராசரி பயிற்சி நேரம்	32 மணித்தியாலம்
ஒரு பணியாளருக்கான தேறிய இலாபம்	ரூ. 3.1 மில்லியன்
பெண் பிரதிநிதித்துவம்	60%

2024இல் கவனக்குவிப்பு

- உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- மெய்நிகர் சூழலுக்குத் தயாராக இருக்கும் வங்கியின் மனித வளம்
- ஊழியர்களின் நல்வாழ்வை மேம்படுத்துதல்

நிதிச் சேவைகளுக்கான துணைப்பிரிவு

நாட்டின் முன்னணி வங்கிகளில் ஒன்றான இலங்கை வங்கி தொழில்துறை சங்கங்கள் மற்றும் தொழில்முறை அமைப்புகளில் அதன் உறுப்பினர் மூலம் தொழில்துறை பங்குதாரர்களுடன் தீவிரமாக ஒத்துழைக்கிறது. இந்த நிறுவனங்களில் வங்கியின் உறுப்பினர் உறுப்புரிமை தொழிற்சாலைகள், நிதிச் சேவைத் துறை மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

இந்த சங்கங்களில் வங்கியின் உறுப்புரிமை என்பது தொழில்துறையின் பரஸ்பர நன்மைக்காக வலிமை மற்றும் கூட்டாண்மையைப் பயன்படுத்துவதற்கான ஓர் வாய்ப்பாகும்.

மீளாய்வுசெய்யப்படும் ஆண்டில், கீழ்வரும் உள்ளடங்கலாக பல நிறுவனங்களுடன் உறுப்புரிமையைத் வங்கி தக்க வைத்துக் கொண்டது:


- ஆசிய பசிபிக் கிராமிய மற்றும் விவசாய கடன் சங்கம் (APRACA)
- வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதம்)
- தேசிய வர்த்தகச் சம்மேளனம், இலங்கை
- இலங்கை வர்த்தகச் சம்மேளனம்
- இலங்கையின் பசுமை கட்டிடச் சபை
- இலங்கை பல்லுயிரியம்
- வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கையின் நிதியியல் குறை தீர்ப்பாளர்
- வங்கிகளின் இணக்கப்பாட்டு அதிகாரிகள் சங்கம், இலங்கை
- இலங்கை சட்ட நூலகம்
- வங்கியியல்துறை இடர்நேர்வு தொழில் வல்லுனர்களின் சங்கம், இலங்கை

உட்பொதிக்கப்பட்ட நிலை பேறுதன்மை

வாடிக்கையாளர்களை மையப்படுத்துதல் | **பன்முகத்தன்மைக்கு மரியாதை** | **உயர்மட்ட நெறிமுறைகள், ஆளுகை மற்றும் தொழில்முறைக்கான அர்ப்பணிப்பு** | **நெகிழ்வுத்தன்மை மற்றும் புத்தாக்கத்தில் கவனஞ்செலுத்தல்** | **நடவடிக்கைகளுக்கான பொறுப்புக்கூறல்**

ஒழுங்குமுறை தேவைப்பாடுகள்

- 1938இன் 53ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் ("கட்டளைச்சட்டம்" என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்
- 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் தொடர்ந்த பிற்சேர்க்கைகள்
- உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை மற்றும் தொடர்ந்த திருத்தங்கள் குறித்த 2007 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை
- 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றம் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்


உள்ளக கட்டமைப்புகள்

- பெருநிறுவன ஆளுகைக் கொள்கை மற்றவற்றுடன் இணைத்தல்
  - சபை சாசனம்
  - உப செயற்குழுக்களின் சாசனங்கள்
  - பணிப்பாளர்களுக்கான வணிக நடத்தை மற்றும் நெறிமுறைக் கோவை
- விரிவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்
- துணைநிறுவன முகாமைத்துவ சாசனம்
- வாடிக்கையாளர் சாசனம்
- மனிதவள மற்றும் மக்கள் முகாமைத்துவம்
- மூலோபாய மற்றும் பெருநிறுவன திட்டமிடல்
- இடர்நேர்வு முகாமைத்துவம்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு ஆளுகை
- ஊழியர்களுக்கான நெறிமுறைக் கோவை

தன்னார்வ இணக்கம்

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை குறித்த சிறந்த நடைமுறையின் கோவை
- உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சியால் வழங்கப்பட்ட GRI தரநிலைகள்
- IIRC ஆல் வழங்கப்பட்ட IR கட்டமைப்பு
- ISACA ஆல் வழங்கப்பட்ட கொபிட் 2019 கட்டமைப்பு
- ஐஎஸ்ஓ 27001
- நீடித்து நிலைத்திருக்குந்தன்மையுடைய அபிவிருத்தி இலக்குகள்

ஆளுகைக் கட்டமைப்பு



நன்கு சமநிலைப்படுத்தப்பட்ட சபையை பேணுதல்



சபைக் கலவை

பல்வேறு திறன்கள், அனுபவங்கள் மற்றும் நிபுணத்துவத் திறன் கொண்டுள்ள ஆறு பணிப்பாளர்களை பணிப்பாளர் சபையானது இப்போது கொண்டுள்ளது, ஆறு பணிப்பாளர்களும் நிறைவேற்றுத்தரம் சாராமல் பணியாற்றுகின்ற அதே வேளையில், அவர்களில் ஐந்து பேர் சுயாதீனமாக உள்ளனர். நிதி விவகாரத்திற்கு பொறுப்பான அமைச்சின் பிரதிநிதி சபையில் ஒரு பதவி வழி சார்பான அதிகாரி பதவியை வகிக்கிறார். சபையின் கலவை கட்டளைச் சட்டத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், மேலும் அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சர் பணிப்பாளர்களை நியமிக்கிறார். ஓர் திறமையான கூட்டாண்மை முகாமைத்துவ குழு சபைக்கு துணைபுரிவதுடன் அவர்களின் நிபுணத்துவம் வங்கியின் மூலோபாயம் தொடர்பான முடிவுகளை வழங்கும் திறனுக்கும் துணைபுரிகிறது.

சுயாதீனம்

பணிப்பாளர்களின் சுயாதீனத்தை மதிப்பீடு செய்வது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி வகுத்துள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது. மீளாய்வு செய்யப்படும் காலப்பகுதியில் பணிப்பாளர்களின் சுயாதீனத்தை பாதிக்கும் அல்லது பாதிக்கும் வாய்ப்புள்ள உறவுகள் அல்லது சூழ்நிலைகள் எதுவும் இல்லை என்பது தொடர்பில் சபை திருப்தியடைகின்றது.

வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்

GRI 2-11 | 2-12

வங்கியின் மிக உயர்ந்த ஆளுகைக் குழுவாக, சபை மூலோபாய மற்றும் தொழில்சார் தலைமையை வழங்குவதுடன் இலங்கை வங்கியின் மூலோபாய பார்வை மற்றும் சிறந்த ஆளுகை கொள்கைகளுடன் ஒத்துப்போக பொருத்தமான விழுமியங்கள் மற்றும் தரங்களை அமைக்கிறது. இது தவிர, முறையான ஆளுகை மற்றும் வணிகத்தின் முக்கிய அம்சங்களை மேற்பார்வையிடுவதற்கு சபை பிரதான அதிகாரம் கொண்டுள்ளது.

சபையின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளை தெளிவாக கோடிட்டுக் காட்டும் சபை சாசனத்தின் மூலம் வகிபாகங்களில் தெளிவு மற்றும் பொறுப்புகளை திறம்பட பிரிப்பதை வங்கி உறுதி செய்கிறது. சபையின் தலைவர் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளராக சபைக்கு தலைமைத்துவத்தை வழங்கும் அதே வேளையில் பொது முகாமையாளர் நிறைவேற்று தலைமைத்துவக் குழுவை வழிநடத்துவதோடு சபையில் எந்தவித பதவியும் வகிப்பதில்லை. இந்த பகுதியாக்கலானது வகிபாகங்களில் தெளிவு மற்றும் செயற்றிறனான தீர்மானம் மேற்கொள்ளலை உறுதி செய்கிறது. மேலதிகமாக, தீர்மானம் மேற்கொள்ளும் வழிமுறையில் எந்த ஒரு பணிப்பாளருக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரம் இல்லை.

தலைவரின் வகிபாகம்


- சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குதல்.
- சிறந்த ஆளுகை நடைமுறைகளின் கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் நேர்மையின் தரத்தை பராமரித்தல்.
- குழு உறுப்பினர்களின் மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலமும், விவாதங்களின் போது அனைத்து பணிப்பாளர்களின் பங்கேற்பை உறுதி செய்வதன் மூலமும் உள்ளடங்கலான கலாச்சாரத்தை வளர்ப்பது.
- பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்.
- பங்குதாரர்களின் கரிசனைகளை சரியான முறையில் தீர்க்கப்படுவதை உறுதி செய்தல்.


பொது முகாமையாளரின் வகிபாகம்

- சபையினால் நிர்ணயிக்கப்பட்ட நிதி மற்றும் நிதி சாரா இலக்குகளுக்கு ஏற்ப வங்கியின் மூலோபாய திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாய நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுதல்.
- வங்கியின் செயலாற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் சபைக்கு அறிக்கை அளித்தல்.
- வங்கியின் வியாபாரத்திற்கு பொருண்மையான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு நிர்வகிக்க உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு உள்ளிட்ட ஒரு அமைப்பை செயல்படுத்துதல்.
- சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கான மனித வள தொடர்ச்சித் திட்டத்தை உருவாக்குதல்.
- வங்கியின் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலாச்சாரத்தை உருவாக்குதல்.

பல்வகைத்தன்மைகொண்ட திறன்கள் மற்றும் அனுபவங்களின் பலம்

இல.





கூட்டாண்மை ஆளுகை

அதிகார ஒப்படைப்பு

GRI 2-13

சபை உபக்குழுக்களுக்கு அதிகாரத்தை ஒப்படைப்பதனால் சபை அதன் முடிவெடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கு போதுமான நேரத்தை ஒதுக்க முடிகின்ற அதேவேளை, ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான விரிவான கவனத்தைப் பெறுவதனை உறுதி செய்கிறது. தனிப்பட்ட சபை உறுப்பினர்களின் குறிப்பிட்ட நிபுணத்துவத்தைப் சபை பயன்படுத்தவும் அனுமதிக்கிறது. செயற்குழுக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆணைகள் மற்றும் குறிப்புகளின் விதிமுறைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு செயற்குழுவின் தலைவரும் சபைக் கூட்டங்களின் போது அந்தந்த நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகள் குறித்து அறிக்கை அளிக்கிறார், இவை சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன. வங்கியின் அன்றாட முகாமைத்துவம் பொது முகாமையாளர் தலைமையிலான கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வங்கி தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆணைகள் மற்றும் பொறுப்புகளுடன் பல நிர்வாக அளவிலான குழுக்களை நிறுவியுள்ளது.

சபை உபசெயற்குழுக்கள்

சபை உபசெயற்குழுக்கள்	மேற்பார்வை செய்யப்படும் விடயம்
கணக்காய்வுச் செயற்குழு (பக்கங்கள் 122 மற்றும் 123இல் குழுவின் அறிக்கை)	• உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வு • உள்ளக கட்டுப்பாடுகள் • நிதயியல் அறிக்கையிடல் மற்றும் இணக்கம்
மனித வளம் மற்றும் ஊதியச் செயற்குழு (பக்கங்கள் 126 மற்றும் 127இல் குழுவின் அறிக்கை)	• ஊதியக் கொள்கை • மனிதவளக் கொள்கை • முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் • செயல்திறன் மதிப்பீடு
நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் செயற்குழு (பக்கங்கள் 128 மற்றும் 129இல் குழுவின் அறிக்கை)	• முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான தகுதி மற்றும் நன்னடத்தை மதிப்பீடு • நெறிமுறைக் குறியீடு • சபை மற்றும் அதன் உப செயற்குழுக்களின் செயல்திறன் • கூட்டாண்மை ஆளுகை
ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு (பக்கங்கள் 124 மற்றும் 125இல் குழுவின் அறிக்கை)	• கடன், சந்தை, செயல்பாடு, திரவத்தன்மை, சைபர்/தகவல் தொழில்நுட்பம், மூலோபாய இடர்நேர்வுகள், சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு உள்ளடங்களலான இடர்நேர்வு முகாமைத்துவம் • இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை கட்டமைப்பு மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்குழு (பக்கங்கள் 130 மற்றும் 131இல் குழுவின் அறிக்கை)	• தகவல் தொழில்நுட்ப தயாரிப்புகள், சேவைகள், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உட்கட்டமைப்புக்கான மேற்பார்வை பொறுப்பு

நிறைவேற்றுச் செயற்குழுக்கள்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் செயற்குழு	கூட்டாண்மை முகாமைத்துவச் செயற்குழு	உள்ளக மூலதன போதுமாந்தன்மை மதிப்பீடு செயல்முறை மற்றும் மீட்புத் திட்ட வழிநடத்தல் செயற்குழு	உதவித்தொகைக் செயற்குழு
கிளைகள் பிரிவு கொடுகடன் செயற்குழு	கூட்டாண்மை உபாயமார்க்க மீளாய்வுச் செயற்குழு	முதலீட்டுச் செயற்குழு	TV BoCயின் வழிநடத்தல் செயற்குழு
வியாபார தொடர்ச்சி ஒருங்கிணைப்புச் செயற்குழு	கடன் செயற்குழு	தகவல் தொழில்நுட்பம் வழிநடத்தல் செயற்குழு	நிலைபேறானத் தன்மை செயற்குழு
வியாபார தொடர்ச்சி அமுல்படுத்தல் செயற்குழு	சேத மதிப்பீடு மற்றும் மீட்டளிப்புச் செயற்குழு	சந்தைப்படுத்தல் செயற்குழு	தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டுச் செயற்குழு
வியாபார தொடர்ச்சிக்கான முகாத்துவ வழிநடத்தல் குழு	வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல் முகாமைத்துவச் செயற்குழு	செயற்படாச் சொத்துக்களின் மீளாய்வுச் செயற்குழு	TV BoCயின் தொழிற்பாட்டுச் செயற்குழு
செயற்பாட்டு இழப்புகளைக் கையாளும் செயற்குழு	மோசடி இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு	செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ நிறைவேற்றுச் செயற்குழு	
அரசாங்கப் பிணையங்கள் மீதான முதலீட்டுச் செயற்குழு	மனித வளக் கொள்கைச் செயற்குழு	வெகுமதி மற்றும் அங்கீகாரக் கொள்கைச் செயற்குழு	
கூட்டாண்மை தகவல் பாதுகாப்புச் செயற்குழு	பயனற்ற சொத்துக்களின் செயற்குழு	உதவித்தொகை நிகழ்ச்சித்திட்டத் தேர்வுச் செயற்குழு (மீளாய்வுச் செயற்குழு)	

கம்பனிச் செயலாளர்

அனைத்து நேரங்களிலும் வங்கிக்குள் நல்லாட்சி நடைமுறைகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதில் நிறுவனத்தின் செயலாளர்/சபையின் செயலாளர் முக்கிய பங்கு வகிக்கிறார். சபையின் நடைமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்த எந்தவொரு விளக்கத்திற்கும் சபையின் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளை ஒவ்வொரு உறுப்பினரும் அணுகலாம்.

- வங்கியின் கூட்டாண்மை ஆளுகைச் சட்டத்தினை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது
- பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப சபை நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்கிறது
- வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள், ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் பங்குதாரர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு வங்கியின் ஆளுகை கட்டமைப்பை கிரமமாக மீளாய்வு செய்கிறது.
- தலைவரின் ஒப்புதலுடன் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலை அமைத்தல்

திருமதி ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன சபையின் செயலாளராக பணியாற்றுகிறார், மேலும் வங்கிச் சட்டத்தின் தேவைகள் மற்றும் தொடர்புடைய திருத்தங்களின்படி நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையினை புதுப்பித்தல்

GRI 2-10

புதிய நியமனங்கள், ஓய்வு மற்றும் பதவி விலகல் மூலம் சபை கிரமமாக புதுப்பிக்கப்படுகிறது. சபையின் புதுப்பித்தலானது புதிய திறன்கள், நுண்ணறிவுகள் மற்றும் முன்னோக்குகளுடன் உறுப்பினர்களை அறிமுகப்படுத்த அனுமதிக்கிறது, அதே நேரத்தில் மதிப்புமிக்க தொழில் அறிவைத் தக்கவைத்து தொடர்ச்சியைப் பராமரிக்கிறது.

நியமனம்	இளைப்பாறல்/பதவி விலகல்
சபைக்கான நியமனங்கள் அரச வங்கிகளுக்கு பொறுப்பான அமைச்சரால் செய்யப்படுகின்றன. வங்கியின் உள்ளக கொள்கைக்கு எதிராக தகுதி மற்றும் உரிமைகளுக்கான அளவுகோல்கள் சரிபார்க்கப்பட்டவுடன், புதிய நியமனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல் கோரப்படுகிறது. புதிய இ 2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றம் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்படி புதிய சபை நியமனங்களுக்கு இலங்கைப் பிணையங்கள் மற்றம் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் தனது ஒப்புதலை அளிக்கிறது.	பணிப்பாளர்களின் பதவி விலகல்கள் அல்லது நீக்கம் ஆகியவை அதே அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன, அதே நேரத்தில் இலங்கை மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குச் சந்தையிற்கு சபையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.
2023 ஆம் ஆண்டில் நியமனங்கள்	**2023 ஆம் ஆண்டில் பதவி விலகல்கள்**
• திரு நரேஷ் அபேயசேகர • பேராசிரியர் கித்சிரி எம் லியானகே	• திரு ஏ. சி மணில்கா பெர்னாண்டோ • திரு ஹர்ஷா விஜயவர்தனா
2024 ஆம் ஆண்டில் நியமனங்கள்	**2024 ஆம் ஆண்டில் பதவி விலகல்கள்**
• திரு காவன் ரத்நாயக்க • திரு ஜெஹான் இஸ்மாயில் • திரு ஜயமின் பெல்பொல	• திரு ரொனால்ட் சி பெரேரா P.C. • மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி. ஏ. சந்திரசிரி VSV

ஆர்வ முரண்பாடு

GRI 2-15

ஆர்வ முரண்பாடு தொடர்பா ஓர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை நடைமுறையில் உள்ளது, இது ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்படுகிறது. ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் வேறு எந்த சபையும் அல்லது நிறுவனங்கள் சார்ந்த ஏதேனும் ஒப்பந்தங்கள்/புதிய நியமனங்களில் உள்ள எந்தவொரு ஆர்வத்தையும் பணிப்பாளர்கள் அறிவிக்க வேண்டும். ஆர்வ முரண்பாடு இருக்கும் சூழ்நிலைகளில் விவாதங்களில் பங்கேற்பதையும், தங்கள் கருத்தை தெரிவிப்பதையும் அல்லது ஒப்புதல் அளிப்பதையும் பணிப்பாளர்கள் தவிர்க்கிறார்கள்.

கூட்டங்கள் மற்றும் வருகை

சபை தனது கடமைகளை நிறைவேற்றவும், இடர்நேர்வு முகாமைத்துவ தொடர்பான மூலோபாய திசை மற்றும் அணுகுமுறையை கண்காணிக்கவும் அதன் கூட்டங்களைப் பயன்படுத்துகிறது.

அதிர்வெண்

- ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்தில், சபைகூட்டங்கள் மற்றும் உப செயற்குழு கூட்டங்களுக்கு கால அட்டவணை அமைக்கப்பட்டு பணிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்படுகிறது.

▼

நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை பத்திரங்கள் ஆவணங்கள்

- சபையின் செயலாளர் தலைவரால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நிகழ்ச்சி நிரலை அமைக்கிறார்
- சபை கூட்டங்களில் கலந்துரையாடுவதற்கு நிகழ்ச்சி நிரலுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் சுதந்திரம் பணிப்பாளர்களுக்கு உண்டு
- உள்ளக/வெளிப்புற அபிவிருத்திகளிலிருந்து எழும் விடயங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படலாம்

▼

அறிவிப்பு

- விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களை மீளாய்வு செய்வதற்கும், தேவைப்பட்டால் கூடுதல் தெளிவுபடுத்தல்களைப் பெறுவதற்கும் போதுமான நேரம் வழங்கப்படுவதை உறுதிசெய்து, பாதுகாப்பான இணையதளம் மூலம் பணிப்பாளர்களுக்கு இலத்திரனியல் முறையில் விநியோகிக்கப்படுகிறது.

▼

கூட்டங்கள்

- செயல்திறன் புதுப்பிப்புகள், நிர்வாக விடயங்கள் மற்றும் இடர்நேர்வு அறிக்கைகள் உளள்ளடங்கலான உபசெயற்குழு பரிந்துரைப்புக்களின் விவாதம்
- தேவைப்பட்டால் மேலதிக விளக்கங்களை வழங்க முகாமைத்துவ அணி உறுப்பினர்கள் சபை கூட்டங்களுக்கு அழைக்கப்படுகிறார்கள்

▼

கூட்டத்திற்குப் பிறகு

- கூட்டத்தின் 10 நாட்களுக்குள் பாதுகாப்பான இலத்திரனியல் தீர்வு மூலம் பணிப்பாளர்களிடையே கூட்டச் சுருக்கத்தினை சபையின் செயலாளர் தயார் செய்து சுற்றிகைச்செய்கிறார்
- வரைவு அறிக்கை கூட்டத்தின் அடுத்த நாள் சிரேஷ்ட முகாமைத்துவ அணிக்கு வழங்கப்படுகின்றன
- தொடர்ந்து வரும் சபைக் கூட்டத்தில் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது
- நிலுவையில் உள்ள விடயங்களுக்கு பின்தொடர்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

கூட்டாண்மை ஆளுகை

2023 ஆம் ஆண்டில் சபை மற்றும் உபசெயற் குழுக்களின் கூட்டத்திற்கான வருகை

சபை ஆண்டு முழுவதும் 22 கூட்டங்களை நடத்தியது மற்றும் இந்த கூட்டங்களில் பங்கேற்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	சபைக் கூட்டம்	கணக்காய்வுச் செயற்குழுக் கூட்டம்	மனித வளம் மற்றும் ஊதிய செயற்குழு கூட்டம்	நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை செயற்குழு கூட்டம்	ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு கூட்டம்	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்குழு கூட்டம்
திரு ரொனால்ட் சி பெரேரா PC தலைவர்	22/22	-	-	-	3/7	-
திரு ஆர். எம். பிரியந்த ரத்நாயக்க பதவி வழி பணிப்பாளர்	22/22	12/13	2/2	10/10	7/7	12/12
மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி. ஏ. சந்திரசிரி VSV நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்	20/22	9/13	2/2	10/10	4/7	11/12
பேராசிரியர் கித்சிரி எம். லியானகே நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்[1]	17/17	-	1/1	6/6	-	12/12
திரு நரேஷ் அபேயசேகர நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்[2]	16/16	8/8	-	-	3/3	12/12
திரு ஏ. சி. மணில்கா பெர்னாண்டோ நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்[3]	6/6	5/5	1/1	4/4	-	-

1. 31.03.2023 அன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்பட்டது 2. 04.05.2023 அன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்பட்டது 3. 21.04.2023 அன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பதவி விலகல்

சபையின் அறிமுகம் மற்றும் பணிப்பாளர் பயிற்சி

எங்கள் சபையின் ஒவ்வொரு புதிய உறுப்பினரின் தேவைகள், திறன்கள் மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப எங்கள் அறிமுக நிரல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் தங்கள் சட்டரீதியான கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு ஆதரவளிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, வங்கியின் மூலோபாயத்தைப் புரிந்துகொள்ளல் மற்றும் வங்கியின் அன்றாட நடவடிக்கைகளில் தீர்மானம் மேற்கொள்பவர்களாக மற்றும் தலைவர்களாக அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம், இலங்கை வங்கி அவர்களின் வகிபாகத்திற்கு புதிய சபை உறுப்பினர்களைத் தயார்படுத்துகிறது.

அறிமுக பொதிகள்

வங்கியின் கண்ணோட்டம், ஆளுகை கட்டமைப்பு, ஒழுங்குமுறை கட்டமைப்புகள் பற்றிய விவரங்கள் மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவ அணி மற்றும் சபை ஆதரவு கட்டமைப்பின் விவரங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

விளக்கக் காட்சிகள்

பொது முகாமையாளரின் விளக்கக்காட்சி வங்கியின் வரலாறு, வணிகத் துண்டங்கள், நிறுவன அமைப்பு, வணிகத் துண்டங்கள் மற்றும் துணைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றை விவரிக்கிறது.

கூட்டங்கள்

தேவைக்கேற்ப அல்லது கோரிக்கையின் பேரில் ஒருவருக்கொருவர் கூட்டங்கள் மற்றும் திணைக்கள ரீதியான வருகைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ஆரம்ப அறிமுகத்திற்கு அப்பால், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் மாற்றங்கள், தரநிலைகள் மற்றும் குறியீடுகளில் மாற்றங்கள் மற்றும் இயக்க களத்தில் தோற்றம்பெற்றுவரும் போக்குகள் உள்ளடங்கலான பல்வேறு தலைப்புகளில் விரிவான புதுப்பிப்புகள் மற்றும் பயிற்சிகளைப் பெற பணியாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள், இது அவர்களின் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றத் தேவையான அறிவைப் பெற வசதியளிக்கிறது. இந்த ஆண்டில், பணத் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்புக்கு எதிரான (AML/CFT) குறித்த பயிற்சியில் பணிப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளுக்கான பணிப்பாளர்களின் அணுகலுக்கான கொள்கை வங்கியின் செலவில் வெளி நிபுணர்களின் உள்ளீட்டிற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

செயல்முறைகள் - பயனுறுதிவாய்ந்த கட்டுப்பாடுகளை நிறுவுதல்

கொள்கை கட்டமைப்பு

GRI 2-23 | 2-24

இலங்கை வங்கியில் எங்கள் செயல்பாடுகளை நிர்வகிக்கும் எங்கள் முடிவெடுக்கும் செயல்முறைகளை வழிநடத்தும் மற்றும் எங்கள் மூலோபாய நோக்கங்கள், ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் நெறிமுறை தரங்களுடன் சீரமைப்பை உறுதி செய்யும் ஓர் வலுவான கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப செயல்பட நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இடர்நேர்வு முகாமைத்துவ, மக்கள் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப ஆளுகை மற்றும் நிலைத்தன்மை முகாமைத்துவ உள்ளடங்கலான எங்கள் செயல்பாடுகளின் பல்வேறு பகுதிகளை எங்கள் கொள்கை கட்டமைப்பு உள்ளடக்கியது. மாறிவரும் உள்ளக மற்றும் வெளிப்புற காரணிகளுடன் சீரமைப்பை உறுதி செய்வதற்காக இந்த கட்டமைப்பு கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது.

கொள்கைகள் ஓர் தெளிவான முறையில் ஆவணப்படுத்தப்படுகின்றன, அனைத்து ஊழியர்களும் பிற தொடர்புடைய தரப்பினரும் தேவைப்படும் போதெல்லாம் கொள்கைகளை எளிதில் ஆலோசிக்க முடியும் என்பதையும், கொள்கை கடமைகளை அறிமுகப்படுத்தவும் விளக்கவும் பயனுள்ள தகவல்தொடர்பு வழிகள் பயன்படுத்தப்படுவதையும் உறுதிசெய்கின்றன.

எங்கள் செயல்பாடுகளின் அடித்தளத்தை உருவாக்கும் முக்கிய கொள்கைகளின் கண்ணோட்டம் பின்வருமாறு.

இடர்நேர்வு முகாமைத்துவம்

- கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- நாட்டின் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- அழுத்த சோதனைக் கொள்கை
- இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- உள்ளக மூலதனம் போதுமாந்தன்மை மதிப்பீடு கொள்கை
- செயல்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- மோசடி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ

- இலத்திரனியல்-கழிவு முகாமைத்துவக் கொள்கை
- தகவல் பாதுகாப்பு கொள்கை
- பாதிக்கக்கூடிய முகாமைத்துவக் கொள்கை

ஊழியர் முகாமைத்துவம்

- மனித வள கொள்கை
- பயிற்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை
- ஆட்சேர்ப்பு திட்டம்
- வீட்டிலிருந்து வேலை செய்யும் கொள்கை
- பதவி விலகல்-நேர்காணல் கொள்கை
- இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு கொள்கை

நிலைபேண்தகைமை முகாமைத்துவம்

- சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமைக் கொள்கை
- ஆளுகை கொள்கை
- தொடர்பாடல் கொள்கை
- வாடிக்கையாளர் புகார் கையாளுதல் கொள்கை மற்றும் நடைமுறைகள்

இடர்நேர்வு மேற்பார்வை

வலுவான இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குவதற்கும், வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்புகளை மேற்பார்வையிடுவதற்கும் சபை ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த இடர்நேர்வு குகாமைத்துவச் செயற்குழு மற்றும் கணக்காய்வுச் செயற்குழு ஆகியவை இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு கடமைகளை நிறைவேற்ற சபைக்கு உதவுகின்றன. இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய அறிக்கை (பக்கங்கள் 132 முதல் 148 வரை) கணக்காய்வுச் செயற்குழுவின் அறிக்கை (பக்கங்கள் 122 முதல் 123 வரை) மற்றும் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழுவின் அறிக்கை ஆகியவற்றில் இந்த ஆண்டில் கவனம் செலுத்தப்பட்ட முக்கிய பகுதிகள் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. (பக்கங்கள் 124 முதல் 125).

இடர்நேர்வு தொடர்பான தொழிற்பாடுகள

- வங்கியின் இடநேர்வு நாட்டத்திற்கு அனுமதியளித்தல்.
- வங்கி எதிர்கொள்ளும் முக்கிய இடர்நேர்வுகளை கிரமமாக மதிப்பீடு செய்தல்
- இடர்நேர்வு நாட்ட தரவுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் வரையறுக்கப்பட்ட அளவுகோள்களுக்கு எதிராக செயல்திறன்
- இந்த இடர்நேர்வுகளை திறம்பட தீர்க்க தணிக்கும் கருவிகள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல்

வெளிநாட்டு செயல்பாடுகளின் ஆளுகை

இலங்கை மத்திய வங்கி மற்றும் அந்த நாடுகளில் உள்ள தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட அனுமதியின் கீழ் நிறுவப்பட்ட மூன்று நாடுகளில் வெளிநாட்டு கிளைகள் மற்றும் இங்கிலாந்தில் முழுமையாக சொந்தமான துணை நிறுவனம் மூலம் வங்கி வெளிநாடுகளில் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. இந்த கிளைகள் அந்தந்த நாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணங்குவிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

வெளிநாட்டு கிளைகள் ஓர் "வெளிநாட்டு கிளை சாசனம்" மூலம் நிர்வகிக்கப்படுகின்றன, இது அர்ப்பணிப்புள்ள உதவி பொது முகாமையாளர் பிரிவின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. வெளிநாட்டு கிளை அலகு தங்கள் செயல்திறனை காலாண்டுக்கொரு தடவை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது. மேலும் அனைத்து மூலோபாய நிலை முடிவுகளும் ஒப்புதலுக்காக சபைக்கு அனுப்பப்படுகின்றன. வெளிநாட்டு கிளைகளுக்கு பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிக்கும் போது, அந்த நாட்டில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலையும் பெற வேண்டும். இணக்கப்பாடு, கணக்காய்வு மற்றும் செயல்திறன் ஆகியவை இலங்கை வங்கியின் தலைமை அலுவலகம் மூலம் சிறப்பு கணக்காய்வு மூலம் கண்காணிக்கப்படுகின்றன. தேசிய கணக்காய்வு அலுவலகமும் கணக்காய்வு நடைமுறைகளை மீளாய்வு செய்து நடாத்துகிறது.

2023 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள்

- இணைய பாதுகாப்பு கொள்கை
- ECL மாதிரி சரிபார்ப்பு கொள்கை
- கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்க வெளி கணக்காய்வாளர்களை ஈடுபடுத்தும் கொள்கை

தகவல் தொழில்நுட்ப ஆளுகை

வங்கியின் தகவல் சொத்துக்கள் மற்றும் செயல்பாட்டு அமைப்புகளைப் பாதுகாக்க சபை உறுதிபூண்டுள்ளது மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ முறைமைகளில் விரிவாக முதலீடு செய்கிறது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்புக் கொள்கை நடைமுறையில் உள்ளது, இது வங்கியின் தகவல் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதலையும் ஆதரவையும் நிர்வாகத்திற்கு வழங்குகிறது.

வலுவான தகவல் தொழில்நுட்ப நிர்வாக செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதன் மூலம், இலங்கை வங்கி அதன் தகவல் தொழில்நுட்ப முதலீடுகளின் பெறுமதியை மேம்படுத்துவதையும், அதிகரித்து வரும் டிஜிட்டல் மற்றும் போட்டிச் சூழலில் அதன் மூலோபாய நோக்கங்களை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. சைபர் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கையை செயல்படுத்துவதற்காக வங்கி ஓர் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரியையும் நியமித்துள்ளது. இந்த ஆண்டில், கொபிட் 2019 கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான ஆரம்ப அடித்தளத்தை அமைப்பதன் மூலமும், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் தரவு இழப்பு தடுப்பு கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமும் வங்கி தனது தகவல் தொழில்நுட்ப நிர்வாக நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்த முயன்றது.

கூட்டாண்மை ஆளுகை

இணக்கப்பாடு

GRI 2-27

வங்கிச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குச் சந்தை பட்டியலிடல் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதற்கும், ஒழுங்குமுறை முன்னேற்றங்களை முன்கூட்டியே கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கும் அவற்றின் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் குழுவில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிப்பதற்கும் இலங்கை வங்கி ஓர் சட்டபூர்வமான கடமையைக் கொண்டுள்ளது. வங்கியின் செயல்பாடுகளை பாதிக்கக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில்துறை தரங்களில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து சபைக்குத் தெரிவிக்கப்பட்டு, வங்கியின் இணக்கக் கடமைகள் மற்றும் இடர்நேர்வு வெளிப்பாடு ஆகியவற்றில் ஏதேனும் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு ஒழுங்குமுறை முன்னேற்றங்களைக் கண்காணிக்கிறது. ஒழுங்குமுறை மீறல்கள், அமலாக்க நடவடிக்கைகள் அல்லது வளர்ந்து வரும் இணக்க சிக்கல்கள் உள்ளிட்ட வங்கியின் இணக்க நிலை குறித்த இணக்க தலைமை அலுவலகர் மற்றம் முகாமைத்துவத்திடமிருந்து சபை வழக்கமான அறிக்கைகளைப் பெறுகிறது.

மேலும் விவரங்களுக்கு இவ் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 353 முதல் 389 வரை பார்க்கவும்.

முக்கியமான கரிசனைகள் பற்றிய தொடர்பாடல்

GRI 2-16 | 2-25

முக்கியமான பிரச்சினைகளை சபைக்கு தெரிவிப்பதற்கு பல வழிமுறைகள் பின்வருமாறு நிறுவப்பட்டுள்ளன.

- சபை மற்றும் உபசெயற்குழுக்களின் கூட்டங்கள்: முக்கியமான கரிசனைகள் சம்பந்தப்பட்ட உபசெயற்குழுக்கள் மூலம் சபைக்கு அல்லது பொது முகாமையாளர் வழியாக எழுப்பப்படலாம்.
- தகவல் தெரிவிப்புக் கொள்கை (Whistle-blower in Policy)
- சபையின் செயலாளர்: முகாமைத்துவத்திற்கும் சபைக்கும் இடையிலான ஒரு வழித்தடமாக.

நோக்கம் - பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை

பெறுமதி அடிப்படையிலான கலாச்சாரம் GRI 2-25

GRI 2-25

ஊழியர்களிடையே சீரமைப்பு, ஒற்றுமை மற்றும் பகிரப்பட்ட நோக்கத்தை வளர்ப்பதற்காக வங்கிக்குள் பெறுமதி அடிப்படையிலான கலாச்சாரத்தை உருவாக்க சபை மேல் நிலைகளில் ஓர் கருத்துப்போக்கினை அமைக்கிறது. கூட்டாண்மை கூட்டங்கள், உள்ளக தகவல்தொடர்புகள் மற்றும் பயிற்சி அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு வழிகள் மூலம் அனைத்து ஊழியர்களுக்கும் இலங்கை வங்கியின் முக்கிய பெறுமதிகள் தெரிவிக்கப்படுகின்றன. மேலும், இந்த மதிப்புகள் செயல்திறன் முகாமைத்துவ, ஆட்சேர்ப்பு மற்றும் அங்கீகாரத் திட்டங்கள் போன்ற முக்கிய வணிக செயல்முறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்வரும் கட்டமைப்புகள் ஊழியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பொறுப்பான மற்றும் நெறிமுறை நடத்தைக்கான ஒரு வரைபடமாக செயல்படும் ஓர் கலாச்சாரத்தை பரப்புவதற்கு உதவுகின்றன.

ஒழுக்கநெறி சாசனக்கோவை மற்றும் நெறிமுறைகள்

- **பணிப்பாளர்களுக்கான ஒழுக்கநெறி சாசனக்கோவை**

  சபையானது வணிக நடத்தை மற்றும் ஒழுக்க நெறிமுறைக் கோவையினால் பிணைக்கப்பட்டுள்ளது, மேலும் இக்கோவையின் விதிகளுக்கு அவர்கள் இணங்குவது குறித்த வருடாந்திர உறுதிப்படுத்தலை சமர்ப்பிக்க வேண்டும். இந்த குறியீடு ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான வலுவான கலாச்சாரத்தை பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் பணிப்பாளர்கள் வங்கியின் சிறந்த நலன்களுக்காக செயல்பட ஊக்குவிக்கிறது.

- **ஊழியர்களுக்கான ஒழுக்கநெறி சாசனக்கோவை**

  இது அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும் மற்றும் உள்ளக மற்றும் வெளிப்புற பங்காளர்கள், நடத்தை, இலஞ்சம் மற்றும் ஊழலைக் கையாள்வதில் வங்கியின் எதிர்பார்ப்புகளை தெளிவாக அமைக்கிறது.

தகவல் தெரிவிப்புக் கொள்கை (Whistle bolowing policy)

நோக்கம்	தொடர்பாடல்	விசாரணை
சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விசில்பொலோவிங் கொள்கையானது திருட்டு, மோசடி, ஊழல், வங்கியின் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நெறிமுறையற்ற அல்லது சட்டவிரோதமானதாகக் கருதப்படும் வேறு ஏதேனும் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை புகாரளிக்க உள்ளக மற்றும் வெளி பங்காளர்களை ஊக்குவிக்கிறது, அதே நேரத்தில் .ரகசியத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கிறது.	எந்தவொரு பங்காளரும் தங்கள் கரிசனைகள்/ புகார்களை நேரில், தபால், மின்னஞ்சல், தொலைபேசி, தொலைநகல், வலைத்தளம், அழைப்பு மையம் அல்லது முகப்புத்தகம் அரட்டை மூலம் தெரிவிக்கலாம். புகார்கள் தலைமை உள்ளக கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்டு மேற்பார்வையிடப்படுகின்றன, அதே நேரத்தில் பிரது பொது முகாமையாளர் தரம் அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு எதிரான புகார்கள் கணக்காய்வுக் குழுவின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.	• முறையீட்டாளர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பெறப்பட்ட புகாரின் ஆரம்ப மதிப்பாய்வை சம்பந்தப்பட்ட அதிகாரம் மேற்கொள்கிறது மற்றும் தேவைப்பட்டால் கூடுதல் தகவல்களுக்கான கோரிக்கைகள். • ஆரம்ப மதிப்பீட்டு பணிகள் முடிந்தவரை விரைவாக பிரச்சினையைத் தீர்க்க மேற்கொள்ளப்பட்ட பிறகு, மேலும் விசாரணை தேவைப்பட்டால் முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படும். • புகார் 21 நாட்களுக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும்.

ஊழல் எதிர்ப்பு

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறையை வங்கி எடுத்துக்கொள்கிறது, மேலும் வங்கி எங்கு செயல்பட்டாலும் அதன் அனைத்து வணிக பரிவர்த்தனைகள் மற்றும் உறவுகளில் தொழில் ரீதியாகவும், நியாயமாகவும், நேர்மையுடனும் செயல்பட உறுதிபூண்டுள்ளது. ஊழல் தடுப்பு மற்றும் இலஞ்சம் தொடர்பான வங்கியின் கொள்கை அனைத்து ஊழியர்களுக்கும் அறிமுகப் பயிற்சிகளின் போது தெளிவாக தெரிவிக்கப்படுகிறது மற்றும் வழக்கமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் மூலம் வலுப்படுத்தப்படுகிறது.

இணங்காமை நிகழ்வுகள்

அபராதத் திகதி	கொடுப்பனவு திகதி	அபராத வகை	அபராதத்திற்கான காரணங்கள்	தொகை (ரூபா)	எந்த சட்டத்திற்கு இணங்காததற்காக அபராதம் விதிக்கப்படுகிறது
07.11.2023	21.11.2023	நிர்வாகம்	அரசியல் ரீதியாக வெளிப்படும் பல நபர்களுடன் வணிக உறவுகளில் நுழையும் போது முன் ஒப்புதல் பெறத் தவறியது	6,000,000.00	2016 ஜனவரி 27 திகதியிடப்பட்ட இல. 1951/13 அதிவிசேட வர்த்மானிப் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதி நிறுவனங்களின் (Customer due diligence) விதிகளில் விதி 59
			இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் தாமதமின்றி இணங்கத் தவறியது		2012 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்குமுறைகள் 4(7)

- மீளாய்வுசெய்யப்படும் ஆண்டில், மோசடி, உள்ளக பரிமாற்றம், நம்பிக்கைக்கு எதிரானது, போட்டிக்கு எதிரான நடத்தை, சந்தை கையாளுதல், முறைகேடு அல்லது பிற தொடர்புடைய நிதி தொழில் சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின் விளைவாக எழும் பண இழப்புகள் எதுவும் இல்லை. ஓர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 2006 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்கள் தொடர்பான வழிகாட்டுதல்களை பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வங்கி பல அமைப்பு கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்பு செயல்முறைகளை செயல்படுத்தியது.
- ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக பரிசோதனைசெய்தல் உடனடியாக அனுமதிக்கும் வகையில் கணினி அம்சங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்களுடன் தொடர்புடைய சாத்தியமான இடர்நேர்வுகளை புரிந்துகொள்வதற்கும், மதிப்பிடுவதற்கும், கையாளுவதற்கும் தேவையான விடாமுயற்சி மற்றும் திறன்களை ஊழியர்களுக்கு வழங்குவதற்காக சிறப்பு பயிற்சிகள் மூலம் ஊழியர்களின் விழிப்புணர்வு நிலைகளும் மேம்படுத்தப்பட்டன.

பொறுப்பான கூட்டாண்மை குடியுரிமை

வங்கியின் மூலோபாய திசையை அங்கீகரிப்பதற்கும், அது பொறுப்பான பெருநிறுவன குடியுரிமையின் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது என்பதை உறுதி செய்வதற்கும் சபை பொறுப்பாகும். மூலோபாய முடிவுகளின் சுற்றுசூழல், சமூக மற்றும் ஆளுகை தாக்கங்களை கருத்திற் கொண்டு பல்வேறு பங்காளர்களின் நலன்களை சமநிலைப்படுத்துவதும் இதில் அடங்கும். நிலைத்தன்மை தொடர்பான அனைத்து விடயங்களிலும் சபை மேற்பார்வையை வழங்குகிறது, அதே நேரத்தில் கொள்கையை செயல்படுத்துவதற்கான பொறுப்பு ஓர் நிலைத்தன்மைக் குழுவிடம் உள்ளது, இது பொது முகாமையாளரின் தலைமையில் உள்ளது. சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நிர்வாகத்தை சபைம் பொறுப்பாக்குகிறது.

நிலைத்தன்மைக் குழுவின் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

- வங்கியின் ஒவ்வொரு நிலைத்தன்மை (சூழல், சமூக மற்றும் ஆளுகை) முடிவையும் எடுத்தல்
- இலங்கை வங்கியின் வழிகாட்டலுடன் இணக்கத்தை சரிபார்த்தல்
- நிலைத்தன்மை தொடர்பான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்
- கடன் வசதிகளுக்கான ஏ வகை சூழல் மற்றம் சமூக முறைமை முகாமைத்தவ ஒப்புதல்களுக்கு ஒப்புதல் அளித்தல்
- நிலைத்தன்மை உத்தரவாதம், சூழல், சமூக மற்றும் ஆளுகை தரநிலை இணக்கம் மற்றும் சூழல் மற்றும் சமூக இடர்நேர்வுநேர்வு தொடர்பான முடிவுகளுக்கான இறுதி நிர்வாக அதிகாரம்

2023 ஆம் ஆண்டில் சூழல், சமூக மற்றும் ஆளுகை மேற்பார்வையை ஆதரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- வங்கியின் தற்போதைய சூழல், சமூக மற்றும் ஆளுகை ESG செயல்திறனை மதிப்பிடுவதற்கும், சூழல், சமூக மற்றும் ஆளுகை ESG செயல்திறனை மேம்படுத்துவதற்கும், உலகளாவிய தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகவும் வடிவமைக்கப்பட்ட உத்திகளை உருவாக்க ஒரு சூழல், சமூக மற்றும் ஆளுகை ESG ஆலோசகரை நியமிப்பது.
- நிலைத்தன்மை அறிக்கையிடலுக்காக மெஸ்ஸர்ஸ். கே.பி.எம்.ஜி. (KPMG)யிடமிருந்து வெளிப்புற உத்தரவாத அறிக்கையைப் பெறுதல்
- கொழும்பு பங்குச் சந்தை வழங்கிய சூழல், சமூக மற்றும் ஆளுகை ESG அறிக்கை குறித்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல்

சுட்டாண்மை அறிக்கையிடல்

வெளியீட்டிற்கு முன்னர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர ஒருங்கிணைந்த அறிக்கை மற்றும் வருடாந்திர நிதி அறிக்கைகள் உள்ளடங்கலான அனைத்து வெளிப்புற அறிக்கைகளின் துல்லியம் மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்கான உயர் பொறுப்பை சபை கொண்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை, பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் தானாக முன்வந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையிடல் நியமங்கள், கோவைகள் மற்றும் சட்டகங்கள் ஆகியவற்றிற்கு இணங்க, வங்கியின் நிதி மற்றும் நிதி அல்லாத நிலை, செயல்திறன் மற்றும் வாய்ப்புகள் பற்றிய சீரான மதிப்பீட்டை வழங்குகிறது. இது ஆண்டறிக்கையில் பக்க இல. 5இல் காட்டப்பட்டுள்ளது. நம்பகத்தன்மையை மேம்படுத்த வெளியகக் கணக்காய்வாளர்களால் உத்தரவாதம் பெறப்பட்டுள்ளது.

கூட்டாண்மை ஆளுகை

பங்குதாரர் உறவுகள்

பங்காளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், சமூகங்கள் மற்றும் ஒழுங்குமுறையாளர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களுடன் இணைந்து வங்கி தொடர்பான விடயங்களில் அவர்களின் கரிசனைகள் மற்றும் கண்ணோட்டங்களைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை சபை புரிந்துகொள்கிறது. இந்த உரையாடல் சபைக்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், பொறுப்பான கூட்டாண்மை குடியுரிமைக்கு பங்களிக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் உதவுகிறது. வங்கியின் தகவல்தொடர்பு கொள்கை உள்ளக மற்றும் வெளிப்புற பங்குதாரர்களுடன் பயனுள்ள மற்றும் பொருத்தமான தகவல்தொடர்புகளைப் பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது மற்றும் நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகைக் குழுவால் மீளாய்வு செய்யப்படுகிறது.

எழுப்பப்பட்ட விடயங்களில் வங்கியின் முக்கிய ஈடுபாடு வழிமுறைகள் மற்றும் பதில்கள் பக்கங்கள் 49 முதல் 52 வரை "பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள்" பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

செயலாற்றம் நல்லாட்சி மூலம் பெறுமதி உருவாக்கல்

பெறுமதி உருவாக்கத்திற்கு சபையின் பங்களிப்பு

கவனம் செலுத்தும் பகுதி	
மூலோபாயம் மற்றும் நோக்கம்	வங்கியின் மூலோபாய திட்டத்தை வகுத்தல் மற்றும் செயல்படுத்துதல். மூலோபாயத்திற்கு எதிரான செயல்திறனுக்காக பக்கங்கள் 57 முதல் 60 வரை பார்க்கவும். சபை உபச்செயற்குழுக்களின் கடமைகளை திறம்பட பயன்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல். 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற சபை உபச்செயற்குழுக்களின கூட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட கடமைகளுக்கு பக்கங்கள் 114 முதல் 116 வரை பார்க்கவும். அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள், வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை அழுத்தங்கள், உயர்ந்த பணவீக்கம் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்கள் உள்ளடங்கலான பொருளாதார முன்னேற்றங்களின் சாத்தியமான தாக்கங்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு தணிப்பது. பக்கங்கள் 44 முதல் 48 வரை பார்க்கவும். பொருளாதாரத்தின் பாதிக்கப்படக்கூடிய துறைகளின் பாதுகாப்பு மற்றும் புத்துயிர்ப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து அதிக ஈடுபாடு மற்றும் அதிக விவாதங்கள். பக்கங்கள் 84 முதல் 97 வரை பார்க்கவும்.
ஆளுகை, கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கம்	வங்கியின் கூட்டாண்மை ஆளுகை கொள்கையை மீளாய்வு செய்தல். வங்கியின் ஆளுகை மற்றும் கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்த புதிய கொள்கைகள்/கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துதல். ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம், முக்கிய மூலதனச் செலவுகள், நிதிக் குழு மற்றும் சபையின் பிற செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல். சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நெறிமுறை தரங்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல். முடிவெடுப்பதில் பங்குதாரர்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளுதல். பொறுப்பான வணிக நடைமுறைகள் மற்றும் வங்கியின் நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரலுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல். மேம்பட்ட பாதுகாப்பு உட்கட்டமைப்பில் முதலீடுகள் மூலம் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல். டிஜிட்டல் மயமாக்கலில் அதிக கவனம் செலுத்துதல்.
கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்	கிரமமான நிதி செயல்திறன் அறிக்கைகள், முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் மற்றும் வரவு செலவுத்திட்ட சாதனைகளை கண்காணித்தல். இடைக்கால மற்றும் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்து ஒப்புதல் அளித்தல். நிதி தகவல், உள்ளக கட்டுப்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் வணிக தொடர்ச்சியின் ஒருமைப்பாட்டை உறுதி செய்தல்.
மனித மூலதனத்தை தக்கவைத்தல்	முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான தொடரும் ஊழியர்களை திட்டமிடல் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கருத்திற் கொண்டு ஊழியர்களின் நிதி பாதுகாப்பை ஆதரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல். தேவையான டிஜிட்டல் திறன்களைக் கொண்ட எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் ஊழியப் படையினை உருவாக்குதல்.

சபையின் செயல்திறனைக் கண்காணித்தல்

சுய மதிப்பீட்டு பொறிமுறையின் மூலம் சபையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான ஓர் கட்டமைக்கப்பட்ட செயல்முறையை வங்கி கொண்டுள்ளது. ஒவ்வொரு பணிப்பாளரும் ஓர் செயல்திறன் மதிப்பீட்டு படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும், அதைத் தொடர்ந்து பதில்கள் திரட்டப்பட்டு சபைக்கு வழங்கப்படுகின்றன. துணைக்குழுக்களும் இதேபோன்ற மதிப்பீட்டை மேற்கொள்கின்றன.

மூலோபாய திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட நிதி மற்றும் நிதி அல்லாத இலக்குகளின் அடிப்படையில் பொது முகாமையாளர் மற்றும் KMPஇன் செயல்திறனை சபையும் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்கிறது. இந்த முயற்சியில் சபைக்கு மனிதவள மற்றும் ஊதிய துணைக்குழு ஆதரவளிக்கிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் பொது முகாமையாளர் மற்றும் KMP உடன் இந்த அளவுகோல்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன, இது சபையின் எதிர்பார்ப்புகளில் தெளிவை உறுதி செய்கிறது. இந்த மதிப்பீடு தொழிற்பாடு களம் உள்ள இயக்கவியல் மற்றும் மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டத்தையும் கருத்தில் கொள்கிறது.

2023 ஆம் ஆண்டில் சபையின் செயல்திறனை நாங்கள் எவ்வாறு மதிப்பிட்டோம்

- சபையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான வங்கியின் செயல்முறை உன்னதமானது மற்றும் விரிவானது.
- அனைத்து சபை உறுப்பினர் செயல்பாடுகளையும் உள்ளடக்கிய மதிப்பீட்டு தாளைப் பயன்படுத்தி, ஓர் விரிவான வடிவத்தின் மூலம் கருத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.
- சதவீதக் கணக்கீடுகள் மற்றும் அதனுடன் இணைந்த கருத்துக்கள் செயல்திறன் பகுதிகளைப் பற்றிய வெளிப்படையான நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

ஊதியம்

ஊதியக் கொள்கை

வங்கியின் ஊதியக் கொள்கை அதன் மனித வள முகாமைத்துவ மற்றும் நிர்வாக கட்டமைப்பின் ஓர் முக்கியமான அங்கமாகும், இது வங்கியின் மூலோபாய அபிலாசைகளை இயக்குவதற்கான வளங்களை குழுவிடம் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் பெறுமதியை உருவாக்குவதில் அவர்கள் செய்த பங்களிப்பிற்காக முறையாக அங்கீகரிக்கப்பட்டு வெகுமதி அளிக்கப்படுகிறது. செயல்திறன், சந்தை போட்டித்திறன், ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் மற்றும் வங்கியின் மூலோபாய நோக்கங்களுடன் சீரமைப்பு போன்ற பல்வேறு காரணிகளை இந்தக் கொள்கை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

ஊதியக் கோட்பாடுகள்

- போட்டி நிறைந்த
- சமமான
- வெளிப்படையான
- உள்ளடங்கலான

ஊதிய அமைப்பு

பணிப்பாளர்களின் ஊதியம் பணிப்பாளர்களின் ஊதியக் கொள்கையால் தீர்மானிக்கப்படுகிறது, இது இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களின் விவரங்களையும், அவசரச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் விவரங்களையும் பிரதிபலிக்கிறது. எந்த இயக்குநரும் அவரது ஊதியத்தை தீர்மானிப்பதில் ஈடுபடுவதில்லை.

பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்களுக்கான (KMP) ஊதியம் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பொது முகாமையாளர்/KMPஇன் ஊதியம் குறித்து சபைக்கு மனிதவள சபை மற்றும் ஊதிய செயற்குழு பரிந்துரைகளைச் செய்கின்றன, அதன் அடிப்படையில் சபை ஒப்புதல் அளித்து, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு கருத்துக்களை வழங்குகிறது, அவர் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் விதிகளின்படி இறுதி ஒப்புதலை வழங்குகிறார். பொது முகாமையாளர் மற்றும் KMPஇன் ஊதியம் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

வங்கியின் ஊதியப் பகுப்பாய்வின் முக்கிய கூறுகள்

நிலையான ஊதியம்	மாறுபடும் ஊதியம்	நன்மைகள் மற்றும் நிபந்தனைகள்
• அடிப்படை ஊதியம் மற்றும் பிற நிலையான கூறுகள், வகிபாகம் மற்றும் பணியாளர் தரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது	• ஊக்குவிப்புக் கொடுப்பனவு	• வேலைவாய்ப்புக்குப் பிந்தைய சலுகைகள் • சிறப்புத் திட்டங்களின் கீழ் கடன்கள் • மருத்துவ பற்றுச்சீட்டுக்களை மீண்டும் செலுத்துதல்

பணிப்பாளர்களின் ஊதியம் பற்றிய விவரங்களுக்கு, KMPஇன் ஊதியம் பற்றிய விவரங்களுக்கு பக்கம் 200 ஐப் பார்க்கவும். மனித வளம் மற்றும் ஊதியக் குழுவின் அறிக்கை பக்கங்கள் 126 மற்றும் 127 இல் உள்ளது.

கணக்காய்வுச் செயற்குழு அறிக்கை

2023 ஆம் ஆண்டில் செயற்குழு கலவை

1. **திரு ஏ. சி. மணில்கா பெர்னாண்டோ***
   தலைவர்/சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்
2. **திரு ஹர்ஷ விஜயவர்தன****
   உறுப்பினர்/சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்
3. **திரு. ஆர். எம். பிரியந்த ரத்நாயக்க**
   உறுப்பினர்/சுயாதீனமற்ற நிறைவேற்றுதரம் சாராத பதவி வழி பணிப்பாளர்
4. **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி. ஏ. சந்திரசிரி VSV**
   உறுப்பினர்/சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

குறிப்பு:

* 21 ஏப்ரல் 2023 அன்று நடைமுறைக்குவரும்வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்

** ஜனவரி 2023 அன்று நடைமுறைக்குவரும்வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்

மே 2023 இல் சபையின் மறுசீரமைப்பின் படி, பின்வரும் பணிப்பாளர்கள் 05 மே 2023 அன்று நடைமுறைக்கு வரும் வகையில் கணக்காய்வுக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. **திரு நரேஷ் அபேயசேகர**
   தலைவர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாதார பணிப்பாளர்
2. **திரு. ஆர். எம். பிரியந்த ரத்நாயக்க**
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாதார பதவி வழிப் பணிப்பாளர்
3. **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி. ஏ. சந்திரசிரி VSV*****
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாதார பணிப்பாளர்

குறிப்பு:

***07 சனவரி 2024 அன்று நடைமுறைக்குவரும்வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்

19 பிப்ரவரி 2024 அன்று நடைமுறைக்கு வரும் வகையில் சபையின் மறுசீரமைப்பின் படி, பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. **திரு நரேஷ் அபேயசேகர**
   தலைவர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்
2. **திரு. ஆர். எம். பிரியந்த ரத்நாயக்க**
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாரார பதவிவழி பணிப்பாளர்
3. **பேராசிரியர் கித்சிரி எம். லியானகே**
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்

செயற் குழுவின் செயலாளர்

இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர், சட்டத்தரணி மற்றும் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக இருக்கும் ஜானகி எஸ். சிறிவர்தன, குழுவின் செயலாளராக செயல்படுகிறார்.

கிரகமான பங்கேற்பாளர்கள்

- பிரதான உள்ளக கணக்காய்வாளர்
- பிரதான நிதியியல் அதிகாரி
- பிரதான நிதியியல் அதிகாரி
- பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)
- பிரதி பொது முகாமையாளர் (இணக்கப்பாடு)
- உதவி பொது முகாமையாளர் (தொழிற்பாட்டுக் கணக்காய்வு)
- உதவி பொது முகாமையாளர் (விசாரணைகள்)
- உதவி பொது முகாமையாளர் (கடன் கணக்காய்வு)
- உதவி பொது முகாமையாளர் (தகவல் முறைமை கணக்காய்வு)
- உள்ளக கணக்காய்வாளர்
- கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி (வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்)

அழைப்பின் பேரில் கலந்து கொண்டவர்கள்

- பொது முகாமையாளர்
- கூட்டாண்மை அல்லது நிறைவேற்று முகாமைத்துவத்தின் வேறு எந்தவொரு உறுப்பினரும்/வேறு எந்தவொரு பணியாளர் உறுப்பினரும்

2023இல் நடைபெற்ற கூட்டங்கள்: 10
(இந்த அறிக்கையின் பக்கம் 116இல் வருகை கொடுக்கப்பட்டுள்ளது)

கூட்ட நடப்பெண்  உறுப்பினர்கள்

அல்லது உறுப்பினர்களின் பெரும்பான்மை எது அதிகமோ அது.

செயற்குழுவின் வகிபாகம்

கணக்காய்வுக் குழுவின் சாசனம்

கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறைகள் கணக்காய்வுக் குழு சாசனத்தால் நிர்வகிக்கப்படுகின்றன, அவை சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குழு அதன் செயல்பாடுகளின் நோக்கம் மற்றும் உள்ளடக்கம் "இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை" பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்கிறது

பிரதான கவனக்குவிப்பு

கணக்காய்வுச் செயற்குழு முதன்மையாக வங்கியின் நிதி அறிக்கையிடல் செயல்முறையின் சுயாதீனமான மற்றும் புறநிலை மதிப்பாய்வை வழங்குவதன் மூலம் வாரியத்திற்கு அதன் கடமைகளை நிறைவேற்ற உதவுவதில் கவனம் செலுத்துகிறது.

அறிக்கையிடல் ஊடகம்

கணக்காய்வுச் செயற்குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் வாரியக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகின்றன, அங்கு அனைத்து முக்கிய பிரச்சினைகள், கவலைகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அடையப்பட்ட அல்லது நிலுவையில் உள்ள முடிவுகள் மற்றும் தொடங்கப்பட்ட பின்தொடர்தல் ஆகியவை தெளிவுபடுத்தப்பட்டு, விவாதிக்கப்பட்டு, வாரியத்தின் ஒப்புதல் பெறப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் கவனக் குவிப்புப் பரப்புக்களும் நடவடிக்கைகளும்

நிதியியல் அறிக்கையிடல்

- மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் பொருந்தக்கூடிய கணக்கியல் தரநிலைகளால் பரிந்துரைக்கப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அவை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதை உறுதிசெய்ய மாதாந்திர, காலாண்டு மற்றும் வருடாந்திர கணக்காய்வு செய்யப்படாத/ கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.
- திரவத்தன்மை முகாமைத்துவ, மூலதன போதுமாந்தன்மை மற்றும் வெளிநாட்டு நாணய முகாமைத்துவ ஆகியவற்றை மீளாய்வு செய்தது.

ஒழுங்குமுறை இணக்கப்பாடு

- கட்டாய வங்கி மற்றும் ஏனைய சட்டரீதியான தேவைகளுடன் இணக்கத்தை மீளாய்வு செய்தல்.

- ஒழுங்குபடுத்துநர்களால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான பரிசோதனைகளின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

- 2007 ஆம் ஆண்டின் வங்கிச் 11ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரையின் பிரிவு 3(8)(ii)(ஆ) க்கு ஏற்ப வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமாந்தன்மை மற்றும் செயல்திறனை 2023 ஆம் ஆண்டிற்கான உள்ளக கட்டுப்பாட்டு அணிப்பட்டியல் மூலம் மீளாய்வு செய்தது.
- வழக்கமான அடிப்படையில் மற்றும் குறிப்பிட்ட நிகழ்வுகள் அல்லது வழக்குகள் உத்தரவாதம் அளிக்கப்படும்போது, மூல காரண பகுப்பாய்வு நடத்தப்பட்டது மற்றும் அமைப்புகள், நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளில் மேம்பாடுகளைச் செய்தது.

உள்ளக கணக்காய்வு

- செயல்பாட்டின் சுதந்திரம், புறநிலை மற்றும் செயல்திறன் மற்றும் துறையின் வளங்களின் போதுமான தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்தது.
- உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது மற்றும் ஆண்டு முழுவதும் திட்டத்தை செயல்படுத்துவதன் செயல்திறனை மதிப்பாய்வு செய்தது.
- உள்ளக கட்டுப்பாடு கண்காணிப்பு செயல்முறையை மேம்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்வுத் துறை எடுத்துள்ள முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்தை கண்காணித்தல்.
- இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை, கணக்காய்வு சாசனம் மற்றும் கணக்காய்வுக் குழு சாசனம் என்பவை 2007 ஆம் ஆண்டின் வங்கிச் 11ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரையுடனான இணக்கத்தை கண்காணித்தது
- COBIT (தகவல் தொழில்நுட்ப ஆளுகை கட்டமைப்பு) வழிமுறையின் நடைமுறைப்படுத்தலின் மீளாய்வு
- வங்கியின் விசில் பொலவிங் முறைமையை (whistle blowing system) மேம்படுத்துதல், இலங்கை வங்கியின் பிரதான உள்ளக கணக்காய்வுயாளருக்கு நேரடியாக அணுகக்கூடிய பின்னூட்டப் பிரிவின் தகவல் தெரிவிப்பு பிரிவின் கீழ் இலங்கை வங்கியின் இணையவழி வலைப்பக்கத்தின் மூலம் புகார்களை நேரடியாக சமர்ப்பிக்க உதவும்.
- உள்ளக கணக்காய்வு சாசனத்தின் நோக்கத்தை அடைவதற்கும், தற்போதைய சூழலுடன் கட்டமைப்பை பொருத்துவதற்கும் உள்ளக கணக்காய்வுத் துறையின் அமைப்பு கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து திருத்தியது. அதன்படி, புதிய தொழில்முறை பணியாளர்களை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டது.
- வங்கியின் கடன் பட்டியலின் தரத்தை மதிப்பீடு செய்து, கடன் தரத்தை மேம்படுத்த தேவையான பூர்வாங்க வேலைகளை பரிந்துரைத்தது.
- துணை நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வு செயல்பாட்டின் முன்னேற்றத்தை கண்காணித்தல்.
- எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகள், சைபர் பாதுகாப்பு, நன்கொடையாளர் முகவர் நிதியுதவியில் வழங்கப்பட்ட கடன்கள் குறித்து சிறப்பு மீளாய்வுகள் செய்யப்பட்டன.

வெளியகக் கணக்காய்வு


- வங்கியின் வெளியகக் கணக்காய்வு நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு வங்கியின் கணக்காய்வில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு மெசர்ஸ் எர்ன்ஸ்ட் அன்ட் யங், (M/s Ernst & Young) பட்டய கணக்காளர்கள் உதவினர். வெளியகக் கணக்காய்வு திறம்படவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளப்படுவதை குழு உறுதி செய்ததுடன், கணக்காய்வு அணுகுமுறை மற்றும் நடைமுறை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான நல்லுறவைப் பேணியது.
- வெளிப்புற கணக்காய்வுயாளர்களுடன் மூடிய கதவு சந்திப்புகளை (Close door meetings) நடத்தினார்.

முன்னோக்கிய பாதை

2024 மற்றும் அதற்கு அப்பால் கணக்காய்வுக் குழு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு உறுதியளிப்பதன் மூலம் நேர்மறையான மற்றும் பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டுச் சூழலை கணக்காய்வுக் குழு வளர்க்கும்.

குழுவிற்கு அளித்த விலைமதிப்பற்ற பங்களிப்பிற்காக குழுவின் உறுப்பினர்களான திரு. ஏ. சி. மணில்கா பெர்னாண்டோ (தலைவர்) திரு. ஹர்ஷா விஜயவர்தன மற்றும் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்றவர்) ஜி. ஏ. சந்திரசிரி வி. எஸ். வி. ஆகியோருக்கு பாராட்டினை குழு பதிவு செய்ய விரும்புகிறது.

கணக்காய்வுக் குழு சார்பாக.



திரு. நரேஷ் அபேயசேகர

தலைவர்,
கணக்காய்வுச் செயற்குழு

19 பெப்ரவரி 2024

குறிப்பு: சபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதன் மூலம், சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் திரு ஜெஹான் இஸ்மாயில் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழு அறிக்கை

2023இல் செயற்குழுக் கலவை

2023 ஆம் ஆண்டில் செயற்குழுவின் அமைப்பு பின்வருமாறு இருந்தது:

1. **திரு. ஆர். எம். பிரியந்த ரத்நாயக்க**
   தலைவர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பதவி வழி பணிப்பாளர்
2. **திரு ரொனால்ட் சி பெரேரா,** PC
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்
3. **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி. ஏ. சந்திரசிறி** VSV
   உறுப்பினர்/ சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர்*
4. **திரு நரேஷ் அபேயசேகர**
   உறுப்பினர்/ 09.05.2023 அன்று நடைமுறைக்குவரும் வகையில் சுயாதீன நிறைவேற்றுதரம் சாராத பணிப்பாளர் நியமனம்

குறிப்பு

* 07.01.2024 அன்று நடைமுறைக்குவரும் வகையில் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) ஜி. ஏ. சந்திரசிறி VSV இலங்கை வங்கியின் சபையில் தனது பதவிக்காலம் முடிவடைந்தவுடன் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்.

செயற்குழுவின் செயலாளர்

இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர், சட்டத்தரணி மற்றும் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக இருக்கும் ஜானகி எஸ். சிறிவர்தன, குழுவின் செயலாளராக செயல்படுகிறார்.

கிரகமான பங்கேற்பாளர்கள்

- பொது முகாமையாளர்
- பிரதான இடர்நேர்வு அதிகாரி
- பிரதான உள்ளக கணக்காய்வாளர்
- பிரதி பொது முகாமையாளர் (இணக்கப்பாடு)
- பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி

சபை/கூட்டாண்மை முகாமைத்துவ/நிறைவேற்று முகாமைத்துவ வேறு எந்த உறுப்பினரும் குழுவால் அழைக்கப்பட்ட வேறு எந்த ஊழியரும்.

2023 இல் நடைபெற்ற கூட்டங்கள்: 06

(இந்த அறிக்கையின் பக்கம் 116-ல் வருகை கொடுக்கப்பட்டுள்ளது வருகை)

கூட்ட நடப்பெண் — உறுப்பினர்கள்

செயற்குழுவின் வகிபாகம்

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் குறிப்பு விதிமுறைகள் (TOR) குழு சாசனத்தால் நிர்வகிக்கப்படுகின்றன, அவை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

குழு அதன் செயல்பாடுகளின் நோக்கம் மற்றும் உள்ளடக்கம் "இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை" பற்றிய 2007 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அதன் அடுத்தடுத்த திருத்தங்கள் தேவைப்பாடுகளினை பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்துகிறது

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் சாசனத்தில் அடையாளம் காணப்பட்ட பின்வருவனவற்றை மதிப்பாய்வு செய்தல் மற்றும்/ அல்லது பரிந்துரைப்பது இதில் அடங்கும்

- இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் இணக்கம் தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிர்வாகக் குழு சாசனங்கள்.
- பிரதான இடர்நேர்வு அதிகாரி பரிந்துரைத்தபடி கடன், சந்தை, திரவத்தன்மை, செயல்பாடு, தகவல் பாதுகாப்பு மற்றும் பிற இடர்நேர்வு நாட்டத்திற்காக நிறுவும் இடர்நேர்வு வரம்புகள் மற்றும் கொள்கைகள்.
- குறிப்பிட்ட இடர்நேர்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், குழுவால் குறிப்பிடப்பட்டுள்ளபடி அளவு மற்றும் தரமான இடர்நேர்வு வரம்புகளுக்குள் அந்த அபாயங்களை நிர்வகிப்பதற்கும் அனைத்து முகாமைத்துவ நிலை குழுக்களின் போதுமானதன்மை மற்றும் செயல்திறன்.
- வெளிநாட்டு கிளைகள் மற்றும் துணை நிறுவனங்கள் உட்பட வங்கியின் இடர்நேர்வு விவரங்கள் குறித்த இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கைகள், அத்துடன் தற்போதைய சந்தை மற்றும் ஒழுங்குமுறை அபாயங்கள் மற்றும் அத்தகைய அபாயங்களை அடையாளம் காண, அளவிட, கண்காணிக்க மற்றும் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.
- வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகளின் அடிப்படையில் குழுவால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான நிலைகளுக்கு அப்பால் இதுபோன்ற அபாயங்கள் இருந்தால் குறிப்பிட்ட அபாயங்களின் விளைவுகளைத் தணிப்பதற்கான திருத்த நடவடிக்கை.
- கடன், சந்தை, திரவத்தன்மை, செயல்பாடு, தகவல் பாதுகாப்பு மற்றும் இணக்க அபாயங்கள் தொடர்பான இடர்நேர்வு அடையாளம், அளவீடு, கண்காணிப்பு மற்றும் தணிப்பு ஆகியவற்றின் போதுமானதன்மை மற்றும் செயல்திறன்.

பிரதான கவனக்குவிப்பு

இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களுக்கும் அதன் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்ற சபை பூர்த்திசெய்வதற்கு உதவுதல். இது தொடர்பாக இந்தக் குழு கடன், சந்தை, திரவத்தன்மை, செயல்பாட்டு, தகவல் பாதுகாப்பு மற்றும் மூலோபாய இடர்நேர்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் மூலம் மீளாய்வு செய்கிறது.

அறிக்கையிடல் ஊடகம்

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு சபை ஒப்புதல் பெறப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் கவனக் குவிப்பு பரப்புக்களும், நடவடிக்கைகளும்

இடர்நேர்வு எல்லைகள்: இடர்நேர்வு பிரிவு சமர்ப்பித்த இடர்நேர்வு அறிக்கைகள் மூலம் வங்கியின் இடர்நேர்வு விருப்பத்திற்கு குழு ஒப்புதல் அளித்த விதிவிலக்குகளை தொடர்ந்து கண்காணித்தது. வங்கியில் நிறுவப்பட்ட எல்லை முகாமைத்துவ கட்டமைப்பிற்கான விதிவிலக்குகள் அவற்றின் பொருத்தத்தை சரிபார்க்க நிர்வாகத்தால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளுடன் கண்டிப்பாக கண்காணிக்கப்பட்டன.

கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்: வெளிநாட்டு கிளை கொள்கைகள் உட்பட இடர்நேர்வு தொடர்பான அனைத்து கொள்கைகளும் வணிக அல்லது ஒழுங்குமுறை தேவைகளால் கோரப்பட்ட பொருத்தமான மாற்றங்களுடன் சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டன. குறிப்பிட்ட இடர்நேர்வுகள் அல்லது இடர்நேர்வுகளின்

சில அம்சங்களைக் கையாளும் அனைத்து முகாமைத்துவ நிலை செயற்குழுக்களின் குறிப்பு விதிமுறைகளை மீளாய்வு செய்து திருத்தியது. வங்கியின் அனைத்து நிர்வாக அளவிலான செயற்குழுக்களின் செயல்திறன் அந்தந்த நோக்கத்திற்கு எதிராக மதிப்பீடு செய்யப்பட்டு, அவை ஒவ்வொன்றும் அதன் செயற்குழுவின் ஆணையின்படி அதன் பணிகளை மேற்கொள்வதை உறுதிசெய்கின்றன.

திரவத்தன்மை

- வங்கியின் திரவத்தன்மை நிலைமையை நிர்வகிப்பதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது, திரவத்தன்மை நிலை அறிக்கைகள் குறித்து நீண்ட விவாதங்கள் நடத்தப்பட்டன. சவாலான பொருளாதார சூழ்நிலையில் வங்கி நிலையானதாக இருப்பதை உறுதி செய்வதற்காக வழக்கத்திற்கு மாறான மற்றும் புதுமையான உத்திகள், சிறப்பு குழுக்கள் மற்றும் பணிகள் பரிந்துரைக்கப்பட்டன.

- 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சிறப்பு வழிமுறைகள் வங்கியின் திரவத்தன்மை நிலைகளைப் பாதுகாக்கும் வகையில் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

- தேசிய நலனுடன் பணிகளை முடிக்க அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கோரிக்கைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வங்கியின் உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் அதே வேளையில், அவர்களுடன் வணிகத்திற்கு இடமளிப்பதற்கான பொருத்தத்தையும் நம்பகத்தன்மையையும் மதிப்பிடுவதற்காக குழு மூலம் தொடர்ச்சியான பின்தொடர்தல் செய்யப்பட்டது.

- கண்காணிப்பு பட்டியல் வெளிப்பாடுகள்
- கடன் தர உத்தரவாத அலகு மூலம் கடன் மீளாய்வு பொறிமுறையை உறுதி செய்தல்
- ஆரம்ப எச்சரிக்கை சமிக்ஞைகள்

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ச்சி மற்றும் மீளாரம்பிப்பதற்கு ஆதரவளித்தது.
- கடன் வழங்கும் நடவடிக்கைகளில் சூழல் மற்றும் சமூக இடர் மதிப்பீட்டின் வெற்றிகரமான வங்கி அளவிலான படிப்படியான நடைமுறைபடுத்தல்.
- கடன் தர உத்தரவாத அலகுகள் மூலம் ஒப்புதலுக்குப் பின்னய மீளாய்வு செயல்முறையை வலுப்படுத்துதல்.
- கொடுகடன் இடர் முகாமைத்துவக் கொள்கைகளின் விரிவான மீளாய்வு

சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை

நிதி கொடுக்கல்வாங்கல்களின் சூழல் மற்றும் சமூக இடர்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான நடைமுறைகளை கோடிட்டுக் காட்டும் ஒருங்கிணைந்த சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை கொள்கைக்கு ஏற்ப வங்கி தனது சூழல் மற்றும் சமூக இடர் மதிப்பீட்டு வழிகாட்டுதல்களை வெற்றிகரமாக படிப்படியாக நடைமுறைபடுத்தியது. நீடித்து நிலைத்திருக்குந்தன்மையுடைய பசுமை நிதி மற்றும் நிதியியல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கான தயாரிப்புகளின் வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில், வங்கியின் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை என்பது சூழல், சமூக மற்றும் ஆளுகைக் கரிசனைகளுடன் பிணைக்கப்பட்டு அதன் கடன் நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் சூழல் மற்றும் பொருத்தமான சூழல் மற்றும் சமூக ஒழுங்குமுறை தரங்களுடன் பொருந்தக்கூடியவனவாகவும் நாட்டின் ஒழுங்குமுறைகள் மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளுடன் இணக்கமாக இருப்பதை உறுதி செய்கிறது.

இலங்கையின் நிலைபேருடைய நிதி வழிகாட்டலுக்கு ஆதரவாக, இலங்கை வங்கி அதன் கடன் பட்டியலில் தொடர்புடைய காலநிலையுடன் இணைந்த இடர்நேர்வுகள் மற்றும் பசுமை நிதி நடவடிக்கைகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்கிறது. வாடிக்கையாளர்களுக்கு நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான உட்கட்டமைப்பை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம், சூழல் மற்றும் சமூக தொடர்பான உரிய விழிப்புக்கவன நடைமுறைகள் மூலம், இலங்கையில் மேலும் பசுமையான மற்றும் நிலையான பொருளாதாரத்திற்கு பங்களிக்கக்கூடிய வாய்ப்புகளை வங்கி அடையாளம் காண்கிறது.

வாய்ப்புக்கள்

நிதியியல் இடையேற்பாட்டினை மேம்படுத்துதல்
நிதிகளை திறம்பட ஊடுகடத்தும், இடர்களை முகாமை செய்யும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் ஓர் சூழல்முறைமையை உருவாக்கும்.

பசுமை நிதியுதவியை மேம்படுத்துதல்
காலநிலை சவால்களை எதிர்கொள்ளும் போது நிலையான வளர்ச்சியை ஆதரிக்கும் பசுமை நிதி தயாரிப்புகள் மற்றும் கடன் பட்டியலை உருவாக்குதல்.


தனியார் துறைக்கு அதிகரித்த வெளிப்பாடு
நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில் வங்கியின் பட்டியலை மேலும் பன்முகப்படுத்துகிறது.

புத்துயிர் மற்றும் மறுசீரமைப்பு மூலம் சொத்தின் தரத்தை மேம்படுத்துதல்
தொற்றுநோய்க்குப் பின்னரான பொருளாதார நிலைமைகளின் எதிர்மறையான தாக்கங்களைத் தாங்க வணிகங்களுக்கு ஆதரவை வழங்குதல்.


டிஜிட்டல் தழுவல் மூலம் செயல்முறை மேம்பாடு
மாறிவரும் டிஜிட்டல் தழுவல் மூலம் கொடுகடன் முகாமைத்துவ செயல்முறையை மேம்படுத்துதல்.

முக்கிய துறைகளுக்கு நிதியளித்து பொருளாதார அபிவிருத்தியை வசதிப்படுத்தல்
முக்கிய துறைகளுக்கு மூலதன ஒதுக்கீட்டை வசதிப்படுத்துவதற்கு வங்கியின் நிதியியல் வல்லமையை பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தின் மேலும் உள்ளடங்கலான மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய வளர்ச்சியை ஆதரித்தல்.


வங்கியின் எல்லை தாண்டிய வெளிப்படுத்துகை %




பூகோளசார் செறிவு %




துறைச் செறிவு %




பிணையச் செறிவு %



தரம் வாரியான தரமிடல் பரம்பல் %



இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்





சந்தை இடர் என்பது வட்டி விதங்கள், வெளிநாட்டுச் செலாவணி விகிதங்கள், பங்கு விலைகள், பண்டங்களின் விலைகள் மற்றும் பிற தொடர்புடைய நிதியியல் குறிகாட்டிகள் போன்ற சந்தை மாறிகளில் ஏற்படும் பாதகமான அசைவுகளிலிருந்து எழும் நிதி இழப்புகளுக்கான சாத்தியக்கூறுகளைக் குறிக்கிறது.

சந்தை இடர்

சந்தை ஆபத்து என்பது எதிர்பார்ப்பைச் சுற்றியுள்ள பாதகமான மாறுபாடு மற்றும் வட்டி வீதங்கள், செலாவணி விகிதங்கள், பங்கு விலைகள் மற்றும் பண்ட விலைகள் போன்ற மாறிகளில் எதிர்மறையான அசைவுகளின் காரணமாக எழுகிறது. வங்கி புத்தகம் மற்றும் வர்த்தக புத்தகம் மூலம் சந்தை இடர் எழுகிறது மற்றும் பின்வருவனவற்றை உள்ளடக்கிறது:

இடர் வகை	முகாமைத்துவக் கருவிகள் மற்றும் குறிகாட்டிகள்
வட்டி விகித இடர்நேர்வு - வங்கியின் வர்த்தக மற்றும் வர்த்தகம் அல்லாத புத்தகங்களிலிருந்து எழுகிறது	• முதிர்வு பொருத்தமின்மைகள், வட்டி வீத இடைவெளிகள் மற்றும் அடிப்படை புள்ளியொன்றின் விலை மதிப்பு ஆகியவை தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன. • பேரண்டப்பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கங்கள் வழக்கமான அழுத்த சோதனை மூலம் மதிப்பிடப்படுகின்றன. • வட்டி வீத அசைவுகள் மீது அழுத்த சோதனை
வெளிநாட்டுச் செலாவணி இடர் - வெளிநாட்டுச் செலாவணியில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து உருவாகிறது	• ஒப்புதல் வழிமுறைகள், வெளிப்புற ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் வங்கி மற்றும் ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் உள்ளிட்ட கடுமையான உள்ளக கொள்கைகளால் வெளிநாட்டுச் செலவாணி கொடுக்கல்வாங்கல்கள் நிர்வகிக்கப்படுகின்றன. • உள்ளக ரீதியில், இடர் தொடர்பிலான பெறுமதி வரம்புகள் மற்றும் தனிப்பட்ட மற்றும் மொத்த நாணய வெளிப்பாடுகளின் திறந்த நிலைகளுக்கான அளவு வரம்புகளை உள்ளடக்கிய ஒரு விரிவான வரம்பு அமைப்பானது ஏதுநிலைகளை நிர்வகிக்க பயன்படுத்தப்படுகிறது. • சாத்தியமுடைய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு சூழ்நிலைகளில் அழுத்த சோதனை
மூலதன இடர் - மூலதன விலைத் தளம்பல்களிலிருந்தான இழப்புக்கள்	• வங்கியின் முதலீட்டு முடிவுகள் இடர்நேர்வு-வருவாய் இயக்கவியல் குறித்து சபையின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்ய ஓர் பிரத்யேக முதலீட்டுச் செயற்குழு உள்ளது. • சந்தை இடர் பிரிவு மூலதன சொத்துப்பட்டியலின் முறையான நிர்வாகத்திற்கு எல்லை அமைப்பு இருப்பதை உறுதி செய்கிறது. • விரிவான அழுத்த சோதனை

ஆளுகை

சந்தை இடர் முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பாக வழிகாட்டுதல்களை வழங்குவதுடன் சபையானது சந்தை இடரின் அனைத்து அம்சங்களும் நிர்வகிக்கப்படுவதை மேற்பார்வையிடுகிறது. இடர் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கடமைகளை மேற்பார்வையிடுவதில் சபை மட்ட உபசெயற்குழுவாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழு சபையை ஆதரிக்கிறது.

சொத்து மற்றும் பொறுப்பு செயற்குழு மற்றும் முதலீட்டுச் செயற்குழு வங்கியின் சந்தை இடரினை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழுவிற்கு பரிந்துரைகளை வழங்குகிறது.

சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவச் செயற்குழு

- நிதிச் சந்தைகளுடன் தொடர்புடைய சந்தை இடர்ரினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்
- ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்திற்குள் சந்தை இடர் எல்லைகளை பரிந்துரைத்தல் மற்றும் அங்கீகரித்தல்
- பல்வேறு நிறுவன அளவிலான சந்தை இடர் வெளிப்பாடுகளை மேற்பார்வை செய்தல்
- பொருத்தமான விலைக் கட்டமைப்பை பரிந்துரைத்தல்

திறைசேரி நடுத்தர அலுவலகம்/சந்தை இடர் முகாமைத்துவ அலகு

சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் நடுத்தர அலுவலகம் திறைசேரி நடவடிக்கைகளை சுயாதீனமாக மீளாய்வு செய்கிறது.

திறைசேரி நடவடிக்கைகளின் நடுத்தர அலுவலக செயல்பாடுகள் முக்கியமாக சந்தை இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் எல்லை முகாமைத்துவ கட்டமைப்பின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

கொள்கை கட்டமைப்பும் வழிமுறைகளும்

சந்தை இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

வங்கியின் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதுடன் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆளுகை அமைப்பு, உபாயங்கள், இடர்நேர்வை தணிக்கும் கருவிகள் மற்றும் சந்தை இடர்நேர்வை அடையாளம் காணவும், அளவிடவும், நிர்வகிப்பதற்குமான நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.

வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவத் தொழிற்பாட்டின் முக்கிய கூறுகள்

சந்தை இடர் கொள்கைகள்

சந்தை இடர் கொள்கை கட்டமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- சந்தை இடர் முகாமைத்துவ கொள்கை
- எல்லை முகாமைத்துவ கட்டமைப்பு
- வெளிநாட்டுச் செலாவணி இடர் முகாமைத்துவ கொள்கை
- நடுத்தர அலுவலக செயல்பாடுகள் கையேடு

தொழிற்படும் களத்தில் மாறிவரும் இயக்கவியலைக் கருத்திற் கொண்டு கொள்கைகள் தொடர்ந்து சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

இடர் எல்லைகள்

வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலை எல்லைகள், எதிர் தரப்பு எல்லைகள், நிறுத்த இழப்பு எல்லைகள் மற்றும் வணிகர் எல்லைகள் உள்ளிட்ட திறைசேரி மற்றும் முதலீடு தொடர்பான நடவடிக்கைகளுக்கு இடர்கள் எல்லைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த செயல்பாட்டிற்கு சபை இறுதிப் பொறுப்பைக் கொண்டுள்ளது மற்றும் சொத்து மற்றும் பொறுப்புச் செயற்குழுவினால் ஆதரிக்கப்படுகிறது.

சந்தை முன்னேற்றங்களுக்கு ஏற்ப (சொத்து மற்றும் பொறுப்புச் செயற்குழுவின் உள்ளீடுகளுடன்) சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவினால் எல்லைகள் கிரமமாக மதிப்பாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

இடர் கண்காணிப்பு

வட்டி எல்லைகள், வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாடுகள், பங்கு வெளிப்பாடுகள் மற்றும் நிதியிடல் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு குறிகாட்டிகள் மூலம் சந்தை இடர் கண்காணிக்கப்படுகிறது.

இடரில் பெறுமதி, அடிப்படை புள்ளி ஒன்றிற்கு விலை பெறுமதி, காலம், இடைவெளி பகுப்பாய்வு, அழுத்த சோதனை, ஏய்துநிலை பகுப்பாய்வு, மற்றும் தேறிய திறந்த நிலைகள் போன்ற கருவிகளால் கண்காணிப்பு பொறிமுறை ஆதரிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- திறைசேரி நடவடிக்கைகளுக்கான மேலதிக கண்காணிப்பு வழிமுறைகளை செயல்படுத்தியது.

கண்காணிப்பு பொறிமுறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், அறிக்கையிடலை வளப்படுத்துவதற்கும் பல மேலதிகமான இடர் அளவுருக்களை இணைப்பதன் மூலம் கண்காணிப்பு களத்தை விரிவுபடுத்தியது. தினசரி கண்காணிப்பு நடைமுறையில் பின்வரும் இடர் அளவுருக்கள் சேர்க்கப்பட்டுள்ளன:

1. சந்தைக்கு வெளியே உள்ள மாற்று விகிதங்கள்
2. முன்னோக்கிய பரிமாற்ற ஒப்பந்தங்கள் பொருந்தாத எல்லைகள்
3. ஒரு நாளுக்குள் உட்பட்ட திறந்த நிலை எல்லைகள்
4. எதிர் தரப்பினருடனான நிலையான வருமானப் பிணையங்களின் தீர்ப்பனவிற்கு முன்னரான இடர்நேர்வு எல்லைகள்

முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடும் விடய பரம்பலை மேம்படுத்துவதற்காக, தினசரி இடர் அறிக்கையானது மேலதிகமான இடர் அளவுருக்களுடன் செம்மைப்படுத்தப்பட்டது.

- வங்கியின் தேறிய வட்டி எல்லையை மேம்படுத்துவதற்கான இடர் நுண்ணறிவுகளை வழங்குதல்.

வங்கியின் தேறிய வட்டி எல்லையை மேம்படுத்துவதற்கு பின்வரும் விடயங்கள் பரவலாக தீர்க்கப்பட்டன.

1. கொள்கை வீதங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் கடன்களின் கட்டமைப்பிற்கு ஏற்ப வட்டி வீதங்களை சரிசெய்தல்
2. வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய வட்டி வருமானத்தில் கவனம் செலுத்துதல்
3. வட்டி அல்லாத வருமானம் ஈட்டும் சொத்துக்களைக் குறைத்தல்
4. தேறிய வட்டி எல்லையை மேம்படுத்துவதற்கு மாறுபடும் வீதங்கள் பொறிமுறைகளைப் பயன்படுத்துதல்
5. வட்டி வீத இடரினைக் குறைக்க புதிய எல்லை முறைகளைக் கண்டறிதல்
6. நடைமுறைக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு மேம்படுத்துதல்


இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

வாய்ப்புக்கள்

- சந்தையில் புதிய போக்குகளைப் பயன்படுத்தி திரவத்தன்மை மற்றும் இலாபகரத்தன்மையை மேம்படுத்துவதற்கான சில வாய்ப்புகளை வங்கி எதிர்பார்க்கிறது. குறிப்பாக, வட்டி வீதங்கள் குறையும் சூழ்நிலை மற்றும் பொருளாதாரத்தில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை படிப்படியாக மேம்படுதல். ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் சில்லறை வெளிநாட்டுச் செலாவணி மாற்றங்கள் போன்ற அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் மூலம் மேம்பட்ட செலாவணி ஆதாயங்களுடன் வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களுடன் சிறந்த எல்லை இலாபங்கள் கொண்டிருக்க சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவப் பொறிமுறைகளை சீரமைப்பதற்கான வாய்ப்பு வங்கிக்கு உள்ளது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உணர்திறன் பகுப்பாய்வு டிசம்பர் 2023


%




நிதியிடல் பகுப்பாய்வு

%

2023




2022






PVBP திறைசேரி முறி


ரூபா



சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி பகுப்பாய்வு - டிசெம்பர் 2023

%





திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது வங்கியின் நிதிக் கடமைகளை உரிய நேரத்திற்கு பூர்த்தி செய்வதற்கான இயலாமை காரணமாக வருவாய் மற்றும்/அல்லது மூலதனத்திற்கு சாத்தியமான இழப்புகளை உள்ளடக்கியது. வங்கியின் திரவத்தன்மை இடர் கட்டமைப்பு அன்றாட திரவத்தன்மை இடரை செயற்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கும், எதிர்பாராத திரவத்தன்மை நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதில் வங்கியின் மீண்டெழுந்தன்மையை உறுதி செய்கிறது.

சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவச் செயற்குழு

- ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் உள்ளக இலக்குகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக திரவத்தன்மை பகுப்பாய்வை தொடர்ந்து கண்காணித்தல்
- நிகழத்தக்க திரவத்தன்மை திட்டத்தை உருவாக்குவது
- திரவத்தன்மை பற்றாக்குறைகள் மற்றும் மாற்று நிதியிடல் ஏற்பாடுகளைக் குறைப்பதற்கான வழிகளை ஆராய்தல்
- தொடர்புடைய இடர் ஏற்பு வரம்புகளை பரிந்துரைத்தல்
- அழுத்த சோதனை மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்

கொள்கை கட்டமைப்பு மற்றும் செயல்முறையியல்

திரவத்தன்மை இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

திரவத்தன்மை கொள்கைகள்

திரவத்தன்மை இடர் முகாமைத்துவம் மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் போன்ற கொள்கைகள் திரவத்தன்மை இடர் வெளிப்பாடுகளை நிர்வகிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள், கருவிகள் மற்றும் அழுத்த பரீட்சிப்பு செயல்முறைகளை குறித்த வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

திரவத்தன்மை அளவீடு

பாய்ச்சல் அணுகுமுறை:
எதிர்வுகூறப்பட்ட/ உண்மையான உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை நேர அடிப்படையாக வகைப்படுத்தி மதிப்பாய்வு செய்தல்.

நிதி அணுகுமுறை:
திரவ சொத்துக்கள் விகிதம், திரவத்தன்மை காப்பீடு விகிதம், தேறிய நிலையான நிதியிடல் விகிதம் மற்றும் வைப்புத்தொகைக்கு கொடுகடன் விகிதம் போன்றவற்றின் மூலம் திரவத்தன்மை நிலையை அளவிடுகிறது.

நிகழத்தக்க நிதியிடல் திட்டம்

திரவத்தன்மை நெருக்கடி நிலை ஏற்பட்டால் வியாபார தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான பொறுப்புகளுடன் குறிப்பிட்ட தூண்டுதல்கள் மற்றும் செயல் திட்டங்களை இந்த திட்டம் வரையறுக்கிறது.

ஆளுகை

திரவத்தன்மை முகாமைத்துவ உபாயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் ஒப்புதல் மற்றும் மீளாய்வு செய்வதை சபை மேற்பார்வையிடும் அதே வேளையில் அதன் பிரதிநிதித்துவ உபசெயற்குழுவான ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழுவானது திரவத்தன்மை இடர் முகாமைத்துவத்தின் மேற்பார்வையில் சபைக்கு ஆதரிக்கிறது.

வங்கியின் திரவத்தன்மை கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் பொறுப்பான நிர்வாகக் குழுவாக சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவச் செயற்குழு தேவையான மதிப்பீடுகளை மேற்கொண்டு, தொடர்புடைய இடர் விருப்ப வரம்புகள் குறித்து ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழு பரிந்துரைகளை வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணம் உள் அனுப்புதல்களின் விளைவாக வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நிலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- முன்னுரிமைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மூலம் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை கடுமையாக நிர்வகித்தல்.
- நடைமுறை கணக்கு சேமிப்பு கணக்குகளை மேம்படுத்துதல்

வாய்ப்புக்கள்

- சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை படிப்படியாக மேம்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில் வெளிநாட்டு நாணய வைப்புகளை திரட்டுவதற்கான வாய்ப்புகளை வங்கி கொண்டுள்ளது.
- பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவதால் திரவத்தன்மை அழுத்த சூழ்நிலைகளைக் கையாள அதிக கடன் பெறும் வாய்ப்புகளை உருவாக்குகிறது.
- வங்கியின் நிகழத்தக்க நிதியிடல் திட்டம் திரவத்தன்மை நெருக்கடி நிலைகளை குறைக்க உதவும்

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்



தொழிற்பாட்டு இடர்

போதுமற்ற அல்லது தோல்வியுற்ற உள்ளக செயல்முறைகள், பணியாளர்கள் மற்றும் முறைமைகள் அல்லது இயற்கை பேரழிவுகள் போன்ற வெளிப்புற நிகழ்வுகளின் விளைவாக ஏற்படும் இழப்பு இடரானது தொழிற்பாட்டு இடர் என்று வரையறுக்கப்படுகிறது. பொருண்மையான தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், அளவிடுதல், முகாமைத்துவம் செய்தல், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை ஆதரிக்கும் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம் கட்டமைப்பால் வங்கியின் தொழிற்பாட்டு இடர் முகாமைத்தவம் வழிநடத்தப்படுகிறது.

ஆளுகை

வங்கிக்குள் தொழிற்பாட்டு இடரை திறம்பட முகாமைத்துவம் செய்வதை உறுதி செய்வதில் சபை முதன்மையான பொறுப்பினை வகிக்கிறது. வங்கியின் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்குழு பொறுப்பாகும் அதே நேரத்தில் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பான கடமைகளை மேற்பார்வையிடுவதன் மூலம் சபைக்கு துணை புரிகின்றது.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு மற்றும் மாகாண தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவச் செயற்குழு மூலம் இடர் அடையாளம் காணப்படுகிறது மற்றும் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. மோசடி இடர் முகாமைத்துவச் செயற்குழு மற்றும் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ அலகு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ செயற்குழுவுக்கு அறிக்கையினை சமர்ப்பிக்கிறது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாத்துவ நிறைவேற்றுச் செயற்குழு

முக்கிய பொறுப்புகள்

- வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பாக அதன் சட்டரீதியான கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்ற ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ செயற்குழுக்கு உதவுகிறது
- தொழிற்பாட்டு இடர் மூலோபாயம் மற்றும் கொள்கை அபிவிருத்தி மற்றும் மீளாய்வு
- பொருத்தமான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பு இருப்பதை மேற்பார்வை மற்றும் உறுதி செய்தல்
- தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான கட்டுப்பாடுகள்/தணிப்புகளை கலந்துரையாடி பரிந்துரைத்தல்
- தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகள் மற்றும் அருகிலுள்ள தவறுகளை பதிவு செய்வதற்கான ஒரு பொறிமுறை இருப்பதை உறுதி செய்தல் மற்றும் நியாயமான நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்தல்
- வெளிப்புற செயல்பாட்டு சூழலில் முன்னேற்றங்களுக்கு ஒத்திசைவான மற்றும் நிலையான பதில்களை உருவாக்குதல்
- திணைக்களங்களுக்கு இடையிலான மற்றும் வணிகங்களுக்கிடையிலான அலகுகளுக்கு ஒருங்கிணைந்த பதில்கள்
- தொழிற்பாட்டு இடர் செயல்முறைகள் மற்றும் கருவிகளின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலை மீளாய்வு செய்து ஒப்புதல் அளித்தல்

மோசடி இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு

முக்கிய பொறுப்புகள்

- மோசடிகள் மேற்கொள்வதனை ஏற்படுத்தும் முறைமை ரீதியான இடைவெளிகள் ஏதேனும் இருந்தால் அடையாளம் கண்டு, மோசடிகளைச் சரிசெய்ய ஏதேனும் நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்
- இடரினை கண்டறிந்து வங்கியின் உயர் நிர்வாகத்திற்கு அறிக்கை அளிப்பதில் ஏதேனும் தாமதம் இருந்தால் இது ஏற்படுவதற்கான காரணங்களை அடையாளம் காணுதல்
- மோசடி தொடர்பான அனைத்து நிகழ்வுகளிலும் அனைத்து மட்டங்களிலும் ஊழியர்களின் பொறுப்புக்கூறல் ஆராயப்படுவதை உறுதி செய்தல் மற்றும் தேவைப்பட்டால் ஊழியர்களின் பக்க நடவடிக்கை, நேரத்தை இழக்காமல் விரைவாக முடிக்கப்படுவதை உறுதி செய்தல்
- வங்கி/சிஜடி/காவல்துறை விசாரணை மற்றும் மீட்பு நிலையின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்
- மோசடிகள் மீண்டும் நிகழாமல் தடுக்க எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல், உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்
- மோசடிகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த பொருத்தமானதாகக் கருதப்படும் வேறு எந்த நடவடிக்கைகளையும் பரிந்துரைத்தல்

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவு

முக்கிய பொறுப்புகள்

- வங்கியின் அனைத்து தொழிற்பாட்டு இடர் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் கூறப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதை நோக்கி செயல்படுதல். தொழிற்பாட்டு இடர் தொடர்பான அனைத்து கொள்கைகளையும் வகுத்தல் மற்றும் காலக்கெடுவிற்கு ஏற்ப அவற்றின் மதிப்பாய்வை உறுதி செய்தல்
- இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு, முக்கிய இடர் குறிகாட்டிகள், இழப்பு தரவு முகாமைத்துவம் போன்ற தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பான கருவிகளை செயல்படுத்துதல் மற்றும் மேம்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் குறைந்த இடர் ஆகியவற்றின் இலக்குகளை நோக்கி செயல்படுதல்
- இடர் தணிப்புக்கான தயாரிப்பு/செயல்முறை மீளாய்வுகள்
- தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வங்கியின் ஊழியர்களுக்கு வழக்கமான பயிற்சிகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய மனிதவளத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

கொள்கை கட்டமைப்பும் செயல்முறையியலும்

கருவிகள் மற்றும் பொறிமுறைகள்

கொள்கை கட்டமைப்பு

முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

- தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கொள்கை
- மோசடி இடர் முகாமைத்துவ கொள்கை

தொழிற்பாட்டு இடர்களை அடையாளம் காண்பது, மதிப்பீடு செய்வது, தணிப்பது மற்றும் கண்காணிப்பது ஆகியவற்றில் பொறுப்புகள், கருவிகள் மற்றும் நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்கள் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன.

இடர்நேர்வு அடையாளம் மற்றும் அளவீடு

வங்கியின் இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு கட்டமைப்பு வணிக நோக்கங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றிலிருந்து எழக்கூடிய தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அடையாளம் காண உதவுகிறது. அந்த இடர்நேர்வுகள் மீதான கட்டுப்பாட்டு செயல்திறன் முக்கியமான வணிக அலகுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

முக்கிய இடர்நேர்வு குறிகாட்டிகள், உள்ளக இழப்பு தரவு, சம்பவ அறிக்கையிடல் மற்றும் மூல காரண பகுப்பாய்வு ஆகியவை தொழிற்பாட்டு இடர்களுக்கான வெளிப்பாட்டை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படுகின்றன.

அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு

தொழிற்பாட்டு ஆபத்து நிகழ்வுகள்/இழப்புகள் மற்றும் தொடர்ச்சியான தோல்விகள் குறித்து ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்குழு மற்றும் சபை கிரமமாக புதுப்பிக்கின்றன.

தொழிற்பாட்டு இழப்புகள் மற்றும் சம்பவங்களின் தரவுத்தளத்தையும் வங்கி பராமரிக்கிறது, இது தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் மற்றும் மூல காரணங்களின் போக்குகளை அடையாளம் காண அனுமதிக்கிறது. நிறுவன அளவிலான இடர்நேர்வு வெளிப்பாடாக, ஊழியர்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிப்பதன் மூலம் இடர்நேர்வு உணர்வுள்ள கலாச்சாரத்தை வளர்க்க வங்கி முயற்சிக்கிறது.

தணிப்பு

1. வலுவான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு
2. அனைத்து முக்கியமான வணிக அலகுகள் மற்றும் ஆதரவு செயல்பாடுகளுக்கான வணிக தொடர்ச்சித் திட்டங்கள்
3. அதிநவீன பேரிடர் மீட்பு மையம்
4. விரிவான காப்பீட்டு பாதுகாப்பு
5. மேம்பாடுகளுக்கான செயல்முறை மதிப்பீடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது
6. இடர் குறித்த விழிப்புணர்வுக்கான கலாச்சாரத்தை உருவாக்குதல்

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- வங்கியின் உலகளாவிய செயல்பாடுகளில் சாத்தியமான இடர்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு குறைப்பதற்கான சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் தொடர்ச்சியான முயற்சிகளின் கீழ் பொருத்தமான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பு இருப்பதை உறுதி செய்வதற்காக ஓர் விரிவான கேள்வித்தாளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு கிளைகளின் இடர் மதிப்பீட்டு செயல்முறையை வலுப்படுத்தியது.
- வங்கியில் உள்ள முக்கியமான அலகுகளில் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு மூலம் மேம்படுத்தப்பட்ட செயல்முறை கட்டுப்பாடுகள், முகாமைத்துவ மேற்பார்வையை எளிதாக்கும், வள பயன்பாட்டை மேம்படுத்தும் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடர் மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒரு தரநிலையை உறுதி செய்கிறது.
- மாகாண நிறுவன இடர் முகாமைத்துவ செயற்குழுவின் திறமையான செயல்பாட்டை பூர்த்தி செய்யும் கிளை இடர் மதிப்பீட்டின் சரிபார்ப்பு பட்டியலை மீளாய்வு செய்து மேம்படுத்தியது.
- ஒரு புதிய தயாரிப்பு/செயல்முறையை அறிமுகப்படுத்தும்போது இடர்நேர்வு நோக்கினை வழங்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள தயாரிப்புகள்/செயல்முறைகளை மீளாய்வு செய்தல்.
- அனைத்து நிலை ஊழியர்களுக்கும், குறிப்பாக முகாமையாளர்கள் மற்றும் இழப்பு நிகழ்வுகளை தடுப்பதில் கவனம் செலுத்தும் உள்ளக கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ள "tv Boc" திறம்பட பயன்படுத்தப்படுகிறது.
- வங்கி முழுவதும் புதுப்பிக்கப்பட்ட சுற்றறிக்கைகள்: எட்டு தசாப்தங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட வங்கியாக வங்கி அளவிலான சுற்றறிக்கைகளை புதுப்பிக்க சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் பிற பங்காளர்களின் பின்னூட்டங்கள் மற்றும் பகுப்பாய்வுகளுடன் வியாபாரப் செயன்முறை மறுசீரமைப்பு செயற்திட்டப் பிரிவு ஓர் சிறப்பு பணியை மேற்கொள்கிறது.

வாய்ப்புகள்

- **தானியக்கப்படுத்தலை உந்துவதற்கான திட்டங்களைத் தொடங்குதல்:**

  கண்காணிப்பு பொறிமுறையின் தானியக்கப்படுத்தல் 24 மணி நேர தரவைச் சேகரித்து, அறிக்கைகளை தானாக நிரப்புவது விரிவான பகுப்பாய்வு மற்றும் இதற்கு முன்பு கவனிக்கப்படாத செயல்முறைகளில் உள்ள சிக்கல்களை அடையாளம் காண உதவுகிறது. இது பெரும்பாலான மனித பிழைகளை செயல்முறைகளிலிருந்து அகற்ற உதவுகிறது.

- **மேம்பட்ட கட்டுப்பாட்டு சூழல்**


  மேம்பட்ட கட்டுப்பாட்டு சூழல் செயல்முறைகள் இணக்கமாக மட்டுமல்லாமல், குறிப்பாக டிஜிட்டல் மாற்றத்தின் பயணத்தில் செயற்றிறனானதாக இருப்பதை உறுதி செய்கிறது. உள்ளக சுற்றறிக்கைகள் ஊழியர்களுடன் தொடர்புகொள்வதற்கான மிகவும் பயனுள்ள வழியாகும் என்பதுடன் வங்கி அளவிலான சுற்றறிக்கைகளை மறுசீரமைப்பது வங்கி முழுவதும் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை நெறிப்படுத்தும்.

- **பயிற்சி மற்றும் விழிப்புணர்வு**


  திறம்பட செயல்படும் பயிற்சித் திணைக்களம், நன்கு பொருத்தப்பட்ட மையப்படுத்தப்பட்ட பயிற்சி நிறுவனம் மற்றும் வங்கிக்கு சொந்தமான உள்ளக தொலைக்காட்சி அலைவரிசை ஆகியவை ஊழியர்களின் வளர்ச்சியை பல வழிகளில் பூர்த்தி செய்கின்றன. ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும், வங்கியின் கலாச்சாரத்தை மேம்படுத்துவதும் பணி செயல்திறன் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட செயல்பாட்டு சூழலை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் ஒன்றாகும்.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

2023ஆம் ஆண்டிற்கான நட்ட நிகழ்வு சம்பவ வகையின் பரம்பல் %



இடர் ஏற்புக்கு எதிராக உண்மை இழப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள் ரூ. மில்லியன்



தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப இடர்

தகவல், தரவு மற்றும் பணம் இழப்பு அல்லது திருடப்படும் அபாயம் அல்லது வங்கிக்குள் தகவல் தொழில்நுட்பத்தின் தழுவலினால் ஏற்படும் சேவை இடையூறு ஆகியவை தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப இடர்நேர்வில் அடங்கும். சைபர் தாக்குதல்கள், ஃபிஷிங் மோசடிகள் மற்றும் இரன்சம்வெயர் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றனதனால் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, வாடிக்கையாளர் தரவு பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு மீண்டெழுந்தன்மைக்கு குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்துகிறது. இந்த அச்சுறுத்தல்களை முன்கூட்டியே எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்ட வங்கி, அதன் டிஜிட்டல் பாதுகாப்புகளின் மேம்படுத்தலின் மீது தொடர்ந்து முதலீடு செய்தது.

ஆளுகை

கூட்டாண்மை தகவல் பாதுகாப்புக் குழு

- தகவல் பாதுகாப்பு முன்னெடுப்புக்களுக்கு முகாமைத்துவ திசையையும் ஆதரவையும் வழங்குதல்
- வணிக நோக்கங்களுக்கு ஏற்ப தகவல் பாதுகாப்பு நோக்கங்கள் மற்றும் திட்டங்களை நிறுவுவதை உறுதி செய்தல்
- தகவல் பாதுகாப்புக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்
- இலங்கை வங்கியில் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வை பராமரிக்க தகவல் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் மென்பொருட்களை மதிப்பாய்வு செய்து தெரிவிப்பது
- பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரிக்கு வழிகாட்டுதல்
- பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் மேற்பார்வையிடுதல் மற்றும் இலங்கை வங்கியில் ஒட்டுமொத்த தகவல் பாதுகாப்பை இயக்குதல்.

தகவல் பாதுகாப்பு அலகு-முக்கிய செயல்பாடுகள்

- வங்கி மற்றும் வெளிநாட்டு கிளைகளின் தகவல் பாதுகாப்புக் கொள்கையை மேம்படுத்துதல், பேணுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்
- ஒட்டுமொத்த செயல்பாடுகள் மற்றும் தயாரிப்புகள் குறித்த விரிவான இடர் மதிப்பீடுகள்
- தகவல் பாதுகாப்பு சம்பவங்களின் முகாமைத்துவம்
- தற்போதைய தகவல் பாதுகாப்பு உட்கட்டமைப்பில் மேம்பாடுகள்
- சட்ட/ஒழுங்குமுறை தேவைகள்/ தரங்களுடன் இணக்கம்
- பல்வேறு வழிகள் மூலம் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடையே தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வை வலுப்படுத்துதல்
- வங்கியின் பாதுகாப்புத் தேவைகளுக்கு தயாரிப்புகள் இணங்குவதை உறுதி செய்வதற்காக கொள்முதல் தொடர்பான கூட்டங்களில் பயனாக இருப்பது

தகவல் தொழில்நுட்ப இடர் அலகு-முக்கிய செயல்பாடுகள்

- கணினி தேவைகள், புதிதாக உருவாக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் தற்போதுள்ள அமைப்புகளுக்காக செய்யப்பட்ட மாற்றங்களின் இடரினை மதிப்பீடு செய்தல்
- வெளிநாட்டு கிளைகள் உட்பட வங்கியின் தகவல் தொழில்நுட்ப இடர் கொள்கையை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் செயல்படுத்துதல்
- தகவல் தொழில்நுட்ப ஆளுகைக் கொள்கைகளை வலுப்படுத்துதல்

கொள்கைகள்

- தகவல் பாதுகாப்புக் கொள்கை
- சைபர் பாதுகாப்புக் கொள்கை
- உணர்திறன் முகாமைத்துவக் கொள்கை
- தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை
- வெளிநாட்டு கிளைகள் சைபர் பாதுகாப்புக் கொள்கைகள், தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்

2023இல் முக்கிய அபிவிருத்திகள்

- ஏற்கனவே நடைமுறையில் இருந்த தகவல் பாதுகாப்புக் கொள்கைக்கு மேலதிகமாக, வங்கி சைபர் பாதுகாப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியது
- தலைமை இடர்நேர்வு அதிகாரியின் தலைமையின் கீழ் கொபிட் 2019 கட்டமைப்பை செயல்படுத்தத் தொடங்கியது. தற்போதுள்ள கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகளை வங்கியின் ஒட்டுமொத்த மூலோபாயத்துடன் சீரமைத்து, தகவல் பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றின் நிர்வாகத்தை வலுப்படுத்தும் இந்த உலகளாவிய ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆளுகை கட்டமைப்பை ஏற்றுக்கொண்ட இலங்கையின் முதல் வங்கி நாங்களாவோம்.
- ISO 27001 உடன் இணங்கும் விதமாக இடர்நேர்வு மதிப்பாய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டன.

- 2022 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டவாக்கத்திற்கு இணங்கும் வகையில் தரவு பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டார்.
- கடுமையான தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நடத்தப்பட்டது.

வாய்ப்புக்கள்

- தகவல் தொழில்நுட்ப ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்த ஓர் தரவு பாதுகாப்பு பிரிவை நிறுவுதல்
- எங்கள் தயாரிப்பு வரம்பையும் வாடிக்கையாளர் அணுகலை விரிவுபடுத்த பின்டெக் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட சேவை வழங்குநர்களுடன் கூட்டமைப்பு
- சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கொபிட் 2019 கட்டமைப்புடன் செயல்முறைகள் மற்றும் கட்டமைப்புகளை சீரமைத்தல்

மூலோபாய இடர்

வங்கியின் எதிர்கால வணிகத் திட்டங்களில் சாத்தியமான குறைபாடுகள் மற்றும் உத்திகளின் போதாமையினால் ஏற்படும் சாத்தியமுடைய இழப்புகள் இதில் அடங்கும். வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வங்கியின் மூலோபாயத்தை செம்மைப்படுத்த சரியான பதிலளிப்பு திட்டங்களை உருவாக்குவது மூலோபாய இடரை முகாமைத்துவம்செய்ய அவசியமாகும்.

வங்கியின் மூலோபாய வழிகாட்டல் மற்றும் அதன் பரந்த ரீதியான நோக்கு மற்றும் குறிக்கோளால் வழங்கப்படுகிறது, இது குறிப்பிட்ட அளவிடக்கூடிய கால வரையறைகளுடன் உள்ள இலங்கை வங்கியின் கூட்டாண்மை திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்படும் சூழல் மற்றும் பங்காளர்களின் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு பணிப்பாளர் சபையின் வழிகாட்டுதலுடன் கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அணியின் ஈடுபாட்டுடன் வங்கியின் மூலோபாய திட்டமானது மேலும் விருத்திசெய்யப்பட்டது. செயல்திறனின் தொடர்ச்சியான கண்காணிப்பு வரையறுக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகிறதுடன் மூலோபாய இடர் வெளிப்பாடுகளை அளவிட விரிவான புள்ளிவிபர பதிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- வங்கியின் மூலோபாய திட்டம் ஐந்து ஆண்டு கால எல்லைக்கு உருவாக்கப்பட்டது இது மூலோபாய வழிகாட்டலை தீவிரப்படுத்துவதுடன் அதன் பங்காளர்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பரந்த அளவிலான திட்டத்தை உருவாக்க வங்கிக்கு உதவுகிறது. பெருநிறுவன மூலோபாய மறுஆய்வுக் குழுவால் நியமிக்கப்பட்ட ஓர் சிறப்புக் குழு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு வங்கியின் வணிக மாதிரியை மாற்றியமைப்பதற்கான மாற்றங்களை ஆய்வு செய்தது.

வாய்ப்புகள்

- வங்கியின் சொத்து தர இலக்குகளை பூர்த்தி செய்யும் வகையில் எதிர்தரப்பினரின் கடன் கடமைகளை பூர்த்தி செய்தலை நாணயக் கொள்கை தளர்த்தினால் ஆதரிக்கப்பட்ட பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சிக்கு உதவுகிறது. பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மறுசீரமைப்பு செயல்முறைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்ச்சியான ஆதரவுடன் மீள் மூலதனமயமாக்கல் இலக்குகள் அடையப்படும்.

மனித வள இடர்நேர்வு

தொடர்ச்சியான சவாலான பொருளாதார சூழல் மற்றும் சமூக-அரசியல் நிலைமைகள் வங்கியின் மனித மூலதனத்தில் நெருக்கடி நிலையை ஏற்படுத்தி இதன் விளைவாக அதிக ஊழியர் புரள்வு மற்றும் திறமைகளின் கையகப்படுத்தல் ஆகியவையிற்கு சவாலாக உள்ளன. இந்த சூழலில், ஊழியர்களின் நல்வாழ்வு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி மீது அதிக கவனம் செலுத்தியதுடன் வங்கியின் ஊழியர்களை உகந்த முறையில் செயல்பட வலுப்படுத்தவும் இயலச்செய்யவும் அவர்களினது செயல்திறனின் அங்கீகரித்தல் மற்றும் வெகுமதி அளித்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்தது.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- முகாமைத்துவ பயிலுனர்கள் மற்றும் பதவிநிலை உதவியாளர்களின் புதிய நியமனங்கள் மூலம் திறமை கையகப்படுத்தலை வங்கி முகாமைத்துவம் செய்தது
- புதிய மனித வளம் தொடர்பான கொள்கை கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மனித மூலதன முகாமைத்துவத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தற்போதுள்ள கொள்கைகளை மீளாய்வு செய்தல்
- தொடர்ச்சியான பணியாளர் மேம்பாட்டுத் திட்டங்கள்
- சேவை அளவில் ஏதேனும் குறைப்புக்கள் இல்லாத வகையில் நெகிழ்வான வேலை நேரத்தை செயல்படுத்த வங்கிக்குள் தொலைதூர வேலை ஒழுங்குகளின் முன்னோடிப் பரீட்சிப்பு வெற்றிகரமாக இருந்தது
- பணியாளர் ஆடை விதிகளில் நெகிழ்வுத்தன்மையானது மனித மூலதன முகாமைத்துவ வரலாற்றில் ஓர் முக்கிய மைல்கல்லாகும்.

ஒழுங்குமுறை மற்றும் இணக்கப்பாட்டு இடர்

வங்கி நடவடிக்கைகளை நிர்வகிக்கும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில்துறை தரங்களுக்கு இணங்கத் தவறுவதால் ஒழுங்குமுறை மற்றும் இணக்கப்பாட்டு இடர் எழுகிறது. 2023 ஆம் ஆண்டில், ஒழுங்குபடுத்துநர்களுடன் நெருக்கமான மற்றும் செயலூக்கமான ஈடுபாட்டின் மூலம் முன்மதியுடைய ஒழுங்குமுறைகள், பணமோசடி தடுப்பு தேவைகள், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் சர்வதேச தரநிலைகள் உள்ளிட்ட சிக்கலான ஒழுங்குமுறைச் சூழலுக்கு மத்தியில் வங்கி தொடர்ந்து முன்னேறியது.

வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் சகல இணக்கப்பாட்டையும் ஒரு பிரத்யேக இணக்கப்பாட்டு அலகு கண்காணிக்கிறது. இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத்தினை ஒரு விரிவான இணக்கக் கொள்கை நிர்வகிக்கிறது. தொடர்ச்சியான நாடளவிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு கிளைகள் உள்ளிட்ட தள இணக்க மதிப்பீடுகள் ஒழுங்குமுறை மற்றும் இணக்கப்பாட்டு இடரினை திறம்பட நிர்வகிப்பதை உறுதி செய்கின்றன.

இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- இணக்கம் தொடர்பான அறிக்கையிடல் தேவைகளுக்காக நடைமுறைபடுத்தப்பட்ட முறைமை முன்னேற்றங்கள்
- நாடு முழுவதும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியது
- தளத்தில் இணக்க மதிப்பீடு

பருவநிலை இடர்

இயற்கை பேரழிவுகள் மற்றும் நீண்டகால பருவநிலை தழுவல்கள் மற்றும் தீர்வுகளை செயல்படுத்தத் தவறியது உள்ளிட்ட பருவநிலை தொடர்பான இடர்கள் என்பவை வங்கி மற்றும் அதன் பங்காளர்கள் எதிர்கொள்ளும் சில முக்கிய இடர்நேர்வுகளில் ஒன்றாகும்.

பருவநிலை இடரை நிவர்த்தி செய்வதற்கு, பருவநிலை கரிசனைகளை எமது இடர் முகாமைத்துவ கட்டமைப்புகள், மூலோபாய திட்டமிடல் செயல்முறைகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் நடைமுறைகளில் ஒருங்கிணைக்க வேண்டும். பருவநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை மதிப்பிடுவது மற்றும் வெளிப்படுத்துவது, இடர் தணிப்பு உபாயங்களை செயல்படுத்துவது மற்றும் நீடித்து நிலைத்திருக்குந்தன்மையுடைய நிதி மீண்டெழுந்தன்மையை கட்டியெழுப்பும் முயற்சிகளை ஊக்குவிக்க பங்குதாரர்களுடன் கலந்துரையாடுவது என்பவை இதில் உள்ளடங்கும். பருவநிலை இடரினை முன்கூட்டியே முகாமைத்துவம் செய்வதன் மூலம், இலங்கை வங்கி அதன் மீளெழுந்தன்மையை மேம்படுத்துவதையும், நிதி கரிசனைகளை பாதுகாப்பதையும், குறைந்த கார்பன், பருவநிலை சார்ந்த மீண்டெழுந்தன்மையுடைய பொருளாதாரத்திற்கு மாறுவதற்கு பங்களிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதான நிதியியல் அதிகாரிக்குக் கீழ் ஒரு பிரத்தியேக அலகு அமைக்கப்பட்டு வங்கியின் சூழல், சமூக மற்றும் ஆளுகை அம்சத்தை நிர்வகிக்க ஒரு உதவி பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பருவநிலை இடர் முகாமைத்துவத்தின் அடிப்படையில் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பெறுமதிச் சங்கிலியின் ஒவ்வொரு நிலையிலும் வங்கியின ஒப்பியபொறுப்பை விரிவுபடுத்துவதன் மூலம், வங்கியின் சூழல், சமூக மற்றும் ஆளுகை கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் சுற்றுசூழல் மற்றும் சமூக அனுமதி வழங்குவதற்காக ரூ. 25 மில்லியனுக்கும் அதிகமான கடன் வசதிகளை முன்மதியாகவும் கவனமாகவும் மதிப்பீடு செய்கிறது.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- 52 கிளைகளை சூரிய சக்தி பயன்பாட்டுடையதாக மாற்றியது. வங்கிக்குச் சொந்தமான அனைத்துக் கட்டிடங்களும் 2024க்குள் மாற்றப்படும்
- வங்கியின் கடன் பட்டியலின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமையை நாடு முழுவதும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல்.
- சூழல் மற்றும் சமூகக் கரிசனைகளை உள்ளடக்கிய முதலீட்டு பகுப்பாய்வு தொடர்பில் ஓர் பரந்த அணுகுமுறையை உருவாக்க சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமையில் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டது.

வாய்ப்புகள்

- நிலையான கடன் வழங்கும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்
- சர்வதேச நிதியிடல் நிறுவனங்களுடன் தொடர்புடைய வங்கி உறவுகளை வலுப்படுத்துதல்

சட்டரீதியான மற்றும் நன்மதிப்பு இடர்

ஒழுங்குமுறை/சட்டரீதியான விதிகளுக்கு இணங்காதமை, சட்ட நடவடிக்கைகளால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மை அல்லது தொடர்புடைய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் பொருந்தக்கூடிய தன்மை அல்லது விளக்கத்தில் நிச்சயமற்ற தன்மை மற்றும் வங்கியின் நிதி மற்றும் செயல்பாட்டு நிலை குறித்த பங்காளர்களின் எதிர்மறையான கருத்து ஆகியவற்றால் ஏற்படும் வருவாய் இழப்புகள் மற்றும் நன்மதிப்புக்கு ஏற்படும் சேதம் ஆகியவை சட்ட மற்றும் நன்மதிப்பு இடர்நேர்வு ஆகும்.

2023 ஆம் ஆண்டில் முக்கிய அபிவிருத்திகள்

- ஒரு தனி வாடிக்கையாளர் முறையீட்டினை கையாளுதல் பிரிவை நிறுவுவதன் மூலம் வாடிக்கையாளர் முறையீடுகளை கையாளுதல் செயல்முறையை வலுப்படுத்துதல்.
- சமூக ஊடகங்களின் அதிகரித்த பயன்பாடு நன்மதிப்பு எய்துவதை விரிவுபடுத்தியுள்ளது. சமூக ஊடக பதில் கையாளுதலுக்காக ஒரு தனி அலகு நிறுவப்பட்டு சமூக ஊடகங்களில் வங்கி தொடர்பான எதிர்மறையான கருத்துக்களை நிர்வகிப்பதிற்கு வெற்றிகரமாக பங்களித்துள்ளது.

வாய்ப்புக்கள்

- இலங்கை மத்திய வங்கியின் நிலைபேறுதன்மைக்கான வழிகாட்டலுடன் இணங்குவதற்கான தொடர்ச்சியான முயற்சி, வங்கி சுற்றுச்சூழலுக்கு சாதகமான கூட்டாண்மை சமூக பொறுப்பு திட்டங்களை மேற்கொண்டு இது வங்கியின் நன்மதிப்பை மேம்படுத்தும்.



7

நிதி திறனுக்கான தரங்களின் நிர்ணயிப்பு

சூரியனின் வலிமை உயிர்ப்பை பேணும்வகையில், சூரியனின் ஏராளமான வலிமையைப் போல இலங்கை வங்கியின் நிதி வலிமை அதன் பங்காளர்களுக்கு வளப்படுத்துவதற்கும் நிலைநிறுத்துவதற்குமான அதிகாரத்தை அளிக்கிறது.

வங்கியின் செயல்திறன் நிதியியல் களத்தில் உறுதியையும் உறுதிப்பாட்டையும் வழங்கி ஆற்றல்மிக்க வலிமையை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

1. பொதுவானவை

இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் அலுவல்களிலான அறிக்கையுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள் மற்றும் 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி, வங்கியின் மற்றும் குழுமத்தின் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அந்த நிதிக்கூற்றுக்களிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களது அறிக்கையினையும் முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது. இவ்வறிக்கையானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளில் விவரிக்கப்பட்டுள்ள சில வெளிப்படுத்தல்களையும், இலங்கை மத்திய வங்கியினால் கூட்டாண்மை ஆளுகையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் பணிப்புரை மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் கீழ் தேவைப்படும் சில வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்குகின்றது. பணிப்பாளர்கள் நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து 27 பெப்ரவரி 2024 இல் அங்கீகரித்தார்கள்.

இலங்கை வங்கியானது 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியாவதுடன், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1 ஆகஸ்ட் 1939 இல் ஏற்றவாறு ஒருங்கிணைக்கப்பட்டது. வங்கியானது இலங்கை அரசாங்கத்தினால் முழுவதும் உரித்துடைமையானதாகும். வங்கியினால் வழங்கப்பட்ட பிணைசாரா தாழ்நிலை மீட்கத்தகு தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2. வணிகத்தின் மீளாய்வு

2.1. வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

இவ்வாண்டின்போதான வங்கியின் பிரதான நடவடிக்கைகள், தனிப்பட்ட வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கரைகடந்த வங்கியியல், வர்த்தக நிதியளித்தல், குத்தகை நிதியளித்தல், முதன்மை வர்த்தகம், முதலீட்டு வங்கியியல் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடல் வங்கியியல் மற்றும் பண பணமனுப்பல்கள், இஸ்லாமிய வங்கியியல், வங்கிக்காப்புறுதியியல், அடமானம், கடன் அட்டை வசதிகள், வெளிநாட்டு நாணயச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நிதிச் சேவைகள் என்பனவாகும்.

2.2. துணை நிறுவனங்களும் இணை நிறுவனங்களும்

துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களின் பிரதான நடவடிக்கைகள் பக்கம் 176 இல் காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின்போது, வங்கியின் மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில், கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் குறிப்பிட்டுள்ள மாற்றங்களைத் தவிர, எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் காணப்படவில்லை.

2.3. குழுமக் கட்டமைப்பில் மாற்றங்கள்

ஆண்டுக்காலப்பகுதியில் குழுமக் கட்டமைப்பில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல.31 மற்றும் 32 ஆண்டறிக்கையில் 245 முதல் 253 வரையிலான பக்கங்களில் குழுமத்தினை பற்றிய விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.4. தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் கூட்டாண்மை நடத்தை

வங்கியின் தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் விழுமியக் கூற்றானது இந்த ஆண்டறிக்கையின் இரண்டாவது உட்புற பின் அட்டையில் வழங்கப்பட்டுள்ளது. வங்கியானது "தொலைநோக்கு", "பணிநோக்கு" மற்றும் "விழுமியச் கூற்றுக்கள்" ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கனை தொடரும்வேளை அதன் நடவடிக்கைகளில் உயர் நெறிமுறையான நியமங்களை பராமரிக்கின்றது.

2.5. ஆண்டின் செயற்திறனிலான மீளாய்வு

பக்கங்கள் 16 முதல் 19 வரை காணப்படும் தலைவரின் செய்தியானது இவ்வாண்டிற்கான வங்கி/குழுமத்தின் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தின் செயற்திறனையும் குறிப்பிடுகின்றது. பக்கங்கள் 20 முதல் 23 வரை காணப்படும் பொது முகாமையாளரின் மீளாய்வானது மீளாய்வாண்டின் போதான வங்கியின் செயற்பாடுகளது விளக்கமான விபரங்களை வழங்குகின்றது. பக்கங்கள் 68 முதல் 72 வரை காணப்படும் "நிதியியல் மீளாய்வு" எனத் தலைப்பிட்ட பகுதியானது வங்கியின் வணிகச் செயற்பாடுகளது விபரமான பகுப்பாய்வினை வழங்குகின்றது. வங்கியின் அலுவல்களில் ஒரு நியாயமான மீளாய்வினை வழங்கும் இந்த அறிக்கைகள் ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

2.6. கிளை விரிவாக்கம்

டிஜிட்டல் பயன்பாட்டினை மேம்படுத்துவதில் வங்கியானது இவ்வாண்டின்போது நாடு பூராவும் அதன் வலையமைப்பினை 163 CRMகளினால் விரிவாக்கி மொத்த வாடிக்கையாளர் நேரடியான தொடர்பு புள்ளிகளை 2,241 ஆக கொண்டு வந்தது. இந்த எண்ணிக்கையானது இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய சக வங்கிகளின் ATM களை மற்றும் பாடசாலை "சன்சத" மற்றும் மொபைல் சேமிப்பு அலகுகளை உள்ளடக்குவதில்லை. நாட்டில் நிலவிய பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, வங்கியின் மூலதனச் செலவினங்கள் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு அமைய நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டின்போது ஒரு கிளையானது வங்கியின் அமைவிட வலையமைப்பிற்கு சேர்க்கப்பட்டது.

2.7. கூட்டாண்மை நன்கொடைகள்

வங்கியானது 2023 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (கூ.ச.பொ.) நடவடிக்கைகளுக்கு ரூபா 130 மில்லியனை நன்கொடை செய்துள்ளது. (2022 - ரூபா 60.1 மில்லியன்)

2.8. நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

அலுவல்கள் நிலைமையில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும். துணை நிறுவனங்களைப் பொறுத்தளவில், நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 159 இல் வழங்கப்பட்டுள்ள "நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புக்கள்" கூற்றானது இந்த பணிப்பாளர்களின் அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளது.

2.9. கணக்காய்வாளரது அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் இருக்கின்றார்.

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளரது அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 160 முதல் 164 வரை வழங்கப்பட்டுள்ளன.

2.10. கணக்கீட்டுக் கொள்கைகள்

குழுமமும் வங்கியும் அவற்றின் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs) இன் பிரகாரம் தயாரித்துள்ளன.

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 176 முதல் 191 வரை வழங்கப்பட்டுள்ளன.

3. திட்டமிடப்பட்ட அபிவிருத்திகள்

வங்கியினால் எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளின் கண்ணோட்டம் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 16 முதல் 19 வரை காணப்படும் தலைவரது செய்தியிலும் மற்றும் பக்கம் 20 முதல் 23 வரை காணப்படும் பொது முகாமையாளரது மீளாய்விலும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன.

4. மொத்த வருமானம்

2023 ஆம் ஆண்டிற்கான குழுமத்தின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டின் ரூபா 551,866.8 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 520,891.2 மில்லியனாக காணப்பட்டது. வங்கியின் மொத்த வருமானமானது குழுமத்தின் மொத்த வருமானத்தின் 98% இனை (2022 - 99%) கணக்கீடு செய்தது. குழுமத்தின் பிரதான வருமானம் வட்டி வருமானமாகும் என்பதுடன் இது மொத்த வருமானத்தின் 96% (2022 - 89%) இனை உள்ளடக்குகின்றது.

5. பங்கிலாபங்கள் மற்றும் ஒதுக்கங்கள்

5.1. இலாபமும் ஒதுக்கீடுகளும்

2023ஆம் ஆண்டில் ரூ.40,342.4 மில்லியன் வரிக்கு முன்னைய லாபத்தை வங்கி பதிவு செய்துள்ளது.இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.30,976.6 மில்லியனுடன் ஒப்பிடும் போது 30% குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை பிரதிபலிக்கிறது.

வருமான வரி ரூ.13,648.9 மில்லியன் (2022- ரூ.995.7 மில்லியன் வரி மாற்றுப்பதிவு) கட்டணத்திற்குப் பிறகு,வங்கி 2023 ஆம் ஆண்டில் ரூ.26,693.5 மில்லியனாக வரிக்கு பிந்திய லாபத்தை (PAT) பதிவு செய்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டில் ரூ.31,972.4 மில்லியன் வரிக்கு பிந்திய லாபத்துடன் ஒப்பிடும் போது 16.5% குறைவாகும்.

ரூ.14,155.4 மில்லியன் வருமான வரி (2022-ரூ.796.5மில்லியன் வரி மாற்றுப்பதிவு) வசூலித்த பிறகு,குழுமத்தின் ஆண்டிற்கான வரிக்கு வரிக்கு பிந்திய லாபம் 2023 ஆம் ஆண்டில் ரூ.27,617.6 மில்லியன் ஆகும்.(2022- ரூ.31,849.0 மில்லியன்)

வங்கி மற்றும் குழுமத்தின் இலாபம் தொடர்பான விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன:

	வங்கி		குழுமம்	
டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023	2022	2023	2022
	ரூ. மில்லியன்	ரூ. மில்லியன்	ரூ. மில்லியன்	ரூ. மில்லியன்
வருடத்திற்கான அனைத்து செலவினங்களின் கொடுப்பனவு, கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்கள், எதிர்பாராதவை ஆகியவற்றிலான பெறுமானத்தேய்வு, பெறுமானக்குறைப்பு, வலுக்குன்றல் ஏற்பாடுகளின் பின்னர் ஆனால் வரிக்கு முந்திய இலாபம்	53,005.9	42,289.9	54,695.3	42,372.2
நிதிச் சேவைகளிலான வரிகள்	(12,663.5)	(11,313.3)	(12,955.8)	(11,442.5)
இணை நிறுவனங்களின் வரி நிகரான இலாபம்/(நட்டங்களின்) பங்கு	-	-	33.5	122.8
வருமான வரிக்கு முன்னரான இலாபம்	40,342.4	30,976.6	41,773.0	31,052.5
வருமான வரி (செலவு)/ மாற்றுப்பதிவு	(13,648.9)	995.8	(14,155.4)	796.5
ஆண்டிற்கான இலாபம்	26,693.5	31,972.4	27,617.6	31,849.0
ஆண்டிற்கான வரி நிகராக ஏனைய விரிவான வருமானம்	(28,989.7)	27,806.9	(27,397.1)	32,230.3
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	(2,296.2)	59,779.3	220.4	64,079.3
ஒதுக்கங்கள்				
நிரந்தர ஒதுக்க நிதியத்திற்கான மாற்றல்கள்	(534)	(640)	(534)	(640)
பங்கிலாபங்கள்	(173)	(346)	(173)	(346)

5.2 பங்கிலாபங்கள்

வங்கியானது அதன் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு, வரிகள், கடன் நட்டங்களுக்கான ஏற்பாடு மற்றும் ஒதுக்கங்களுக்கான ஏதேனும் அத்தகைய பகுதிகள் கழிக்கப்பட்டதன் பின்னர் காணப்படும் இலாபத்தில் விவேகமான அடிப்படையில், அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து வங்கியின் பங்கிலாபக் கொள்கைக்கு அமைய பங்கிலாபத்தை செலுத்துகின்றது. இதன் பிரகாரம், 2023 ஆம் வருடத்திற்காக ரூபா 173.2 மில்லியன் பங்கிலாபமாக வங்கியினால் செலுத்தப்பட்டுள்ளது (2022 - ரூபா 346.4 மில்லியன்).

5.3 ஒதுக்கங்கள்

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் ரூபா 245,727.9 மில்லியன் ஆகும் (2022 - ரூபா 245,743.6 மில்லியன்). குழுமத்தின் ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது	குழுமம் 2023	குழுமம் 2022
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
நிரந்தர ஒதுக்க நிதியம்	15,665.0	15,131.0
காசுப் பாய்ச்சல் எல்லை ஒதுக்கம்	5,251.5	25,620.6
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	33,687.4	27,558.1
சுயாதீன ஒதுக்கம்	366.7	366.7
பரிமாற்றக மாற்றல் ஒதுக்கம்	12,335.3	14,304.4
ஏ.வி.வ.நி.பெ. ஒதுக்கம்	4,999.8	2,584.4
சட்டரீதியான ஒதுக்கம்	358.9	358.9
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்	173,063.3	159,819.5
மொத்தம்	245,727.9	245,743.6

6. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ்வாண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் சேர்க்கையில் குழுமத்தினால் ஆட்பட்ட மொத்த மூலதனச் செலவினம் ரூபா 4,056.2 மில்லியன் ஆகும் (2022 - ரூபா 4,195.2 மில்லியன்). இது பற்றிய விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 255 முதல் 273 வரை மற்றும் 276 முதல் 277 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 34 மற்றும் 36 இல் வழங்கப்பட்டுள்ளன.

7. இறையிலி ஆதனங்களின் பெறுமதி

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான குழுமத்தினால் உரித்தாக்கப்பட்ட இறையிலி ஆதனங்களின் பெறுமதியான ரூபா 38,748.4 மில்லியன் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 34 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது (2022 - ரூபா 31,125.9 மில்லியன்).

8. கூறப்பட்ட மூலதனமும் பங்குரித்துவமும்

8.1. கூறப்பட்ட மூலதனம்

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான வங்கியின் வழங்கப்பட்ட மற்றும் முழுவதும் செலுத்தப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 25,000 மில்லியன் ஆகும் (2022 - ரூபா 25,000 மில்லியன்). இவ்வாண்டின்போது வங்கிக்கான மூலதன பங்களிப்பாக அரசாங்கத்தின் திறைசேரி ரூபா 730 மில்லியனை உட்புகுத்தியது. இத்தொகையானது ஒதுக்கீட்டிற்கு நிலுவையிலுள்ள மூலதனத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

8.2. பங்குதாரர்

இலங்கை அரசாங்கமே வங்கியின் ஒரே பங்குதாரராகும்..

9. தாழ்நிலை தொகுதிக்கடன்கள்/ முறிகளின் வழங்கல்

இவ்வாண்டின்போது வங்கியானது அடுக்கு 2 மூலதனத் தளத்திற்கு துணைபுரிவதற்காக, பாசல் III இணக்கப்பாடான, பட்டியற்படுத்தப்பட்ட, தரப்படுத்தப்பட்ட, காப்பளிக்கப்படாத, தாழ்நிலையான தொகுதிக்கடன்களை வழங்கி ரூபா 10,000.0 மில்லியனை வெற்றிகரமாக திரட்டியது (2022- ரூபா 6,490.0 மில்லியன்).

நிதி நிலைமைக் கூற்று திகதியில் உள்ளவாறான நிலுவையிலுள்ள தொகுதிக்கடன்களின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கங்கள் 297 முதல் 299 வரை காணப்படும் குறிப்பு 49 இல் வழங்கப்பட்டுள்ளது.

10. பங்கு தகவல்கள்

மீளாய்வாண்டிற்கான குழுமத்தின் பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பும் பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதியும் முறையே ரூபா 1,102.9 (2022 - ரூபா 1,279.8) மற்றும் ரூபா 10,858.3 (2022 - ரூபா 10,858.9) ஆகும்.

11. கூட்டாண்மை நிலைபேறுடமை மற்றும் பொறுப்பு

கூட்டாண்மை நிலைபேறுடமை மற்றும் பொறுப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களது விபரங்கள் பக்கங்கள் 103 முதல் 109 வரை காணப்படும் "எமது சகல செயற்பாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம்" தலைப்பிடப்பட்ட பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

12. பணிப்பாளர்கள்

2023 ஆம் ஆண்டின்போது பதவியிலிருந்த மற்றும் இந்த ஆண்டறிக்கை கையொப்பமிட்ட திகதியில் பதவியிலுள்ள பணிப்பாளர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வங்கியின் பணிப்பாளர்கள் வங்கியில் எவ்விதமான நிறைவேற்று பதவிகளையும் வகிப்பதில்லை. இவர்கள் பரந்த அளவிலான திறன்கள் மற்றும் அனுபவங்களை வங்கிக்கு கொண்டுவருகின்றார்கள். பணிப்பாளர்களின் தகமைகள் மற்றும் அனுபவங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 28 முதல் 31 வரை வழங்கப்பட்டுள்ளன. ஆண்டறிக்கை கையொப்பமிடப்பட்ட திகதியில் பதவியிலிருந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஆறு (6). 2023 ஆம் ஆண்டின்போது சபையானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது:

12.1. பணிப்பாளர்களின் பட்டியல்

திரு. ரொனால்ட் சி பெரேரா P.C.
தலைவர்/சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 20 ஜனவரி 2023, பணிப்பாளர் பதவி விலகல் 13 மார்ச் 2024)

திரு. ஆர்.எம். பிரியந்த ரத்நாயக்க
சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பதவி வழிப் பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 28 ஏப்ரல் 2020, மீள் நியமனம் 29 ஏப்ரல் 2023)

மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்றவர்) ஜி.ஏ.சந்திரசிரி VSV
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 08 ஜனவரி 2021, பணிப்பாளர் பதவி விலகல் 07 ஜனவரி 2024)

பேராசிரியர் கித்சிரி எம்.லியானகே
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 31 மார்ச் 2023)

திரு.நரேஷ் அபேயசேகர
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 04 மே 2023)

கையொப்பமிடப்பட்ட திகதியில் பணிப்பாளர் சபை

திரு.காவன் ரத்நாயக்க
தலைவர்/நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 14 மார்ச் 2024)

திரு.ஜெஹான் இஸ்மாயில்
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்
(பணிப்பாளர் பதவி நியமனம் 07 பெப்ரவரி 2024)

திரு.ஜயமின் பெல்பொல
சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்

(பணிப்பாளர் பதவி நியமனம், 22 பெப்ரவரி 2024)**அதற்கமைய தற்போதைய சபை பின்வருமாறு**

பணிப்பாளர் பெயர்	நிறைவேற்றுத்தரம்/ நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன நிலைமை
திரு.காவன் ரத்நாயக்க	நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன
திரு.ஆர்.எம்.பிரியந்த ரத்நாயக்க	நிறைவேற்றுத்தரம் சாராத பதவி வழி	சுயாதீனமற்ற
பேராசிரியர் கித்சிரி எம்.லியானகே	நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன
திரு.நரேஷ் அபேயசேகர	நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன
திரு.ஜெஹான் இஸ்மாயில்	நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன
திரு.ஜயமின் பெல்பொல	நிறைவேற்றுத்தரம் சாராத	சுயாதீன

2007ஆம் ஆண்டின் 11 இலக்க வங்கிச் சட்டம் எண் இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையில் பணிப்பாளர்கள் சுயாதீன பணிப்பாளர்களாக வகைப்படுத்தப்படுகிறார்கள்.

12.2 சபை உப குழுக்கள்

சபையானது மேற்குறிப்பிட்ட வங்கியியல் சட்ட பணிப்புரை இலக்கமான 2007 இன் 11 உடன் இணங்கி மற்றும் வங்கியின் அலுவல்கள் மீதான மேற்பார்வை கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக ஐந்து உப குழுக்களை உருவாக்கியுள்ளது. உபகுழுக்களின் தொகுப்பானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 122 முதல் 131 வரை வழங்கப்பட்டுள்ள சபை உபகுழுக்களின் அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ளன.

12.3 பணிப்பாளர்களது கூட்டங்கள்

சபை மற்றும் உபகுழுக்களது கூட்டங்களில் பணிப்பாளர்களது பிரசன்னமானது ஆண்டறிக்கையின் பக்கம் 116 இல் வழங்கப்பட்டுள்ளது.

12.4 ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது நலன்கள், நேரடியான மற்றும் மறைமுகமானவை, பக்கம் 155இல் வழங்கப்பட்டுள்ளன. இந்த நலன்கள் பணிப்பாளர்கள் சபை கூட்டங்களில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அங்கு கொடுக்கப்பட்ட ஒப்பந்தங்களைத் தவிர, பணிப்பாளர்கள் வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலனைக் கொண்டிருக்கவில்லை. பணிப்பாளர்கள் பொறுண்மை ரீதியாக அக்கறை கொண்ட விடயங்களில் வாக்களிப்பதை தவிர்க்கிறார்கள்.

12.5 வங்கியினால்/குழுமத்தினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

எவ்விதமான தொகுதிக்கடன்களும் எந்த ஒரு பணிப்பாளர் பெயரிலும் பதிவு செய்யப்படவில்லை.

12.6 பணிப்பாளர்களது படிகள்/கட்டணங்கள்

நிதி அமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 17 ஜூன் 2015 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் PED 3/2015 மற்றும் 27 ஜனவரி 2020 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் PED 01/2020 மற்றும் 1938 இன் 53 ஆம் இலக்க, திருத்தியமைக்கப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் / உள்ளடக்கங்கள் ஆகியவற்றுக்கு அமைய பணிப்பாளர்கள் சபைக்கு செலுத்தவேண்டிய படிகள்/கட்டணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் குழுமம் தொடர்பான பணிப்பாளர்களின் வேதனம் பக்கம் 200 இல் காணப்படும் குறிப்பு 17 இல் வழங்கப்பட்டுள்ளது.

13. இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

13.1. இடர் முகாமைத்துவம்

பணிப்பாளர்கள் சபையானது இடர்களை முகாமைப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பினை பொறுப்பேற்கின்றார்கள். இடர்களைத் தணிப்பதற்காக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 132 முதல் 148 வரை விபரிக்கப்பட்டுள்ளது.

13.2. உள்ளகக் கட்டுப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது வங்கியில் ஒரு வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் அமுலாக்கத்தினை கணக்காய்வுக் குழுவினூடாக உறுதிப்படுத்துகின்றது.

கணக்காய்வுக் குழுவானது பணிப்பாளர்கள் சபை அவர்களது நம்பிக்கைக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் குழுவின் தலைவரது அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 122 முதல் 123 வரை உள்ளடக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் மீளாய்வாண்டின்போது மற்றும் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களது திகதி வரைக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பயனுறுதித்தன்மையுடன் திருப்தியடைந்துள்ளார்கள்.

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் பணிப்புரை இலக்கம் 3 (8) (ii) (b) இன் பிரகாரம் சபையானது வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையில் ஒரு கூற்றினை வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 156 முதல் 157 வரை வழங்கப்பட்டுள்ளன. சபையானது, நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக நிதியியல் அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிவாரி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

சபையானது உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களிடமிருந்து ஒரு உறுதிமொழி அறிக்கையினை பெற்றுள்ளதுடன் இது இந்த ஆண்டறிக்கையில் பக்கம் 158 இல் வழங்கப்பட்டுள்ளது.

14. கூட்டாண்மை ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது ஒரு வினைத்திறனான கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகளை பராமரிப்பது நோக்கி அர்ப்பணிப்புடன் உள்ளது. வங்கியின் செயற்பாட்டு மற்றும் இணக்கப்பாட்டு செயற்பாடுகள் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளினுள் வினைத்திறனாக வழிநடத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்த செயன்முறைகளும் நடைமுறைகளும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் கீழ் பணிப்புரைகளுடனும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையுடனும் ஒத்திருக்கின்றது. இவை இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 111 முதல் 121 வரை காணப்படும் “கூட்டாண்மை ஆளுகை” என தலைப்பிடப்பட்ட பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

சபையானது மேற்குறிப்பிட்ட 2007இன் இலக்கம் 11 பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கப்பாட்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களிடமிருந்து ஒரு அறிக்கையினை பெற்றுள்ளது.

15. மனித வளங்கள்

வங்கியின் மிகவும் மதிப்புமிக்க சொத்துக்களாக அதன் ஊழியர்கள் காணப்படுவதுடன் அவர்களை விருத்தி செய்வது வங்கிக்கு முக்கியமானதாகும். கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவது நோக்கிய அவர்களது பங்களிப்பினை உச்சப்படுத்துவதற்காக மிகவும் பெறுமதிவாய்ந்த மனித மூலதனத்தினை பலப்படுத்துவதற்காக வல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் மனித வள முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 90 முதல் 97 வரை காணப்படும் "ஓர் வெற்றிகரமான திறமையான பல்வகைத்தன்மை கொண்ட அணி" என தலைப்பிட்ட பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன.

16. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவாறு, இந்த அறிக்கையின் பக்கம் 119 இல் வெளிப்படுத்தப்பட்ட இணக்கப்பாடற்றவை தவிர்ந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற எவ்விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்துகின்றார்கள்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான வங்கியின் இணக்கப்பாட்டின் விபரங்கள் பக்கங்கள் 353 முதல் 400 வரை காணப்படும் "இணக்கப்பாட்டு பின்னிணைப்புகள்" என தலைப்பிடப்பட்ட பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன் இது இந்த அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளது. பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து அறிந்து வைத்திருப்பதை உறுதி செய்கிறார்கள்.

17. நிலுவையிலுள்ள வழக்காடல்கள்

பணிப்பாளர்களது அபிப்பிராயத்தின் பிரகாரம் மற்றும் வங்கியின் வழக்கறிஞர்களினால் உறுதிசெய்யப்பட்டுள்ளவாறு, வங்கிக்கு எதிராக தற்போது நிலுவையிலுள்ள வழக்காடல்கள் அறிக்கையிடப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அல்லது வங்கியின் எதிர்கால செயற்பாடுகளில் ஒரு பொருண்மையான தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

18. சட்டரீதியான கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கு மற்றும் ஊழியர்கள் தொடர்பாக செலுத்தவேண்டிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சபை உறுதிசெய்கின்றது.

19. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் எவ்விதமான நடவடிக்கையிலும் வங்கி ஈடுபடவில்லை. மேலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகள் பக்கங்கள் 103 முதல் 109 வரை காணப்படும் "எமது சகல செயற்பாடுகளிலும் ஓர் நம்பிக்கையின் வெளிச்சம்" என தலைப்பிடப்பட்ட பகுதியியல் வழங்கப்பட்டுள்ளன.

20. ஐந்தொகையின் பின்னரான நிகழ்வுகள்

நிதியாண்டின் இறுதிக்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் அவசியமான எவ்விதமான பொருண்மையான நிகழ்வுகளும் எழவில்லை என்ற அபிப்பிராயத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளார்கள்.

21. செயல்நிலை தொடர்ச்சி

வங்கியின் வளங்கள் அதன் செயற்பாடுகளை தொடர்வதற்கு போதுமானதென பணிப்பாளர்கள் நம்பிக்கையுடன் உள்ளார்கள். எனவே, நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் வங்கியானது செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பிரயோகித்துள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்,



ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன
இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர்

03 ஏப்ரல் 2024
கொழும்பு

ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நாட்டம்

"தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" இலான இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 24 இன் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன. இவை நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 61 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலாக, நிறுவனங்களுடன் சாதாரண வணிகப் போக்கில் ஒரு முழுங்கையளவு தூர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில், வங்கியின் தலைவர் அல்லது ஒரு பணிப்பாளர் அத்தகைய நிறுவனங்களின் தலைவர் அல்லது ஒரு பணிப்பாளராக உள்ளவிடத்து, அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

கம்பனி	உறவுமுறை	கொடுக்கல் வாங்கலின் தன்மை	எல்லை '000	நிலுவையிலுள்ள மீதி/தொகை 31.12.2023 '000	நிலுவையிலுள்ள மீதி/தொகை 31.12.2022 '000
திரு.ரொனால்ட் சி பெரேரா (20 ஜனவரி 2023 முதல் இலங்கை வங்கியின் தலைவராக நியமனம்)					
ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கார்பொரே'ன் லிமிடெட்	தலைவர்	நடைமுறை கணக்குகள்		11,414	-
		சேமிப்புக் கணக்குகள்		49	-
		தவணை வைப்புகள்		6,295,823	-
		மேலதிகப்பற்றுக்கள்	10,000	-	-
ஹோட்டல் கொழும்பு (1963) லிமிடெட்	தலைவர்	நடைமுறை கணக்குகள்		1,568	3,105
		தவணை வைப்புகள்		96,474	87,918
		மேலதிகப்பற்றுக்கள்	41,000	41,521	36,989
		கடன்கள்		231,883	227,308
		ஏனைய வருமதிகள்		164,699	87,290
ப்ரொபேர்ட்டி டெவெலப்மென்ட் லிமிடெட்	தலைவர்	நடைமுறை கணக்குகள்		35,001	9,863
		தவணை வைப்புகள்		3,945,360	3,235,160
		மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்		62,400	167,953
பேங்க் ஒப் சிலோன் (UK) லிமிடெட்	தலைவர்	நடைமுறை கணக்குகள்		19,378	14,186
		சேமிப்புக் கணக்குகள்		42	48
		நாஸ்ட்ரோ கணக்குகள்		ஐ.அமெ.டொ. 1,725	ஐ.அமெ.டொ. 783
				558,689*	284,331*
				பிரித்.பவுன் 846	பிரித்.பவுன் 826
				349,273*	361,250*
				யூரோ 1,719	யூரோ 1,316
				616,790*	509,039*
		வைப்பிடல்கள்		ஐ.அமெ.டொ. 6,000	ஐ.அமெ.டொ. 8,000
				1,943,540*	2,904,880*
				பிரித்.பவுன் 10,700	பிரித்.பவுன் 52,000
				4,414,964 *	22,742,086*
திரு.ஆர்.எம்.பிரியந்த ரத்நாயக்க 28 ஏப்ரல் 2020 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமனம்					
இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு	பதவி வழி பணிப்பாளர்	நடைமுறை கணக்குகள்		27,678	82,492
		தவணை வைப்புகள்		654	645
		மேலதிகப்பற்றுக்கள்		4	-
கொழும்பு லோட்டஸ் டவர் மனேஜ்மென்ட் கம்பனி பிரைவேட் லிமிடெட்	நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்	நடைமுறை கணக்குகள்		92,708	-
		தவணை வைப்புகள்		156,222	-

* இலங்கை ரூபாய்க்கு சமமான தொகை

குறிப்பு : குறிப்பாக குறிப்பிடப்படாத நாணயங்கள் இலங்கை ரூபாயில் உள்ளன.

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்று

பொறுப்பு

2007இ ன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் பிரிவு 3 (8) (ii) (b) இற்கமைய பணிப்பாளர்கள் சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான இந்த அறிக்கையினை முன்னிலைப்படுத்துகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது ("சபை") இலங்கை வங்கியில் ("வங்கி") காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மைக்கு பொறுப்பாளியாவார்கள். அத்தகைய போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை கருத்திலெடுப்பதில் சபையானது வங்கியியல் வணிகம் என்பது ஒரு முகாமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் வெகுமதிகளை இடருடன் சமநிலைப்படுத்தும் தேவையுடையது என்பதை அறிந்திருப்பதுடன், எனவே உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பிரதானமாக வங்கியின் இடர் ஆர்வத்தினை உள்ளடக்கிய வரையறைகள் மற்றும் குறிகாட்டிகளிலிருந்து ஏதேனும் விலகல்களை எடுத்துக்காட்டும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் நிமித்தம், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, நிதியியில் தகவல்களது மற்றும் பதிவுகளது பொருண்மையான பிறழ்கூற்றுகளுக்கு எதிராக அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிக்கு எதிராக பூரணமான உறுதிமொழியன்றி, ஒரு நியாயமான உறுதிமொழியினை மாத்திரமே வழங்கமுடியும். சபையானது வங்கியினால் முகங்கொடுக்கப்படும் கணிசமான இடர்களை இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் முகாமைப்படுத்தவும் ஒரு தொடர்ச்சியான செயன்முறையினை நிறுவியுள்ளது. இந்தச் செயன்முறையானது, வணிகச் சூழலில் அல்லது முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளில் மாற்றங்கள் ஏற்படும்போது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்கும். இச்செயன்முறையானது, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்று வழிகாட்டிகளுக்கு அமைவாக இருப்பதனை சபையினால் வழமையாக மீளாய்வு செய்யப்படுகின்றது. சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடும்போது, அந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிடுவதற்கான கொள்கைகளை கருத்திலெடுக்கின்றது.

நடைமுறையிலுள்ள நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக திடமானதும் போதுமானதும் எனவும் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கிட்டுக் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாக உள்ளதெனவும் சபையானது கருதுகின்றது.

முகாமைத்துவமானது இடர் மற்றும் கட்டுப்பாட்டிலான சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அமுலாக்குவதற்கு சபைக்கு துணைபுரிகின்றது. இது முகங்கொடுக்கும் இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் வடிவமைப்பில், இந்த இடர்களை தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளது செயற்பாடு மற்றும் கண்காணிப்பு என்பனவாகும்.

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளது வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளின் முக்கிய அம்சங்கள்

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமை மற்றும் நேர்மையினை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளக்குகின்றன:

- வங்கியின் செயற்பாடுகள் கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீடு மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வணிக வழிகாட்டுதல்களுக்கமைய வங்கியின் நாளாந்த செயற்பாடுகளது பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபையினால் பல்வேறு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- வங்கியின உள்வாரி கணக்காய்வுப் பிரிவானது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுடனான இணக்கப்பாட்டினையும் மாதிரிகளையும் சுழற்சி செயன்முறைகளையும் பயன்படுத்தி உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மையினையும் பரிசீலனை செய்து ஏதேனும் இணக்கப்பாடின்மை தொடர்பான கணிசமான கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்து அலகுகளிலும் கிளைகளிலும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிகழும் இடைவெளியானது ஒரு சுயாதீன மற்றும் குறிக்கோளான அறிக்கையினை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட இடர் தரமிடுதல் முறைகளை பயன்படுத்தி இடர் மட்டத்தினை மதிப்பீடு செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது சபை கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க உள்ளக கணக்காய்வு பிரிவு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி நிகழ்நேர மற்றும் தளத்திற்கப்பாலான உள்ளக கணக்காண்வினை மேற்கொள்கிறது. மற்றும் கணக்காய்வு முடிவுகள் சபை கணக்காய்வு செயற்குழுவிடம் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

- வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளிவாரி கணக்காய்வாளர்கள், முறைமைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு சிக்கல்களை மீளாய்வு செய்து இடர் முகாமைத்துவ மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மதிப்பீடு செய்கின்றது. அவர்கள் கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் அவற்றின் தரத்திலான குறிப்பிட்ட அழுத்தத்துடன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை மீளாய்வு செய்கின்றார்கள். சபை கணக்காய்வுக் குழுவினது கூட்டங்களின் அனைத்து நிகழ்ச்சிப் பதிவுகளும் சபைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளின் விரிவான பகுப்பாய்வானது பக்கங்கள் 122 முதல் 123 வரை காணப்படும் கணக்காய்வுச் செயற்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பிடுவதில், வங்கியின் இனங்காணப்பட்ட அதிகாரிகள், வங்கியின் நிதிக் கூற்றுக்களது குறிப்பிட்ட கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் இணைந்துள்ள அனைத்து செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நுண்ணிப்பாக ஒப்பிட்டுப்பார்த்தார்கள். இவை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் பொருந்துமைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் வங்கியின் துணை நிறுவனங்களை உள்ளடக்கவில்லை.

- வங்கியானது 1 ஜனவரி 2018 முதல் இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 "நிதியியல் கருவிகள்" இனை கடைப்பிடித்தது. SLFRS 9 இன் தேவைப்பாடுகளுடன்

இணங்குவதற்காக, வங்கியானது, ஒரு வெளிவாரி ஆலோசகரின் துணையுடன், வலுக்குன்றல் ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்காக ஒரு பரவலான எதிர்வுகூறும் பொருளாதார சூழல்ககளைப் பயன்படுத்தி எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட (ECL) மாதிரிகளை விருத்தி செய்தது. இந்த மாதிரிகள் ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உதவியுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஏற்புடையாக்கப்பட்டது. வங்கியானது 1 ஜனவரி 2022 முதல், இலங்கை மத்திய வங்கியினால் SLFRS 9 இன் கீழான கடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீடு தொடர்பாக வழங்கப்பட்ட பணிப்புரைகள் இலக்கம் 13 மற்றும் 14 உடனான இணக்கப்பாடு காண்பதற்காக போதுமையான வழிமுறைகளை எடுத்துள்ளதுடன் இது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

- அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காகவும் மற்றும் நிதியியல் கருவிகளது வெளிப்படுத்தலானது ஆற்றல் மிக்கதாகவும் சிறப்பாகவும் இருப்பதற்கும் "நிதிக் கூற்றுக்களது நிறைவுசெய்தல்" செயல்முறைக்கு வசதியளிப்பதற்காகவும் வங்கி ஒரு தன்னியக்கமான நிதியியல் அறிக்கையிடல் தீர்வினை அமுலாக்கும் செயன்முறையிலுள்ளது. இந்த தன்னியக்கமாக்கல் தீர்வானது SLFRS 9 "நிதியியல் கருவிகள்" இன் கீழான வலுக்குன்றல் ஏற்பாட்டினை கணிப்பிடுவதனை இயலுமையாக்குவதுடன் உள்வாரி மற்றும் வெளிவாரி அறிக்கையிடல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யவும் வசதியளிக்கும்.

- வெளிநாட்டு நாணய நிதி கருவிகள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான ஏற்பாடுகளை செய்யும்போது 2023 ஆம் ஆண்டில் வெளிப்புற சூழலில் ஏற்பட்ட மாற்றங்களை வங்கி தொடர்ந்து இனங்கண்டுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு, பணவீக்கத்தில் மாற்றங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் உள்ளிட்ட நிதி மற்றும் பொருளாதார அழுத்தங்களை குறைக்க அரசு மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டது.

- 2023ஆம் ஆண்டில், வங்கி மீதமுள்ளவற்றுடன் அதன் இணக்கத்தை தொடர்ந்தது. COVID -19ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தடைத் தொகுப்புக்கள். SLFRS 9 "நிதிக் கருவிகள்"- இன் கீழ் ECL மாதிரிகளைப் பயன்படுத்தி குறைபாடு ஏற்பாட்டை மதிப்பிடும்போது சுற்றுலா, கட்டுமானம் மற்றும் ஆடை போன்ற அபாயம் அதிகரித்த தொழில்களில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு கோவிட்-19 இன் எஞ்சிய தாக்கம் பரிசீலிக்கப்பட்டது. விவேகமான அடிப்படையில், 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிரதிபலிக்கும் பொருளாதார அளவுருக்களில் சாதமான இயக்கங்களை மிக விரைவில் எட்டி பிடிக்க நிர்வாகம் கருதுவதால் 2023ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் இழப்புக்களைக் கணக்கிடுவதில் 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பொருளாதார காரணி சரிசெய்தலை (EFA) வங்கி தொடர்ந்து பயன்படுத்தியது.

- வங்கியின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களை உள்ளடக்கிய ஒரு வழிநடத்தல் குழுவானது, முறைமைப்படுத்துபவரினால் SLFRS 9 இன் கீழான கடன் வசதிகளது வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீடு என்பவற்றில் வழங்கப்பட்ட பணிப்பரைகளிலான விசேட வலியுறுத்தலுடன் தன்னியக்கமாக்கப்பட்ட நிதியியல் அறிக்கையிடல் தீர்வின் அமுலாக்கத்தினை கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.


- வங்கியானது ஏனையவற்றுக்கிடையில், வங்கியின் மற்றும் வெளிநாட்டு கிளைகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களது வலுக்குன்றல், நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள், இடர் முகாமைத்துவம், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மாற்றமடையும் முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் ஏனைய அனைத்து முக்கியமான வங்கியியல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்து செயன்முறைகளை இற்றைப்படுத்துகின்றது. SLFRSs/LKASs மற்றும் முறைமைப்படுத்தல் பணிப்புரைகள் கீழான தேவைப்பாடுகள், சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் உள்ளடங்கலாக உரிய பங்காளிகளுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளினூடாக தெரிவிக்கப்படுகின்றது.

- முன்னைய ஆண்டில் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் வெளிவாரி கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் இவ்வாண்டின்போது மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை திருத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் வெளிவாரி கணக்காய்வாளர்களினால் 2023 இல் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் எதிர்காலத்தில் விழித்துரைக்கப்படும்.

உறுதிப்பாடு

மேற்குறிப்பிட்ட செயன்முறைகளின் அடிப்படையில், சபையானது வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன என உறுதியளிக்கின்றார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்..



தலைவர் - கணக்காய்வுக் குழு



தலைவர்



பணிப்பாளர்

கொழும்பு, இலங்கை
18 மார்ச் 2024

சுயாதீன உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/B/BOC/IC/2023

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 08 April 2024

தலைவர்

இலங்கை வங்கி

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களின் உறுதிமொழி அறிக்கை

அறிமுகம்

இந்த அறிக்கையானது, 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை வங்கியின் நிதி அறிக்கையிடல் ("கூற்று") மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்பரையின் பிரிவு 3 (8) (ii) (டி) இற்கு இணங்க வழங்கப்பட்டுள்ள "உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" இன் பிரகாரம் முகாமைத்துவமானது கூற்றின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாகும்.

எனது பொறுப்பும் SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது) உடனான இணக்கப்பாடும்

கூற்றானது, பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் இலங்கை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்களினால் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளை பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பீடு செய்வது எனது பொறுப்பாகும்.

உறுதிப்பாட்டு அலுவல்களிலான இலங்கை நியமம் (SLSAE) 3050 (திருத்தியமைக்கப்பட்டது), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் வங்கிகளுக்கான உறுதிமொழி அறிக்கை ஆகியவற்றிற்கு அமைவாக நான் எனது பணியினை நடாத்தினேன். இந்த நியமமானது அனைத்து பொருண்மையான வகையிலும் முகாமைத்துவமானது உள்ளகக் கட்டுப்பாடுகளிலான கூற்றினை தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறையான உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதற்காக நான் திட்டமிட்டு செயன்முறைகளை செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகின்றது. இந்த பணியின் நோக்கத்திற்காக ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கோ அல்லது மீளவழங்குவதற்கோ அல்லது இந்த பணியின்போது ஒரு கணக்காய்வினை செயற்படுத்தவோ அல்லது நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்கோ நான் பொறுப்பாளியல்ல.

செயலாற்றப்பட்ட பணியின் சுருக்கம்

கூற்றானது, பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் அமைப்புமுறையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்த செயன்முறைகள் பொருத்தமாக பிரதிபலிக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நான் எனது பணியினை நடாத்தினேன்.

செயலாற்றப்பட்ட செயன்முறைகள், அடிப்படையில் வங்கி ஆளணியினரது விசாரணைகள் மற்றும் ஒரு மாதிரி அடிப்படையில் பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளுக்கு உறுதுணையளித்த உளதாயுள்ள ஆவணங்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.

SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது) கூற்றானது அனைத்து இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றதா என்று கருதுவதனையோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயத்தினை உருவாக்குவதனையோ என்னிடம் வேண்டுவதில்லை.

SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது) ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்க சிக்கல்களது பொருண்மையான உள்ளகக் கட்டுப்பாட்டு தோற்றங்களைக் கையாள்வதற்காக விவரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மெய்யாகவே சிக்கல்களை தீர்க்குமா என்பதனை நான் கருதுவதற்கான தேவையினை எள்ளிடம் வேண்டுவதில்லை.

வங்கி, நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தயாரிக்கப்பட்ட கூற்றின் தன்மையில் எனது புரிந்துணர்வினை கருத்திலெடுத்து தெரிவுசெய்யப்பட்ட செயன்முறைகள் எனது தீர்ப்பில் தங்கியுள்ளது. எனது தீர்மானத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்காக நான் பெற்றுக்கொண்ட சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

முடிவுரை

செயலாற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் மீளாய்வின்போது பணிப்பாளர்கள் சபை கடைப்பிடித்த செயன்முறைகளிலான எனது புரிந்துணர்வுடன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது முரண்பட்டுள்ளது என நான் நம்புவதற்காக ஏதும் எனது கவனத்திற்கு வரவில்லை.

டபிள்யு பீ சி விக்கிரமரட்ன
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

நிதியியல் அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்களது பொறுப்பு

பணிப்பாளர்கள் சபையின் இந்தக் கூற்று விசேடமாக நிதியியல் அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு உரிய பொறுப்புக்களை வேறுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை வங்கி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான பணிப்பாளர்களது பொறுப்பானது பின்வரும் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியில் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள் மற்றும் பணிப்புரைகளின் பிரகாரம், வங்கியின் நிதி நிலைமையினை எந்நேரத்திலும் நியாயமாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தும் முறையான கணக்குப் புத்தகங்களை வங்கி பராமரிப்பதனை உறுதிப்படுத்துவதும், வங்கியின் விவகாரங்களில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்கும் முறையான நிதிக் கூற்றுக்களை ஒவ்வொரு வருடத்திற்கும் தயாரிப்பதும் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன மற்றும் நியாயமானதும் விவேகமானதுமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளினால் துணையளிக்கப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள். பொருண்மையான பிறழ்வுகள், ஏதேனும் இருப்பின், வெளிப்படுத்துப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ள.

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் அதன் கீழான பணிப்புரைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய காணப்படுகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான இலங்கை வங்கி மற்றும் குழுமத்தின் விவகாரங்களில் ஒரு மெய்யானதும் நியாயமானதுமான கருத்தினை பிரதிபலிக்கின்றன.

நிறுவனச்செயல்நிலை தொடர்ச்சி

எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தினை தொடர்வதற்கான போதுமான வளங்களை வங்கி மற்றும் குழுமம் கொண்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும். இதன் பிரகாரம், நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் அவர்கள் தொடர்ச்சியான நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு

உள்ளக நிதியியில் கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளுக்கும் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவதுடன், வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தை தடுப்பதற்காகவும் ஒரு திடமான கட்டுப்பாட்டு சூழலினை பராமரிப்பதில் கணிசமான முக்கியத்துவத்தினை வைத்துள்ளார்கள்.

உள்ளார்ந்த மற்றும் எஞ்சியுள்ள இடர்களை முற்றாக அகற்றமுடியாதவேளை வங்கியானது, பொருத்தமான உட்கட்டமைப்பு, கட்டுப்பாடுகள், அமைப்புமுறைகள் மற்றும் நெறிமுறையான நடத்தை என்பன முன்நிர்ணயிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் வரையறைகள்/ எல்லைகளினுள் பிரயோகிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதனை உறுதிசெய்வதன் மூலம், இவற்றை குறைப்பதற்கு முயற்சிக்கின்றது.

நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையில் பணிப்பாளர்களின் ஒரு அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 156 மற்றும் 157 இல் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களும் முகாமைத்துவமும் இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளை நிறுவியுள்ளன. பொருண்மையான இடர்களை கண்காணித்து முகாமைப்படுத்துவதற்காக முகாமைத்துவ குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் மீளாய்வு மற்றும் கலந்துரையாடலுக்காக இடரிலான மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகளுடனான இணக்கப்பாடானது சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவினால் கண்காணிக்கப்பட்டு சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவும் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகளது வினைத்திறனை பலப்படுத்துவதற்காக ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் செயலாற்றியுள்ளன. கணக்காய்வுக் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கைகள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 122 முதல் 125 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு அறிக்கை


இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளை தொடர்ந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே வங்கியின் கணக்காய்வாளர் என்பதுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களிலான இறுதியான அபிப்பிராயத்தினை வழங்குகின்றார். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 160 முதல் 164 வரை காணப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறைகளின் பயனுறுதித்தன்மையிலான கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் சான்றளிப்பானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 158 இல் வழங்கப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு

நிதி நிலைமைக் கூற்று திகதியிலான வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களினால் நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தவேண்டிய அனைத்து பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும் சட்டரீதியான அதிகாரசபை தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரையில் திருப்தியடைகின்றார்கள்.

இந்த கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் அவர்களது பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றியுள்ளார்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,



ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன

செயலாளர்
இலங்கை வங்கி/சபையின் செயலாளர்

03 ஏப்பிரல் 2024
கொழும்பு

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/B/BOC/FA/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 28 February 2024

தலைவர்
இலங்கை வங்கி

2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த வருடத்திற்கான இலங்கை வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றும் மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும், பொறுண்மை கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடக்கிய 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இலங்கை வங்கியின் (வங்கி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளிலிருந்து அப்போதைய நிதி அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் குறித்த நிதிச் சட்டத்தின் பிரிவு 5 (1) இன் பிரகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 14 மே 1992 இல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 715 இனால் வங்கிக்கு விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம் இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதி நிலைமை அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப மெய்யானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் எனது தொழில்சார் கருத்தில், தற்போதைய காலகட்டத்தின் நிதி அறிக்கைகளின் கணக்காய்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த விடயங்கள் ஒட்டுமொத்த நிதி அறிக்கைகளின் கணக்காய்வு மற்றும் அதன் மீது எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உருவாக்கும் சூழலில் கையாளப்பட்டுள்ளது. மேலும் இந்த விடயங்களில் நான் ஒரு தனி கருத்தை வழங்கவில்லை. கீழே உள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் எனது கணக்காய்வு இந்த விடயத்தை எவ்வாறு கையாண்டது என்பது பற்றிய எனது விளக்கம் அந்தந்த உள்ளடக்கத்தில் வழங்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அறிக்கையின் நிதி அறிக்கைகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் விபரிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நான் நிறைவேற்றியுள்ளேன். அதன்படி, நிதி அறிக்கைகளின் பொருண்மை தவறான அறிக்கையின் அபாயங்கள் குறித்த எனது மதிப்பீட்டிற்கு பதிலளிக்க வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளின் செயல்திறனை எனது கணக்காய்வு உள்ளடக்கியது. எனது கணக்காய்வு நடைமுறைகளின் முடிவுகள், கீழே உள்ள விடயங்களை நிவர்த்தி செய்ய நிகழ்த்தப்பட்ட நடைமுறைகள் உட்பட அதனுடன் இணைந்த நிதி அறிக்கைகள் குறித்த எனது கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்குகின்றன.

முக்கிய கணக்காய்வு விடயங்கள்	எனது கணக்காய்வு முக்கிய கணக்காய்வு விடயத்தை எவ்வாறு கையாண்டுள்ளது

நிதிச் சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்களுக்கான குறைபாடு. பெறுமதி குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகிறது.
 	
குறிப்பு 28 மற்றும் 29இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் கடன் மற்றும் பிற கருவிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பெறுமதி குறைப்பு கிரயத்தில் அளவிடப்படும் கடன் இழப்புகளுக்கான குறைபாடு, குறிப்பு 4.4.11 இல் விவரிக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையில் நிர்வாகத்தால் தீர்மானிக்கப்படுகிறது.
 	
இது ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாகும் ஏனென்றால்,
 	
• குறிப்பிடத்தக்க நிர்வாக முடிவுகள், அனுமானங்கள் மற்றும் அத்தகைய நிதிச் சொத்துக்களை மீட்பதற்கான எதிர்கால பணப்புழக்கங்களின் நிர்வாக எதிர்பார்ப்புகளை மதிப்பிடுவதில் தொடர்புடைய மதிப்பீட்டின் நிச்சயமற்ற நிலை, மற்றும்
 	
• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கள் மற்றும் அதன் நிர்ணயத்தில் சிக்கலான கணக்கீடுகளின் பயன்பாடு ஆகியவை அறிக்கையிடப்பட்ட தொகையின் பொருண்மை
 	
குறிப்பிடத்தக்க முடிவுகளின் முக்கிய பகுதிகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டில் நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் கடன் இழப்புக்கள், எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான மதிப்பீட்டில் பயன்படுத்தப்படுகிறது. நடப்பு வெளிநாட்டு நாணயக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பான நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள், முன்னோக்கிப் பார்க்கும் பேரின பொருளாதாரப் பார்வைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நிறையளிப்புக்கள், இவை இயல்பாகவே உயர்த்தப்பட்ட நிச்சயமற்ற நிலைகளுக்கு உட்பட்டவை.
	பெறுமதி குறைப்பு கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான குறைபாட்டின் போதுமான தன்மையை நிவர்த்தி செய்வதில், எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளை உள்ளடக்கியது.
	
	• எனது அறிக்கையின் தேதி வரை கிடைக்கக்கூடிய சிறந்த தகவல்களின் அடிப்படையில், கடன் மறுசீரமைப்பு நடைமுறை மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கான பதில்கள் உள்ளிட்ட கடன் இழப்புகள் கணக்கீடுகள் மற்றும் அடிப்படை வழிமுறைகளுக்கான வங்கியின் குறைபாட்டின் சீரமைப்பை மதிப்பீடு செய்தேன்
	
	• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் மதிப்பீடு மீது கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயல்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு செயல்திறனை மதிப்பீடு செய்தல். இதில் சபை மற்றும் நிர்வாகத்தால் எதிர்பார்க்கப்படும் கடன், இழப்புகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கான மேற்பார்வை, மதிப்பாய்வு மற்றும் கொடுப்பனவுகளின் ஒப்புதலின் அளவை மதிப்பிடுவது இதில் அடங்கும்.
	
	• வங்கியின் தொடர்புடைய ஆதார ஆவணங்கள் மற்றும் கணக்கியல் பதிவுகளுக்கு விவரங்களை ஒப்புக்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை தரவுகளின் முழுமை, துல்லியம் மற்றும் நியாயத்தன்மையை சரிபார்க்கவும்.
	
	• கடன் தர மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய நிலை வகைப்பாடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தேன்.
	
	மேற்கூறியவற்றுடன் கூடுதலாக, பின்வரும் நடைமுறைகள் செய்யப்பட்டன.
	
	• கடன் குறைபாட்டிற்காக தனிப்பட்ட அடிப்படையில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்
	
	  • அடிப்படை தனிப்பட்ட குறைபாடு கணக்கீடுகளின் எண்கணித துல்லியத்தை சரிபார்த்தது.
	
	  • தற்போதைய பொருளாதார நிலையற்ற தன்மையில் குறிப்பாக கவனம் செலுத்தி, எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கு கொடுப்பனவில் பயன்படுத்தப்படும் முக்கிய உள்ளீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல். இத்தகைய மதிப்பீடுகள் பணப்புழக்க கணிப்புகளின் மதிப்பு மற்றும் நேரத்தைக் கருத்தில் கொண்டு குறிப்பாக உயர்த்தப்பட்ட இடர் தொழில்கள் மற்றும் பிணையங்களின் மீட்பு நடவடிக்கைகளின் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.
	
	• கடன் குறைபாட்டிற்கான கூட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்ட நிதி சொத்துக்களுக்கு
	
	  • எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கு முக்கிய உள்ளீடுகள் மற்றும் கொடுப்பனவுகளில் பயன்படுத்தப்படும் கணக்கீடுகளை சோதிக்கப்பட்டது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

முக்கிய கணக்காய்வு விடயங்கள்	எனது கணக்காய்வு முக்கிய கணக்காய்வு விடயத்தை எவ்வாறு கையாண்டுள்ளது
	• அடிப்படை முறை மற்றும் முகாமைத்துவ மேலடுக்குகளில் நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் தீர்மானங்கள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீட செய்தல். பரிசீலிக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அந்த ஒவ்வொரு திட்ட வரைவுக்கும் ஒதுக்கப்பட்ட நிகழ்தகவு எடை ஆகியவை எனது சோதனையில் அடங்கும். • குறிப்புகள்28, 29 மற்றும் 4.4.11 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய நிதி அறிக்கை வெளிப்பாடுகளின் போதுமான தன்மையை நான் மதிப்பிட்டேன்.
தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகள். வங்கியின் நிதி அறிக்கையிடல் செயல்முறை தானியங்கி செயல்முறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் பல தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை கணிசமாக நம்பியுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்ப அமைப்புக்களால் உருவாக்கப்பட்ட தரவு மற்றும் அறிக்கைகளைப் பயன்படுத்தி முக்கிய நிதி அறிக்கை வெளிப்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன. அவை விரிதாள்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. அதன்படி, தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகள் ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாக கருதப்பட்டது.	எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளை உள்ளடக்கி உள்ளது • செயல்முறைகளின் உள்ளடக கட்டுப்பாட்டு சூழல் பற்றிய புரிதலைப் பெற்றேன் மற்றும் நிதி அறிக்கை மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகள் தொடர்பான பொருத்தமான கட்டுப்பாடுகளை பரிசோதனை செய்தேன். • நான் எனது உள்ளக சிறப்புவாய்ந்த வளங்களை ஈடுபடுத்தி மற்றும், • பயனர் அணுகல் மற்றும் மாற்ற மேலாண்மை தொடர்பானவை உட்பட தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான உள் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடு செயல்திறனை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்து பரிசோதனை செய்தேன், மற்றும் • வங்கியை பாதிக்கும் சைபர் பாதுகாப்பு இடர் மற்றும் இந்த இடர்களை முதன்மையாக விசாரணை மூலம் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உயர் மட்ட புரிதலைப் பெற்றுக்கொண்டேன். • பொதுப் பேரேட்டு கணக்கிணக்கங்களை மதிப்பாய்வு செய்வது உட்பட, துல்லியம் மற்றும் முழுமைக்காக வெளிப்பாடுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் அறிக்கைகளின் மூலத் தரவை நான் பரிசோதனை செய்தேன்.

1.4 குழுமத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் குழுமத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்குகின்றது, ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வு அறிக்கையை உள்ளடக்கவில்லை. ஆண்டறிக்கையானது இந்த கணக்காய்வாளரது அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் இவற்றில் எவ்விதமான உறுதிமொழி முடிவினை தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பு மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் கிடைக்கப்பெறும்போது அவற்றை வாசித்தல், மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவில் பொருண்மையான முரண்பாடுடையதாக உள்ளதா அல்லது இல்லையெனில் பொருண்மையானளவு தவறாகக் கூறப்பட்டுள்ளதா என கருதவேண்டியுள்ளது.

வங்கியின் 2023 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கும்போது, அவற்றில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் உள்ளன என நான் முடிவுக்கு வந்தால், நான் அந்த விடயத்தினை திருத்தத்திற்கான ஆளுகையுடன் பொறுப்புடையோருக்கு அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். திருத்தப்படாத

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் மேலும் காணப்படின், அவை பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்படும். அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளைத் தொடர்ந்து எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

1.5 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய ஒரு மெய்யானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தினை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளதுடன்

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தாலன்றி அல்லது யதார்த்தமான எவ்வித மாற்றுவழியுமின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, உகந்தவாறு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் வங்கி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாயுள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இற்கமைய குழுமமானது அதன் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக அதன் அனைத்து வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கு கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், தவறான பிரதிநிதித்துவங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் பொருண்மையான சந்தேகத்தை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமமானது நிறுவனத் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைக்கேற்ப வங்கியானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iஇ) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (டி) இன் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் வங்கியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் வங்கியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு,

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எப்) இன் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், வங்கியின் ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு வங்கி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு,

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப வங்கியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு,

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எப்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் வங்கியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.



டப்ள்யு. பீ. சி. விக்கிரமரட்ன
(கணக்காய்வாளர் நாயகம்)

நிதியியல் அறிக்கைகள் - உள்ளடக்க அட்டவணை

		பக்க இல.
முதன்மை நிதிக்கூற்றுக்கள்		
	இலாப நட்ட கூற்று	166
	முற்றடக்க வருமானக் கூற்று	167
	நிதியியல் நிலைமை கூற்று	168
	உரிமைமாற்றக் கூற்று	170
	காசுப்பாய்ச்சல் கூற்று	174
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்		
1.	அறிக்கையிடும் நிறுவனம்	176
2.	நிதி கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு	177
3.	தயாரிப்பின் அடிப்படை	177
4.	பொருண்மை கணக்கியல் கொள்கை	180
5.	காப்பீட்டு வணிகம்	189
6.	புதிய மற்றும் திருத்தப்பட்ட தரநிலைகள் மற்றும் விளக்கங்கள்	190
7.	மொத்த வருமானம்	192
8.	தேறியவட்டி வருமானம்	192
9.	தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	194
10.	வர்த்தகத்தின் மூலம் தேறிய இலாபம்/(நட்டம்)	195
11.	இலாபம்/நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பில் நிதி கருவிகளிலிருந்து தேறிய நியாயமான பெறுமதியில் இலாபம்/(நட்டம்)	195
12.	அங்கீகரிக்கப்படாத நிதிச் சொத்துக்களின் மூலமான தேறிய இலாபம் அல்லது நட்டம்	195
13.	தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம்	196
14.	கடன்கள் மற்றும் பிற இழப்புக்களுக்கான குறைபாடு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)	197
15.	பணியாளர் செலவுகள்	198
16.	தேய்மானம் மற்றும் கடன்தொகை செலவுகள்	199
17.	பிற செலவுகள்	200
18.	வரிகள்	201
19.	இணை நிறுவனங்களின் பங்குகள் இலாபம்/(நட்டம்). தேறிய வரியில்	203
20.	பங்கொன்றுக்கான உழைப்பு மற்றும் பங்கொன்றுக்கான பங்கிலாபம்	203
21.	அளவீட்டு அடிப்படையில் நிதிக் கருவிகளின் பகுப்பாய்வு	205
22.	காசும் காசுக்கு சமமானவையும்	209
23.	மத்திய வங்கிகளுடனான நிலுவைகள்	210
24.	வங்கிகளுடனான வைத்திருப்புக்கள்	211
25.	மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பத்திரங்கள்	212
26.	பெறுதி நிதிக் கருவிகள்	213
27.	இலாபம் அல்லது நட்டம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டது	213
28.	தேய்மான கிரயத்தில் நிதி சொத்துக்கள் கடன்கள் மற்றும் முற்பணங்கள்	225
29.	தேய்மான கிரயத்தில் நிதி சொத்துக்கள் - கடன் மற்றும் பிற கருவிகள்	234
30.	ஏனைய முற்றடக்க வருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்	242
31.	துணை நிறுவனங்களில் முதலீடு	245
32.	இணை நிறுவனங்களில் முதலீடு	250
33.	முதலீட்டு ஆதனங்கள்	253
34.	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	255
35.	ஆதனங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை/ குத்தகை சொத்துக்கள்	274
36.	கட்புலனாகாச் சொத்துக்கள்	276
37.	பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்/(பொறுப்புக்கள்)	277
38.	ஏனைய சொத்துக்கள்	279
39.	வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	279
40.	மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பத்திரங்கள்	280
41.	பெறுதி நிதியியல் சாதனங்கள்	280
42.	தேய்மான கிரயத்தில் நிதி பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	280
43.	தேய்மான கிரயத்தில் நிதி பொறுப்புக்கள் - பிற கடன்கள்	281
44.	வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	282
45.	நடைமுறை வரிப்பொறுப்புக்கள்/(சொத்துக்கள்)	284
46.	காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள்	284
47.	ஏனைய பொறுப்புக்கள்	285
48.	ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள்	286
49.	துணைநிலை பொறுப்புக்கள்	297
50.	பங்கு மூலதனம்	300
51.	நிரந்தர ஒதுக்கு நிதி	300
52.	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்	301
53.	காசுப்பாய்ச்சல் எல்லை ஒதுக்கம்	301
54.	ஏனைய ஒதுக்கங்கள்	302
55.	கட்டுப்பாடற்றோர் நாட்டம்	304
56.	காசுப்பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புக்கள்	304
57.	நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்	305
58.	பிணையாக உள்ள சொத்துக்கள்	308
59.	அறிக்கையிடல் தேதிக்குப் பிந்தைய நிகழ்வுகள்	308
60.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வு பகுப்பாய்வு	309
61.	தொடர்புடைய தரப்பினர்களின் வெளிப்பாடு	312
62.	தொகுதி வாரியான நிதி அறிக்கையிடல்	320
63.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதிகள்	322
64.	நிதி இடர் முகாமைத்துவம்	332

இலாப நட்ட கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	வங்கி			குழுமம்		
		2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %
மொத்த வருமானம்	7	542,187,297	513,149,335	5.7	551,866,763	520,891,164	5.9
வட்டி வருமானம்		524,797,842	456,267,458	15.0	532,477,761	463,203,346	15.0
கழி: வட்டிச் செலவினம்		433,610,256	329,921,080	31.4	436,967,649	333,434,454	31.1
தேறிய வட்டி வருமானம்	8	91,187,586	126,346,378	(27.8)	95,510,112	129,768,892	(26.4)
கட்டணம் மற்றும் தரகு வருமானம		25,875,048	22,837,771	13.3	26,235,325	23,165,682	13.3
கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினம்		8,220,629	6,486,129	26.7	8,237,386	6,505,334	26.6
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	9	17,654,419	16,351,642	8.0	17,997,939	16,660,348	8.0
வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்)	10	(5,347,822)	17,602,384	(130.4)	(5,163,417)	17,678,455	(129.2)
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)	11	858,722	(804,438)	(206.7)	1,448,963	(956,745)	(251.4)
நிதிச் சொத்துக்களை அங்கீகாரத்தை நீக்குவதன் மூலமாக கிடைத்த இலாபங்கள்/ (நட்டங்கள்)	12	1,361,863	861,349	58.1	1,469,888	877,853	67.4
ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	13	(5,358,356)	16,384,811	(132.7)	(4,601,757)	16,922,573	(127.2)
மொத்த தொழிற்பாட்டு வருமானம்		100,356,412	176,742,126	(43.2)	106,661,728	180,951,376	(41.1)
கழி: கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு (அறவீடு)/மாற்றுப்பதிவு	14	(4,906,277)	87,155,696	(105.6)	(5,048,666)	87,294,905	(105.8)
தேறிய தொழிற்பாட்டு வருமானம்		105,262,689	89,586,430	17.5	111,710,394	93,656,471	19.3
கழி: தொழிற்பாட்டு செலவினம்							
ஆளணிச் செலவினம்	15	29,818,199	28,991,429	2.9	32,311,681	31,352,978	3.1
பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானம்	16	3,852,931	4,286,899	(10.1)	4,229,242	4,507,368	(6.2)
ஏனைய செலவுகள்	17	18,585,567	14,018,161	32.6	20,474,129	15,423,966	32.7
மொத்த செயற்பாட்டு செலவினங்கள்		52,256,697	47,296,489	10.5	57,015,052	51,284,312	11.2
வரிக்கு முன்னரான நிதியியல் சேவைகளிற்கான செயற்பாட்டு இலாபம்		53,005,992	42,289,941	25.3	54,695,342	42,372,159	29.1
கழி: நிதிச்சேவைகள் மீதான வரி	18.1	12,663,569	11,313,292	11.9	12,955,824	11,442,505	13.2
நிதிச் சேவைகள் மீதான வரிக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்		40,342,423	30,976,649	30.2	41,739,518	30,929,654	34.9
கூட்டுக் கம்பனிகளின் வரி கழித்த இலாப/ (நட்டப்) பங்கு	19	-	-	-	33,507	122,847	(72.7)
வருமான வரிக்கு முன்னரான இலாபம்		40,342,423	30,976,649	30.2	41,773,025	31,052,501	34.5
கழி: வருமான வரிச் செலவினம்	18.2	13,648,897	(995,759)	(1,470.7)	14,155,438	(796,516)	(1,877.2)
ஆண்டுக்கான இலாபம்		26,693,526	31,972,408	(16.5)	27,617,587	31,849,017	(13.3)
வருவோருக்கு உரித்தான இலாபம்:							
வங்கியின் உரிமை மூலதனப் பங்குதாரர்		26,693,526	31,972,408	(16.5)	27,571,569	31,994,638	(13.8)
கட்டுப்பாடற்றோர் நாட்டம்		-	-	-	46,018	(145,621)	(131.6)
ஆண்டுக்கான இலாபம்		26,693,526	31,972,408	(16.5)	27,617,587	31,849,017	(13.3)
பங்கொன்றுக்கான வருவாய்:	20						
பங்கொன்றுக்கான அடிப்படை வருவாய் (ரூபா)		1,067.74	1,278.90	(16.5)	1,102.86	1,279.79	(13.8)
பங்கொன்றிற்கான குறைவடைந்த வருவாய்கள் (ரூபா)		1,037.45	1,272.08	(18.4)	1,071.57	1,272.96	(15.8)
பங்கொன்றுக்கான பங்கிலாபம் (ரூபா)		6.93	13.86	(50.0)	6.93	13.86	(50.0)

176ஆம் பக்கத்திலிருந்து 351ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

முற்றடக்க வருமானக் கூற்று

	வங்கி			குழுமம்		
டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)	26,693,526	31,972,408	(16.5)	27,617,587	31,849,017	(13.3)
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள் வகைப்படுத்தப்பட்டவை						
வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் நிதிக்கூற்றுக்களின் பரிமாற்றத்திலிருந்தான நாணயமாற்றம்	(1,977,563)	7,564,044	(126.1)	(2,286,201)	9,843,204	(123.2)
காசுப்பாய்ச்சல் ஹெட்ஜ் கருவிகள் மீதான (தேறிய இலாபம்/நட்டம்)	(20,369,118)	22,381,369	(191.0)	(20,369,118)	22,381,369	(191.0)
கடன் பத்திரங்கள் மீதான முதலீடுகளின் ஏனைய மொத்த வருமானத்தின் மீதான நியாய பெறுமதியின் (தேறிய இலாபம்/நட்டம் (FVTOCI)	165,673	1,328,890	(87.5)	272,685	1,312,732	(79.2)
இலாபம்/நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய இலாபம்/நட்டம்	-	(5,631)	(100.0)	-	(5,631)	(100.0)
மேற்கூறப்பட்டவையின் பிற்போடப்பட்ட வரித்தாக்கம்	(148,518)	(140,185)	5.9	(148,518)	(140,185)	5.9
துணை நிறுவனங்களின் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் பங்கு மற்றும் நிகர வரி	-	-	-	(2,109)	(20,342)	(89.6)
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள் வகைப்படுத்தப்பட்டவை	(22,329,526)	31,128,487	(171.7)	(22,533,261)	33,371,147	(167.5)
இலாபமோ அல்லது நட்டத்திற்கோ மீள் வகைப்படுத்தப்படாதவை						
ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் உண்மைப்பெறுமதியினூடாக அளவிடப்பட்ட உரிமை முதலின் மீதான நியாயப்பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் (FVTOCI)	1,786,818	(313,328)	(670.3)	2,412,486	547,780	340.4
மேற்கூறப்பட்டவைகள் பிற்போடப்பட்ட வரித்தாக்கம்	(107,990)	(586,301)	(81.6)	(107,990)	(586,301)	(81.6)
மறுமதிப்பீட்டின் மாற்றங்கள் அதிகரிப்பு/(குறைவு)	6,880,746	1,818,193	278.4	8,635,144	3,695,662	133.7
பிற்போடப்பட்ட வரித்தாக்கம் மேற்கூறப்பட்டவற்றில்	(1,961,601)	(1,859,253)	5.5	(2,487,921)	(2,422,494)	2.7
நிச்சயிக்கப்பட்ட நன்மை திட்டங்கள் மீதான தேறிய கணிய இலாபம்/நட்டம்	(18,940,273)	(3,845,217)	392.6	(19,021,132)	(3,797,222)	400.9
பிற்போடப்பட்ட வரித்தாக்கம் மேற்கூறப்பட்டவற்றில்	5,682,082	1,464,274	288.0	5,705,542	1,421,714	301.3
இலாபமோ அல்லது நட்டத்துக்கோ மீள்வகைப்படுத்தப்பட முடியாத மொத்த வகைகள்	(6,660,218)	(3,321,632)	100.5	(4,863,871)	(1,140,861)	326.3
தேறிய வரியில் ஆண்டுக்கான ஏனைய முற்றடக்க வருமானம்	(28,989,744)	27,806,855	(204.3)	(27,397,132)	32,230,286	(185.0)
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்	(2,296,218)	59,779,263	(103.8)	220,455	64,079,303	(99.7)
பின்வருவோருக்கு உரித்தானது:						
வங்கியின் உரிமை மூலதனப் பங்குதாரர்	(2,296,218)	59,779,263	(103.8)	157,628	64,189,129	(99.8)
கட்டுப்பாடற்றோர் நாட்டம்	-	-	-	62,827	(109,826)	(157.2)
ஆண்டுக்கான மொத்த ஒன்று திரட்டிய வருமானம்	(2,296,218)	59,779,263	(103.8)	220,455	64,079,303	(99.7)

176ஆம் பக்கத்திலிருந்து 351ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்

நிதியியல் நிலைமைக் கூற்று

		வங்கி			குழுமம்		
டிசம்பர் 31 இல் உள்ளவாறான	குறிப்பு	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %
சொத்துக்கள்							
காசும் காசுக்குச் சமமானவையும்	22	135,550,505	128,401,532	5.6	137,369,158	135,230,827	1.6
மத்திய வங்கிகளுடனான நிலுவைகள்	23	34,932,639	70,494,529	(50.4)	34,932,639	70,494,529	(50.4)
வங்கிகளுடனான வைத்திருப்புக்கள்	24	74,966,171	16,459,303	355.5	73,024,979	17,811,665	310.0
மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்	25	3,711,918	1,480,403	150.7	3,695,392	1,463,368	152.5
பெறுதி நிதியியல் சாதனங்கள்	26	20,525,840	57,155,486	(64.1)	20,525,840	57,155,486	(64.1)
நிதியியல் சாதனங்கள் - வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டவை	27	40,642,530	10,280,055	295.4	48,830,871	10,636,190	359.1
நிதியியல் முதலீடுகள் மாற்றியமைக்கப்பட்ட செலவு							
கடன்களும் முற்பணங்களும்	28	2,209,061,924	2,325,594,329	(5.0)	2,240,611,228	2,355,978,333	(4.9)
ஏனைய சாதானங்களும் - கடன்களும்	29	1,653,728,403	1,555,897,307	6.3	1,660,012,978	1,562,373,679	6.2
நிதியியல் சொத்துக்கள் விற்பனைக்காக உள்ளவை நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை	30	49,533,998	8,690,802	470.0	52,199,685	10,750,044	385.6
துணைக் கம்பனிகளிலான முதலீடுகள்	31	8,181,138	8,181,138	-	-	-	-
கூட்டுக் கம்பனிகளிலான முதலீடுகள்	32	92,988	92,988	-	737,115	684,536	7.7
முதலீட்டு ஆதனங்கள்	33	2,414,640	2,414,640	-	95,446	104,798	(8.9)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	34	42,564,498	34,845,004	22.2	59,566,898	50,992,323	16.8
குத்தகை ஆதனங்கள்	35	3,508,618	3,002,305	16.9	2,986,704	2,624,300	13.8
கட்புலனாகாச் சொத்துக்கள்	36	1,554,875	1,442,433	7.8	1,654,722	1,593,344	3.9
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	37	18,503,397	15,577,466	18.8	18,594,558	15,598,541	19.2
ஏனைய சொத்துக்கள்	38	112,274,233	96,449,984	16.4	112,921,804	97,276,598	16.1
மொத்தச் சொத்துக்கள்		4,411,748,315	4,336,459,704	1.7	4,467,760,017	4,390,768,561	1.8
பொறுப்புக்கள்							
வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை	39	3,047,732	11,514,897	(73.5)	3,162,463	11,547,714	(72.6)
மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்	40	78,463,070	180,218,543	(56.5)	77,829,770	179,938,744	(56.7)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	41	2,169,202	921,033	135.5	2,169,202	921,033	135.5
இலதாக்கல் பெறுமதியின் நிதியியல் பொறுப்புக்கள்							
வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	42	3,882,232,323	3,334,774,261	16.4	3,909,580,686	3,358,198,424	16.4
ஏனைய கடன்கள்	43	33,666,236	390,489,543	(91.4)	35,592,741	397,083,583	(91.0)
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	44	-	-	-	730,839	58,807	1,142.8
நடைமுறை வரிப் பொறுப்புக்கள்	45	7,621,675	6,523,443	16.8	7,877,471	6,853,709	14.9
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	37	-	-	-	2,933,596	2,694,221	8.9
காப்புறுதி ஏற்பாடு - ஆயுள்	46.1	-	-	-	359,606	355,190	1.2
காப்புறுதி ஏற்பாடு - ஆயுள் அல்லாத	46.2	-	-	-	671,728	662,773	1.4
ஏனைய பொறுப்புக்கள்	47	88,141,547	94,075,650	(6.3)	89,835,809	96,425,230	(6.8)

		வங்கி			குழுமம்		
டிசம்பர் 31 இல் உள்ளவாறான	குறிப்பு	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %
இரண்டாந்தர தவணைக் கடன்கள்	49	64,691,810	63,758,191	1.5	64,437,320	63,498,599	1.5
மொத்தப் பொறுப்புக்கள்		4,160,033,595	4,082,275,561	1.9	4,195,181,231	4,118,238,027	1.9
உரிமை மூலதனம்							
பங்கு மூலதனம்	50	25,730,000	25,730,000	-	25,730,000	25,730,000	-
நிரந்தர ஒதுக்கு நிதியம்	51	15,665,000	15,131,000	3.5	15,665,000	15,131,000	3.5
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள்	52	171,351,609	158,616,238	8.0	173,063,302	159,819,481	8.3
காசுப்பாய்ச்சல் ஹெட்ஜ் ஒதுக்குகள்	53	5,251,517	25,620,635	(79.5)	5,251,517	25,620,635	(79.5)
ஏனைய ஒதுக்குகள்	54	33,716,594	29,086,270	15.9	51,748,171	45,172,451	14.6
வங்கியின் உரிமைப் பங்குதாரருக்கு உரித்தான மொத்த உரிமை மூலதனம்		251,714,720	254,184,143	(1.0)	271,457,990	271,473,567	-
கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு	55	-	-	-	1,120,796	1,056,967	6.0
மொத்த உரிமை மூலதனம்		251,714,720	254,184,143	(1.0)	272,578,786	272,530,534	-
மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்		4,411,748,315	4,336,459,704	1.7	4,467,760,017	4,390,768,561	1.8
நிகழத்தக்கவைசார் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்	57	1,539,206,229	1,344,899,769	14.4	1,548,892,111	1,346,920,056	15.0
பங்கொன்றுக்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூபா)	50.2	10,068.59	10,167.37	(1.0)	10,858.32	10,858.94	-

176ஆம் பக்கத்திலிருந்து 351ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

இலங்கை வங்கியினதும் அதன் குழுமத்தினதும் 31.12.2023 இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைகளையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபத்தையும் இந்நிதியியல் கூற்றுக்கள் உண்மையாகவும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலும் பிரதிபலிக்கின்றது.

எம் பி ருவான் குமார
பிரதான நிதியியல் அதிகாரி

இந்நிதியியல் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பித்தலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகும். சபைக்காகவும் சபையின் சார்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது,

றொனால்ட் சி பெரேரா
தலைவர்

என் சி ஏ அபேயசேகர
பணிப்பாளர்

டபிள்யு பி ரசல் பொன்சேகா
பொது முகாமையாளர்

27 பெப்ரவரி 2024
கொழும்பு

உரிமை மாற்றங்களின் கூற்று

வங்கி

	குறிப்பு	பங்கு மூலதனம்	நிலுவையில் உள்ள மூலதன ஒதுக்கங்கள்	நிரந்தரமான ஒதுக்க நிதி	காசுப் பாய்ச்சல் எல்லை ஒதுக்கம்
		ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
01 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி		25,000,000	-	14,491,000	3,239,266
வருடத்திற்கான மொத்த முற்றடக்க வருமானம்					
வருடத்திற்கான இலாபம்		-	-	-	-
வரி நீங்கலாக ஏனைய மொத்த வருமானம்		-	-	-	22,381,369
வருடத்திற்கான மொத்த வருமானம்		-	-	-	22,381,369
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின் கீழ் பதியப்பட்டுள்ளன					
மேலதிக கட்டண வரி					
2022 ஆம் ஆண்டுக்கான பங்குலாபம்	20.3	-	-	-	-
ஆண்டுக் காலப்பகுதியிலான மூலதன உட்பாய்ச்சல்கள்	50.1	-	730,000	-	-
ஏனைய முற்றடக்க வருமானத்திலிருந்து மாற்றப்பட்டவை	54.4	-	-	-	-
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	51	-	-	640,000	-
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		-	730,000	640,000	-
31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி		25,000,000	730,000	15,131,000	25,620,635
01 ஜனவரி 2023 இல் மீதி		25,000,000	730,000	15,131,000	25,620,635
வருடத்திற்கான மொத்த வருமானம்					
வருடத்திற்கான இலாபம்		-	-	-	-
வரி நீங்கலாக ஏனைய மொத்த வருமானம்		-	-	-	(20,369,118)
வருடத்திற்கான மொத்த வருமானம்		-	-	-	(20,369,118)
உரிமையாண்மை சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள்					
2023 இற்கான பங்கிலாபம்	20.3	-	-	-	-
அகற்றப்பட்ட ஆதனங்களின் மீள்மதிப்பீட்டு மிகை	54.1	-	-	-	-
நிரந்தர ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	51	-	-	534,000	-
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		-	-	534,000	-
31 டிசம்பர் 2021 இல் உள்ளவாறான மீதி		25,000,000	730,000	15,665,000	5,251,517

176ஆம் பக்கத்தில் இருந்து 351பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

ஏனைய ஒதுக்கங்கள்				
FVOCI ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்	மொத்த உரிமை-யாண்மை
ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
588,427	3,345,420	17,356,542	136,739,177	200,759,832
-	-	-	31,972,408	31,972,408
283,445	7,564,044	(41,060)	(2,380,943)	27,806,855
283,445	7,564,044	(41,060)	29,591,465	59,779,263
-	-	-	(6,738,542)	(6,738,542)
-	-	-	(346,410)	(346,410)
-	-	-	-	730,000
(10,548)	-	-	10,548	-
-	-	-	(640,000)	-
(10,548)	-	-	(7,714,404)	(6,354,952)
861,324	10,909,464	17,315,482	158,616,238	254,184,143
861,324	10,909,464	17,315,482	158,616,238	254,184,143
-	-	-	26,693,526	26,693,526
1,695,983	(1,977,563)	4,919,145	(13,258,191)	(28,989,744)
1,695,983	(1,977,563)	4,919,145	13,435,335	(2,296,218)
-	-	-	(173,205)	(173,205)
-	-	(7,241)	7,241	-
-	-	-	(534,000)	-
-	-	(7,241)	(699,964)	(173,205)
2,557,307	8,931,901	22,227,386	171,351,609	251,714,720

உரிமை மாற்றங்களின் கூற்று

குழுமம்

	குறிப்பு	பங்கு மூலதனம்	நிலுவையில் உள்ள மூலதன ஒதுக்கங்கள்	நிரந்தரமான ஒதுக்க நிதி	காசுப்பாய்ச்சல் எல்லை ஒதுக்கம்
		ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
01 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி		25,000,000	-	14,491,000	3,239,266
வருடத்திற்கான மொத்த முற்றடக்க வருமானம்					
வருடத்திற்கான இலாபம்		-	-	-	-
வரி நீங்கலாக ஏனைய மொத்த வருமானம்		-	-	-	22,381,369
வருடத்திற்கான மொத்த வருமானம்		-	-	-	22,381,369
உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், உரிமை மூலதனத்தின் கீழ் பதியப்பட்டுள்ளன					
மேலதிக கட்டண வரி		-	-	-	-
2022 ஆம் ஆண்டுக்கான பங்குலாபம்	20.3	-	-	-	-
வருடத்திற்கான மூலதன உட்செலுத்தல்கள்	50.1	-	730,000	-	-
ஏனைய முற்றடக்க வருமானத்திலிருந்து மாற்றப்பட்டவை		-	-	-	-
நிரந்தர ஒதுக்கத்திற்கான மாற்றம்	51	-	-	640,000	-
கட்டுப்பாடற்றோர் நாட்டத்திற்கான மாற்றம்		-	-	-	-
உரிமைகோரப்படாத உரிமையாண்மையின் மீளத்திரும்புதல்		-	-	-	-
உரிமை பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		-	730,000	640,000	-
31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி		25,000,000	730,000	15,131,000	25,620,635
01 ஜனவரி 2023 இல் உள்ளவாறான மீதி		25,000,000	730,000	15,131,000	25,620,635
வருடத்திற்கான மொத்த வருமானம்					
வருடத்திற்கான இலாபம்		-	-	-	-
வரி நீங்கலாக ஏனைய மொத்த வருமானம்		-	-	-	(20,369,118)
வருடத்திற்கான மொத்த வருமானம்		-	-	-	(20,369,118)
உரிமையாண்மையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரிமையாண்மை சம்பந்தமான கொடுக்கல் வாங்கள்கள்					
2023 ஆம் ஆண்டுக்கான பங்குலாபம்	20.3	-	-	-	-
கட்டுப்பாடற்றோர் நாட்டம் துணை நிறுவன பங்கிலாபங்கள்		-	-	-	-
நிரந்தர ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	51	-	-	534,000	-
அகற்றப்பட்ட ஆதனங்களின் மீள் மதிப்பீட்டு மிகை	54.1	-	-	-	-
ஏனைய ஒதுக்கங்களுக்கு மாற்றம்		-	-	-	-
உரிமை கோரப்படாத பங்கிலாபங்களை மீளத்திருப்புதல்		-	-	-	-
உரிமை பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தம்		-	-	534,000	-
31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி		25,000,000	730,000	15,665,000	5,251,517

176ஆம் பக்கத்திலிருந்து 351ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.

வங்கியின் உரிமைப் பங்குதாரருக்கு காரணமானது					
ஏனைய ஒதுக்கங்கள்					
FVOCI ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்	கட்டுப்பாடற்றோர் நாட்டம்	மொத்த உரிமையான்மை
ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	LKR ' 000
1,483,412	5,186,788	26,302,644	138,104,222	1,589,446	215,396,778
-	-	-	31,994,638	(145,621)	31,849,017
1,111,492	9,843,204	1,255,459	(2,397,033)	35,795	32,230,286
1,111,492	9,843,204	1,255,459	29,597,605	(109,826)	64,079,303
-	-	-	(7,042,422)	-	(7,042,422)
-	-	-	(346,410)	-	(346,410)
-	-	-	-	-	730,000
(10,548)	-	-	10,548	-	-
-	-	-	(640,000)	-	-
-	-	-	134,511	(422,653)	(288,142)
-	-	-	1,427	-	1,427
(10,548)	-	-	(7,882,346)	(422,653)	(6,945,547)
2,584,356	15,029,992	27,558,103	159,819,481	1,056,967	272,530,534
2,584,356	15,029,992	27,558,103	159,819,481	1,056,967	272,530,534
-	-	-	27,571,569	46,018	27,617,587
2,415,451	(2,286,201)	6,136,562	(13,310,635)	16,809	(27,397,132)
2,415,451	(2,286,201)	6,136,562	14,260,934	62,827	220,455
-	-	-	(173,205)	-	(173,205)
-	-	-	-	(5,437)	(5,437)
-	-	-	(534,000)	-	-
-	-	(7,241)	7,241	-	-
-	317,149	-	(317,149)	-	-
-	-	-	-	6,439	6,439
-	317,149	(7,241)	(1,017,113)	1,002	(172,203)
4,999,807	13,060,940	33,687,424	173,063,302	1,120,796	272,578,786

காசுப்பாய்ச்சல்கள் கூற்று

		வங்கி		குழுமம்	
டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2023 ரூ. '000	2022 ரூ. '000	2023 ரூ. '000	2022 ரூ. '000
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
வருமான வரிக்கு முன்னரான இலாபம்		40,342,423	30,976,649	41,773,025	31,052,501
பின்வருவற்றுக்கான சீராக்கங்கள் :					
தேறிய வட்டி வருமானம்	8	(91,187,586)	(126,346,378)	(95,510,112)	(129,768,892)
பங்குலாப வருமானம்	10/13	(322,009)	(450,977)	(389,099)	(515,426)
துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளிலிருந்தான பங்குலாபங்கள்	13	(372,900)	(107,430)	-	-
வரி கழித்த, கூட்டுக் கம்பனிகளின் இலாபம்/(நட்டம்) பங்கு	19	-	-	(33,507)	(122,847)
தொழிற்பாட்டுச் சொத்துக்களிலான மாற்றம்	56.1	130,572,896	(392,658,229)	126,112,293	(389,853,461)
தொழிற்பாட்டுப் பொறுப்புக்களிலான மாற்றம்	56.2	106,210,544	510,080,706	108,724,603	517,045,767
வரிக்கு முன்னரான இலாபத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய காசல்லா விடயங்கள்	56.3	15,602,055	105,190,513	15,942,446	105,731,706
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான ஏனைய தேறிய இலாபம்		(2,220,585)	(56,912)	(2,918,851)	72,145
		198,624,838	126,627,942	193,700,798	133,641,493
நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்புக்கள்		(12,851,008)	(11,204,969)	(12,858,497)	(11,275,993)
பெற்ற வட்டி		287,270,252	289,089,403	292,995,798	295,198,149
செலுத்திய வட்டி		(402,296,042)	(177,094,051)	(405,747,564)	(180,307,490)
பெற்ற பங்குலாபம்		83,926	73,282	96,176	73,282
வருமானவரிக்கு முன்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசு		70,831,966	227,491,607	68,186,711	237,329,441
செலுத்திய வருமான வரி	45	(12,124,580)	(5,500,380)	(12,604,215)	(5,796,331)
மேலதிகமாக செலுத்தப்பட்ட வரி		-	(6,738,542)	-	(7,042,422)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய காசு		58,707,386	215,252,685	55,582,496	224,490,688
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
நிதியியல் முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு - இலதாக்கல் பெறுமானம்		(97,158,853)	(136,219,260)	(96,952,346)	(142,193,560)
நிதியியல் முதலீடுகளின் தேறிய அதிகரிப்பு நியாய பெறுமதி ஏனைய முற்றடக்க வருமானத்தின் ஊடான		(38,256,489)	10,731,712	(39,468,843)	14,095,845
சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்		(3,177,730)	(2,243,640)	(3,578,110)	(2,301,746)
அருவசொத்துக்களின் கொள்வனவு		(476,639)	(1,027,211)	(478,130)	(1,039,078)
சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான வருமானம்		60,688	1,414	96,196	8,748
பெற்ற பங்குலாபம்		610,983	485,126	292,923	448,891
பெற்ற வட்டி		179,414,013	115,497,384	181,368,386	116,324,524
முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான (பயன்படுத்திய) தேறிய காசு		41,015,973	(12,774,475)	41,280,076	(14,656,376)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி		குழுமம்	
		2023 ரூ. '000	2022 ரூ. '000	2023 ரூ. '000	2022 ரூ. '000
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்					
ஏனைய கடன்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு		(63,812,127)	(64,302,108)	(66,809,723)	(61,175,038)
பங்குகள் வழங்கலிலிருந்தான வருவாய்கள்		-	730,000	-	730,000
தொகுதிக்கடன்/மூலதன முறிகள் வழங்கலில் இருந்தான வருவாய்கள்		10,000,000	6,490,000	10,622,830	6,557,700
தொகுதிக் கடன் மீட்பின் மீதான கொடுப்பனவுகள்		(10,385,589)	(8,103,950)	(10,385,589)	(10,211,132)
வங்கியின் உரிமைப் பங்குதாரருக்கு செலுத்தப்பட்ட பங்குலாபம்		(173,205)	(346,410)	(173,205)	(346,410)
கட்டுப்பாடற்றோர் நாட்டத்திற்கு செலுத்தப்பட்ட பங்குலாபம்		-	-	(5,437)	-
பங்கு மீள் கொள்வனவுக்கான கொடுப்பனவுகள்		-	-	-	(287,910)
கடன்கள் மற்றும் கடன் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்		(20,424,195)	(85,222,144)	(20,275,762)	(85,537,678)
நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(84,795,116)	(150,754,612)	(87,026,886)	(150,270,468)
ஆண்டுக் காலத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றிலான தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)		14,928,243	51,723,598	9,835,686	59,563,844
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		118,512,831	66,789,233	125,309,310	65,745,466
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		133,441,074	118,512,831	135,144,996	125,309,310
காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றின் பகுப்பாய்வு					
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	22	135,550,505	128,401,532	137,369,158	135,230,827
வங்கி மேலதிகப் பற்றுக்கள்	39	(2,109,431)	(9,888,701)	(2,224,162)	(9,921,517)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை		133,441,074	118,512,831	135,144,996	125,309,310

176ஆம் பக்கத்திலிருந்து 351ஆம் பக்கம் வரையுள்ள குறிப்புக்கள் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1 அறிக்கையிடும் நிறுவனம்

1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

இலங்கை வங்கியானது ("வங்கி") இலங்கையில் வதிவிடத்தையுடைய அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கியாவதுடன், இது 1938இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்றவாறு 2 ஆகஸ்ட் 1939 ஒருங்கிணைக்கப்பட்டது. இது 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் கீழ் நிறுவப்பட்ட ஒரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும். வங்கியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயம் "பிஒசி சதுக்கம்", இலக்கம் 01, பேங்க் ஒவ் சிலோன் மாவத்தை, கொழும்பு 01, இலங்கையில் அமைந்துள்ளது. வங்கியினால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளன. 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான வங்கியின் ஊழியர் சேனையானது 8,579 ஆகும் (2022 - 8,209)..

1.2 ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் வங்கியினது ("தாய்நிறுவனம்"), அதன் துணைநிறுவனங்களது (கூட்டாக "குழுமம்" எனவும் மற்றும் தனித்தனியாக "குழும நிறுவனங்கள்" எனவும் குறிப்பிடப்படுகின்றது) மற்றும் அதன் இணைநிறுவனங்களில் குழுமத்தின் நலன்களையும் உள்ளடக்குகின்றது. குழுமத்திலுள்ள கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பரில் நிறைவுறும் ஒரு பொதுவான நிதியியல் வருடத்தினைக் கொண்டுள்ளன, இதற்கு விதிவிலக்காக ட்ரான்ஸ்நெ'னல் லங்கா ரெக்கோட்ஸ் சொலூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் சீபேங்க் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் ஆகிய இணைக்கம்பனிகள் காணப்படுகின்றன. வங்கியே குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாகும்.

1.3 பிரதான நடவடிக்கைகள்

1.3.1 வங்கி

இவ்வாண்டின்போதான வங்கியின் பிரதான நடவடிக்கைகளாக, தனிப்பட்ட வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கரை கடந்த வங்கியியில், வர்த்தக நிதியளித்தல், குத்தகை நிதியளித்தல், முதன்மை வர்த்தகம், முதலீட்டு வங்கியியல் மற்றும் சொத்து முகாமைத்தவம், திறைசேரி செயற்பாடுகள், தொடர்பாளர் வங்கியியல் மற்றும் பணமனுப்பல்கள், இஸ்லாமிய வங்கியியல், வங்கிக் காப்புறுதி, அடமானம், கடன் அட்டை வசதிகள், வெளிநாட்டு நாணய செயற்பாடுகள் மற்றும் ஏனைய நிதியியல் சேவைகள் என்பன காணப்படுகின்றன.

1.3.2 துணை நிறுவனங்கள்

வங்கியின் இணைநிறுவனங்களது பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு:

கம்பனியின் பெயர்	பிரதான வணிக நடவடிக்கைகள்
புரப்பட்டி டிவலப்மன்ட் பிஎல்சி	இலங்கை வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடத்தினைப் பராமரித்து முகாமை செய்தல்
மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி	குத்தகை,வாடகைக்கொள்வனவு, கூட்டு மற்றும் சில்லறைக் கடன்கள்,கூட்டாண்மைஆலோசனைச்சேவைகள், மூலதனச் சந்தைச் செயற்பாடுகள், எல்லை வியாபாரம், நுண்நிதியிடல் மற்றும் விவசாயக் கடன் வசதி, அடகு பிடித்தல், சொத்து வியாபாரம் மற்றும் வைப்புக்களை ஏற்றல்
பேங்க் ஒ்ப் சிலோன் (UK) லிமிட்டட்	விவேகமான முறைமைப்படுத்தல் அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி மற்றும் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இலுள்ள நிதியியில் நடத்தை அதிகாரசபையினால் முறைமைப்படுத்துப்படுவதுடன், இது சிற்றளவு மற்றும் கூட்டாண்மை வங்கியியல், திறைசேரி செயற்பாடுகள், தொடர்பாளர் வங்கியியல் சேவைகள் மற்றும் வர்த்தக நிதியளித்தல் வசதிகள் என்பவற்றில் ஈடுபடுகின்றது.
பிஒசி ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் அன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	கொழும்பு 03 இலுள்ள பிஒசி மேர்ச்சன்ட் டவர் மற்றும் கண்டியிலுள்ள சீபேங்க் இல்லத்திலுள்ள அலுவலக இடத்தை வாடகைக்கு விடுதல்.
பிஒசி ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பிரயாணம் தொடர்பான சேவைகளில் ஈடுபடுதல்.
ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டட்	ஹோட்டல் சேவைகளை வழங்குதல்.
சீபேங்க் ஹொலிடே ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பிரயாண தங்குமிடங்கள்/ஹோட்டல்கள்/ஓய்வில்லங்கள்/ விருந்தினர் இல்லங்கள் என்பவற்றை முகாமைப்படுத்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டட்	ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்பறுதி வணிகங்களை மேற்கொள்ளல்.
பிஒசி மெனேஜ்மன்ட் அன்ட் சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட்	செயற்பாட்டில் இல்லை.

1.3.3 கூட்டு நிறுவனங்கள்

வங்கியின் இணைக்கம்பனிகளினது முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

கம்பனியின் பெயர்	பிரதான வணிக நடவடிக்கைகள்
சீ பாங்க் அசற் மனேஜ்மன்ட் லிமிட்டட்	அலகு நம்பிக்கை நிதிகளையும் ஏனைய தனிப்பட்ட சொத்துப்பட்டியல்களையும் முகாமைப்படுத்தல்
லங்கா செக்குறிட்டீஸ் (பிறைவேற்) லிமிட்டட்	உரிமைமூலதனவர்த்தகப்படுத்தல்,கடன் வர்த்தகப்படுத்தல் மற்றும் எல்லை வர்த்தகப்படுத்தல் என்பவற்றில்
ட்ரான்ஸ் நஷனல் லங்கா றெக்கோட்ஸ் சொலூஷன் (பிறைவேற்) லிமிட்டட்	ஆதனங்களையும் மனைநிலைச் சொத்துக்களையும் வாடகைக்கு விடுதல்
சதேண் டெவெலப்மெண்ட் பினான்சியல் கம்பனி லிமிட்டட்	தற்போது செயற்படுவதில்லை. நிறுவனக் கலைப்பு செயன்முறையிலுள்ளது

பீஒசி மெனேஜ்மன்ட் அன்ட் சப்போர்ட் சேரிவிசஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆனது 2007 இலிருந்து அதன் பிரதான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சதன் டெவலப்மன்ட் வைனான்சியல் கம்பனி லிமிட்டட் (ச.டெ. வை.க.லி.) உம் செயற்பாட்டில் இல்லை. ச.டெ. வை.க.லி. இன் பணிப்பாளர்கள் கம்பனியினை கலைப்பதற்கு தீர்மானித்துள்ளதுடன் அந்த செயன்முறையானது நடந்தவண்ணமுள்ளது.

2 நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

2.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும்

பணிப்பாளர்கள் சபையானது 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs மற்றும் LKASs) ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்க வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- இலாபம் அல்லது நட்டக் கூற்று
- விரிவான வருமானக் கூற்று
- நிதி நிலைமைக் கூற்று
- உரிமை மாற்றங்களின் கூற்று - காசுப் பாய்ச்சல் கூற்று
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2.2 நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் 27 பெப்ரவரி 2024 இல் அங்கீகரிக்கப்பட்டன.

3 தயாரிப்பின் அடிப்படை

3.1 இணக்கப்பாட்டு கூற்று

குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களும் வங்கியின் தனியான நிதிக் கூற்றுக்களும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs) ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. (இவை இரண்டும் சேர்த்து SLFRSs என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன).

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 1938 இன் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுக்கு இணங்கியொழுகுகின்றன. குழுமமானது 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு பிரயோகிக்கப்படும் SLFRSs உடனான இணக்கப்பாட்டுடன் நிதிக் கூற்றுக்களையும் 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஒப்பிடப்படும் தகவல்களையும் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிட்டுள்ளவாறு தயாரித்துள்ளது.

நிதிக் கூற்றுக்கள் மற்றும் அவற்றிலான வெளிப்படுத்தல்களையும் தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் பயன்படுத்தப்பட்ட வடிவமைப்புகள் இலங்கை மத்திய வங்கியின் "உரிமமளிக்கப்பட்ட வங்கிகளினால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல்களின் பிரசுரம்" இலான 2019 இன் 02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட குறித்த வடிவமைப்புகளுடன் இணங்கியுள்ளன..

3.2 அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் அடிப்படையில்தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் பின்வருவன நீங்கலாக,ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டுள்ள

பணவீக்கக் காரணிகளுக்காக எவ்விதமான செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை:

- மூலாதார நிதியியல் கருவிகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன (குறிப்பு 26 மற்றும் 41)
- இலாபம் அல்லது நட்டத்தினூடான அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன (குறிப்பு 27)
- ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்பு 30)
- உடைமையாளர் நிலைகொண்டுள்ள இறையிலி நிலமும் கட்டிடங்களும் மற்றும் குத்தகை நிலங்களிலான கட்டிடங்கள் மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் அதன்பின்னரான ஏதேனும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன (குறிப்பு 34)
- நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் காப்பீட்டுக் கணிப்பு முறையில் பெறுமதியிடப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியிலிருந்து திட்டத்தின் மொத்த சொத்துக்களின் நியாயப் பெறுமதி கழிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது (குறிப்பு 48).
- காசுப் பாய்ச்சல் எல்லை ஒதுக்கமானது எல்லை கணக்கீட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன (குறிப்பு 53).

3.3 நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள உறுப்படிகள் அத்தகைய உறுப்படியின் தன்மைக்கேற்ப தொகுக்கப்பட்டு அவற்றின் சார்புடைய திரவத்தன்மை மற்றும் முதிர்வுப் போக்கு ஆகியவற்றின் ஒழுங்கிற்கமைய பெரும்பாலும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. அறிக்கையிடப்பட்ட திகதிக்கு பின்னர் 12 மாதங்களுள் மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்க அதிகமான மீட்டல் அல்லது தீர்ப்பனவு தொடர்பான ஒரு பகுப்பாய்வு குறிப்பு 60 - "சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வுப் பகுப்பாய்வு" இல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

3.3.1 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுப்படிகள், வங்கி செயற்படும் பிரதான பொருளாதார சூழலின் செயற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாயில் ("LKR") அளவிடப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

3.3.2 அட்டுறு அடிப்படையிலான கணக்கீடு

காசுப் பாய்ச்சல் கூற்றில் காணப்படும் தகவல்கள் நீங்கலாக, நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

3.3.3 ஈடுசெய்தல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் பொதுவாக மொத்தமான நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன. இவை பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகை அறிக்கையிடப்படுகின்றது, ஒரு எதிர்கால நிகழ்வில் ஐயப்பாடின்றி அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஒரு நிபந்தனையற்ற சட்டரீதியானவலியுறுத்தத்தக்கஉரிமையினைக் கொண்டுள்ளதற்கும் மேலாக, தரப்பினர்களும் பின்வரும் அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யும் நோக்கினைக் கொண்டிருந்தால்:

- வழக்கமான வணிகப் போக்கில்.
- தவறுதல் நிகழ்வு.
- வங்கி/குழுமம் மற்றும்/அல்லது அதன் எதிர்தரத்தவர்களது வகையற்ற நிலை அல்லது முறிவு நிலை நிகழ்வின்போது.

ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருள்விளக்கம் ஆகியவற்றினால் வேண்டப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டாலொழிய இலாபம் அல்லது நட்டக் கூற்றில் வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படுவதில்லை.

3.3.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

ஒப்பீட்டுத் தகவல்கள் எடுத்துரைப்பான மற்றும் விளக்கமான தன்மையில் வழங்கப்படுவதுடன், அது நடப்பு ஆண்டின் நிதிக் கூற்றுக்களை புரிந்துகொள்வதற்கு இயைபுடையதாக மற்றும் அவசியமானபோது நடப்பு காலத்தின் முன்னிலைப்படுத்தலுக்கு அமைவுறுவதற்காக மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.3.5 பொருண்மை மற்றும் ஒருங்கிணைப்பு

LKAS 1 – "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" இற்கு அமைவாக ஒத்த உறுப்படிகளின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வேறாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்தமையாத தன்மையுடைய அல்லது செயற்பாடுகளுடைய உறுப்படிகள் அவை பொருண்மையின்றி காணப்பட்டாலொழிய வேறாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

3.3.6 முழுதாக்கல்

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகள் கிட்டியஆயிரம் ரூபாய்களுக்கு முழுதாக்கப்பட்டுள்ளன, LKAS 1 – "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" இனால் அங்கீகரிக்கப்பட்டவாறு வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தால் நீங்கலாக ஆகும்.

3.3.7 காசுப் பாய்ச்சல் கூற்று

LKAS 7 – "காசுப் பாய்ச்சல் கூற்று" இன் பிரகாரம் "நேரில் முறை" இனை பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான இலாபமானது செம்மையாக்கப்பட்டுள்ளது. காசும் காசுக்குச் சமனானவைகளும், கையிலுள்ள காசு, கையகப்படுத்தல் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு குறைவான முதிர்வுடனான உயர்ந்த திரவத்தன்மையுடைய ஏனைய குறுங்கால முதலீடுகள் மற்றும் மேலதிகப் பற்றுக்களை உள்ளடக்கும்.

3.3.8 முக்கியமான கணக்கீட்டு கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு அறிக்கையிடப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினத் தொகைகள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளின் பிரயோகத்தினை பாதிக்கக்கூடிய முகாமைத்துவத்தினது கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களது பயன்படுத்தல் தேவைப்படுகின்றது. இந்த மதிப்பீடுகளிலிருந்து மெய்யான விளைவுகள் வேறுபடலாம். கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன வரலாற்றுரீதியான அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் பல்வேறு ஏனைய காரணிகளின் அடிப்படையிலாகும் என்பதுடன் அவை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்படும் காலம் மற்றும்/அல்லது திருத்தமானது எதிர்காலங்களையும் பாதித்தால் எதிர்காலங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில் முகாமைத்துவமானது பின்வரும் கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொண்டுள்ளதுடன் இவை நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் கணிசமான விளைவினைக் கொண்டுள்ளன. கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களது பயன்பாட்டிற்கு மிகவும் உணர்திறனான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிப்பட்டுள்ளன.

3.3.8.1 தொடர்ந்து இயங்குதல்

செயல்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் முகாமைத்துவமானது ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களை கொண்டுள்ளது என திருப்பதியடைகின்றது. மேலும், செயல்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தும் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இதன் பிரகாரம், செயல்நிலை தொடர்ச்சி அடிப்படை பொருத்தமானது என முகாமைத்துவம் திருப்தியடைகின்றது.

3.3.8.2 கடப்பாடும் எதிர்பாரா பொறுப்புக்களும்

அனைத்து தெரிந்த மற்றும் அளவிடக்கூடிய பொறுப்புக்களை தீர்மானிப்பதில் பகுத்துணரக்கூடிய அனைத்து இடர்களும் கணக்கீடு செய்யப்படுகின்றது. எதிர்பாரா பொறுப்புக்கள் என்பன சாத்தியமான கடப்பாடுகள் என்பதுடன், அவற்றின் உளதாம் தன்மையானது, சாத்தியப்படாத மற்றும் நம்பகத்தன்மையுடன் அளவிடப்பட இயலாத பொருளாதார நலன்கள் காணப்படும்போது நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நடைமுறையான கடப்பாடுகளினால் மாத்திரமே உறுதிப்படுத்தப்படுகின்றது. எதிர்பாரா பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதில்லை, ஆனால் குழுமம் சாத்தியமான கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொறுப்பாயிருக்கும் என்பது அரிதானது எனக் கருதினாலொழிய வெளிப்படுத்தப்படும்.

3.3.8.3 நிதியியல் கருவிகளின் நியாயப் பெறுமதி

அளவிடப்படும் திகதியில் சந்தை பங்குபற்றுநர்களிடையே ஒரு முறையான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினது விற்பனையிலிருந்து பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்காக செலுத்தப்படும் விலையே நியாயப் பெறுமதியாகும். ஒரு நிதிச் சொத்தின் அல்லது பொறுப்பின் வகைப்படுத்தலானது, எங்கெங்கு சாத்தியப்படுகின்றதோ, நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதனை விளைவித்தால், நியாயப் பெறுமதியானது, குழுமம் உடனடி அணுக்கத்தைக் கொண்டுள்ள மிகவும் சாதகமான ஒரு உயிர்ப்புள்ள சந்தையில் விலையிடப்பட்ட கேட்டல் அல்லது வழங்கல் விலைக்கு குறிப்பீடு செய்து தீர்மானிக்கப்படுகின்றது. பொருத்தமானவாறு நியாயப் பெறுமதியினுள் கடன் இடருக்கான ஒரு செம்மையாக்கலும் ஒருங்கிணைக்கப்படுகின்றது. ஒரு உயிர்ப்புள்ள சந்தையில் விலையிடப்பட்ட ஒரு நிதிப் பொறுப்பின் ஒரு தேறிய திறந்த நிலைமைக்கான நியாயப் பெறுமதியானது நடைமுறை வழங்கல் விலை மற்றும் ஒரு நிதிச் சொத்திற்கு கேட்டல் விலை ஆகியன வைத்திருக்கப்படும் அல்லது வழங்கப்பட்ட கருவியின் அலகுகளின் எண்ணிக்கையினால் பெருக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சொத்து அல்லது பொறுப்புக்கு ஒரு உயிர்ப்புள்ள சந்தை காணப்படாதவிடத்து, குழுமமானது நியாயப் பெறுமதிக்கு வருவதற்கு ஒரு கணிதவியல் மாதிரியினை உள்ளடக்கிய ஒரு பெறுமதியிடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்றது. இது பின்வருவனவற்றின் பயன்பாட்டினையும் உள்ளடக்குகின்றது: சமீபத்தைய முழங்கையளவு தூரத்திலான கொடுக்கல் வாங்கலிலிருந்து பெறப்பட்ட கொடுக்கல் வாங்கல் விலை, கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு, தெரிவுரிமை விலையிடல் மாதிரிகள் மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் காணப்பட்ட சந்தை நிலைமைகள் மற்றும் இடர்களின் அடிப்படையிலான ஏனைய பெறுமதியிடல் தொழில்நுட்பங்கள் என்பனவாகும். அவ்வாறு செய்வதில், அவதானிக்கக்கூடிய சந்தை உள்ளீடுகளில் உச்சப் பயன்பாட்டினையும் நிறுவனம் சார்ந்த உள்ளீடுகளில் ஆகக்குறைந்த சார்ந்திருப்பினையும் இடுகின்ற ஒரு பெறுமதியிடல் நுட்பத்தினை பயன்படுத்தி நியாயப் பெறுமதியானது மதிப்பிடுப்படுகின்றது.

ஆரம்ப அங்கீகாரத்தின்போதான ஒரு நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதிக்கான சிறந்த சான்றாக கொடுக்கல் வாங்கல் விலை காணப்படுகின்றது (அதாவது வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட மறுபயனின் நியாயப் பெறுமதி), இது அதே கருவியிலான ஏனைய அவதானிக்கக்கூடிய நடைமுறை சந்தை கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடுவதன் மூலம் அந்த கருவியின் (அதாவது திருத்தங்கள் அல்லது மீள்பொதியிடல் இன்றி) நியாயப் பெறுமதி ஆதாரப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகளை மாத்திரம் உள்ளடக்கும் மாறிகளையுடைய ஒரு பெறுமதியிடல் நுட்பத்தின் அடிப்படையிலிருந்தாலொழிய ஆகும். அத்தகைய சான்றுகள் காணப்படும்போது குழுமமானது கொடுக்கல் வாங்கல் விலைக்கும் ஆரம்ப அங்கீகாரத்தின்போதான (அதாவது முதல் நாளில்) இலாபம் அல்லது நட்டத்தில் உள்ள நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்தினை அங்கீகரிக்கின்றது. நிதிக் கருவிகளின் பெறுமதியிடல்கள் குறிப்பு 63 இல் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

3.3.8.4 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள்

SLFRS 9 - "நிதியியல் கருவிகள்" இன் கீழான வலுக்குன்றல் கட்டணத்தின் அளவீட்டிற்கு, கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான ஒரு

வலுக்குன்றல் கட்டணத்தினை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாயச்சல்களின் தொகை மற்றும் நேரம் ஆகியவற்றினை இனங்காண்பதில் மற்றும் மதிப்பிடுவதில் முகாமைத்துவத்தின் கருத்து தேவைப்படுகின்றது. இதன் பிரகாரம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஒரு வலுக்குன்றல் கட்டணம் ஏற்பாடு செய்யப்படவேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் குழுமமானது அதன் தனித்தனியாக முக்கியத்துவமான கடன்கள் மற்றும் முற்பணங்களை மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, வலுக்குன்றல் நட்டத்தினை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரம் ஆகியவற்றினை இனங்காண்பதில் மற்றும் மதிப்பிடுவதில் முகாமைத்துவத்தின் கருத்து தேவைப்படுகின்றது. இந்த காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதில், கடன்பெறுநரது நிதி நிலைமை பற்றியும் பிணைச்சொத்தின் தேறிய எய்தப்பெறக்கூடிய பெறுமதி மற்றும் ஏனைய தொடர்புடைய காரணிகளில் குழுமமானது கருத்தினை மேற்கொள்கின்றது. இந்த மதிப்பீடுகள் பல்வேறு காரணிகளிலான அனுமானங்கள் மற்றும் மெய்யான விளைவின் அடிப்படையில் என்பதுடன் இது வலுக்குன்றல் படிக்கு எதிர்கால மாற்றங்களை விளைவிக்கும். தனித்தனியாக முக்கியமல்லாதவை எனக் கருதப்படும் ஒரேமாதிரியான கடன்கள் மற்றும் முற்பணங்கள் திரளுக்கு, தனித்தனியாக முக்கியமானதாக கருதப்படும் கடன்கள் திரளுக்கு ஆனால் தனித்தனியாக வலுக்குன்றவில்லை என காணப்பட்டவைக்கு ஒரு கூட்டு வலுக்குன்றல் ஏற்பாடு நிறுவப்பட்டுள்ளது. வலுக்குன்றலிலான ஒரு கூட்டு மதிப்பீடானது, கடன் தேக்கத்திலிருந்தான தரவு (கடன் தரம், நிலுவை மட்டம், கடன் பயன்பாடு போன்றவை), இடரின் செறிவுகள் மற்றும் பொருளாதாரத் தரவுகள் (தொழிலற்ற மட்டங்கள், பணவீக்கம், மொ.உ.உ. வளர்ச்சி வீதம் மற்றும் தேசத்தின் தரப்படுத்தல் உள்ளடங்கலானவை) மற்றும் வெவ்வேறு தனியான குழுக்களின் செயற்திறன் ஆகியவற்றை கணக்கிலெடுக்கின்றது.

SLFRS 9 - "நிதியியல் கருவிகள்" இல் காணப்படும் வலுக்குன்றல் தேவைப்பாடுகள் எதிர்பார்த்த கடன் நட்டங்கள் (எ.க.ந.) மாதிரியின் அடிப்படையிலாகும் என்பதுடன், அது நிதிக் கருவிகளின் கடன் தரத்திலான சீர்கெடல் மற்றும் மேம்பாட்டில் பொதுவான போக்கினை பிரதிபலிக்கின்றது. குழுமானது ஒன்றில் ஒரு கூட்டு அல்லது தனித்தனியான அடிப்படையில் எ.க.ந. இனை கணிப்பீடு செய்கின்றது. எ.க.ந. இன் தொகையானது ஒரு நட்ட படியாக அல்லது ஏற்பாடாக அங்கீகரிக்கப்படுவதுடன் இது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் சீர்கெடலின் அளவில் தங்கியுள்ளதுடன் பின்வரும் அடித்தளங்களின் கீழ் அளவிடப்படுகின்றன:

- 12 மாத எ.க.ந. (கட்டம் 1), இவை கடன் இடரில் குறிப்பிடத்தக்க சீர்கெடல் காணப்படாதபோது அனைத்த உறுப்படிகளுக்கும் பிரயோகிக்கப்படும்.
- வாழ்நாள் எ.க.ந. (கட்டங்கள் 2 மற்றும் 3), இவை ஒரு தனித்தனியான அல்லது கூட்டு அடிப்படையில் கடன் இடரில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படும்போது பிரயோகிக்கப்படுகின்றது.

மேலும், குழுமமானது எ.க.ந. மாதிரியின் கீழ் பின்வருவன தொடர்பாக மேலதிக கருத்துக்கள், மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

- கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பு காணப்பட்டால், மற்றும் நிதிச் சொத்துக்களுக்கான வலுக்குன்றலானது ஒரு வாழ்நாள் எ.க.ந. அடிப்படையில் அளவிடப்படல் வேண்டும் என்பதை மதிப்பிடுவதற்காக குழுமத்தின் வரன்முறை.
- பல்வேறு சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகளின் தெரிவு உள்ளடங்கலான எ.க.ந. மாதிரிகளின் அபிவிருத்தி.
- மொ.உ.உ வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், பரிமாற்றக வீதங்கள் மற்றும் தொழில் இல்லாமை போன்ற பாரியபொருளாதார உள்ளீடுகளுக்கும் தவறுதலுக்கான சாத்தியம் (த.சா.), தவறுதலின் போதான வெளிப்பாடு (த.வெ.) மற்றும் தவறுதல் ஏற்படின் நட்டம் (த.ஏ.ந.) ஆகியவற்றின் விளைவுக்கும் இடையேயான இணைப்பினை தீர்மானித்தல்.
- எ.க.ந. மாதிரியினுள் பொருளாதார உள்ளீடுகளை பெறுவதற்காக எதிர்நோக்கும் பாரியபொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அவற்றின் சாத்தியமான நிறையிடல்கள்.

பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் கூட்டு ஏற்பாடு கணிப்பிடலுக்கு துணையளிக்கின்ற எதிர்நோக்கும் பாரியபொருளதார அனுமானங்கள் என்பன குறிப்பு 4.4.11 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இன் பிரகாரம், ஒரேவிதமான கடன் திரள்களுக்கான கூட்டு ஏற்பாடானது புள்ளிவிபரவியல் முறைகள் அல்லது நட்டத் தொகையினை மதிப்பிடுவதற்காக தவணை தவறுதலிலான வரலாற்று தரவுகளின் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வினை பயன்படுத்தி வரலாற்று நட்ட வீத அனுபவத்தின் அடிப்படையில் ஒரு சூத்திர அணுகுமுறையில் நிறுவப்படுகின்றது. அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான பொருளாதார நிலைமைகள் மற்றும் கடன் தேக்க காரணிகளை பிரதிபலிப்பதற்காக வரலாற்று தகவல்கள் பொருத்தமானவாறு செம்மையாக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் வந்த நட்டத்தின் மதிப்பீட்டினை உறுதிசெய்வதற்காக முகாமைத்துவம் கருத்துக்களை பிரயோகிக்கின்றது. நட்ட வீதங்கள் வழமையாக மெய்யான நட்ட அனுபவத்திற்கு எதிராக மீளாய்வு செய்யப்படுகின்றது. மெய்யான நட்ட அனுபவ சூழமைவில் அதன் மாதிரியினை வழமையான மீளாய்வு செய்து அவசியமானவிடத்து செம்மையாக்குதல் குழுமத்தின் கொள்கையாகும். ஏற்பாட்டின் துல்லியத்தன்மையானது மாதிரியின் அனுமானங்கள் மற்றும் வலுக்குன்றலை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட வரைகூறுகளில் தங்கியுள்ளன. கடன்கள் மற்றும் முற்பணங்களிலான வலுக்குன்றல் நட்டங்களின் விபரங்கள் குறிப்பு 14 இல் வழங்கப்பட்டுள்ளன..

3.3.8.5 துணைநிறுவனங்கள், ஏனைய நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்களிலான முதலீட்டின் வலுக்குன்றல்

குழுமமும் வங்கியும் ஒரு முதலீடு அல்லது ஒரு நிதிச் சொத்து வலுக்குன்றியுள்ளதா என்பதை தீர்மானிப்பதில் LKAS 36 – "சொத்துக்களின் வலுக்குன்றல்" மற்றும் SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" ஆகியவற்றின் வழிகாட்டிகளை பின்பற்றுகின்றது. வலுக்குன்றல் குறிகாட்டிகளின் தீர்மானம் மற்றும் இனங்காண்பதில், ஒரு முதலீட்டின் அல்லது ஒரு நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியானது, துறை மற்றும் தொழில்துறையின் செயற்திறன், தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களுடன் செயற்பாட்டு சூழல் மாற்றங்கள் போன்ற காரணிகளை கருத்திலெடுத்து முதலீட்டின் அல்லது நிதிச் சொத்தின் நெருங்கிய கால வணிக கண்ணோட்டத்தின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் அதன் கிரயத்திற்கு எந்த அளவுக்கு மற்றும் எவ்வளவு காலத்திற்கு குறைவாக காணப்படும் என்பது வலுக்குன்றல் குறிகாட்டிகளின் தீர்மானம் மற்றும் இனங்காண்பதில் தேவைப்படுகின்றது. இந்த செயன்முறையானது மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் முக்கியமான கருத்துக்களை உள்ளடக்குகின்றது.

3.3.8.6 நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடு

நிர்ணயிக்கப்பட்ட நலன் ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் ஏனைய தொழிலின் பின்னராக நலன் திட்டங்களது செலவானது ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல் முறையினை பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது பின்வருவனவற்றை நிர்ணயிக்கும் பல்வேறு அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றது: கழிவிறக்க வீதங்கள், திட்டத்தின் சொத்துக்களில் எதிர்பார்க்கும் விளைவு வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள். மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு என்பவையாகும். இந்த திட்டங்களின் நீண்டகால தன்மையின் நிமித்தம், அத்தகைய மதிப்பீடுகள் கணிசமானளவு நிச்சயமற்றதன்மைக்கு உட்படுகின்றன. பொருத்தமான கழிவிறக்க வீதத்தினை தீர்மானிப்பதில், குழுமமானது, நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் எதிர்பார்க்கப்படும் காலஅளவுடன் பொருந்துகின்ற முதிர்வுகளுடனான இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி முறிகளின் வட்டி வீதத்தினை கருத்திலெடுக்கின்றது. இறப்பு வீதமானது பொதுவாக கிடைக்கக்கூடிய இறப்பு அட்டவணையின் அடிப்படையிலாகும். எதிர்கால சம்பள அதிகரிப்புகளும் ஓய்வூதிய அதிகரிப்புகளும் பணவீக்க வீதங்கள் மற்றும் குழுமத்தின் சம்பள அதிகரிப்பு வீதங்களின் அடிப்படையிலாகும். அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் மீளாய்வு செய்யப்படுவதுடன் இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் குறிப்பு 48 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.3.8.7 காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதி

இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் மற்றும் குழுமத்தின் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்களும் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு நியாயப் பெறுமதியில் பிரதிபலிக்கப்படுகின்றது. குழுமமானது SLFRS 13 - "நியாயப் பெறுமதி அளவீடு" இற்கமைய அத்தகைய ஆதனங்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு சுயாதீன மதிப்பீட்டு நிபுணர்களை ஈடுபடுத்தியது. இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்களின் பெறுமதியிடலின் விபரங்கள் குறிப்பு 34 இல் வழங்கப்பட்டுள்ளது.

3.3.8.8 ஆதனம், பொறி மற்றும் உபரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் பயன்பாட்டுக்காலம்

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டுக் காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளின் மதிப்பீட்டில் முகாமைத்துவத்தின் கருத்தானது நிறைவேற்றப்படுவதுடன், இதனால் இவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவையாகும். ஒவ்வொரு சொத்துப்பிரிவிற்கும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைகள் மற்றும் வீதங்களது விபரங்கள் குறிப்பு 34 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.3.8.9 முதலீட்டு ஆதனங்களின் வகைப்பாடு

ஒரு ஆதனம் ஒரு முதலீட்டு ஆதனமாக தகமை பெறுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் அதன் பகுத்தறிவினை பயன்படுத்த வேண்டியுள்ளது. வாடகைகளை உழைப்பதற்காக வைத்திருக்கப்படும் ஒரு ஆதனம் அல்லது மூலதன பெறுமதியேற்றத்திற்காக அல்லது இரண்டிற்காகவும் வைத்திருக்கப்படுபவை குழுமத்தினால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்களிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமாக காசுப் பாய்ச்சல்களை உருவாக்கினால், அவை முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன. மறுபுறத்தில், செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் ஆதனங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான செயன்முறைக்காக அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுபவை, தனித்து நிற்கும் சொத்துக்களாக காசுப்பாய்ச்சல்களை நேரடியாக உருவாக்க இயலாதவை ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்படுகின்றது..

3.3.8.10 முதலீடு செய்யப்பட்டவர்கள் மீதான கட்டுப்பாடுகளது தீர்மானம்

துணைநிறுவனங்கள் என்பன வங்கியினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும், வங்கியானது வெளிப்படுத்தப்படும்போது கட்டுப்பாடு அடையப்படுகின்றது, அல்லது முதலீடு செய்யப்பட்டுள்ளவருடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையக்கூடிய விளைவுக்கான உரிமையினைக் கொண்டிருந்தால் மற்றும் முதலீடு செய்யப்பட்டுள்ளவர் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த முதலீடு செய்யப்பட்டவர்களது விளைவினில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலினை கொண்டிருந்தால் ஆகும். வங்கி அதன் முதலீடு செய்யப்பட்டவர்கள் மீதான கட்டுப்பாட்டினை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவமானது அதன் பகுத்தறிவினை பிரயோகிக்கின்றது.

3.3.8.11 வரிவிதிப்பு

குழுமமானது வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் ஏனைய பொருத்தமான வரிகளுக்கு உட்பட்டதாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் நேரத்தில் பொருத்தமான வரிச் சட்டங்களது பொருள் விளக்கம் தொடர்பாக நிலவிய நிச்சயமற்ற தன்மையின் காரணமாக நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக மொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு ஒரு கருத்து தேவைப்படுகின்றது. பொருத்தமான வரி வீதங்களின் விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் குறிப்புக்கள் 4.8, 18 மற்றும் 37 இல் வழங்கப்பட்டுள்ளன. குழுமமானது மாற்றுவிலையிடல் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டுள்ளதுடன் மாற்றுவிலையிடல் ஒழுங்குவிதிகளின் தாக்கத்தினை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பகுத்தறிவினை பயன்படுத்துவதற்கான அவசியம் காணப்படுகின்றது. இதன் பிரகாரம், பார்வையளவில் ஒழுங்குவிதிகளை பிரயோகிப்பதில் முக்கியமான கருத்துக்களும் மதிப்பீடுகளும் பயன்படுத்தப்பட்டன. இது பின்வருவன உள்ளடங்கலாக ஆனால் வரையறுக்கப்படாத, இணைக்கப்பட் பொறுப்பேற்புக்களினை இனங்காணுதல், உரிய முழங்கையளவு தூர விலைகளது மதிப்பீடு மற்றும் பொருத்தமான விலையிடல் பொறிமுறையினை தெரிவுசெய்தல் என்பனவாகும். நடைமுறை வரிச் சுமையானது அத்தகைய பகுத்தறிவுகளுக்கு உட்பட்டதாகும். முகாமைத்துவத்தின் பொருள் விளக்கம் மற்றும் வரி ஒழுங்குவிதிகளது பிரயோகத்திற்கிடையேயான வித்தியாசங்களின் விளைவாக மதிப்பிடப்பட்ட வருமான வரிச் சுமைக்கும் மெய்யாகவே செலுத்தவேண்டியவைக்கும் இடையே வித்தியாசங்கள் எழலாம்.

4 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

வங்கி மற்றும் குழுமத்தினால் அதன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் அவை கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில், வேறாக குறிப்பிடப்பட்டாலன்றி, முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன..

4.1 ஒருங்கிணைப்பின் அடிப்படை

குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள், SLFRS 10 – "ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்" இன் பிரகாரம் வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களது ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் LKAS 27 – "ஒருங்கிணைப்பட்ட மற்றும் வெவ்வேறான நிதிக் கூற்றுக்கள்" இன் பிரகாரம் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் LKAS 28 – "இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளிலான முதலீடுகள்" இன் பிரகாரம் அதன் இணைக்கம்பனிகளின் இலாபம் அல்லது நட்டம் மற்றும் தேறிய சொத்துக்களின் விகிதாசாரப் பங்கு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. வங்கியின் நிதிக் கூற்றுக்கள், உள்நாட்டு வங்கியியல் அலகு, கரைகடந்த வங்கியியல் அலகு மற்றும் வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகளை உள்ளடக்குகின்றன. துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களின் ஒருங்கிணைப்பு தொடர்பான கணக்கீட்டு கொள்கைகளின் விபரங்கள் குறிப்புகள் 31 மற்றும் 32 இல் வழங்கப்பட்டுள்ளன.

4.1.1 வணிக சேர்க்கைகள்

கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்கள் ஒரு வணிகமென உருவாக்கும் தேவையுடைய SLFRS 3 – "வணிகச் சேர்க்கைகள்" இன் வரைவிலக்கணத்தினை பிரயோகிப்பதன் மூலம் ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது ஏதேனும் நிகழ்வு ஒரு வணிகச் சேர்க்கையாவென குழுமம் தீர்மானிக்கின்றது. வணிகச் சேர்க்கைகள் கையகப்படுத்தல் முறையினை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றன.

கையகப்படுத்தல் தினத்தன்று கட்டுப்பாடற்ற நலன்களின் தொகையானது ஒன்றில் நியாயப் பெறுமதியில் அல்லது கையகப்படுத்துபவரின் இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் கட்டுப்பாடற்ற நலன்களின் விகிதாசார பங்கில் அளவீடு செய்யப்படுகின்றது. கையகப்படுத்தல் தொடர்பான செலவுகள் கையகப்படுத்துபவர் ஒரு வணிகச் சேர்க்கையினை செயலாற்றுவதற்கு ஆட்படும் செலவுகளாகும். இந்தச் செலவினங்கள், கண்டறியுநரின் கட்டணங்கள், ஆலோசனை, சட்ட, கணக்கீட்டு, பெறுமதியிடல், ஏனைய தொழில்சார் ஆலோசனைக் கட்டணங்கள், ஒரு உள்வாரி கையகப்படுத்தல் பிரிவினை பராமரிப்பதிலான செலவு உள்ளடங்கலான பொது நிர்வாகச் செலவுகள் மற்றும் கடன் மற்றும் உரித்துவப் பிணையங்களின் பதிவீடு மற்றும் வழங்கல் செலவுகள் என்பனவாகும். கடன் அல்லது உரித்துவ பிணையங்களது வழங்கலுடன் இணைந்தவை தவிர்ந்த கையகப்படுத்தல் தொடர்பான செலவுகள் அவை ஆட்பட்ட காலப்பகுதியில் செலவாகக் கருதப்படுகின்றன.

குழுவாகை பரிவர்த்தனையின் அடிப்படையில் ஒரு பரிவர்த்தனை மூலம் இதன் நியாயமான மதிப்பில் அல்லது கையகப்படுத்தம் தேதியில் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துக்களின்

அங்கிகரிக்கப்பட்ட தொகையின் விகிதாசாரப்பங்கில் அளவிடலாமா என தேர்ந்தெடுக்கிறது. பரிவர்தனை அலவுகள், கடன் இலாக பங்க பாக்காப்புகளுடன் தொடர்புடையவை தவிர, வணிக சேர்க்கை தொடர்பாக குழுவிற்கு ஏற்படும் செலவுகள்.

4.1.2 கட்டுப்பாட்டினை இழத்தல்

குழுமம் ஓர் துணைநிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடும்போது, துணைநிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை, மற்றும் ஏதேனும் தெடர்புள்ள கட்டுப்படுத்தாத நலன் (NCI) மற்றும் ஏனைய உரித்துவத்தின் கூறுகள் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. இதன்விளைவான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னால் துணைநிறுவனத்தில் தக்கவைக்கப்படும் ஏதேனும் நலனானது கட்டுப்பாடு இழக்கப்படும்போது நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. மேலும், முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் (Oci) அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் ஆக்கக்கூறுகளின் பங்கானது பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டம் அல்லது தக்கவைக்கப்பட்டுள்ள உழைப்புகளாக மீள்வகைப்படுத்தப்படுகின்றது. கட்டுப்பாடு இழப்பின் காரணமாக ஏற்படும் ஏதேனும் மிகை அல்லது குறைபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. குழுமம் முன்னைய துணைநிறுவனத்தின் ஏதேனும் நலனைத் தக்கவைத்துக்கொண்டால், அத்தகைய நலன் கட்டுப்பாடு இழக்கப்பட்ட திகதியில் நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படுகின்றது. அதன்பின்னர் அது உரித்துவம் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு பெறுபவராக, அல்லது தக்கவைக்கப்பட்ட செல்வாக்கு மட்டத்துக்கு ஏற்றவகையில் நிதியியல் கருவிகளுக்கான குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

4.2 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றல்கள்

4.2.1 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின்போது வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் தினத்தில் நடைமுறையிலுள்ள ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் செயற்பாட்டின் கருமப்பாட்டு நாணயமாகிய இலங்கை ரூபாவுக்கு (LKR) மாற்றம் செய்யப்படுகின்றன. அறிக்கையிடல் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட பணரீதியான சொத்துக்களும், பொறுப்புகளும் அத்திகதியில் உள்ள ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் கருமப்பாட்டு நாணயத்துக்கு மீள்மாற்றம் செய்யப்பட்டு, வர்த்தகமல்லாத செயற்பாடுகளில் எழும் சகல வேறுபாடுகளும் இலாப அல்லது நட்டக் கூற்றில் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்திற்கு" (குறிப்பு 13) கொண்டு செல்லப்படுகின்றது. ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று கிரயத்தின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்ப அங்கிகாரம் செய்யப்பட்ட திகதியில் நிலவும் பரிமாற்றல் வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும், நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படும் தினத்தில் ஏதேனும் பரிமாற்றல் இலாபம் அல்லது நட்ட ஆக்கக்கூறு உள்ளடங்கலாக ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் கருமப்பாட்டு நாணயத்திற்கு மீள்மாற்றம் செய்யப்படுகின்றன. பரிமாற்றல் ஆக்கக்கூறு உள்ளிட்ட ஒரு நாணயமல்லாத உறுப்படியிலான இலாபம் அல்லது நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னோக்கிய பரிமாற்றல் ஒப்பந்தங்கள், அறிக்கையிடல் திகதியில் காணப்படும் முன்னோக்கிய சந்தை வீதங்களில் மதிப்பிடப்பட்டு அதன்விளைவான தேறிய எய்தப்பெற்றிராத இலாபங்கள் அல்லது நட்டங்கள், இலாபம் அல்லது நட்டக் கூற்றினுள் கையாளப்படுகின்றன.

4.2.2 வெளிநாட்டுச் செயற்பாடுகளின்

விளைவுகளும், நிதிநிலைமையும் கருமப்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவாக இல்லாதவிடத்து அவை பின்வருமாறு இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுகின்றன:

வெளிநாட்டுச் செயற்பாடுகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடல் திகதியிலுள்ளபடியான ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டுச் செயற்பாடுகள் குறித்த வருமானம் மற்றும் செலவினங்கள் அக்காலப்பகுதிக்கான சராசரி பரிமாற்றல் வீதத்திற்கேற்ப மாற்றப்படுகின்றன. வெளிநாட்டுச் செயற்பாடுகள் மதிப்பு மாற்றம் செய்யப்படும்போது இடம்பெறும் வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒரு வெளிநாட்டுச் செயற்பாடானது கையுதிர்ப்பு செய்யப்படும்போது, மாற்றல் ஒதுக்கத்திலுள்ள இயையுள்ள தொகை ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அல்லது ஏனைய செயற்பாட்டுச் செலவினத்தில் கையுதிர்ப்பின்போதான இலாபம் அல்லது நட்டத்தின் ஒருபகுதியாக இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றது..

4.2.3 எல்லைக் கணக்கீடு

வங்கியானது கொடுக்கல் வாங்கல் செய்யும் நிறுவனங்களுடன் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று இடரினைக் குறைத்துக்கொள்வதற்காக இழப்பீட்டுக் காப்பு ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. SLFRS 09 இன் பிரகாரம், ஒரு உறுப்படி முழுவதினையும் அல்லது ஒரு உறுப்படியின் ஒரு கூறினை ஒரு இழப்பீட்டுக் காப்பு உறவினில் இழப்பீட்டு காப்பு செய்யப்பட்ட உறுப்படியாக கருதலாம். ஒரு இழப்பீட்டுக் காப்பு உறவானது, தகுதியுடைய இழப்பீட்டுக் காப்பு கருவிகள் மற்றும் தகுதியுடைய இழப்பீட்டுக் காப்பு உறுப்படிகளை மாத்திரம் இழப்பீட்டுக் காப்பு உறவானது கொண்டிருந்தால் மாத்திரமே இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டிற்கு தகுதி பெறுகின்றது. இழப்பீட்டுக் காப்பு உறவின் ஆரம்பத்தில், இழப்பீட்டுக் காப்பு உறவின் மற்றும் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவக் குறிக்கோள் மற்றும் இழப்பீட்டுக் காப்பினை பொறுப்பேற்பதற்கான மூலோபாயம் ஆகியவற்றின் முறையான நியமனம் மற்றும் ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அந்த ஆவணங்கள், இழப்பீட்டுக் காப்பு கருவி, இழப்பீட்டுக் காப்பு செய்யப்பட்ட உறுப்படி, இழப்பீட்டு காப்பு செய்யப்படுகின்ற இடரின் தன்மை, எவ்வாறு நிறுவனம் இழப்பீட்டுக் காப்பு உறவானது இழப்பீட்டுக் காப்பு விளைவுடைமை தேவைப்பாடுகளை சந்திக்கின்றது என்பதை மதிப்பீடு செய்யும் என்பவற்றுடன் இழப்பீட்டுக் காப்பு விளைவுடைமையின் மூலங்கள் மற்றும் எவ்வாறு அது இழப்பீட்டுக் காப்பு விகிதத்தினை தீர்மானிக்கின்றது என்ற அதன் பகுப்பாய்வினையும் உள்ளடக்குகின்றது. SLFRS 9 – "நிதியியல் கருவிகள் ஆனது மூன்று வெவ்வேறு நியமிக்கப்பட்ட பிரிவுகளுக்கு இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டினை இயலுமையாக்குகின்றது. அவற்றில் காசுப் பாய்ச்சல் இழப்பீட்டுக் காப்பு (ஒரு உயர்ந்த சாத்தியமுடைய எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்காக, ஒரு உறுதியான கடப்பாடு (ஐந்தொகையில் பதிவு செய்யப்படாதவை). ஒரு அங்கீகரிக்கப்பட்ட சொத்தின் அல்லது பொறுப்பின் வெளிநாட்டு நாணய காசுப் பாய்ச்சல்கள், அல்லது ஒரு எதிர்வுகூறப்பட்ட கம்பனிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளன). நியாயப் பெறுமதி இழப்பீட்டுக் காப்பு (ஒரு திடமான கடப்பாட்டிற்காக (பதிவு செய்யப்படாதவை) அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்பின் வெளிநாட்டு நாணய காசுப் பாய்ச்சல்களுக்காக நியமிக்கப்பட்டவை). தேசிய முதலீட்டு இழப்பீட்டுக் காப்பு (ஒரு வெளிநாட்டு செயற்பாட்டில் தேறிய முதலீட்டிற்காக நியமிக்கப்பட்டது). வங்கியானது SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டு செயற்பாட்டின் கீழ், ஒத்த கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதுடன், இவை அத்தகைய கருவிகளது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் முன்னோக்கிய பரிமாற்றல் வீதத்தினை பயன்படுத்தி பெறுமதியிடப்படுகின்றன.

4.3 கடன் மற்றும் உரித்துவம் இடையேயான நிதியியில் கருவிகளின் வகைப்பாடு

கடன் மற்றும் உரித்துவம் இடையேயான நிதியியல் கருவிகளின் வகைப்பாடு அத்தகைய கருவிகளின் பின்வரும் பண்புகளின் அடிப்படையிலாகும்::

- கருவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் அல்லது முகப்புச்சீட்டு
- ஒரு நிலையான முதிர்வுத் திகதி காணப்படுதல் அல்லது இல்லாதிருத்தல்
- கருவியின் வாழ்நாள்
- கொடுப்பனவுகளின் மூலம்
- கொடுப்பனவுகளை வலியுறுத்துவதற்கான

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

உரிமை
- முகாமைத்துவத்தில் பங்குபற்றுவதற்கான உரிமைகள்
- கருவிகளினுள் உள்ளடங்கியுள்ள இடர்
- காசுப் பாய்ச்சல்களின் தளம்பல்
- பிணைச்சொத்துக்களாக வழங்கப்பட்டுள்ள பிணையங்கள்

4.4 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள்

4.4.1 நிதியியல் கருவிகளின் அங்கீகாரம் மற்றும் அங்கீகார நீக்கம்


சகல நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்பத்தில் தீர்ப்பனவுத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதாவது, குழுமம் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக ஆகும் திகதியிலாகும். இது "வழக்கமான வழி வர்த்தகங்களை" உள்ளடக்குகின்றது. வழக்கமான வழி வர்த்தகங்கள் என்பது சந்தையில் ஒழுங்குவிதியினால் அல்லது மரபுவழியின் மூலம் பொதுவாக நிறுவப்பட்டுள்ள கால எல்லையினுள் சொத்துக்களின் விநியோகம் அவசியமான நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள் என்று பொருள்படும். கடன்கள் மற்றும் வருமதிகள் கடன் பெறுநர்களுக்கு எப்போது காசு வழங்கப்படுகின்றதோ (அல்லது தீர்க்கப்படுகின்றதோ) அப்போது அங்கீகரிக்கப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கிகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமமானது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச் சொத்தினை அங்கீகார நீக்கம் செய்கின்றது சொத்திலிருந்தான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதிர்வடையும்போது அல்லது நிதிச் சொத்திலான ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையினை மாற்றல் செய்யும் ஒரு கொடுக்கல் வாங்கலில் உரித்துடைமையின் கணிசமான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகள்மாற்றல் செய்யப்பட்டிருப்பின் ஆகும்.

குழுவால் உருவாக்கப்பட்ட அல்லது தக்கவைக்கப்பட்டு மாற்றப்பட்ட நிதி சொத்துக்கள் மதான எந்தவொரு ஆர்வமும் ஒரு தனி சொத்தாக அல்லது பொறுப்பாக அங்கிகேக்கப்படுகின்றது. ஒரு நிதிப் பொறுப்பானது பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்துசெய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் அங்கீகார நீக்கம் செய்யப்படும். நடப்பிலுள்ள ஒரு நிதிப் பொறுப்பானது அதே கடன்வழங்குநரிடமிருந்து கணிசமானளவு வித்தியாசமான நியதிகளில் மற்றொன்றினால் மாற்றீடு செய்யப்பட்டிருப்பின் அல்லது நடப்பிலுள்ள ஒரு பொறுப்பின் நியதிகள் கணிசமானளவு திருத்தியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்பட்டு ஒரு புதிய பொறுப்பாக அங்கீகரிக்கப்படும். ஆரம்ப நிதிப் பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது..

4.4.2 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்

SLFRS 9 – "நிதிக் கருவிகள்" இன் பிரகாரம் வகைப்படுத்தலானது நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்களின் ஒப்பந்த நியதிகளை முகாமைப்படுத்துவதற்கான குழுமத்தின் வணிக மாதிரியில் தங்கியுள்ளது. பின்வரும் வரைபடமானது வங்கி எவ்வாறு நிதிச் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது என்பதை விளக்குகின்றது.



4.4.2.1 ஆரம்பத்தில், நிதிச் சொத்துக்கள் பின்வரும் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன.

- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்புகள் 4.4.7 மற்றும் 27)
- பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள்
  - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும் (குறிப்பு 28)
  - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள் (குறிப்புகள் 4.4.8 மற்றும் 29)
- ஏனைய விரிவான வருமானத்தினூடாக அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்புகள் 4.4.9 மற்றும் 30).

4.4.2.2 ஆரம்பத்தில், நிதிப் பொறுப்புக்கள் பின்வரும் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன

- பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்
  - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - வைப்பீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டியவை (குறிப்பு 42)
  - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்-ஏனைய கடன்பெறுகைகள் மற்றும் பொறுப்புக்கள் (குறிப்புகள் 43 மற்றும் 49)

4.4.3 நிதிக் கருவிகளின் ஆரம்ப அளவீடுகள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பதிவுசெய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்தவகையில் நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான பெறுமதியுடன் கொடுக்கல்வாங்கல் கிரயமும் சேர்த்து அளவிடப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் கிரயமானது இலாபம் அல்லது நட்டக்கூற்றில் கையாளப்படுகின்றது.

4.4.4 "முதல் நாள்" இலாபம் அல்லது நட்டம்

ஒரே கருவியில் கொடுக்கல்வாங்கல் விலையானது ஏனைய அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் நியாயப் பெறுமதியிலிருந்து வேறுபட்டால், அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்த தரவுகளை மாத்திரம் உள்ளடக்கும் மாறிகளைக் கொண்ட ஒரு மதிப்பீட்டு நுட்பத்தினடிப்படையில் இடம்பெற்றால், குழுமம் உடனடியாகவே கொடுக்கல்வாங்கல் விலைக்கும், நியாயப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (ஒரு "முதல் நாள்" இலாபம் அல்லது நட்டம்) இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கின்றது. அவதானிக்கப்பட இயலாத தரவுகளைப் பயன்படுத்தி, நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படும் விடயங்களின் கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிகளுக்குமிடையிலான வேறுபாடு மாத்திரமே கருவியின் வாழ்க்கைக்காலம் முழுவதுமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.4.5 வணிக மாதிரி மதிப்பீடு

2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து SLFRS 9 – "நிதிக் கருவிகள்" இன் பிரகாரம் குழுமம் அதன் சகல நிதிச் சொத்துக்களையும் வணிக மாதிரி அடிப்படையிலேயே வகைப்படுத்துவதோடு,

ஒரு முதலீட்டுத்தேக்க மட்டத்தில் ஒரு சொத்து வைத்திருக்கப்படும் வணிக மாதிரியின் குறிக்கோள் சம்பந்தமான மதிப்பீட்டினை செய்கின்றது. அது ஒரு சாதனத்துக்கு சாதனம் என்னும் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவதில்லை, ஏனெனில் இது வணிகம் முகாமைத்துவம் செய்யப்படும் விதத்தினை மிகச் சிறந்த முறையில் பிரதிபலித்து, முகாமைத்துவத்துக்கு தகவலை வழங்குகின்றது என்பதாகும். கவனத்தில் கொள்ளப்படும் தகவல் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன:

- முதலீட்டுத்தேக்கத்திற்காக எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறையில் அக்கொள்கைகள் செயற்படும் விதம். குறிப்பாக, முகாமைத்துவத்தின் மூலோபாயம் ஒப்பந்த வட்டி வருமானத்தை உழைக்கின்றதா, ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத் தோற்றப்பாட்டைப் பராமரிக்கின்றதா, நிதிச் சொத்துக்களின் கால அளவுடன் அச்சொத்துக்களுக்கு நிதியளிக்கும் பொறுப்புக்களின் கால அளவு பொருந்தியமைகின்றதா அல்லது சொத்துக்களின் விற்பனையூடாக காசுப் பாய்ச்சல்கள் எய்தப்பட்டுள்ளனவா போன்ற விடயங்களில் முன்னிறுத்தம் செய்கின்றது'
- முதலீட்டுத் தேக்கத்தின் செயற்திறன் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு வங்கியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுகின்றது
- வணிக மாதிரியின் செயற்திறனை பாதிக்கும் இடர்கள் (அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் எவ்வாறு அந்த இடர்கள் முகாமைப்படுத்தப்படுகின்றன்
- வணிகத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு வேதனம் வழங்கப்படுகின்றது உதாரணமாக, வேதனமானது முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது திரட்டப்பட்ட ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்கள் அடிப்படையிலாளு மற்றும்
- முன்னைய காலப்பகுதியில் விற்பனைகளின் நிகழ்வெண், பருமன் நேரம் மற்றும் அத்தகைய விற்பனைகளுக்கான காரணம் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை பற்றிய அதன் எதிர்பார்ப்புக்கள். எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை பற்றிய தகவல்கள் தனியாக கருத்திலெடுக்கப்படவில்லை, ஆனால் இது நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் எவ்வாறு காசுப்பாய்ச்சல்கள் எய்தப்பெறுகின்றன என்ற ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்..

வணிக மாதிரி மதிப்பீடானது "மோசமான விடய" அல்லது "அழுத்தமான விடய" சூழ்நிலைகளை கருத்திலெடுக்காது நியாயமான எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளின் அடிப்படையிலாகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னரான காசுப் பாய்ச்சல்கள் வங்கியின் மூல எதிர்பார்ப்புகளிலிருந்து வேறுபட்ட விதத்தில் எய்தப்பெற்றிருப்பின், வங்கியானது வணிக மாதிரியில் வைத்துள்ள எஞ்சிய நிதிச் சொத்துக்களது வகைப்படுத்தலை மாற்றாது, முன்னோக்கிச் செல்லும்போது புதிதாக உருவாக்கப்படும் அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்படும் நிதிச் சொத்துக்களை மதிப்பிடும்போது அத்தகைய தகவல்களை ஒருங்கிணைக்கின்றது.

4.4.6 ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் பண்புகள் அசல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு மாத்திரம் (அ.வ.கொ.மா.) சோதனையினை சந்தித்துள்ளதா என மதிப்பீடு செய்தல்

சொத்துக்கள் வகைப்படுத்தல் செயன்முறையின் இரண்டாவது படியாக, குழுமமானது நிதிச் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் அ.வ.கொ.மா. சோதனையினை சந்தித்துள்ளதா என இனங்காண்பதற்காக மதிப்பீடு செய்கின்றது.

இந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக

"அசல்" என்பது நிதிச் சொத்தின் ஆரம் அங்கீகாரத்தின்போதான நியாயப் பெறுமதி என வரையறை செய்துள்ளதுடன், இது நிதிச் சொத்தின் வாழ்நாளில் மாற்றமடையலாம் (உதாரணமாக, அசல் மீளச்செலுத்தப்பட்டிருப்பின் அல்லது வட்டம்/கழிவின் பெறுமதிகுறைப்பு)

"வட்டி" என்பது பணத்தின் நேரப் பெறுமதிக்கான மறுபயன்எனவும்ஒரு குறிப்பிட்டகாலப்பகுதியில் நிலுவையிலுள்ள அசல் தொகையுடன் இணைந்த கடன் இடர் மற்றும் ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்கள் மற்றும் செலவுகளது மறுபயன் மற்றும் இலாப விடுமிகை எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

இதற்கு நேர்மாறாக, ஓர் அடிப்படையான கடன்வழங்கல் ஏற்பாட்டுடன் தொடர்பற்ற, ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களிலான இடர்கள் அல்லது தளம்பல்கள் என்பவற்றுக்கான வெளிப்பாட்டினை அதிகுறைவாக்குவதனை அறிமுகம் செய்யும் ஒப்பந்த நியதிகள், நிலுவையிலுள்ள அசல் தொகையிலான வட்டி மற்றும் அசலின் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட காசுப்பாய்ச்சல்களை ஏற்படுத்தாது. அத்தகைய விடயங்களில், நிதிச் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படல் வேண்டும்.

ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் அசல் மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகையிலான வட்டி மாத்திரமா என்று மதிப்பிடுவதில்,: குழுமமானது கருவியின் ஒப்பந்த நியதிகளைக் கவனத்தில் கொள்ளுகின்றது. இது நிபந்தனையை நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் இடம்பெறும் காலம் அல்லது தொகையை மாற்றக்கூடிய வகையில் நிதிச்சொத்து ஓர் ஒப்பந்த நிதியைக் கொண்டுள்ளதா என்பதைக் கணிப்பீடு செய்வதையும் உள்ளடக்குகின்றது. இந்தக் கணிப்பீட்டை மேற்கொள்ளுவதில் குழுமம் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ளுகின்றது:

- காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரத்தை மாற்றும் எதிர்பாரா நிகழ்வுகள்:
- கடன் அம்சங்கள்:
- முற்கொடுப்பனவு மற்றும் நீடிப்பு நியதிகள்:
- குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான குழுமத்தின் கோரலை மட்டப்படுத்தும் நியதிகள்:

மற்றும்

- பணத்தின் நேரப் பெறுமதியினது மறுபயனை மாற்றியமைக்கும் அம்சங்கள்

4.4.7 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் காணப்படும் உறுப்படிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் உறுப்படிகள்;
- ஆரம்ப அங்கீகாரத்தின்போது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் என விசேடமாக பெயரிடப்பட்ட உறுப்படிகள்; மற்றும்
- அசல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யாத ஒப்பந்த நியதிகளுடனான கடன் கருவிகள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் கிரயமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அது ஆட்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றது. அதன் பின்னர், அவை நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும்போது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்தொன்று நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்போது, நேரெதிர் தரப்பினரின் கடன் தகைமையைப் பிரதிபலிக்கும்வகையில் ஒரு கடன் மதிப்பீட்டுச் சீராக்கல் உள்ளடக்கப்படுகின்றது. இது கடன் இடர்வில் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நியாயமான பெறுமதியின் நகர்வைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

4.4.7.1 வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகள்

ஒரு நிதிக் கருவியானது அது பிரதானமாக விற்பனை செய்யும் நோக்கத்திற்காக கையகப்பட்டிருந்தால் அல்லது ஆட்பட்டிருந்தால் அல்லது குறுகிய தவணையில் மீள்கொள்வனவுக்காக அல்லது கூட்டாக முகாமைத்துவம் செய்யப்படும் நிதிக் கருவிகளின் முதலீட்டுத் தேக்கத்தின் ஒரு பகுதியாயிருந்தால், அதற்கு குறுந்தவணை இலாபம் ஈட்டும் சான்றுகள் இருந்தால், அல்லது அது மூலாதாரம் ஆனால் தகமையான இழப்பீட்டுக் காப்பு உறவு காணப்படாதிருந்தால் அது வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும். வர்த்தக மூலாதாரங்கள் மற்றும் வர்த்தகப் பிணையங்கள் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள் - வர்த்தகத்திலான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) (குறிப்பு 10) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள்/(நட்டங்கள்) (குறிப்பு 11) இல் அங்கீகரிக்கப்படுகின்றன. வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் "தேறிய வட்டி வருமானம்" (குறிப்பு 08) இன் கீழ் பதிவு செய்யப்படுவதுடன் பங்கிலாப வருமானமானது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது "வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) (குறிப்பு 10) இல் பதிவு செய்யபப்டுகின்றன..

4.4.7.2 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட நிதியியல் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் கருவிகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டு அளவிடப்படலாம். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒரு வித்தியாசமான அடிப்படையில் அளவிடுவதன் மூலம் எழக்கூடிய அளவீடு அல்லது முரண்பாடுகளை (அதாவது ஒரு கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றும்) அகற்றும் அல்லது கணிசமானளவு குறைப்பதனை விளைவித்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்படலாம். ஒரு நிதிப் பொறுப்பானது பின்வரும் நிபந்தனைகளுடன் காணப்பட்டால் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்படலாம், அது கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றினால் அல்லது கணிசமானளவு குறைத்தால் அல்லது:

- ஒரு ஏற்பு ஒப்பந்தமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டபொதிந்துள்ள மூலாதாரங்களை உள்ளடக்கியிருந்தால் அல்லது
- நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஆகிய இரண்டும் முகாமைப்படுத்தப்பட்டு அவற்றின் செயற்திறள் ஒரு ஆவணப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவ அல்லது மூலதன மூலோபாயத்தின் பிரகாரம் ஒரு நியாயப் பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படலாம். ஒரு நிதிப் பொறுப்பு இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டிருப்பின், குழுமத்தின் சொந்த கடன் தரத்திலான மாற்றங்களுக்கு உடைமையாக்கத்தக்க நியாயப் பெறுமதியிலான அசைவானது, அவதானிக்கக்கூடிய சந்தை வட்டி வீதங்களுக்கு மேலான கடன் நெடுக்கத்திலுள்ள மாற்றங்களை தீர்மானிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டு ஏனைய விரிவான வருமானத்தில் தனியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. 31 டிசம்பர் 2023 இல் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட எந்த நிதிச் சொத்தும் காணப்படவில்லை.

4.4.7.3 அசல் மற்றும் வட்டியினை மாத்திரம் கொடுப்பனவுகளாக பிரதிநிதித்துவம் செய்யாத ஒப்பந்த நியதிகளுடனான கடன் கருவிகள்

அசல் மற்றும் வட்டிக் கொடுப்பனவினை மாத்திரமான கொடுப்பனவுகளின் சோதனையினை சந்திக்காத நிதியியல் கடன் கருவிகள் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியாக வகைப்படுத்தப்படும்.

4.4.8 பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் - கடன் கருவிகள்

பின்வருவனவற்றை கொண்டிருந்தால் கடன் கருவிகளிலான முதலீடுகள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன:

- குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலை விளைவிக்கும் ஒப்பந்த நியதிகள் அசல் மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகையிலான வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும்
- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருப்பதன் மூலம் குறிக்கோளினை அடையும் ஒரு வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்பட்டால்.

இந்த கடன் கருவிகள் ஆரம்பத்தில் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அங்கீகரித்து அதன் பின்னர் விளைவுறு வட்டி வீதத்தினை (வி.வ.வீ.) இனை பயன்படுத்தி பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. கடன் வலுக்குன்றல் அளவீடானது குறிப்பு 4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல் இல் விபரிக்கப்பட்டுள்ள மூன்று கட்ட எதிர்பார்த்த கடன் நட்ட மாதிரியின் அடிப்படையிலாகும்.

4.4.9 ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

4.4.9.1 கடன் கருவிகள்

பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால், கடன் கருவிகளிலான முதலீடுகள் ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன:

- குறிப்பிட்ட திகதிகளில் காசுச் பாய்ச்சலை விளைவிக்கின்ற ஒப்பந்த நியதிகள், அசல் மற்றும் நிலுவையிலுள்ள அசலிலான வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்தால்ளூ மற்றும்
- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகிய இரண்டினாலும் அடையப்படும் குறிக்கோளினைக் கொண்டஒருவணிக மாதிரியினுள் வைத்திருக்கப்பட்டால்.

இந்த கடன் கருவிகள் ஆரம்பத்தில் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அங்கீகரித்து அதன் பின்னர் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. நியாயப் பெறுமதியிலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் உரித்துவத்தின் ஒரு தனியான கூறாக உள்ளடக்கப்படுகின்றது. வலுக்குன்றல் நட்டங்கள் அல்லது திருப்பல்கள், வட்டி வருமானம் மற்றும் அந்நிய செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கையுதிர்வினைத் தொடர்ந்து, ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய விரிவான வருமானத்திலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

கடன் வலுக்குன்றலின் அளவீடானது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படும் மூன்று கட்ட கடன் நட்ட மாதிரியின் அடிப்படையிலாகும். எதிர்பார்த்த கடன் நட்ட மாதிரியானது குறிப்பு 4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது.

4.4.9.2 உரித்துவக் கருவிகள்

SLFRS 3 – "வணிகச் சேர்க்கை" பிரயோகிக்கப்படும் ஒரு வணிகச்சேர்க்கையில் குழுமத்தினால் வருநிகழ்வு மறுபயன் அங்கீகரிப்படாத அல்லது வர்த்தகத்திற்கு வைத்திருக்கப்படாதஉரித்துவக் கருவிகளிலான முதலீடானது, முகாமைத்துவத்தினால் ஒரு மாற்றவியலாத தெரிவானது மேற்கொள்ளப்பட்டிருப்பின், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப்பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன. ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியின் மாற்றவியலாத தெரிவினைக் கடைப்பிடிப்பதனை முகாமைத்துவம் கருதாத முதலீட்டுத்தேக்கங்களில்,முன்னிருப்பாக அத்தகையமுதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப்பெறுமதியில்அளவீடு செய்யப்படுகின்றன.

அங்கீகாரத்தினைத் தொடர்ந்து ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது, இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படாது. எவ்வாறாயினும், திரண்ட இலாபம் அல்லது நட்டம் அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அங்கீகார அகற்றல் முழுத்தொகையானது ஏனைய விரிவான வருமான ஒதுக்கத்திலிருந்து உரித்துவத்தினுள் காணப்படும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படும். அத்தகைய முதலீடுகளிலான பங்கிலாபங்கள் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்" (குறிப்பு 13)இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

4.4.10 நிதிச் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தல்

குழுமமானது அதன் வணிக மாதிரியினை நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக மாற்றினால், மற்றும் மாற்றினால் மாத்திரம் குழுமமானது அதன் நிதிச் சொத்துக்களை மீள்வகைப்படுத்துகின்றது. பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களை குழுமமானது, ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு மீள்வகைப்படுத்தினால், குழுமமானது மீள்வகைப்படுத்தலை மீள்வகைப்படுத்தல் திகதியிலிருந்து எதிர்பார்ப்புடன் பிரயோகிக்கின்றது. குழுமமானது முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலாபங்கள், நட்டங்கள் (வலுக்குன்றல் நட்டங்கள் உள்ளடங்கலான) அல்லது வட்டியினை மீள் எடுத்தரைப்பதில்லை.

கீழ்காணும் அட்டவணையானது மீள்வகைப்படுத்தலிலான இலாபங்கள் மற்றும் நட்டங்களது கவனிப்பின் சுருக்கத்தினை வழங்குகின்றது:

ஆரம்ப அளவீடு	மீள்வகைப்படுத்தலின் பின்னரான அளவீடு	மீள்வகைப்படுத்தலிலான கவனிப்பு
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில்	பெறுமதி குறைப்புக் கிரயத்தில்	மீள் வகைப்படுத்தல் திகதியில் உள்ள நியாயப் பெறுமதியானது அதன் புதிய மொத்த கொண்டுசெல்லல் தொகையாக வருகின்றது. அந்த தொகையின் அடிப்படையில் விளைவுறு வட்டி வீதமானது கணிப்பிடப்படுகின்றது. வலுக்குன்றல் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும் நோக்கத்திற்காக மீள்வகைப்படுத்தல் திகதியானது ஆரம்ப பிரயோகத் திகதியாக கவனிக்கப்படுகின்றது.
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில்	ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில்	மீள்மதிப்பீடு திகதியில் உள்ளவாறான நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் புதிய கொண்டுசெல்லல் தொகையாக வருவதுடன் விளைவுறு வட்டி வீதமானது மீள்மதிப்பீடு திகதியிலுள்ள சொத்தின் நியாயப் பெறுமதி அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில்	பெறுமதி குறைப்புக் கிரயத்தில்	ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது உரித்துவத்திலிருந்து அகற்றப்பட்டு மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதிக்கு எதிராக செம்மையாக்கப்படுகின்றது. மீள்வகைப்படுத்தலின் விளைவாக விளைவுறு வட்டி வீதமும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களின் அளவீடும் செம்மையாக்கப்படுவதில்லை.
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில்	நியாயம் பெறுமதியில் இலாபம்/(நட்டம்)	மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ள நிதிச்சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் புதிய கொண்டுசெல்லல் தொகையாக வருகின்றது. ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது உரித்துவத்திலிருந்து ஒரு மீள்வகைப்படுத்தல் செம்மையாக்கலாக இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தல் திகதியில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது.
பெறுமதி குறைப்புக் கிரயத்தில்	இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில்	நிதிச் சொத்தின் முன்னைய பெறுமதிக் குறைப்புக் கிரயத்திற்கும் மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்திலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.
பெறுமதி குறைப்புக் கிரயத்தில்	ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில்	நிதிச் சொத்தின் முன்னைய பெறுமதிக் குறைப்புக் கிரயத்திற்கும் மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்திலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கிகரிக்கப்படுகின்றது. மீள்வகைப்படுத்தலின் விளைவாக விளைவுறு வட்டி வீதமும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களின் அளவீடும் செம்மையாக்கப்படுவதில்லை.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

4.4.10.1 நிதிக் கருவிகளின் தரமுயர்த்தல்

2021 இன் 14 ஆம் இலங்கை பணிப்புரையின் பிரகாரம், வங்கியானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம் உயர்ந்த படிநிலையிலிருந்து நிதிக் கருவிகளை தரமுயர்த்தலாம். எனவே, வங்கியானது நிதியியல் கருவிகளை பிரதான இடர் அதிகாரியின் சம்மதத்துடன் அத்தகைய தரமுயர்த்தலுக்கான காரணவிளக்கத்துடன் ஒரு உயர்ந்த படிநிலைக்கும தரமுயர்த்தும்.

4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதிச் சொத்து வகைகளுக்கான எதிர்பார்த்த கடன் நட்டங்களை (எ.க.ந) அளவிடுவதில் குழுமமானது ஒரு மூன்று நிலை அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது:

- ஏனைய விரிவான வருமானத்தினூடாக பெறுமதி குறைப்புக் கிரயத்தில் மற்றும் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்.
- கடன் கடப்பாடுகளும் மற்றும்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்.

உரித்துவ முதலீடுகளில் எந்த எ.க.ந. உம் அங்கீகரிக்கப்படவில்லை.

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியிலும் ஒரு மதிப்பீட்டினை செயலாற்றுகின்றது. அது நிதியியல் கருவியின் எஞ்சியுள்ள வாழ்நாள் மீதான தவறுதல் இடர் ஏற்படக்கூடியவற்றிலான மாற்றத்தை கருத்திலெடுப்பதன் மூலம் ஒரு நிதியியல் கருவியின் கடன் இடரானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கணிசமானளவு அதிகரித்துள்ளதா என்பதினாலாகும். இந்த செயன்முறையின் அடிப்படையில், ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரிலான மாற்றத்தின் அடிப்படையில் பின்வரும் மூன்று படிநிலைகளுடான நிதிச் சொத்துக்கள் இடம்பெயர்கின்றன.

4.4.11.1 கட்டம் 1: 12 மாதங்கள் எ.க.ந.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பினைக் கொண்டிராத வெளிப்பாடுகளுக்கு மற்றும் ஆரம்பத்திலிருந்து கடன் வலுக்குன்றாமலிருப்பவைக்கு, அடுத்த 12 மாதங்களினுள் தவறுதல் நிகழ்வுகள் இடம்பெறும் சாத்தியத்துடன் இணைந்துள்ள வாழ்நாள் எ.க.ந. இன் பகுதியானது அங்கீகரிக்கப்படுகின்றது. கடன் கணிசமாக சீர்கெடப்படாத வாடிக்கையாளர்களிலிருந்தான 12 மாதக எ.க.ந. ளை வங்கி தீர்மானிக்கின்றது.

4.4.11.2 கட்டம் 2: வாழ்நாள் எ.க.ந.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பினைக் கொண்ட, ஆனால் கடன் வலுக்குன்றாத வெளிப்பாடுகளுக்கு ஒரு வாழ்நாள் எ.க.ந. (அதவாது நிதிச் சொத்தின் எஞ்சியுள்ள வாழ்நாளை பிரதிபலிக்கும்) ஆனது அங்கீகரிக்கப்படுகின்றது.

4.4.11.3 கட்டம் 3: வாழ்நாள் எ.க.ந.

ஒன்று அல்லது அதற்கு மேலான நிகழ்வுகள் அந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் ஒரு சீர்கேடான தாக்கம் ஏற்பட்டிருக்கும்போது வெளிப்பாடுகள் கடன் வலுக்குன்றியுள்ளவையாக மதிப்பிடப்படுகின்றன. கடன் வலுக்குன்றலடைந்த வெளிப்பாடுகளுக்கு ஒரு வாழ்நாள் எ.க.ந. அங்கீகரிக்கப்பட்டு வட்டி வருமானமானது மொத்த கொண்டுசெல்லல் தொகைக்குப் பதிலாக, பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கு விளைவு வட்டி வீதத்தினை பிரயோகித்து கணிப்பிடப்படுகின்றது.

4.4.11.4 எ.க.ந. இன் கணிப்பீடு

குழுமமானது எ.க.ந. இனை ஒரு மூன்று சாத்தியமான நிறையிடப்பட்ட சூழ்நிலைக்காட்சிகளில், எதிர்பார்த்த காசுப் பற்றாக்குறைகளை அளவிடுவதற்காக, விளைவுறு வட்டி வீதத்திற்கு (வி.வ.வீ) அண்ணளவான ஒரு வீதத்தில் கழிவிறக்கம் செய்து கணிப்பிடுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு நிறுவனத்திற்கு வரவேண்டிய காசுப் பாய்ச்சல்களுக்கும் நிறுவனம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையேயான வித்தியாசமாகும். எ.க.ந. கணிப்பீடுகளுக்கான குழுமத்தின் இயக்கவியலானது கீழே விபரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முக்கிய கூறுகள் பின்வருவனவாகும்:

தவறுதலுக்கான சாத்தியம் (த.சா.)

த.சா. என்பது ஒரு வழங்கப்பட்ட நேரக் காலத்தின்போது தவறுதலுக்கான நிகழ்வியல்பின் ஒரு மதிப்பீடாகும். கடன் வசதியானது முன்னர் அங்கீகரிக்கப்படாது இன்னமும் கடன் தேக்கத்தில் காணப்பட்டால் மதிப்பிடப்பட்ட காலத்தின் மீது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே தவறுதல் இடம்பெறலாம். த.சா. இன் எண்ணக்கருவானது குறிப்பு 28 இல் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

தவறுதலில் உள்ளவாறான வெளிப்பாடு (த.உ.வெ.)

த.உ.வெ என்பது ஒரு எதிர்கால தவறுதல் திகதியில் உள்ள வெளிப்பாட்டிலான ஒரு மதிப்பீடாகும். இது அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான அசல் மற்றும் வட்டியின் மீள்செலுத்துதல் உள்ளடங்கலான, வெளிப்பாட்டிலான எதிர்பார்த்த மாற்றங்களை கணக்கிலெடுக்கின்றது. இது ஒப்பந்தத்தினால் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது இல்லையெனில், கடப்பாடுடைய கடன் வசதிகளின் பணமிழுப்புக்கள் மற்றும் தவறிய கொடுப்பனவுகளிலான அட்டுறு வட்டியுடனும் ஆகும். த.உ.வெ. என்பது குறிப்பு 28 இல் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தவறுதலின்போது ஏற்படும் நட்டம் (த.ஏ.ந.)

த.ஏ.ந. என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தவறுதல் இடம்பெறும் சமயத்தில் எழுகின்ற நட்டத்தின் ஒரு மதிப்பீடாகும். வரவேண்டிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கும் கடன் வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்ப்பதற்கும் இடையேயான வித்தியாசத்தின் அடிப்படையிலாகும். இது ஏதேனும் பிணைச் சொத்தின் எய்தப்பெறுதலையும் உள்ளடக்கும். இது பொதுவாக எ.க.ந. இன் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகின்றது. த.ஏ.ந. ஆனது குறிப்பு 28 இல் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

4.4.11.5 வலுக்குன்றலுக்கான படிநிலையினைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து வெளிப்பாடுகளுக்கான கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்றதா என குழுமம் மதிப்பீடு செய்கின்றது. இது இடரினை அறிக்கையிடும் திகதிக்கும் ஆரம்ப அங்கீகாரத்திற்கும் இடையேயான வாழ்நாள் மீது தவறுதல் இடம்பெறக்கூடிய இடரினை ஒப்பிடுவதன் மூலமாகும். குழுமமானது இந்த நோக்கத்திற்காக தேவையற்ற கிரயம் அல்லது முயற்சியின்றி பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் துணையளிக்கக்கூடிய தகவல்களை கருத்திலெடுக்கின்றது. இது அளவுசார்ந்த மற்றும் தரம்சார்ந்த தகவல்களையும் முன்னோக்கிய பகுப்பாய்வினையும் உள்ளடக்குகின்றது.

சொத்தின் தரம் சீர்கெடும்போது எ.க.ந. படிநிலைகள் ஊடாக ஒரு வெளிப்பாடானது இடம்பெயரும். அதன் பின்னரான ஒரு காலத்தில், சொத்தின் தரம் மேம்படுவதுடன், ஆரம்பத்திலிருந்து கடன் இடரில் முன்னர் மதிப்பிடப்பட்ட ஏதேனும் கணிசமான அதிகரிப்பினை திருப்பும் என்பதுடன், அச்சமயம் சந்தேகத்திற்கிடமான கடன்களுக்கான ஏற்பாடானது வாழ்நாள் எ.க.ந. இலிருந்து 12 மாதங்கள் எ.க.ந. இற்கு திருப்புதல். ஆரம்பத்திலிருந்த கணிசமானளவு சீர்கேடையாத வெளிப்பாடுகள் அல்லது சீர்கேடானது குழுமத்தின் முதலீட்டுத் தர வரன்முறையினுள் இருந்தால் அல்லது 30 நாட்களுக்குக் குறைவாக காலம் கடந்திருப்பின் அவை ஒரு குறைவான கடன் இடரினைக் கொண்டவையாக கருதப்படும். இந்த நிதிச் சொத்துக்களுக்கான வலுக்குன்றல் ஏற்பாடானது 12 மாதங்கள் எ.க.ந. அடிப்படையிலாகும்.

குழுமமானது ஒரு வெளிப்பாட்டிலான கடன் இடரானது, ஒரு தனியான அல்லது கூட்டு அடிப்படையில், கணிசமானளவு அதிகரித்துள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. வலுக்குன்றலுக்கான கூட்டு மதிப்பீட்டு நோக்கங்களுக்காக, நிதியியல் கருவிகள் பகிரப்பட்ட கடன் இடர் பண்புகளின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்றது. இது கருவியின் வகை, கடன் இடர் தரப்படுத்தல்கள், பிணைச் சொத்தின் வகை, ஆரம்ப அங்கீகாரத் திகதி, முதிர்வுரை எஞ்சியுள்ள காலம்,

துறை, கடன் பெறுநரின் பூகோளவியல் இடம் மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகள் கணக்கிலெடுக்கப்படுகின்றன.

4.4.11.6 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைபாடு கணிப்பீடு

SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இன் கீழ் அனுமதிக்கப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குன்றலை கணிப்பிடுவதில் வங்கியானது மறுக்கத்தக்க அனுமானங்களை பயன்படுத்துதகின்றது. கடன் தேக்கமானது கடந்த நிலுவையான நாட்களின் அடிப்படையில் மூன்று படிநிலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு, பொருந்து தன்மையானது 12 மாதங்கள் எ.க.ந. மற்றும் வாழ்நாள் எ.க.ந. படிநிலைகளில் தங்கியுள்ளது. கடன் வசதிகளுக்கு எதிராக பெறப்பட்ட பிணையத்தின் பெறுமதி மற்றும் வகையானது, ஒரு கடன் வசதியின் வகைப்படுத்தல் நிலையினை தீர்மானிக்கும்போது கருத்திலெடுக்கப்படமாட்டாது. ஒரு கடன் பெறுநர் மேலதிகப் பற்று வரையறைகளுடன் பல நடைமுறைக் கணக்குகளை வங்கியுடன் வைத்திருக்கும்போது, மேலதிகப் பற்றுக்களை வகைப்படுத்தும் நோக்கங்களுக்காக மொத்த ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை மற்றும் அத்தகைய அனைத்து கணக்குகளில் நாளாந்தம் நிலுவையிலுள்ள மொத்த மீதியானது கருத்திலெடுக்கப்படும்..

4.4.11.6.1 செயற்பாடுள்ள கடன் வசதிகள்

(a) SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இன் கீழ் கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள் மற்றும்

(b) கடன் இடர் வசதிகளில் கணிசமான அதிகரிப்பு என இனங்காணப்பட்ட அனைத்து கடன் வசதிகள் மற்றும் SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இன் கீழ் கட்டம் 2 ஆக வகைப்படுத்தப்பட்ட (குறைவான செயற்பாடுடைய கடன் வசதிகள்)


4.4.11.6.2 செயற்பாடு இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.)

செயற்பாடு இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.) என்பது பின்வரும் அனைத்து கடன் வசதிகள் என்று பொருள்படும்ளூ

(a) ஒரு வாடிக்கையாளரின ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேலாக கடந்த நிலுவைத்தொகை (கடந்த நாட்களின் எண்ணிக்கையானது ஒப்பந்த நிலுவையான திகதியிலிருந்து ஆரம்பித்து கணிப்பிடப்படும்).

(b) ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையானது 90 நாட்களுக்கும் மேலான மிகையாக இருப்பின்.

(c) SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இன் பிரகாரம் கட்டம் 3 ஆக வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஏனைய கடன் வசதிகள் (உருவாகுகையின்போது சாத்தியமான இடர் மற்றும் வலுக்குன்றிய சொத்துக்களின் அடிப்படையில் செ.இ.க.வ. ஆக வகைப்படுத்தப்பட்ட வசதிகள்).



செயற்பாட்டிலுள்ளது		செயற்பாட்டில் இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.)
கட்டம் 01	**கட்டம் 02**	**கட்டம் 03**
• 30 நாட்கள் அல்லது 30 நாட்களுக்கு குறைவான கடந்த நிலுவை	• 31 முதல் 89 நாட்கள் வரையான கடந்த நிலுவை	• 90 நாட்கள் அல்லது 90 நாட்களுக்கும் மேலான கடந்த நிலுவை
• கட்டங்கள் 2 அல்லது 3 இன் கீழ் வகைப்படுத்தப்படாத அனைத்து கடன் வசதிகள்	• அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள், - இவை இரண்டு மடங்குகள் வரைக்கும் மீள்கட்டமைக்கப்பட்டவை, இது மீள்கட்டமைப்பின் பின்னர் 1ஆவது அசல் மற்றும்/அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவு நிலுவை திகதியிலிருந்து ஆகக் குறைந்த 90 நாட்கள் திருப்தியான செயற்பாடுடைய காலத்தின் கீழ் தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்த்தவையாகும். • குறிப்பு 28- "வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்" இன் கீழ் வழங்கப்பட்டுள்ள சீர்கெடல் காரணிகளின் அடிப்படையில் கணிசமாக கடன் சீர்கெட்டவையாக இனங்காணப்பட்ட செயற்பாடு இல்லாத கடன் வசதிகள்/வெளிப்பாடுகள்.	• இரண்டு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைப்பு செய்யப்பட்ட அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள், மீள்கட்டமைப்பின் பின்னர் 1ஆவது அசல் மற்றும்/அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவு நிலுவை திகதியிலிருந்து ஆகக் குறைந்த 90 நாட்கள் திருப்தியான செயற்பாடுடைய காலத்தின் கீழ் தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்த்தவையாகும். • ஏனைய மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள், கடன் வசதிகள்/வெளிப்பாடுகள் தவிர்த்தவை. • இ.ம.வ. இன் பணிப்புரைகளின் பிரகாரம் செயற்பாடு அல்லாதது என வகைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள்/வாடிக்கையாளர்கள். • குறிப்பு 28 - "வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்" இன் கீழ் வழங்கப்பட்டள்ள சீர்கெடல் காரணிகளின் பிரகாரம் கணிசமானளவு கடன் சீர்கெடலுடன் இனங்காணப்பட்ட வாடிக்கையாளர்கள்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

மேற்கூறிய வகைப்பாட்டு நோக்கத்திற்காக கடன் தரம் மோசமடைந்தன் காரணமாக அசில் நிருப்பிச்சகலுத்தும் விதிமுறை திருத்தப்பட்டிருந்தால், மறுக்கட்டமைக்கப்பட்ட வசதியாக கருதப்படும் மற்றும் வசதிகளை அடையாளம் காண்பதில் வங்கியின் "கடன் சகிப்புத்தன்மை கொள்கை" குறிப்பிட வேண்டும். வங்கியின் கடன் சகிப்பு தன்மை கொள்கையின் படி, பின்வரும் மாற்றங்கள்/அளவு கோல்கள் கடன்வசதியின் அசல் திருப்பி செலுத்தம் விதிமுறைகளி மாற்றங்கலாக அங்கீகரிக்கப்படுகின்றன.

- வட்டி வீதத்திலான மாற்றம்
- காலத்திலான மாற்றம் (முதிர்வு)
- கருணை காலத்திற்கான மாற்றங்கள்
- வட்டி தள்ளுபடிகள்

4.4.11.6.3 செயற்திறன் இல்லாத கடன் வசதிகளின் உப வகைப்படுத்தல் (செ.இ.க.வ.)

செ.இ.க.வ. கடந்த நிலுவை நாட்களின் அடிப்படையில் நான்கு வகைகளாக மேலும் வகைப்படுத்தப்பட்டு சாத்தியமான இடரின் மட்டம் பின்வருமாறு இனங்காணப்படுகின்றது:

பிரிவு	காலம் கடந்த நாட்கள்	சாத்தியமான இடர் வரன்முறை
விசேட குறியீடு	> 90 மற்றும் < = 180	உரிய நேரத்தில் திருத்தப்படாவிட்டால், சாத்தியமான பலவீனங்களை வெளிப்படுத்தி, எதிர்காலத்தில் வாடிக்கையாளரின் மீள்செலுத்தும் ஆற்றலினை மோசமாக பாதிக்கலாம்.
தரங்குறைந்தவை	, 180 மற்றும் < = 270	வாடிக்கையாளரின் வணிகம், காசுப்பாய்ச்சல் அல்லது நிதியியல் நிலைமை தொடர்பாக நிர்ணயிக்கத்தக்க பலவீனங்களை வெளிப்படுத்தி, நடைமுறையிலுள்ள மீள்செலுத்தலை இடருக்குட்படுத்தலாம் மற்றும் மீள்செலுத்தலில் நிச்சயமற்றதன்மையினை உருவாக்கலாம்.
சந்தேகத்திற்- கிடமானவை	> 270 மற்றும் > = 360 நாட்கள்	ஒரு உயர்ந்த இடர் அல்லது பகுதியளவிலான தவறுதலை வெளிப்படுத்தல் அல்லது முழு திரட்டலானது சாத்தியமற்றது மற்றும் தவறுவதற்கான ஒரு உயர்ந்த இடர்.
நட்டம்	> 360 நாட்கள்	திரட்ட இயலாது என்று கருதப்பட்ட அல்லது மீள்செலுத்தல் பெரும்பாலும் இடம்பெறாது என்ற நிச்சயம் மற்றும் மேற்குறிப்பிட்ட வகைகளின் கீழ் உள்ளடக்கப்படாத ஏனைய அனைத்து செ.இ.க.வ.

4.4.11.7 கடன் வசதிகளை மேம்படுத்தல்

கட்டங்களுக்கிடையேயான கடன் வசதிகளின் தரமுயர்த்தலானது, ஆரம்ப புள்ளியுடன் பிந்தைய மதிப்பீட்டு திகதிகளை ஒப்பிட்டு கடன் சீர்கெடலில் மேம்பாட்டு மட்டத்தின் அடிப்படையில் இடம்பெறும்.

வங்கியானது கடன் வசதிகளின் தரமுயர்த்தல் தொடர்பான கடன் இடர் முகாமைத்துவக் கொள்கையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் கடன் வதிசகளை தரமுயர்த்தும்.

4.5 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஒரு சொத்து வலுக்குன்றும் என்ற குறிகாட்டி உள்ளதா என்று மதிப்பிடும். ஏதேனும் குறிகாட்டி காணப்பட்டால், அல்லது ஒரு சொத்துக்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்பட்டால், வங்கியானது சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் மீட்கத்தக்க தொகையானது ஒரு சொத்தின் உயர்ந்த நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான செலவுகளை கழித்ததன் பின்னர் அல்லது பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதியாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீட்கத்தக்க தொகையினை விஞ்சியிருந்தால், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுவதில், பணத்தின் நேரப் பெறுமதியினை மதிப்பிடுவதில் நடைமுறை சந்தையினை பிரதிபலிக்கும் ஒரு வரிக்கு முன்னரான கழிவிறக்க வீதத்தினை மற்றும் சொத்துக்கு குறித்தான இடர்களையும் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் பாய்ச்சல்களை அவற்றின் நிகழ் காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுகின்றது. நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான செலவுகளை கழிப்பதனை தீர்மானிப்பதில், ஒரு பொருத்தமான பெறுமதியிடல் மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள், பெறுமதியிடல் மடங்குகள், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணைக்கம்பனிகளது பட்டியலிடப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய பெறுமதியான நியாயப் பெறுமதி குறிகாட்டிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

4.6 நம்பக நிலையான சேவைகள்

குழுமமானது வாடிக்கையாளர்களின் சார்பில் சொத்துக்களை வைத்திருப்பதனை விளைவிக்கும் நம்பக நிலை சேவைகளை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குகின்றது. நம்பக நிலை தகுதியில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள், குழுமம் அத்தகைய சொத்துக்களின் பயன்பெறும் உடைமையாளராகவோ அல்லது அவற்றை கட்டுப்படுத்தாதனால் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

4.7 ஏற்பாடுகள்

ஒரு ஏற்பாடானது ஒரு கடந்த நிகழ்வின் விளைவாக அங்கீகரிக்கப்படுகின்றது, இது குழுமம் நம்பகமாக மதிப்பிடக்கூடிய மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சல் தேவையானது என்ற சாத்தியம் காணப்படும் ஒரு நடைமுறை கடப்பாட்டினை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால். அங்கீகரிக்கப்படும் தொகையானது அறிக்கையிடப்படும் திகதியில் தற்போதைய கடப்பாட்டினை தீர்ப்பதற்கு தேவையான மறுபயனின் சிறந்த மதிப்பீடாகும். இது அந்த திகதியில் கடப்பாட்டினை சூழ்ந்துள்ள இடர்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளை கணக்கிலெடுத்து மதிப்பிடப்படுகின்றது. நடைமுறையிலுள்ள கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்களை பயன்படுத்தி ஒரு ஏற்பாடானது அளவிடப்படும்போது அதன் கொண்டு செல்லப்படும் தொகையானது அந்த காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு ஒப்பந்தத்திலிருந்து குழுமத்தினால் பெறுகின்ற எதிர்பார்க்கப்படும் நலன்கள் அந்த ஒப்பந்தத்தின் கீழான அதன் கடப்பாடுகளை சந்திப்பதில் தவிர்க்க இயலாத செலவுகளிலும் பார்க்க குறைவாக இருப்பின் கடினமான ஒப்பந்தங்களுக்கான ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த ஏற்பாடானது ஒப்பந்தத்தினை நிறுத்துவதிலான எதிர்பார்த்த

செலவினம் மற்றும் ஒப்பந்தத்தை தொடர்வதிலான எதிர்பார்க்கும் தேறிய செலவினம், இவற்றில் எது குறைந்ததோ அதன் நிகழ்காலப் பெறுமதியாக அளவிடப்படுகின்றது..

4.8 வருமான வரிச் செலவினம் மற்றும் ஏனைய வரிகள்

4.8.1 வருமான வரிச் செலவினம்

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. குறிப்பு 18 இல் மேலதிகத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன..

4.8.2 நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் கணிப்பீட்டிற்கான அடித்தளம், ஊழியர்களுக்கான ஊதியங்கள் மற்றும் வருமான வரிக்கு முந்திய மொத்த கணக்கீட்டு இலாபத்தினை ஒன்றிணைப்பதன் மூலம் வருகின்ற தொகையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் பெறுமானத்தேய்வு கணிப்பீட்டிற்காக செம்மையாக்கப்படுகின்றது. இவ்வாண்டின்போது, குழுமத்தின் மொத்த பெறுமதி சேர்ப்பானது 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம் 1 ஜனவரி 2022 முதல் 18% ஆகும் அத்துடன் குழுமமானது நிதிச் சேவைகளிலான பெ.செ.வ.இனை கணிப்பிடுவதற்கு பெறுமதி உடைமையாக்கத்தக்க முறையினை பின்பற்றுகின்றது.

4.8.3 பயிர் காப்புறுதிக் கட்டணம் (ப.கா.க.)

2013 இன் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ப.கா.க. ஆனது 1 ஏப்ரல் 2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வரிக்கு பிந்திய இலாபத்தில் 1% தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும்

4.8.4 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணம் (ச.பா.ப.க.)

2022 இன் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணச் சட்டத்தின் பிரகாரம், வங்கியானது 1 ஒக்டோபர் 2022 முதல் நிதிச் சேவைகளிலான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணத்திற்கு பொறுப்பாளியாவதுடன், இது நிதிச் சேவைகளுக்கு உடைமையாக்கத்தக்க பெறுமதி சேர்க்கையில் 2.5% ஆகும். மேலும், நிதியல்லாத சேவைகளிலான ச.பா.ப.க. ஆனது புரள்வில் 2.5% ஆகும்.

4.8.5 வங்கி, துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபத்திலான பிடித்து வைத்தல் வரி (பி.வை.வ.)

வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபத்திலான பிடித்து வைத்தல் வரி வங்கி அதன் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு பங்கிலாபத்தை பகிர்ந்தளித்தது. 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணை மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்தினால் பெறப்படும் தொகைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்கிலாபக் கொடுப்பனவுகளில் பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுவதில்லை.

துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபத்திலான நிறுத்தி வைத்த வரி

2022ம் ஆண்ட உள்நாட்டு இறை வரி (திருத்த) 45ம் இலக்க சட்டத்தின் படி பங்கிலாபம் மீதான நிறுத்தி வைத்த வரி 01 ஜனவரி, 2023 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்கிலாப வருமானத்தில் நிறுத்தி வைத்த வரி 15% என்ற விகிதத்தில் பொறுப்பாகும் மற்றும் இது வங்கியின் இறுதி வரியாகும்.

5 காப்புறுதி வணிகம்

5.1 மீள்காப்புறுதி

குழுமமானது வழக்கமான வணிகப் போக்கில் அதன் அனைத்து வணிகங்களுக்கும் காப்புறுதி இடருக்கு இசைவளிக்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் மீள்காப்புறுதி கம்பனிகளிடமிருந்து வரவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து மீட்கக்கூடிய தொகைகள், நிலுவையிலுள்ள கோரல் ஏற்பாடுகள் அல்லது மீள்காப்புறுதியாளரது கொள்கையுடன் இணைந்துள்ள தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்கள் உடன் இயைபான விதத்தில் மற்றும் தொடர்புடைய மீள்காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் வலுக்குன்றலுக்காக ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் அல்லது அறிக்கையிடும் ஆண்டில் வலுக்குன்றலுக்கான ஒரு அறிகுறி எழுந்தால் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றது. வலுக்குன்றலானது பின்வரும் சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்றது. மீள்காப்புறுதி செய்யப்பட்ட சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் விளைவாக ஒரு புறநிலைத்தன்மையான சான்று காணப்பட்டால் மற்றும் ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல நிலுவையிலுள்ள தொகைகளை குழுமம் பெறாமல் இருக்கலாம் மற்றும் மீள்காப்புறுதியாளரிடமிருந்து குழுமம் பெறவேண்டிய தொகைகளில் நிகழ்வானது ஒரு நம்பகத்தன்மையான அளவிடக்கூடிய தாக்கத்தினைக் கொண்டிருந்தால் ஆகும். வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது.

காப்புறுதிக்கான தவணைக்கட்டணம் மற்றும் கோரல்கள் ஒரு மொத்த அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள், ஒப்பந்த உரிமைகள் அழித்துவிடப்படும்போது அல்லது முதிர்வடைந்தால் அல்லது ஒப்பந்தமானது மற்றுமோர் தரப்பினருக்கு மாற்றல் செய்யப்பட்டால் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது..

5.2 வருமதியான காப்புறுதி

காப்புறுதி வருமதிகள் அவை நிலுவையானபோது அங்கீகரிக்கப்பட்டு வருமதியான மறுபயனின் நியாயப் பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின்போது அளவிடப்படுகின்றன. காப்புறுதி வருமதிகளின் கொண்டுசெல்லல் பெறுமதியானது வலுக்குன்றலுக்காக, கொண்டு செல்லப்படும் தொகையானது மீட்க இயலாது போகலாம் என்று நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குறிப்பிட்டால் மீளாய்வு செய்யப்பட்டு வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது.

5.3 ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள்

5.3.1 ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒ.கை.கி.)

புதிய வணிகங்களை கையகப்படுத்தும் செலவுகள் தரகு, ஒப்புரவளித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதிக் கொள்கை வழங்கல் செலவினங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், இவை புதிய வணிகங்களின் உருவாக்கலுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கலாம் மற்றும் வேறுபட்டிருக்கலாம் மற்றும்/அல்லது தன்முடிபான பங்குபற்றல் அம்சங்களுடனான (த.ப.அ.) முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பன இந்தச் செலவுகள் எதிர்கால தவணைக்கட்டணங்களிலிருந்து மீட்கப்படக்கூடியளவுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கையகப்படுத்தல் செலவினங்களும் அவை ஆட்படும்போது ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், பொது காப்புறுதிக்கான ஒ.கை.கி. ஆனது உழைக்கப்படாத தவணைக்கட்டணமானது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது என்ற அடிப்படையில் காலத்தின் மீது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. மீள்காப்புறுதிகளின் ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களின் பங்கானது, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவுசெய்யப்படும் உள்ளார்ந்த சொத்துக்களின் பெறுமதி குறைப்பு செய்யப்படும் விதம் போன்றே பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் வாழ்நாளிலான மாற்றங்கள் அல்லது சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களது நுகர்வின் எதிர்பார்க்கும் போக்கு என்பன, கணக்கீட்டு மதிப்பீட்டிலான ஒரு மாற்றமாக கருதப்பட்டு பெறுமதி குறைப்புக் காலத்தினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. ஒ.கை.கி. கள் தொடர்புடைய

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

ஒப்பந்தங்கள் ஒன்றில் அவை முதிர்வடைந்தால் அல்லது இரத்துசெய்யப்பட்டால் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன.

5.4 மீள்காப்புறுதி தரகுகள்

வெளிவாரியான மீள்காப்புறுதி ஒப்பந்தங்களில் வருமதியான தரகுக்கூலிகள் மீள்காப்புறுதி காலத்தின் மீது ஒத்திவைக்கப்பட்டு பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன..

5.5 முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்கள்

A.1.4	**கம்பனிச் செயலாளரின் ஆலோசனையும் சேவையும்** சட்டத்தரணியான சபையின் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளர் வழங்குகின்ற ஆலோசனையினையும் சேவையினையும் சபை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடியும். சபைச் செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன மற்றும் பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், நெறிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்குச் சபை இயைபுறுகின்றது மேலும் கூட்ட அறிக்கைகளும் பொருத்தமான பதிவுகளும் பேணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினைச் சபையின் செயலாளர் கொண்டுள்ளார். சபைச் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளரினை அகற்றுவது தொடர்பான எந்த விடயமும் முழுச் சபையினதும் விடயமாக அமைந்துள்ளது. கம்பனிச் செயலாளரின் வகிபாகம் அவ்வறிக்கையில் பக்கம் 115இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
A.1.5	**சுயாதீனமான தீர்மானங்கள்** உபாயமார்க்கம், செயலாற்றுகை, வள ஒதுக்கீடு, அபாயநேர்வு முகாமைத்துவம், இயைபுறல் மற்றும் வியாபார நடத்தைத் தராதரங்கள் உள்ளிட்ட வங்கியுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு இலங்கை வங்கியின் சபை சுயாதீனமான தீர்மானங்களைக் கொண்டு வருகின்றது.
A.1.6	**சபை மற்றும் வங்கியின் விடயங்களுக்குப் போதிய நேரத்தினையும் முயற்சியினையும் அர்ப்பணித்தல்** பாதுகாப்பான இலத்திரனியல் தீர்வு (e-solution) மூலமாகக் கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் சபை உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சிநிரலும் சபைக் குறிப்பும் விநியோகிக்கப்படுகின்றன. இதனால் சபைக் குறிப்பினை மீளாய்வு செய்து மேலதிக தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் பெறுவதற்கு உறுப்பினர்களை இயலுமாக்குவதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்படுகின்றது. தேவையேற்படின் முன்வாரியாக கூட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் வெளி நிபுணர்கள் வங்கியின் மூலோபாய திசை, செயல்பாடுகள், நிதி செயல்திறன், இடர் முகாமைத்துவ மற்றும் பிற முக்கிய பகுதிகளுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களில் புதுப்பிப்புக்களை வழங்கவும், ஒப்புதல் அல்லது வழிகாட்டுதல்களைப் பெறவும் சபைக்கு விளக்கக்காட்சிகளை வழங்குகிறார்கள்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைப் பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள்

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
A.1.7	**தீர்மானத்திற்கு அழைப்பு விடுத்தல்** சபை அங்கத்தவர்கள் தாமாக தனிப்பட்ட ரீதியில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க முடியும் அவை வங்கியின் நலனிற்கு பங்களிப்பை வழங்கும் பட்சத்தில் சபை அவற்றிற்குரிய அங்கீகாரத்தை வழங்கும்.
A.1.8	**பணிப்பாளர்களுக்கான பயிற்சி** முதலில் சபைக்கு நியமிக்கப்பட்டதும், வங்கியின் பிரயோகிக்கத்தக்க ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள், வங்கியின் வரலாறு, நிறுவனக் கட்டமைப்பு, துணைக் கம்பனிகளின் விபரங்கள் மற்றும் இணை நிறுவனங்களின் விபரங்கள், வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய அறிமுகப் பொதியுடன் ஓர் அறிமுக நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பணிப்பாளர்கள் உட்படுவதுடன் வங்கியின் இலத்திரனியல் உதவி முறைமையினையும் அவர்கள் அணுகுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பணிப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர் மேலும் வங்கியில் இடம்பெறுகின்ற அதிநவீன முன்னேற்றங்கள் தொடர்பாகவும் வங்கியின் புறச்சூழல் தொடர்பாகவும் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் மூலமாக அல்லது புறவள ஆளணியினர் மூலமாகப் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கப்படுகின்றது. ஆண்டுக்காலப்பகுதியில் பணிப்பாளர்கள் ஒரு பயிற்சி திட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், தேவைப்படுமிடத்து முகாமைத்துவம் வங்கியின் செயற்பாடு தொடர்பாக விளக்க காட்சிகளை வழங்கும்.
A.2	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கிடையில் பொறுப்புக்களைப் பிரித்தல்** தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி (வங்கியில் பொதுமுகாமையாளர் என அழைக்கப்படுகின்றார்) ஆகியோரின் பதவிகள் இரண்டு வேறான தனிநபர்களினால் வகிக்கப்படுகின்றன. தலைவர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் ஆவார். தலைவருக்கும் பொதுமுகாமையாளருக்குமிடையில் பொறுப்புக்களில் தெளிவான வித்தியாசங்கள் காணப்படுவதுடன் வங்கியினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சபைச் சாசனம் இந்தப் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறை செய்கின்றது.
A.3	**தலைவரின் வகிபாத்திரம்** இலங்கை வங்கியின் தலைவர் சபைக்குத் தலைமைத்துவத்தினை வழங்கி, ஒழுங்கினைப் பேணி, சபையின் செயற்பாடுகளை செயற்திறன்மிகு முறையில் நிறைவேற்றுவதை வசதிப்படுத்துகின்றார். சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல் செயலாளர், இலங்கை வங்கி/சபைச் செயலாளரினால் பொதுமுகாமையாளர் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புக்களின் அடிப்படையிலே மேலும் பணிப்பாளர்/பணிப்பாளர்களினால் முன்மொழியப்பட்ட ஏனைய பொருத்தமான விடயங்களின் அடிப்படையிலே தலைவரினால் பிரித்து வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்றது. நிகழ்ச்சிநிரலானது உபாயமார்க்கம், செயலாற்றுகை, வள ஒதுக்கீடு, அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் இயைபுறல் ஆகியவை தொடர்பான விடயங்களை உள்ளடக்குகின்றது. கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகப் பாதுகாப்பான இலத்திரனியல் தீர்வு மூலமாக நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய விபரமான தகவல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. சகல பணிப்பாளர்களுக்கும் அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் (இவை சபைச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன) பற்றி அறிவிக்கப்படுவதுடன் சபை உபகுழுக் கட்டமைப்பு அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சபை உதவுகின்றது. இலங்கை வங்கியின் சபையானது ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் சம்பந்தப்பட்ட தமது ஆற்றலினுள் வங்கியின் நலனுக்காகச் செயற்திறன்மிகு முறையில் பங்களிப்பு வழங்குகின்றனர். கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலிலுள்ள விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு அவசியமானதெனக் கருதப்படுகின்ற தகவல்களைக் கோருமாறும் பெருநிறுவனத்தின் கரிசனைக்குரிய விடயங்களை நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்குமாறு வேண்டுகோள் விடுக்குமாறும் பணிப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர். பரிசீலனையின் கீழுள்ள விடயங்கள் தொடர்பான பணிப்பாளர்களின் கருத்துக்கள் உறுதிப்படுத்தப்பட்டு அவ்வாறான கலந்துரையாடல்கள் பற்றிய பதிவு கூட்ட அறிக்கையில் விபரமாக வழங்கப்படுகின்றது.
A.4	**நிதித் தேர்ச்சி** பணிப்பாளர்கள் கொண்டுள்ள வியாபார/தொழில் ரீதியான தேர்ச்சி மற்றும் அறிவின் மூலமாகவும் அவர்கள் கொண்டுள்ள தகைமைகளின் மூலமாகவும் வங்கியினை வழிநடத்துவதற்குப் போதிய நிதித் தேர்ச்சியினையும் அறிவினையும் அவர்கள் கொண்டுள்ளனர்.
A.5	**சபையின் சமநிலை** இலங்கை வங்கியின் சபையானது எப்பொழுதுமே நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களையே கொண்டுள்ளது. மாற்றுப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகையில் அவர்கள் நிறைவேற்றுத் தரம் சாராதவர்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.
A.6	**உரிய நேரத்தில் தகவல்களை வழங்குதல்** சபை/உபகுழுக் கூட்டங்களுக்குத் தேவையான நிகழ்ச்சிநிரலும் சபைக் குறிப்புக்களும் கூட்டம் நடப்பதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இலத்திரனியல் தீர்வு மூலமாகப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதன் மூலமாகப் பணிப்பாளர்கள் கூட்ட அறிக்கையினை மீளாய்வு செய்து வினாக்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான விடயங்களைத் தயார்படுத்துவதும் தேவையேற்படின் மேலதிக தகவல்களுக்கான வேண்டுகோள்களை விடுப்பதும் இயலுமாக்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் மேலதிக தகவல்களினைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அல்லது வேறு ஏதாவது தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் சமுகமளிப்பார்கள். கூட்டம் நடைபெற்று பத்து நாட்களினுள் சபைக் கூட்டத்தின் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
A.7	சபைக்கான நியமனம் முன்மொழிவு மற்றும் கூட்டாண்மை ஆளுகை செயற்குழு
7.1	சபை நியமனங்கள் இலங்கை அரசாங்கத்தால், வங்கியின் கீழ் வரும் அமைச்சர் மூலம் செய்யப்படுகின்றன. புதிய பணிப்பாளர்களை நியமிப்பது தொடர்பான தேவையான ஒழுங்குமுறை தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. பணிப்பாளர்களை நியமிப்பது தொடர்பாக ஒரு உள் கொள்கை உள்ளது, இது சம்பந்தப்பட்ட அமைச்சகத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.
7.2	2023ஆம் ஆண்டில் நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகைக் குழுவில் மூன்று (03) நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் உள்ளனர், அவர்களில் இருவர் (02) தலைவர் உட்படசுயாதீனமாக உள்ளனர். அவை சபைக்கு முன்மொழியப்பட்டவுடன், குழுவின் உறுப்பினர்களால் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல் 3(6)(ஸை)(ன) எண் 2007 ஆம் ஆண்டின் இல. 11ற்கு அமைய அவற்றின் பொருத்தம் சரிபார்க்கப்பட்டது.
7.3	கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கான மாற்றுத் திட்டம் வங்கியிடம் உள்ளது, இது அந்த ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் பதவிக்கான புதிய பதவி உயர்வு கொள்கையை வகுப்பது குறித்து குழு விரிவாக விவாதித்தது, இது 2024இல் அங்கீகரிக்கப்பட்டது.
7.4	மேலே உள்ள A.7 இல் குறிப்பிட்டுள்ளபடி பங்குதாரர்களால் சபைக்கு நியமனங்கள் செய்யப்படுகின்றன. புதிய பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் வங்கியின் இணையத்தளத்திலும் ஊடகங்களிலும் வெளியிடப்பட்டு கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவிக்கப்படுகின்றன.
7.5	நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை குழு பற்றிய குழு பற்றிய அறிக்கை 128 மற்றும் 129 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள குழுவின் செயல்பாடுகளைக் குறிக்கின்றது.
A.8	மீள் நியமனம் நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு பணிப்பாளரும் 1938 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகத் தனது பதவியிலிருந்து அகற்றப்படாமல் இருக்கும் போது அல்லது தனது பதவியினை வறிதாக்காமல் இருக்கும் போது தனது பதவியில் மூன்று வருடங்களுக்கு நிலைத்திருப்பார். இவ்வாறான இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராவார். திரு.ஆர்.எம்.பிரியந்த ரத்நாயக்க, சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரம் சாராத பதவிவழி பணிப்பாளர் 29.04.2023 இல் இருந்து அமுலாகும் வகையில் மூன்று (03) ஆண்டு காலத்திற்கு மீள் நியமிக்கட்டப்டுள்ளார். பதவி விலகல் எந்த அமைச்சரின் நோக்கெல்லையின் கீழ் இலங்கை வங்கி வருகின்றதோ அந்த அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தனது பதவியினை இராஜினாமாச் செய்யலாம். மேலும் தனது பதவிக் காலத்தினை முடித்ததன் காரணமாகப் பதவியிலிருந்து வெளியேறும் எந்தவொரு பணிப்பாளரும் மீள் நியமனத்திற்கான தகுதியினைக் கொண்டுள்ளார். விசேட காரணத்தினால் பதவியினை பதவி விலகினால் பதவி விலகல் கடிதத்தில் அது சுட்டிக் காட்டப்படுகின்றது. நியமனம் மற்றும் மீள்நியமனம் தொடர்பான தகவல்களுக்கு வழிகாட்டல்கள் பக்கம் 115இல் தரப்பட்டுள்ளது.
A.9	சபை மற்றும் உப குழுக்களின் மதிப்பீடு சபை மற்றும் அதன் துணைக்குழுக்களின் பொறுப்புகள் திருப்திகரமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக சபை மற்றும் சபைத் துணைக்குழுக்களால் அதன் சொந்த செயல்திறன் குறித்த வருடாந்திர சுய மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. ஒருங்கிணைந்த முடிவு வாரியத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படுகிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சபையின் நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை, குழு மூலம் சபையின் சுய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் வாரியத் துணைக்குழுக்களின் உறுப்பினர்கள் கூட்டாக செயல்திறன் மற்றும் செயல்திறனுக்காக துணைக்குழுக்களின் செயல்திறனை மதிப்பீடு செய்தனர்.
A.10	வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்களின் வெளிக்கூறல் பணிப்பாளர்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் வருடாந்திர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. பெயர், தகுதிகள், நிபுணத்துவத்தின் தன்மை மற்றும் நிறைவேற்று அதிகாரம் உடையவரா இல்லையா ஆகியவற்றை உள்ளடக்கிய இயக்குநர்களின் சுயவிபரங்கள் பக்கங்கள் 28 முதல் 31 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. பக்கம் 155 இல் உள்ள வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வம். குறிப்பு 17இல் உள்ள பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், பக்கம் 200 இல் உள்ள நிதி அறிக்கைகள் பக்கங்கள் 312 முதல் 319 வரை குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினரது தகவல்கள் பக்கம் 155 இல் குறிப்பிடப்பட்டுள்ள துணை நிறுவனங்களில் பணிப்பாளர் பதவி துணைக் குழுக்களின் அங்கத்துவம் மற்றும் ஆண்டு முழுவதும் கலந்து கொண்ட சபை மற்றும் துணைக்குழு கூட்டங்களின் எண்ணிக்கை பக்கம் 116 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
A.11	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொதுமுகாமையாளரின் மதிப்பீடு சபை மனிதவளக் குழு மற்றும் ஊதியக் குழுவினால் தயாரிக்கப்பட்ட பெருநிறுவனத் திட்டத்திற்கு அமைவாக வருடத்தின் ஆரம்பத்தின் போது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு பொது முகாமையாளரின் செயலாற்றுகை மதிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையானது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
B	பணிப்பாளர்களின் ஊதியம்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைப் பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள்

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
B .1	தலைவர் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு (சகலரும் நிறைவேற்றுத்தரம் சாராதவர்கள்) முறையான ஊதியக் கொள்கை உள்ளது, இது 2023ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது. மேற்கூறிய கொள்கை அரசு, பங்குதாரர் அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்களின் அடிப்படையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பணிப்பாளரும் அவரது ஊதியத்தை தீர்மானிப்பதில் ஈடுபடுவதில்லை.
B.2	**மனிதவள மற்றும் ஊதியக் குழு** பணிப்பாளர்களின் ஊதியம் அரசு, பங்குதாரர், அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.
B .2	இதற்கமைய பணிப்பாளர்களின் ஊதியத்தினைத் தீர்மானிப்பதில் வங்கியின் மனிதவளக் குழு மற்றும் ஊதியக் குழு எவ்வித வகிபாத்திரத்தினையும் வகிக்கவில்லை. (எவ்வாறாயினும் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளின் ஊதியத்தினை அது பரிந்துரைக்கின்றது).
B.3	**ஊதியத்தினை வெளிக்கூறல்** ஒட்டுமொத்த சபைக்கும் வழங்கப்படும் ஊதியம் பற்றிய விபரங்கள் பக்கம் 200 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மனித வளம் மற்றும் ஊதியக் குழுவின் அமைப்பு பக்கம் 126இல் காட்டப்பட்டுள்ளது. பக்கம் 313இல் உள்ள முக்கிய முகாமைத்துவ தரப்பினருக்கான இழப்பீடு
C	**பங்குதாரர் உறவுகள்**
C.1	வங்கியின் ஒரேயொரு பங்குதாரராக இலங்கை அரசாங்கம் காணப்படுவதுடன், பங்குதாரருடனான வங்கியின் தொடர்பாடல் பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன. அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதி (நிதி அமைச்சின் ஒரு அதிகாரி) சபையில் இருப்பதுடன், இவர் நேரடியாக பங்குதாரரை பிரதிநிதித்துவம் செய்வதுடன் ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்திற்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுவதுடன் பாராளுமன்றத்தினால் கேள்விக்கு திறந்திருக்கும்.
C.2	சபையால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொடர்பு கொள்கை நடைமுறையில் உள்ளது. பங்குதாரர்களின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் அக்கறை இலங்கை அரசாங்கம் சபையின் நேரடி அரசாங்க பிரதிநியின் பங்கேற்புடன் சபைக் கூட்டங்களின்போது விவாதிக்கப்பட்டு அமைச்சகத்திற்கு அல்லது தேவைக்கேற்ப உயர் மட்டங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. தகவல் தொடர்பு கொள்கை வங்கிக்கு உள் மற்றும் வெளி பங்குதாரர்களுடன் பயனுள்ள தகவல் தொடர்பு குறித்து வழிகாட்டுகிறது மற்றும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது.
C.3	312 முதல் 319 பக்கங்களில் உள்ள நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டதைத்தவிர, வங்கியின் செயல்திறன், அதன் நிகர சொத்து, தளம் அல்லது தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகளைப் பாதிக்கும் வகையில் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் எதுவும் இல்லை.
D	**பொறுப்புடைமை மற்றும் கணக்காய்வு**
D.1	நிறுவனத்தின் நிதி நிலை, செயல்திறன், வணிகமாதிரி, நிர்வாக அமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய சீரான மற்றும் புரிந்து கொள்ளக்கூடிய மதிப்பீட்டை வழங்குதல். ஆண்டறிக்கையில் வங்கியின் நிதி நிலை, செயல்திறன், வணிக மாதிரி, நிர்வாக அமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய சமநிலையான மதிப்பீட்டை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வழங்குவதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. ஆண்டறிக்கையில் வழங்கப்பட்ட வங்கியின் நிதி அறிக்கைகள் சமநிலையானவை, புரிந்துகொள்ளக்கூடியவை மற்றும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன, எந்தவொரு விலகலும் தெளிவாக விளக்கப்பட்டு உண்மையான மற்றும் நியாயமான பார்வையை சித்தரிக்கின்றன. ஒரே சீரான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீடு இடைக்கால மற்றும் பிற விலை உணர்திறன் கொண்ட பொது அறிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களுக்கு அறிக்கைகள் மற்றும் சட்டரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்படவேண்டிய தகவல்கள் விரிவடைவதையும் இது உறுதி செய்கிறது. வங்கியின் தலைமை நிதி அதிகாரியும் பொது முகாமையாளரும் இலங்கை வங்கி மற்றும் அதன் குழுமத்தின் விவகாரங்கள் குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையை நிதி அறிக்கைகள் வழங்குகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றார்கள். நிதி அறிக்கைகள் வெளியீட்டிற்கான ஒப்புதலுக்காக சபைக்கு பரிந்துரைப்பதற்கு முன்பு சபை கணக்காய்வு குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படுகின்றன. வெளிப்படுத்தல் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக, பின்வரும் அறிக்கைகள் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. வங்கியின் விவகாரங்கள் குறித்த இயக்குநர்களின் ஆண்டறிக்கை பக்கங்கள் 150 மற்றும் 154இல் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி மீளாய்வு பக்கங்கள் 68 மற்றும் 72இன் கீழ் 156 மற்றும் 157 பக்கங்களில் நிதி அறிக்கையின் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கிய முகாமைத்துவ தரப்பினர் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகள் பற்றிய அறிக்கை பக்கங்கள் 312 மற்றும் 319ல் காணப்படுகின்றது. நிதி அறிக்கையிடலுக்கான இயக்குநர்களின் பொறுப்பு அறிக்கை பக்கம் 159 மற்றும் கணக்காளர் நாயகத்தின் அறிக்கை பக்கங்கள் 160 முதல் 164 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. பக்கங்கள் 68 முதல் 72 வரையிலான நிதி மீளாய்வின் கீழ் முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
D.2	**அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்நிலைக் கட்டுப்பாடுகள் பற்றிய வங்கியின் தற்போதைய செயன்முறை** வங்கி அதன் உபாயமார்க்கமிகு குறிக்கோள்களை அடைவதற்கு எடுப்பதற்கு நாட்டம் கொண்டுள்ள முதன்மையான அபாயநேர்வுகளின் தன்மை அதன் அளவு ஆகியவற்றினைத் தீர்மானிப்பதற்கான பொறுப்பினைச் சபை கொண்டுள்ளது. இயைபுறல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக வெவ்வேறு வகையான அபாயநேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படும் அபாயநேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் இருப்பு, இயக்கம் மற்றும் செயற்திறன் தொடர்பான மேற்பார்வைப் பொறுப்பினைச் சபை ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு வசதிப்படுத்துகின்றது. குழுவின் ஏனைய பொறுப்புக்களின் மத்தியில் இயக்க ரீதியான, நிதி ரீதியான மற்றும் இயைபுறல் ரீதியான பொறுப்புக்கள் உள்ளிட்ட வங்கியின் உள்நிலைக் கட்டுப்பாடுகளின் முறைமைகளின் குறிக்கோள்களை அடைவதற்குச் சபைக் கணக்காய்வுக் குழு வங்கிக்கு உதவுகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் மூலமாகச் சபை வங்கியின் அபாயநேர்வு முகாமைத்துவத்தினையும் உள்நிலைக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் கண்காணித்து வருவதுடன் குறிப்பிட்ட குழுக்களின் செயற்திறனினை வருடாந்தம் மீளாய்வு செய்து வருகின்றது. வங்கியின் உள்நிலைக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு இலங்கை வங்கி பூரணமான உள்நிலைக் கணக்காய்வுத் திணைக்களத்தினைக் கொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமையதிபதியே வங்கியின் புறநிலைக் கணக்காய்வாளர் ஆவார்.
D.3	**கணக்காய்வுக் குழு** சபைக் கணக்காய்வுக் குழு மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைப் பிரத்தியேகமாகக் கொண்டிருந்தது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது குழுவின் தலைவர்கள் சுயாதீனமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் ஆவர். கணக்காய்வுக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் நிதி அறிக்கையிடல் மற்றும் கட்டுப்பாட்டில் பொருத்தமான அனுபவத்தினைக் கொண்டிருந்தனர். வங்கியின் சபை அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சபைக் கணக்காய்வுக் குழு உதவுகின்றது.
	அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்நிலைக் கட்டுப்பாடுகளின் செயன் முறைகள் மற்றும் செயற்திறன் மீளாய்வுகளை நடத்துவதையும் கணக்காய்வு அறிக்கைகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதையும் சபைக் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது. கணக்காய்வுக் குழுவின் வகிபாத்திரமும் பொறுப்புக்களும் இந்த வருடாந்த அறிக்கையின் 122 மற்றும் 123 பக்கத்தில் காணப்படுகின்ற கணக்காய்வுக் குழு அறிக்கையில் வெளிக்கூறப்பட்டுள்ளன. கணக்காய்வுக் குழு நோக்கெல்லை விதிகளினை எழுதியுள்ளது. இது குழுவின் வகிபாத்திரம் மற்றும் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுக்கின்றது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது குழுவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் இந்த வருடாந்த அறிக்கையில் 122 மற்றும் 123 பக்கத்தில் காணப்படுகின்றன.
D.4	**ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு (IRMC)** இடர் கலாச்சாரம், இடர் ஏற்பு, இடர் அடையாளம் மற்றும் வகைப்பாடு, மதிப்பீடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை ஐசுஆஊ மேற்பார்வையிடுகிறது. குழு அமைப்பு மற்றும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் பக்கங்கள் 125 மற்றும் 126இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
D.5	**தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்** தொடர்புடைய தரப்பினர்கள், அவர்களின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இது தொடர்பில் சபை உறுப்பினர்கள் கொண்டுள்ள ஏதாவது தனிநலன் சார்ந்த முரண்பாடுகளைத் தவிர்க்கும் முகமாக தொடர்புடைய தரப்பினரினைப் பரிவு காட்டாத முறையில் நடத்துதல் தொடர்பான கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகச் சபை அங்கீகரித்த கொள்கையினை வங்கி கொண்டுள்ளது. பிரதம முகாமைத்துவ ஆளணி மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையின் 312 மற்றும் 319 ஆம் பக்கங்களில் காணக் கிடைக்கின்றன.
D.6	**வியாபார நடத்தை மற்றும் நெறிகள் கோவை** வங்கியின் ஊழியர்களுக்காக வங்கி நெறிக் கோவையொன்றினைப் பேணி வருவதுடன் பணிப்பாளர்களுக்காக வேறான நெறிக் கோவைகளைப் பேணி வருகின்றது. மேலும் இந்தக் கோவைகளுக்கு இயைபுறுவதை உறுதிப்படுத்துகின்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. சட்டவிரோத மோசடிகளைப் புகார் செய்ய “Whistle blowing policy” நடைமுறையில் உள்ளது. இக்கொள்கைகள் ஆண்டுக்காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டது.
D.7	**பெருநிறுவன ஆளுகை வெளிக்கூறல்கள்** பெருநிறுவன ஆளுகை அறிக்கையானது பெருநிறுவன ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகளுடன் இயைபுறுகின்ற அளவினை வெளிக்கூறுகின்றது. இக்கொள்கைகள் ஆண்டுக்காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டது.
F	**பங்குதாரர்**
F.1 மற்றும் F.2	வங்கியின் ஏக பங்குதாரராக இலங்கை அரசாங்கம் உள்ளது.
G	**இணையம் மற்றும் சைபர் பாதுகாப்பு** வங்கியின் வியாபார மாதிரி, வங்கியின் உள்ளேயும் வெளியேயுமான தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் எவ்வாறு தகவல்களினை அனுப்புவதற்காகவும் பெறுவதற்காகவும் வங்கியின் வலையமைப்புடன் இணையலாம் என்பதை அடையாளம் காண்பதற்கும் வியாபாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய விளைவான சைபர் பாதுகாப்பு அபாயநேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் வங்கி ஒரு செயன்முறையினை அமுலில் கொண்டுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைப் பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள்

கோவையில் குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகள்	இணக்கப்பாட்டு நிலை
	சபை அங்கீகரித்த தகவல் பாதுகாப்புக் கொள்கை அமுலில் உள்ளது. இது முகாமைத்துவத்திற்கு நெறிப்படுத்தலினை வழங்குவதுடன் வங்கியின் தகவல் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்றது. மேலும், பாதிப்புறு நிலை பற்றிய மதிப்பீடுகளைப் பரிந்துரைத்துப் பின்தொடர்வதன் மூலமாகவும் சபைக்கு அறிக்கையிடுவதன் மூலமாகவும் வங்கியானது சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட அபாயநேர்வு முகாமைத்துவக் குழு சபைக்கு உதவி வருகின்றது. சைபர் பாதுகாப்பு அபாயநேர்வுகளை அடையாளம் கண்டு முகாமைத்துவம் செய்வதற்கான செயன்முறைகள் இந்த வருடாந்த அறிக்கையின் அபாயநேர்வு முகாமைத்துவ அறிக்கையில் 132 ஆம் 148 பக்கத்தில் காணப்படுகின்றது. சைபர் பாதுகாப்பு அபாயநேர்வு முகாமைத்துவக் கொள்கையினை அமுல்படுத்துவதற்காக வங்கி பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரியினை நியமித்துள்ளது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமாகப் பணிப்பாளர்கள் சபை அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக சபையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு உதவுகின்றது மேலும் சபையினால் மேற்கொள்ளப்படும் சைபர் பாதுகாப்பு அளவிடல்கள் தொடர்பான தீர்மானம் வகுத்தலை வசதிப்படுத்துவதற்கு இது பொருத்தமான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது.
H	**நிலைபேண்தன்மை, ESG இடர் மற்றும் வாய்ப்புக்கள்** (ESG) தொடர்பான வெளிப்பாடுகள் ஆண்டறிக்கையில் 61 முதல் 63 வரை காட்டப்பட்டுள்ளது.
I	**கொள்கைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்**
I.1 & 1.2	1 மற்றும் 1.2 கொள்கைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் (b)(i) மற்றும் (j) தவிர பின்வரும் பகுதிகள் தொடர்பான கொள்கைகள் 2024ஆம் ஆண்டில் பின்பற்றப்படும். அ) பணிப்பாளர் குழு தொடர்பான வி'யங்கள் ஆ) சபைக் குழுக்கள் இ) கூட்டாண்மை ஆளுகை, நியமனங்கள் மற்றும் மறுதேர்வு ஈ) ஊதியம் உ) அனைத்து பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான உள் வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள், நிறுவனத்தின் பட்டியலிடப்பட்ட பத்திரங்களில் வர்த்தகம் செய்வதற்கான கொள்கைகள் உட்பட ஊ) இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் எ) பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான உறவுகள் ஏ) சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை நிலைத்தன்மை ஐ) நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பங்குதாரர்களின் முதலீடுகளின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் ஒ) கூட்டாண்மை வெளிப்பாடுகள் ஓ) விசில்ப்ளோயிங் ஔ) இலஞ்ச ஒழிப்பும் ஊழலும்

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3. (1) சபைக்குரிய பொறுப்புக்கள்		
3. (1) (i)	பின்வருவனவற்றின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் இவ் வங்கியின் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் இச்சபையானது வலுப்படுத்த வேண்டும்:	
	அ. இவ் வங்கியின் தந்திரோபாய நோக்கங்களையும் கூட்டாண்மை விழுமியங்களையும் அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் இவ் வங்கி பூராகவும் இவை தொடர்புபடுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டத்தில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை கிரகமான சுருக்கக் கூறும் அமர்வுகள் ஊடாக கிளை முகாமையாளர் தர ஊழியர்கள் வரைக்கும் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவினால் கூட்டாண்மை திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் என வெளிப்புற கலந்துரையாடல்களில் தெரிவிக்கின்றன. மூலோபாயத்திட்டத்தினை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு வங்கிக்கு வெளிப்புற இடத்தில் நடைபெற்றது. பணிப்பாளர் சபை 2024-2028ற்கான மூலோபாயத்திட்டத்தினையும், 2024ற்கான பாதீட்டையும் அங்கீகரித்தது. கூட்டாண்மை பெறுமதிகள் உள்ளக வலையமைப்பினுள் கிடைக்கக்கூடியதாக உள்ளது.
	ஆ. ஒட்டுமொத்த இடர்கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளுடனான பொறிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ் வங்கியின் ஒட்டுமொத்த வியாபார தந்திரோபாயத்தினை குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கு அங்கீகரித்தல்.	இணங்கப்பட்டது. வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயம் பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு சுழலும் மூலோபாய திட்டமாக தயாரிக்கப்படும், ஆனால் 2024ஆம் ஆண்டு இம்முறை இது ஐந்து ஆண்டுகளுக்கு தயாரிக்கப்பட்டு, அதே காலத்திற்கான தொடர்புடைய செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இடர் நாட்டம் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் பொறிமுறை மூலோபாய திட்டத்திற்கு ஏற்ப இச் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த வங்கிக்கும் அளவிடக்கூடிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இந்த இலக்குகளுக்கு ஏற்ப செயல்திறன் அளவிடப்படுகிறது.
	இ. பிரதான இடர்களை அடையாளங்காணுதல் மற்றும் இவ் இடர்களை மதிநுட்பமாக முகாமிப்பதற்குப் பொருத்தமான முறைமைகளின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்தல்ளூ	வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கையை அங்கீகரிப்பது, இடர் நாட்டத்தை வரையறுப்பது முக்கிய இடர்பாடுகளை அடையாளம் காண்பது, நிர்வாக கட்டமைப்புக்களை அமைப்பதும் மற்றும் முக்கிய இடர்பாடுகளை அளவிட கண்காணிக்க மற்றும் நிர்வகிக்க அமைப்புக்களை செயல்படுத்துவது போன்ற பணிகளில் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவை சபை நியமித்துள்ளது. புதிய உத்திகளிலிருந்து எழும் அபாயங்கள் மற்றும் அத்தகைய அபாயங்களைத் தணிப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து வாரிய உறுப்பினர்கள் விவாதிக்கும் ஒரு செயல்முறையை வங்கி செயல்படுத்தியுள்ளது. பேரிடர் உள்ள அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை கொள்கை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிக்கைகள் இது தொடர்பான கூடுதல் விபரங்களையும் வழங்குகின்றன. • 132 முதல் 148 பக்கம் வரையுள்ள இடர் முகாமைத்துவ அறிக்கை • 124 மற்றும் 125 பக்கங்களிலுள்ள ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை.
	ஈ. கடன் வழங்குனர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்கள் உள்ளடங்கலாக சகல நிறுவன நலனில் அக்கறையுடையோருக்குமான தொடர்பாடல் கொள்கையொன்றின் அமுலாக்கத்தை அங்கீகரித்தல்.	இணங்கப்பட்டது. காலக்கிரமத்தில் மீளாய்வுசெய்யப்படும், சகல நிறுவன நலனில் அக்கறையுடையோர் உள்ளடக்கிய ஒரு தொடர்பாடல் கொள்கையினை சபையானது அங்கீகரித்து அமுல்படுத்தியுள்ளது.
	உ. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் முழுமைத்தன்மையினை மீளாய்வு செய்தல்.	இணங்கப்பட்டது. சபைக்கு அறிக்கையிடும் சபைக் கணக்காய்வுக் குழுவுக்கு இவ் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மை மற்றும் முழுமைத்தன்மையினை மீளாய்வு செய்தல் பற்றிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபையானது முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) போதுமான தன்மையினையும் மீளாய்வு செய்கின்றது. கணக்காய்வு குழுவானது அதற்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினுடைய அறிக்கைகள் மற்றும் இச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்ற வெளியக கணக்காய்வாளர்கள் அறிக்கைகளை மீளாய்வு செய்தது. முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) பயனுறுதித் தன்மையினை மதிப்பிடும் பொருட்டு தகவல் முறைமைக் கணக்காய்வுகள் பணி உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத் தகவல் முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஆகியவற்றின் போதுமான தன்மை பற்றி சபையானது மீளாய்வு செய்துள்ளது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. பிரதான முகாமைத்துவ ஆளணியை அடையாளங்காணுதல் மற்றும் பதவியிலமர்த்தல்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் பொதுமுகாமையாளர், மேலதிக பொதுமுகாமையாளர், சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் ஒன்றிணைந்த தரங்களிலுள்ள அதிகாரிகள் ஆகியோரை பிரதான முகாமைத்துவ ஆளணியினராக (KMP) இவ் வங்கி அடையாளங் கண்டுள்ளது.
	எ. சபை பணிப்பாளர்கள் தமக்காகவும் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமாக அதிகார பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் வரையறை செய்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான அதிகாரப் பரப்பு மற்றும் பிரதான பொறுப்புக்கள் முறையே சபை சாசனம் மற்றும் பதவி விபரம் என்பவற்றினூடாக வரையறுக்கப்பட்டுள்ளன. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபைச் சாசனம் அமுலில் உள்ளது.
	ஏ. சபை கொள்கையுடன் ஒத்திசைவாக இருக்கின்ற, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் வங்கி அலுவல்கள் மீது பொருத்தமான மேற்பார்வை இருப்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. வங்கியின் கூட்டாண்மைத் திட்டத்திற்கமைவான செயற்றினானது செயல் திட்டத்தின் அடிப்படையில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணியானது தத்தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் சபைக்கும் உபகுழுக்களுக்கும் கிரமமாக முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதுடன், தமது விடயப் பரப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் பொருட்டும் தேவைப்படும் போதும் சபையினால் அழைக்கப்படுகின்றனர்.
	ஐ. பின்வருவன உள்ளடங்கலாக சபைப் பணிப்பாளர்களின் சொந்த செயலாட்சி நடைமுறைகளின் பயனுறுதி வாய்ந்த தன்மையினை காலக் கிரமமாக மதிப்பிடுதல். i. பணிப்பாளர் மற்றும் முக்கிய நிர்வாகப் பணியாளர்களின் தேர்வு நியமனம் மற்றும் தேர்தல் ii. ஆர்வ முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் iii. பலவீனங்களை வரையறுத்தல் மற்றும் அவசியப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்	இணங்கப்பட்டது. சபையின் சொந்த ஆளுகை நடைமுறைகளை மதிப்பிடுவதன் மூலம் சபையின் செயற்திறனில் வருடாந்தம் சுயமதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றனது. இலங்கை வங்கி எந்த அமைச்சரின் நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சின் மூலமாக இலங்கை அரசாங்கத்தினால் மற்றும் 1938ஆம் ஆண்டு 53ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளை சட்டத்தினாலும் மற்றும் அதன் பிற்சேர்க்கை மூலமாக சபை நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர்களை நியமிப்பதற்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்று அமுலில் உள்ளது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆர்வ முரண்பாட்டு கொள்கை அமுலில் உள்ளது. இவ்விரு கொள்கைகளும் இவ்வாண்டு காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டது.
	ஒ. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான பொருத்தமான தொடர்ச்சி திட்டமொன்றை இவ் வங்கி கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பிரதான முகாமைத்துவ ஆளணிக்கான (அப்படிப்பட்டதாக, கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைக்கான) தொடர்ச்சி திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இது பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை செயலாட்சிக் குழுவினால் தொடர்ச்சித்திட்டம் தொடர்பான செயல்முறை மேம்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன, மீளாய்வு மற்றும் மீளாக்கம் செய்யப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
	ஓ. கொள்கைகளை மீளாய்வு செய்யும் பொருட்டும், தொடர்பாடல் இணைப்புகளைத் தாபிக்கும் பொருட்டும் மற்றும் கூட்டாண்மை நோக்கங்களை நோக்கி முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டும் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் தேவை அடிப்படையில் கிரமமான சந்திப்புக்களைச் செய்தல்	இணங்கப்பட்டது. தத்தமது பரப்புக்களுடன் தொடர்புபட்ட கொள்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சபை மற்றும் சபை உப குழுக்களின் கூட்டங்களிற்கு பிரதான முகாமைத்துவ ஆளணியினர் கிரமமாக வருகை தருகின்றனர் அல்லது அழைக்கப்படுகின்றனர். மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் கூட்டாண்மைக் குறிக்கோள்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது.
	ஔ. ஒழுங்கு முறைப்படுத்தல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்துபவர்களுடன் பயனுறுதியுள்ள உறவை இவ் வங்கி பேணுகின்றதென்பதை உறுதிப்படுத்தல்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டதும், சபைக்கு வங்கியின் அனைத்து பொருத்தமான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளும் இலத்திரனியல் படிவத்தில் உள்ள சபைக் கையேட்டுடன் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய பொறுப்புக்களை பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களுடைய அறிவு காலத்துக்கு ஏற்ற நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபை கூட்டங்களில் அவர்களிற்கு ஒழுங்குபடுத்தல் சூழலின் அபிவிருத்தி குறித்தும் சுருக்கமான முறையில் கூறப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்துபவர்களுக்கான அனைத்து திரும்பல்களையும் உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டு அறிக்கையானது மாதாந்தம் சபைக்கு முன்னிலைப்படுத்தப்படுவதுடன் சபையினால் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது. வங்கியின் சென்னை, மாலைதீவு, சீசெல்ஸ் கிளைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் தொடர்பாகவும் பணிப்பாளர் சபைக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	க. வெளியக கணக்காய்வாளர்களை பணிக்கு அமர்த்துதல் மற்றும் மேற்பார்வை செய்தலில் உரிய கடும் முயற்சியைப் பிரயோகித்தல்.	இணங்கப்பட்டது. இந் நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, இது அரசுக்குடமையான தொழில்முயற்சியொன்றாக உள்ளதனால், கணக்காய்வாளர் நாயகம் அவர்களே இவ் வங்கியின் வெளியக கணக்காய்வாளர் ஆவர்.
3 (1) (ii)	சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் என்பதுடன் இவ் வழிகாட்டல்களின் 3 (5) இன் வழிகாட்டலுக்கு ஒத்திசைவாக தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை வரையறுத்தலும் அங்கீகரித்தலும் வேண்டும்.	வழிகாட்டி இல 3 (9) (ii) உடன் இணங்குகிறது. தலைவர் 1938ம் ஆண்டு 53ம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் படி வங்கி நிர்வகிக்கப்படும் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார். பண்ணிப்பாளர் சபையானது அமைச்சரின் ஒப்புதலுடன் பொது முகாமையாளரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது திரு. டபிள்யூ. பி. ஆர். எச். பொன்சேகா, திரு. கே.ஈ.டி. சுமனசிறி ஓய்வுபெற்ற பின்னர் 2023 ஜனவரி 14 முதல் இலங்கை வங்கியின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். வங்கியின் பொது முகாமையாளராக பதவிக்கு தேர்வு செய்வதற்காக புதிதாக வடிவமைக்கப்பட்ட பதவி உயர்வுக் கொள்ளை நடைமுறையில் உள்ளது.
3 (1) (iii)	சபையானது ஒழுங்காக கூட வேண்டும் என்பதுடன் சபைக் கூட்டங்களானவை அண்ணளவாக மாதாந்த இடைவெளிகளில் வருடம் ஒன்றுக்கு குறைந்தது பன்னிரண்டு முறைகள் நடாத்தப்பட வேண்டும். சமுகமளிப்பதற்கு உரித்துடைய பெரும்பான்மையான பணிப்பாளர்களின் நேரடியான முனைப்பான பங்குபற்றலினை அத்தகைய ஒழுங்கான சபைக் கூட்டங்கள் சாதாரணமாக உள்ளடக்க வேண்டும். எழுத்து மூலமான தீர்மானங்களை/பத்திரங்களைச் சுற்றிப் பரப்புதல் ஊடாக சபையின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்தலானது சாத்தியப்படக்கூடிய அளவிற்கு தவிர்க்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. சபைக் கூட்டங்கள் இரு வாரங்களுக்கொரு முறை கிரமமாக நடாத்தப்படுவதுடன் தேவை ஏற்படும் போது விசேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மீளாய்வின் கீழ் இவ் ஆண்டின் போது சபை 22 தடவைகள் கூடியது. சுற்றறிக்கை தீர்மானங்கள் ஊடாக அனுமதி பெறலை வங்கியானது குறைத்துக் கொண்டுள்ளது அத்துடன் இது விலக்களிக்கப்பட்ட அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுவதுடன் அத்தகைய தீர்மானங்கள் அடுத்த கூட்டத்தில் சபையினால் செயல்வலுவாக்கம் செய்யப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டின் போது 15 தீர்மானங்கள் சுற்றறிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
3 (1) (iv)	இவ் வங்கியின் வியாபார மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்துடன் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்புறுமிடத்து ஒழுங்கான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலில் அத்தகைய விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை சகல பணிப்பாளர்களும் உள்ளடக்குவதற்கு ஏதுவாக ஏற்பாடுகள் தயாராக உள்ளன என்பதை இச் சபை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. கிரமமான கூட்ட நிகழ்ச்சி நிரலிற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் கூட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.
3 (1) (v)	சகல பணிப்பாளர்களுக்கும் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பமொன்று வழங்கப்படும் பொருட்டு ஒழுங்கான சபைக் கூட்டம் பற்றி குறைந்தது ஏழு நாட்களிற்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்படுவதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய சகல சபைக் கூட்டங்களுக்காகவும் பொருத்தமான அறிவித்தல் வழங்கப்படலாம்.	இணங்கப்பட்டது. வருட ஆரம்பத்தில் ஒரு வருடாந்த நாட்காட்டி ஊடாக கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன. சபைக் கூட்டங்களிற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை பத்திரங்கள் என்பன கூட்டத் திகதிக்கு ஏழு நாட்களிற்கு முன்னர் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) பணிப்பாளர்களிற்கு அனுப்பப்படுகின்றன. ஏதேனும் விசேட கூட்டமொன்றிற்கு முன்னர் நியாயமான வகையில் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.
3 (1) (vi)	உடன் முன்வரும் 12 மாத காலப்பகுதியில் குறைந்தது மூன்றிலிரண்டு பங்கு கூட்டங்களிற்குச் சமுகமளித்திராத அல்லது நடாத்தப்பட்ட உடன் முன்வரும் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளித்திராத பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக இருப்பதை முடிவுறுத்த வேண்டுமென்பதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் மாற்றீடான பணிப்பாளர் ஒருவருக்கூடாக பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றுதலானது வருகையாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்	இணங்கப்பட்டது. கூட்டாண்மை ஆளுகை நெறிமுறைக்கு அமைவாக பணிப்பாளர்களின் வருகை மதிப்பிடப்படுகின்றது. பணிப்பாளர்களின் வருகை குறித்த விபரங்கள் பக்கம் 116 இல் தரப்பட்டுள்ளது. பணிப்பாளர்களின் வருகை இந் நெறிமுறைக்கு அமைவாக இருந்தது.
3 (1) (vii)	சபைக்கான செயலக சேவைகளையும் பங்குதாரர் கூட்டங்களையும் கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன தனது பிரதான பொறுப்புகளாக இருக்க வேண்டிய, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் கம்பனி செயலாளர் ஒருவரை சபையானது நியமித்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் அதன் திருத்தங்களுடன் தனது ஆற்றல்கள்/தகைமைகள் ஒத்திசைவாக இருக்கும் சட்டத்தரணி ஒருவராக இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் உள்ளார். சபைக்கான செயலக சேவைகளை கையாளுதல் மற்றும் நியதிச்சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்தல் என்பன இவரது பிரதான பொறுப்புக்கள் ஆகும்.
3 (1) (viii)	சபை நடைமுறைகள் மற்றும் சகல ஏற்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பன பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அடைவினை சகல பணிப்பாளர்களும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. ஒரு சட்டத்தரணியாகவும் அத்துடன் சபை நடைமுறைகளின் தொடர் நடவடிக்கைகளுக்கும், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் நியதிச்சட்டங்கள் ஆகியவற்றுடனான ஒத்திசைவுக்கும் மற்றும் இவ் வங்கியின் கூட்ட அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய பதிவுகளை வைத்திருந்து பேணுவதற்கும் பொறுப்பாகவுமிருக்கின்ற சபை செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் சகல உறுப்பினர்களும் சந்தர்ப்பத்தினைக் கொண்டுள்ளனர்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (ix)	கம்பனிச் செயலாளரானவர் சபைக் கூட்ட அறிக்கைகளைப் பேண வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்ட அறிக்கைகளானவை எந்தவொரு பணிப்பாளரினதும் பொருத்தமான அறிவித்தலின் பேரில் எந்தவொரு பொருத்தமான நேரத்திலும் பரிசோதனைக்காக காட்டப்பட வேண்டும்	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் செயலாளர்/சபையின் செயலாளர் சபை கூட்ட அறிக்கைகளை பேணுவதுடன் அவற்றை அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக (eSolution) சுற்றனுப்புகின்றனர். கூட்ட அறிக்கைகள் அடுத்த சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கூட்ட அறிக்கைகள் தொடர்ந்துவரும் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும், கடந்தகால சபை ஆவணங்கள் மற்றும் கூட்ட அறிக்கைகளை ஒரு பாதுகாப்பான இலத்திரனியல் தொடர்பினூடாக பணிப்பாளர்கள் அணுகுகின்றனர்.
3 (1) (x)	சபையானது அதன் கடமைகளை ஆற்றுகையில் உரிய கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் செயற்பட்டதா என்பது குறித்து, கூட்ட அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்வது சாத்தியப்படக்கூடியதாக போதுமான விபரங்கள் சபையின் கூட்ட அறிக்கைகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். சபைக் கூட்டங்களிலான கலந்தாய்வுகளின் ஆழமான தன்மையை மதிப்பிடுவதற்கென ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கான ஆதாரமொன்றாகவும் இவ் அறிக்கைகள் செயற்பட வேண்டும். ஆதலினால், சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வருவனவற்றை தெளிவாக உள்ளடக்க அல்லது குறிப்பிட வேண்டும்: அ. சபையினால் அதன் கலந்தாய்வுகளில் பிரயோகிக்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களின் ஒரு சுருக்கம் ஆ. சபையினால் கருத்திற்கொள்ளப்படும் விடயங்கள் இ. சபையானது அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் ஆற்றியிருந்ததா என்பதை விபரிக்கக் கூடிய விடயக் கண்டறிவு கலந்துரையாடல்கள் மற்றும் வாத விவாத கருத்து மறுப்புதுறை இணைப்புக்கள். ஈ. சபையின் தந்திரோபாயங்கள், கொள்கைகளுடனான ஒத்திசைவினையும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இயைந்தொழுகலையும் சுட்டிக்காட்டுகின்ற, உரிய நிறைவேற்றுனர்களினுடைய நற்சான்றிதழ் மற்றும் உறுதிப்படுத்தல்கள் உ. வங்கி முகங்கொடுக்கின்ற இடர் பற்றிய சபையின் அறிவு புரிந்துணர்வு அத்துடன் பின்பற்றப்பட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியதோர் கண்ணோட்டம். ஊ. தீர்மானங்கள் மற்றும் சபை தீர்மானங்கள்	இணங்கப்பட்டது. தரப்பட்ட தகுதிவிதிகளை உள்ளடக்கி கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன.
3 (1) (xi)	நியாயமான கோரிக்கையின் பேரில், பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீன தொழில்துறை ஆலோசனையை, வங்கியின் செலவில் பணிப்பாளர்கள் கோரிப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சபையினால் உடன்பாடு காணப்பட்ட நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். உரிய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு அவரின்/அவர்களின் கடமைகளை வங்கிக்கு ஆற்றுவதற்கு உதவும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு வெவ்வேறான சுயாதீன தொழில்துறை ஆலோசனையை வழங்குவதற்கு சபை தீர்மானிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சுயாதீன தொழில்துறை ஆலோசனையை பெறுவதற்கான பணிப்பாளர்களின் அணுகுமுறை கொள்கையொன்று தயாராக உள்ளதுடன் அவசியமெனக் கருதப்படும் போது சுயாதீன தொழில்துறை ஆலோசனையைப் பணிப்பாளர்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.
3 (1) (xii)	பணிப்பாளர்களானவர்கள் ஏனைய நிறுவனங்களுடன் அல்லது தொடர்புபட்ட தரப்பினர்களுடனான தமது செயற்பாடுகளில், மற்றும் சபையினால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயம் ஒன்றில் பணிப்பாளர் ஒருவர் ஆதாய முரண்பாடொன்றைக் கொண்டிருப்பாராயின், கொடுக்கல் வாங்கலில் பொருண்மையுடைய ஆதாயத்தைக் கொண்டிராத சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் ஜஇவ் வழிகாட்டல்களின் 3 (2) (iv) இன் வழிகாட்டலைப் பார்க்கவும் சமுகமளிக்கும் சபைக் கூட்டமொன்றில் இவ் விடயம் கையாளப்பட வேண்டும். மேலும், ஒரு பணிப்பாளரானவர், தான் அல்லது எவரேனும் தனது நெருங்கிய உறவினர் அல்லது, ஒரு பணிப்பாளர் கணிசமானளவு ஆதாயத்தை எக் கரிசனையாளர் மீது கொண்டிருக்கின்றாரோ அக் கரிசனையாளர் ஒருவர் ஆதாயத்தைக் கொண்டிருப்பது தொடர்பான ஏதேனும் சபைத் தீர்மானம் குறித்து வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும் அத்துடன் அச் சபைக் கூட்டத்தில் உரிய நிகழ்ச்சிநிரல் விடயத்திற்கான கூட்ட நடப்பெண்ணில் அவர் கணக்கில் எடுக்கப்படலாகாது.	இணங்கப்பட்டது. இதற்கு இணங்க இலங்கை வங்கியில் பராமரிக்கப்படும் திறைசேரி பிரதிச் செயலாளரின் நிலுவைகள் குறித்து, நிதி அமைச்சகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் அலுவலக பணிப்பாளர் திரு. ஆர். எம். பிரியந்த ரத்னாயக்க, கணக்காளர் நாயகத்தின் அக்கறையை வெளிப்படுத்தினார். எச் சூழ்நிலையில் ஆதாய முரண்பாடு ஒன்று காணப்படுகின்றதோ அச் சூழ்நிலையினை ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கையாளுவதற்கான தமது கடப்பாடு பற்றி பணிப்பாளர்கள் அறிந்து கொண்டுள்ளனர். சபையினால் அங் கீகரிக்கப்பட்ட ஆதாய முரண்பாடுகள் மீதான கொள்கை அமுலில் உள்ளது. ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் ஒரு நடைமுறையாக வேறு ஏதேனும் சபை அல் லது நிறுவனத்துக்கான ஒப்பந்தங்கள்/புதிய நியமனங்களிலுள்ள ஏதேனும் ஆதாயத்தை வெளிப்படுத்தும்படி பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர். ஆதாய முரண்பாடொன்று உள்ள சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதிலிருந்தும், தமது அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்துவதிலிருந்தும் அல்லது அங் கீகரிப்பதிலிருந்தும் பணிப்பாளர்கள் விலகியிருப்பார்கள் அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்ட நடப்பெண்ணில் அப் பணிப்பாளர்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (1) (xiii)	வங்கியின் நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு சபையின் அதிகாரத்தின் கீழ் உறுதியாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு தீர்மானம் கருதி விசேடமாக சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள முறைசார்ந்த விடய அட்டவணை ஒன்றை இச் சபை கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. சபை சாசனத்தில் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3 (1) (xiv)	வங்கியினால் அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாமலுள்ளது அல்லது இயலாமற் போகும் சாத்தியக்கூறு உள்ளது என்றோ அல்லது வங்குரோத்து நிலையை அண்மித்துள்ளது என்றோ அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன்கொடுனர்களிற்கான நிலுவைக் கொடுப்பனவை இடைநிறுத்தப் போகின்றது என்றோ சபையானது கருதினால், எந்தவொரு தீர்மானம் அல்லது நடவடிக்கை மேற்கொள்ள முன் வங்கியின் இந் நிலமை பற்றி வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சபை உடனடியாக அறிவிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சூழ்நிலை எழுந்திருக்கவில்லை. சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த நிதி கூற்றுக்களானவை வங்கியின் கடன் தீர்க்கும் ஆற்றல் பற்றி சபைக்கு உறுதிப்பாட்டை வழங்குகின்றது.
3 (1) (xv)	மூலதனத்தின் போதுமானதன்மை விகிதம் மற்றும் ஏனைய மதிநுட்பம் வாய்ந்த அடிப்படைகளிற்கு ஏற்ப நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கிக்கு பல மட்டங்களில் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதென்பதை சபை உறுதிப்படுத்துகின்றது.	இணங்கப்பட்டது. மூலதனத்தின் போதுமானதன்மை விகிதம் மற்றும் ஏனைய மதிநுட்பம் வாய்ந்த அடிப்படைகளிற்கு ஏற்ப நாணய சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கிக்கு பல மட்டங்களில் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதென்பதை சபை உறுதிப்படுத்துகின்றது. வங்கியின் மாதாந்த நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து மூலதனத்தின் போதுமானதன்மை விகிதத்தின் (CAR) கணிப்பீடானது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
3 (1) (xvi)	இவ் வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுடனான இணக்கப்பாட்டினை விதித்துரைக்கும் வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையொன்றை வங்கியின் வருடாந்த அறிக்கையில் சபை பிரசுரிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் வெளிப்படுத்தல்களானவை வங்கியின் வருடாந்த அறிக்கையில் உள்ள கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையின் பகுதியாக இருக்கின்றன.
3 (1) (xvii)	வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய மதிப்பீட்டு திட்டமொன்றை சபை பின்பற்ற வேண்டும் என்பதுடன் அத ்தகைய மதிப்பீடுகள் பற்றிய பதிவுகளைப் பேணவும் வேண்டும்.	இணங்கப்பட்டது. சுய மதிப்பீட்டு திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. இலங்கை வங்கி செயலாளரினால்/சபை செயலாளரினால் சபையின் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் பேணப்படுகின்றன.
3 (2)	சபையின் அமைப்பு	
3 (2) (i)	சபை மீதான பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது 7 இற்கு குறைவாகவோ 13 இற்கு கூடுதலாகவோ இருத்தலாகாது.	1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைவாக சபை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஆறு. 2023ல் சபையின் கூட்டமைவு பணிப்பு 3(2)(viii)ன் கீழ் தரப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை பற்றிய விபரங்கள் 112ஆம் பக்கம் ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன. இவ் வழிகாட்டலின் கூறப்பட்ட தேவைப்பாட்டுடன் ஒத்திசைவுறும் பொருட்டு கூறப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தினை மாற்றியமைக்கும் செயல்முறையில் வங்கி உள்ளது.
3 (2) (ii)	பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியினை வகிக்கும் பணிப்பாளர் ஒருவரைத் தவிர பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலப்பகுதியானது ஒன்பது வருடங்களை விஞ்சலாகாது என்பதுடன் பதவியிலுள்ள அத்தகைய காலப்பகுதியானது 2008 ஆம் ஆண்டு ஜனவரி 01 வரை அத்தகைய பணிப்பாளரினால் புரியப்பட்ட மொத்த சேவைக் காலப்பகுதியினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தற்போதைய பணிப்பாளர்கள் ஒன்பது வருடங்களுக்கு குறைவான சேவைக் காலப்பகுதியில் பதவியில் உள்ளனர். அவர்களின் நியமனம் சம்பந்தமான விபரங்கள் இவ் ஆண்டறிக்கையில் பக்கம் 115இல் தரப்பட்டுள்ளது.
3 (2) (iii)	சபைப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கினை நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையானது விஞ்சாதுவிடின் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக (இதனகத்துப் பின்னர் "நிறைவேற்றுப் பணிப்பாளர்" ஒருவராக குறிப்பிடப்படும்) வங்கி ஒன்றின் ஓர் ஊழியர் நியமிக்கப்படலாம். அத்தகையதோர் சந்தர்ப்பத்தில், நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியில் நிறைவேற்றுப் பணிப்பாளர் எவரும் இல்லை.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2) (iv)	சபையானது குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் அல்லது மொத்தப் பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு இவற்றில் எது உயர்வானதோ அதனைக் கொண்டிருக்க வேண்டும். இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாதல் வேண்டும். நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவர்: அ. வங்கியின் 1% இற்குக் கூடுதலாக நேரடி மற்றும் மறைமுக பங்கு மூலதனத்தைக் கொண்டிருந்தால் ஆ. இதன்கண்ணுள்ள 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் விபரிக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலை தற்போது கொண்டிருப்பின் அல்லது பணிப்பாளராக அவரின் நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது கொண்டிருந்தால் இ. பணிப்பாளரான நியமனத்திற்கு உடன் முன்வரும் இரு வருட காலப்பகுதியின் போது வங்கியினால் பணிக்கமர்த்தப்பட்டிருந்தால் ஈ. நெருங்கிய உறவினர்' என்பது வாழ்க்கைத் துணையாக அல்லதுநிதி ரீதியில் தங்கியிருக்கும் பிள்ளையொன்றாகப் பொருள்பட வேண்டும். உ. வங்கியின் குறித்த நிறுவனநலனில் அக்கறை உடையோர் ஒருவரைப் பிரதிநிதித்துவம் செய்தால் ஊ. பின்வருமாறு உள்ள கம்பனி அல்லது வியாபார நிறுவனம் ஒன்றில் ஓர் ஊழியராக அல்லது ஒரு பணிப்பாளராக அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர் ஒருவராக இருந்தால்: i. இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10% இற்கு மேற்பட்டு, வங்கியுடன் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலொன்றை தற்போது கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம், அல்லது. ii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் பணிக்கமர்த்தப்பட்டிருக்கும் அல்லது பணிப்பாளர்களாகவிருக்கும் அல்லது குறிப்பிடத்தக்க பங்குதாரர்களாகவிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் அல்லது. iii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்கள் எவரேனும் இவ் வழிகாட்டல்களின் 3 (7) ஆம் இலக்க வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் 10மூ இற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றை கொண்டிருக்கும் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் சுயாதீனமுடையவராகக் கருதப்படலாகாது.	இணங்கப்பட்டது. (4 நாட்கள் தவிர்ந்து ஜனவரி 13இலிருந்து 17 வரை) நிதியமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரானவர் பங்குதாரரான அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், சுயாதீனமற்ற பணிப்பாளராகக் கருதப்படுகின்றார். அவ்வாறான பணிப்பாளர்கள் அர்களின் சுயவிபரங்களை மற்றும் கட்டளை இல. 3 (2) (viii) இன் கீழ் தரப்பட்டுள்ளன.
3 (2) (v)	சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும். பட்சத்தில் அவ்வாறு நியமிக்கப்படும் ஆள் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவருக்கு ஏற்புடைய தகுதிவிதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. எந்தவொரு சுயாதீனப் பணிப்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு மாற்றீடான பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை.
3 (2) (vi)	நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் நம்பகத்தன்மையான முன்னைய பதிவுகளினை கொண்ட ஆட்களாக இருக்க வேண்டும் அத்துடன்/அல்லது தந்திரோபாயம், செயற்றிறன் மற்றும் வளங்கள் குறித்த விடயங்களைத் தொடர்புபடுத்துவதற்கான சுயாதீன தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு அவசியமான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.	இணங்கப்படடது. பணிப்பாளர்களின் சுயவிபரங்கள் பக்கம 28 முதல் 31 வரை தரப்பட்டுள்ளன.
3 (2) (vii)	சபையின் கூட்டமொன்றில் சமுகமளிக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் அரைவாசிக்கும் கூடுதலானவர்கள் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்தாலொழிய, அத்தகைய கூட்டத்தில் கூட்ட நடப்பெண்ணை உருவாக்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையினர் சமுகமளிக்கும் போதிலும், அத ' தகைய கூட்டமானது உரியவாறு கூட்டப்படலாகாது. இவ் உப வழிகாட்டலானது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து முன்நோக்கியதாக ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் சகல சபை உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராதவர்கள்.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2) (viii)	வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் சகல கூட்டாண்மை தொடர்பாடல்களிலும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் உள்ளார்ந்தமாக தெளிவாக இனங்காணப்பட வேண்டும். தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத சுயாதீன பணிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளடங்கலாக சபையின் உள்ளடக்கத்தினை பணிப்பாளர்களின் வகுதிக்கு அமைவாக வருடாந்த கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வங்கி வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. 2023ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது **திரு. காஞ்சன ரத்வத்தே** தலைவர்/சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 02 ஜனவரி 2020, பணிப்பாளர் பதவி விலகல் 02 ஜனவரி 2023) **திரு. ரொனால்ட் சி பெரேரா P.C.** தலைவர்/சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 18 ஜனவரி 2023, பணிப்பாளர் பதவி விலகல் 13 மார்ச் 2024) **திரு. காவன் ரத்நாயக்க** தலைவர்/சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 14 மார்ச் 2024) **திரு. ஆர்.எம். பிரியந்த ரத்நாயக்க** சுயாதீனமற்ற நிறைவேற்றுத்தரம் சாராத பதவி வழிப் பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 28 ஏப்ரல் 2020, மீள் நியமனம் 29 ஏப்ரல் 2023) **திரு. ஜி. ஹர்ஷ விஜயவர்தன** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 14 ஜனவரி 2020, பணிப்பாளர் பதவி விலகல் 13 ஜனவரி 2023) **திரு. ஏ. சி. மணில்கா பெர்னாண்டோ** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 21 ஏப்ரல் 2020, பணிப்பாளர் பதவி விலகல் 21 ஏப்ரல் 2023) **மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்றவர்) ஜி.ஏ. சந்திரசிரி VSV** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 08 ஜனவரி 2021, பணிப்பாளர் பதவி விலகல் 07 ஜனவரி 2024) **பேராசிரியர் கித்சிரி எம். லியனகே** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 31 மார்ச் 2023) **திரு. நரேஷ் அபேயசேகர** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 04 மே 2023) **திரு. ஜெஹான் இஸ்மாயில்** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் (பணிப்பாளர் பதவி நியமனம் 07 பெப்ரவரி 2024) **திரு. ஜயமின் பெல்பொல** சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர (பணிப்பாளர் பதவி நியமனம் 22 பெப்ரவரி 2024)
3 (2) (ix)	சபையின் புதிய பணிப்பாளர்களின் நியமனத்திற்காக முறைசார்ந்த, கருத்திற்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான நடைமுறையொன்று இருத்தல் வேண்டும். சபைக்கான ஒழுங்கான அடுத்துறும் நியமனங்களுக்கான நடைமுறைகளும் செயல்வலுவில் இருத்தல் வேண்டும்.	1938 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் கீழ் எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் இவ் வங்கி வருகின்றதோ அவ் அமைச்சரின் ஊடாக இலங்கை அரசாங்க பங்குதாரரினால் சபைக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கிக்குரிய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பணிப்பாளர் நியமனக் கொள்கை உள்ளது. இதில் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்படுபவர்களுக்கான தகுதிகள் அறிவு, திறமைகள் என்பவை தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
3 (2) (x)	அமைய வெற்றிடம் ஒன்றை நிரப்பும் பொருட்டு நியமிக்கப்படும் சகல பணிப்பாளர்களும் அவர்களின் நியமனத்திற்குப் பின்னரான முதலாவது பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களினால் நடாத்தப்படும் தேர்தல் ஒன்றுக்கு உட்பட வேண்டும்.	உரிய அமைச்சர் அவர்களை நியமிப்பதனால் இச்சந்தர்ப்பம் எழவில்லை.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (2) (xi)	பணிப்பாளர் ஒருவர் பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படின், சபையானது பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்: அ. வங்கியுடன் உரிய பணிப்பாளரின் உடன்பாடின்மை தொடர்பிலான தகவல்கள் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாமல் பணிப்பாளரின் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம் பற்றியும் மற்றும் அத்தகைய பதவிவிலகல் அல்லது பதவிநீக்கத்திற்கான காரணங்கள் பற்றியும் அறிவித்தல் அத்துடன் ஆ. பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றி உறுதிப்படுத்தும் கூற்று ஒன்றை வெளியிடுதல்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கமானது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக நியமனங்களையும் அதேபோன்று பதவி நீக்கங்களையும் மேற்கொள்கின்றது. ஏதேனும் பதவி விலகலும் அதே அமைச்சரிடம் தொடர்புபடுத்தப்படுகின்றது. இப் பதவிவிலகல்கள் பற்றி இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆகியவற்றுக்கு அறிவிக்கப்படுகின்றது. வங்கியின் பங்குதாரர் அரசாங்கம் மற்றும் பணிப்பாளர்களின் மாற்றங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சினூடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.
3 (2) (xii)	வங்கி ஒன்றின் துணைக் கம்பனியாக அல்லது இணைக் கம்பனி ஒன்றாக இன்னொரு வங்கியானது உள்ள சந்தர்ப்பம் தவிர அத்தகைய வங்கியின் பணிப்பாளர் ஒருவராக முதலில் குறிப்பிடப்பட்ட வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது ஓர் ஊழியர் நியமிக்கப்படவோ, தேர்வு செய்யப்படவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படவோ கூடாது.	வங்கியயின் (2008ம் ஆண்டு 41 இல பிரதேச சன்வர்தன வங்கி சட்டம்) இயலுமைப்படுத்தப்பட்ட சட்டங்களின் தேவைகளுக்கு இணங்க பிரதேச சன்வர்தன வங்கிக்கு பொது முகாமையாளரை நியமிப்பது தவிர இலங்கை வங்கியின் பணிப்பாளர்களோ ஊழியர்களோ வேறொரு வங்கியின் பணிப்பாளராக இருக்கமாட்டார்கள். இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளராக நியமிக்க முன்னர் 1988ம் ஆண்டு 30ம் இல வங்கி சட்ட பிரிவு 42 (1) படி 2019 டிசம்பர் 19 திகதி வெளியிடப்பட்ட 2019ம் ஆண்டு 8ம் இல இணங்க இந்த பதவியை உறுதி செய்யும் வகையில் உறுதிமொழி பெறப்படும்.
3 (3) பணிப்பாளர்களின் உடலுறுதி மற்றும் பொருத்தப்பாட்டினை அளவிடுவதற்கான தகுதிவிதிகள்		
3 (3) (i)	பணிப்பாளராகச் சேவையாற்றும் ஆளொருவரின் வயது 70. இற்கு மேற்படலாகாது. இச் சூழமைவில், பின்வரும் பொதுவான விதிவிலக்கு ஏற்புடையதாதல் வேண்டும்: 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலுள்ளவாறு 70 வயதை எட்டியுள்ள அல்லது 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னராக 70 வயதை எட்டும் பணிப்பாளர் ஒருவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆகக்கூடிய மூன்று வருட மேலதிக காலப்பகுதிக்கு பதவியில் தொடரலாம்.	இணங்கப்பட்டது. இவ் வங்கியின் எந்தவொரு பணிப்பாளரும் 70 வயதிற்கு மேற்படவில்லை.
3 (3) (ii)	வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்/தானங்களின்/ நிறுவனங்களின் பணிப்பாளர் ஒருவராக ஓர் ஆள் பதவி வகித்தலாகாது.	இணங்கப்பட்டது. 20 இற்கு மேற்பட்ட கம்பனிகளின்/நிறுவனங்களின் பணிப்பாளர் பதவிநிலையை எந்தவொரு பணிப்பாளரும் வகிக்கவில்லை. இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக்கு அவர்கள் நியமிக்கப்பட்டதும் ஆண்டு இறுதியில் இது தொடர்பாக ஒரு பிரகடனம் பெறப்படுகிறது.
3 (3) (iii)	ஒரு வங்கியின் பொது முகாமையாளர் அல்லது பணிப்பாளராக நியமிக்கப்படும் ஒருவர் தன்னுடைய பதவி காலம் முடிவடைந்து ஆறு மாதங்கள் வரை இன்னொரு வங்கிக்கு பணிப்பாளராகவோ அல்லது பொது முகாமையாளராகவோ நியமிக்கப்பட முடியாது. எனினும் இன்னொரு வங்கியை மீள் கட்டமைப்பு செய்வதற்காக நாணய சபையின் அங்கீகாரத்துடன் அந்த வங்கியின் பணிப்பாளர் சபைக்கு ஒருவரை நியமிக்க முடியும். எனினும் இதற்காக பரிந்துரைக்கப்பட்ட அனைத்து நடைமுறைகளும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். இந் நடைமுறைகள் பின்பற்ற படாதவிடத்து அந்நியமனம் உடனடியாக இரத்துச்செய்யப்படும்.	இணங்கப்பட்டது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் அறிக்கையிடப்படும் வருடத்தில் ஏற்படவில்லை.
3 (4) சபையினால் கையளிக்கப்படும் முகாமைத்துவ தொழிற்பாடுகள்		
3 (4) (i)	பணிப்பாளர்கள் அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகள் பற்றி கவனமாக ஆராய்ந்து தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. சபையானது அமுலிலுள்ள கையளித்தல் ஏற்பாடுகளை காலக்கிரமமாக மீளாய்வு செய்து அங்கீகரிக்கின்றது அத்துடன் கையளித்தல் பரப்புக்கள் வங்கியின் தேவைகளைக் கவனத்தில் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் அதேவேளை சபை அதன் தொழிற்பாடுகளை பயனுறுதிவாய்ந்த வகையில் நிறைவேற்றுவதற்கும் ஏதுவாகின்றது. இச் செயன்முறையின் போது ஆளுகைக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.
3 (4) (ii)	சபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான சபையின் ஆற்றலினை முழுமையாக அத்தகைய கையளிப்பானது குறிப்பிடத்தக்களவிற்கு தடைப்படுத்தும் அல்லது குறைக்கும் அளவிற்கு ஏதேனும் விடயங்களை சபைக் குழுவொன்றுக்கு, பிரதம நிறைவேற்று அலுவலருக்கு, நிறைவேற்றுப்பணிப்பாளருக்குஅல்லது பிரதான முகாமைத்துவஆளணிக்குசபை கையளித்தலாகாது.	
3 (4) (iii)	சபையானது காலக்கிரம அடிப்படையில் அமுலிலுள்ள கையளித்தல் செய்முறைகளை, அவை வங்கியின் தேவைகளுக்குரியதாக காணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீளாய்வு செய்தல் வேண்டும்.	
3 (5) தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி		
3 (5) (i)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே தனியாளினால் ஆற்றப்படலாகாது.	இணங்கப்பட்டது. தலைவரினதும் இலங்கை வங்கியில் பொது முகாமையாளராகக் குறிப்பிடப்படும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகங்கள் இரு வேறு தனியாட்களினால் வகிக்கப்படுகின்றன. தலைவரினதும் பொது முகாமையாளரினதும் பொறுப்புக்களை வரைவிலக்கணப்படுத்தும் சபை சாசனமொன்று அமுலிலுள்ளது.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஒருவராகவும் அதே போன்று பொருத்தமுடையதாக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும். தலைவர் சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராக இல்லாத பட்சத்தில், சபையானது சிறந்த சுயாதீன ஆக்கக்கூறு ஒன்றை உறுதிப்படுத்தும் பொருட்டு பொருத்தமுடையதாக ஆவணப்படுத்தப்பட்ட விடய ஆய்வெல்லையுடன் சேர்த்து சிரேட்ட பணிப்பாளராக சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரை பதவியிலமர்த்த வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவிப்பெயரானது வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர் ஆவார். ஆகையால் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரினை நியமிப்பதற்கான தேவை எழவில்லை.
3 (5) (iii)	தலைவரினதும் பிரதம நிறைவேற்று அலுவலரினதும் அடையாளம் மற்றும் தலைவரிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலருக்கும் இடையிலான ஏதேனும் உறவுமுறை நிதி, வியாபார, குடும்ப அல்லது ஏனைய பொருண்மையான/உரிய உறவு (உறவுகள்) உள்ளடங்கலாக வகை ஏதுமிருப்பின் அவ் வகை மற்றும் சபை உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றை சபையானது அதன் ஆண்டறிக்கையின் முக்கியமான பகுதியொன்றாக இருக்க வேண்டிய அதன் கூட்டாண்மை செயலாட்சி அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர் மற்றும் பொதுமுகாமையாளர் இருவரின் விபரங்கள் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. தலைவருக்கும் பணிப்பாளர்களுக்கும், பொது முகாமையாளருக்கும் எந்தவொரு குடும்ப உறவுமுறைகளோ, நிதியியல், வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களோ இல்லை.
3 (5) (iv)	தலைவரானவர்: (அ) சபைக்கு தலைமைத்துவத்தினை வழங்க வேண்டும். (ஆ) சபை பயனுறுதிவாய்ந்த வகையில் தொழிற்படுகிறது என்பதையும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் அத்துடன் (இ) சகல பிரதான மற்றும் பொருத்தமான விடயங்கள் யாவும் சபையினால் உரியநேரத்தில் கலந்துரையாடப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (v)	ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்காக ஏனைய பணிப்பாளர்களினால் பிரேரிக்கப்படும் ஏதேனும் விடயங்களைப் பொருத்தமுடையதாக கவனத்திற்கு எடுத்து, அந்நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அங்கீகரிக்கும் பிரதான பொறுப்பினை தலைவர் கொண்டிருக்க வேண்டும். கம்பனிச் செயலாளருக்கு நிகழ்ச்சிநிரல் தயாரிப்புக் கடமையினைத் தலைவர் கையளிக்கலாம்.	இணங்கப்பட்டது. சபைத் தலைவரின் கையளிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய பொது முகாமையாளரூடாக சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் மற்றும் சபை உறுப்பினரால் கூறப்பட்ட ஏதாவது ஏனைய சம்பந்தப்பட்ட விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு வங்கியின்/சபையின் செயலாளரால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகின்றது.
3 (5) (vi)	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் குறித்து சகல பணிப்பாளர்களிற்கும் உரியவாறு விளக்கம் அளிக்கப்படுகின்றது என்பதை தலைவர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் உரிய நேரத்தில் பணிப்பாளர்கள் போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் தலைவர் பணிப்பாளர் சபைக்கு போதுமான அறிவுத்தல்களை வழங்குகிறார். கீழ்வரும் நடவடிக்கைகள் அதனை உறுதிப்படுத்துகின்றன: • சபைக்கு அறிக்கையிடப்படும் விபரங்கள் கூட்டத்திற்கு முன்பாக பாதுகாப்பான இலத்திரனியல் முறைமையில் அனுப்பிவைக்கப்படுகின்றன. • தேவையேற்படின் முன்கூட்டிய சபைக்கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. • முகாமைத்துவ அங்கத்தவர்கள் தேவையான போது மேலதிக விளக்கங்களை தர அனுமதிக்கப்படுகின்றனர். • வங்கியின் தொழிற்பாட்டினையும் உறுதிப்பாட்டினையும் அறிந்து கொள்ள முகாமைத்துவ தகவல்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடிய விதத்தில் அறிக்கையிடப்படுகின்றன. • வங்கியின் செலவுகளுக்காக தேவைப்படும் இடத்து பணிப்பாளர்- களினால் சுயாதீனமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
3 (5) (vii)	சபையின் அலுவல்களுக்கான முழுமையானதும் முனைப்பானதுமான பங்குபற்றலினை செய்யும் பொருட்டு சகல பணிப்பாளர்களையும் தலைவர் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதுடன் வங்கியின் அதிசிறந்த நலனிற்காக சபை செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தையும் வகிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது.
3 (5) (viii)	தலைவர் குறிப்பாக நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களின் பயனுறுதி வாய்ந்த பங்குபற்றலுக்கு உதவ வேண்டும் என்பதுடன் நிறைவேற்றுத்தரம் சார்ந்த மற்றும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களுக்கிடையில் ஆக்கபூர்வமான உறவுகளை உறுதிப்படுத்தவும் வேண்டும்.	இணங்கப்பட்டது. முழுச் சபையும் நிறைவேற்றுத்தரம் சாராத சகல பணிப்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.
3 (5) (ix)	பிரதான முகாமைத்துவ ஆளணியின் நேரடி மேற்பார்வை உள்ளடங்கும் செயற்பாடுகளிலும் வேறு ஏதேனும் நிறைவேற்றுக் கடமைகள் யாவற்றிலும் தலைவர் ஈடுபடலாகாது.	இணங்கப்பட்டது. தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (5) (x)	பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்கு தொடர்புபடுத்தப்படுவதையும் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. தனித்த பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் பேணப்படுகின்றது. சபைக்கும் பங்குதாரருக்கும் இடையிலான ஊடகமாக பதவிவழி வந்த பணிப்பாளர் செயற்படுகின்றார்.
3 (5) (xi)	வங்கி நடவடிக்கைகள் மற்றும் வியாபாரத்தின் நாளாந்த முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அதியுயர் நிறைவேற்று அதிகாரியாக பிரதம நிறைவேற்று அதிகாரி தொழிற்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பொது முகாமையாளரே பொறுப்பாவார். பொது முகாமையாளரின் அத்தகைய அதிகாரம் பற்றி சபைச் சாசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.
3 (6) சபை நியமித்த குழுக்கள்		
3 (6) (i)	இவ் வழிகாட்டல்களின் 3 (6) (ii), 3 (6) (iii), 3 (6) (iv) மற்றும் 3 (6) (v) ஆம் வழிகாட்டல்களில் விதித்துரைக்கப்பட்டவாறு குறைந்தது நான்கு சபைக் குழுக்களை ஒவ்வொரு வங்கியும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையிட வேண்டும். சகல குழுக்களும் குழுத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி கூட்ட அறிக்கைகள், பதிவுகள் போன்றவற்றைப் பேணும் பொருட்டு செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது ஒவ்வொரு குழுக்களினதும் செயற்றிறன் பற்றிய அறிக்கையொன்றை, வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் அவற்றின் கடமைகள் மற்றும் வகிபாகங்கள் தொடர்பில் சமர்ப்பிக்க வேண்டும். பணிப்பாளர் சபையானது ஒவ்வொரு உபகுழுவின் அறிக்கையையும் பொது அமர்வில் சமர்ப்பிக்கின்றது.	இணங்கப்பட்டது. சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற, இவ் வழிகாட்டலின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நான்கு சபை உப குழுக்கள் (அப்படிப்பட்டதாக, கணக்காய்வு, மனித வளங்களும் ஊதியமும், பெயர்குறித்த நியமனமும் கூட்டாண்மை ஆட்சியும் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு) தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உபகுழுவிற்குமான விடய ஆய்வெல்லையானது அமுலில் உள்ளதுடன் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு உபகுழுவின் விதிமுறைகளும் நிபந்தனைகளும் வருடாந்தம் மீள்பரிசீலனை செய்யப்படுகின்றன. இலங்கை வங்கி/பணிப்பாளர் சபையின் செயலாளர் உபகுழுக்களின் செயலாளராகவும் பணியாற்றி அறிக்கைகளைத் தயாரிக்கின்றார். உபகுழுக்களின் அறிக்கைகள் கூட்டாண்மை ஆளுகைப் பகுதியில் தரப்பட்டுள்ளன. இலங்கை வங்கியின் ஒரே பங்குதாரர் இலங்கை அரசாங்கமாதலால் வங்கியின் அறிக்கை அதை நிர்வகிக்கும் அமைச்சிற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்றன.
3 (6) (ii)	கணக்காய்வு குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும். அ. கணக்கீடு அத்துடன்/அல்லது கணக்காய்வில் தகைமையும் அனுபவத்தையும் கொண்ட சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளராக குழுத் தலைவர் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. தற்போதைய கணக்காய்வுக்குழு தேவையான தகுதிகளையும் அனுபவங்களையும் கொண்ட சுயாதீன நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.
	ஆ. குழுவின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாக இருக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் சகல பணிபபாளர்களும் நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்களாவர்.
	இ. குழுவானது பின்வருவனவற்றுடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்: (i) உரிய நியதிச்சட்டங்களிற்கு ஒத்திசைவாக வழங்கப்படவுள்ள கணக்காய்வுச் சேவைகளுக்கான வெளியகக் கணக்காய்வாளரின் நியமனம். (ii) காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம் (iii) உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம் அத்துடன் (iv) கணக்காய்வுப்பங்காளரினைப் பணிக்கமர்த்தலானது ஐந்து வருடங்களை விஞ்சாதிருப்பின், அத்துடன் குறித்த கணக்காய்வுப் பங்காளரானவர் முன்னைய பதவிக்கால முடிவுத் திகதியிலிருந்து மூன்று வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வுக்காக மீளப் பணிக்கமர்த்தப்படவில்லையாயின் கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் பதவிவிலகல் அல்லது பதவிநீக்கம்.	இணங்கப்பட்டது. விடய ஆய்வெல்லைக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவானது மற்றைய பலவற்றுக்கிடையில் பின்வரும் பரிந்துரைகளைச் செய்கின்றது: • காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் மத்திய வங்கி வழிகாட்டல்களின் அமுலாக்கம். • உரிய கணக்காய்வு நியமங்களின் பிரயோகம். கணக்காய்வாளர் நாயகமானவர் இவ் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராக இருப்பதனால், வெளியகக் கணக்காய்வாளரின் பணிக்கமர்த்தலில் செயற்படுவதற்கான எந்தவொரு வகிபாகத்தையும் இக்குழு கொண்டிருக்கவில்லை.
	ஈ. ஏற்புடைய நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க வெளியக கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோள் அத்துடன் கணக்காய்வு செயல்முறையின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழுவானது மீளாய்வுசெய்துகண்காணிக்கவேண்டும்.	கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் கணக்காய்வாளர் ஆகையால் இலங்கை அரசியலமைப்பிற்கு அமைவாக அவருடைய சுதந்திரம் மற்றும் பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதம் உள்ளது.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	உ. உரிய நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு சாராத சேவைகளை வழங்கும் பொருட்டு வெளியகக்கணக்காளர்கள் ஒருவரை பணிக்கமர்த்துதல் தொடர்பான கொள்கை ஒன்றை குழுவானது விருத்திசெய்து நடைமுறைப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்யும்போது, கணக்காய்வு சாராத சேவைகளின் வெளியக கணக்காய்வாளர் ஒருவரின் மூலமான ஏற்பாடானது வெளியக கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளைப் பாதிப்பதில்லை என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும். கணக்காய்வு சாராத சேவைகளின் ஏற்பாடு தொடர்பில் வெளியகக் கணக்காய்வாளரின் சுதந்திரம் மற்றும் குறிக்கோளை மதிப்பிடும் போது குழுவானது பின்வருவனவற்றை கருத்திற்கொள்ள வேண்டும். i. கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் திறன்களும், அனுபவமும் கணக்காய்வு சாராத சேவைகளின் பொருத்தமான வழங்குனராக அதனை உருவாக்குகின்றதா. ii. வெளியக கணக்காய்வாளரின் மூலமான அத்தகைய தேவைகளின் ஏற்பாட்டில் இருந்து விளையப்பெறும் கணக்காய்வு விளைவு நடாத்தும் போது குறிக்கோள் அல்லது அத்துடன் அல்லது சுதந்திரம் மீது அச்சுறுத்தல் எதுவுமில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பாதுகாப்புமுறைகள் அமுலில் உள்ளனவா. iii. கணக்காய்வு சாராத சேவைகளின் தன்மை தொடர்பு கட்டணமட்டங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனத்திற்குரியதாக தனித்தனியாகவும் மொத்தமாகவும் உள்ள கட்டண மட்டங்கள் என்பன வெளியக கணக்காய்வாளரின் குறிக்கோள் அத்துடன் அல்லது சுதந்திரம் மீது ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதா	கணக்காளர் நாயகமே வங்கியின் கணக்காளர் நாயகம் ஆகையினால் இவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. எவ்வாறாயினும் குழுவானது கணக்காளர் நாயகத்தினால் கணக்காய்வு சாராத வங்கியின் சேவைகளை கணக்காய்வு செய்வதற்கு அவரிற்கு உதவி புரிவதற்கு கணக்காய்வு நிறுவனத்தை நியமனம் செய்யும் ஏற்பாடானது அந்நிறுவனத்தின் சுதந்திரத்தையும் குறிக்கோளையும் பாதிக்காமையை உறுதிசெய்கிறது.
	ஊ. குழுவானது கணக்காய்வு ஆரம்பிக்கும் முன்னர் பின்வருவன உள்ளடங்கலாக கணக்காய்வின் தன்மை மற்றும் நோக்கு எல்லை பற்றி வெளியகக் கணக்காளர்களுடன் கலந்துரையாடி முடிவுக்குவர வேண்டும். (i) கூட்டாண்மை ஆளுகை தொடர்பில் உரிய வழிகாட்டல்களுடன் வங்கியின் இணக்கப்பாட்டு மதிப்பீடு மற்றும் நிதி அறிக்கையிடல் மீது முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் (ii) உரிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகள் அத்துடன் (iii) ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வு நிறுவனங்கள் உள்ளடங்கும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு.	இணங்கப்பட்டது. கணக்காய்வின் நோக்கெல்லை 2023ம் ஆண்டின் கணக்காய்வுக்கு துணைபுரிந்த கணக்காளர் நாயகம் மற்றும் EY பட்டயக்கணக்காளர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. EY 2023ம் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டத்தை முன்வைத்தது மற்றும் அதற்கு குழு இணங்கியது.
	எ. வெளிப்படுத்தல்களிற்காக தயாரிக்கப்படும் வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் அவை கொண்டுள்ள குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையிடல் தீர்மானங்கள் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பினை மேற்பார்வை செய்வதற்காக வங்கியின் நிதியியல் தகவல்களை கணக்காய்வு குழு மீளாய்வு செய்ய வேண்டும். சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் போது, சபையானது குறிப்பாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்: (i) முக்கிய தீர்மான பிரிவுகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து எழுகின்ற முக்கியமான சீராக்கங்கள் (iv) தொடர்ந்து செல்லல் எடுகோள் அத்துடன் (v) தொடர்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு.	இணங்கப்பட்டது. வங்கியின் மாதாந்த, காலாண்டு ரீதியான மற்றும் வருடாந்த நிதி விடயங்களை மீளாய்வு செய்யும் போது குழுவினால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான செய்முறையொன்று உள்ளதுடன் சபைக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	ஏ. குழுவானது இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றியும், அத்துடன் அவசியப்படின், பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வருகைதராத போது கலந்துரையாடப்படக்கூடிய அவ் விடயங்கள் உள்ளடங்கலாக கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்பக்கூடிய ஏதேனும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாட வேண்டும்.	இணங்கப்பட்டது. இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வில் எழுகின்ற விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றி குழு கலந்துரையாடுகின்றது. தேவையாயின் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளர் கூட்டங்கள் நடைபெறும்போது உடனிருந்தனர். மூன்று (Close door meeting) முறை ஆண்டிற்கு கணக்காளர் குழு மூலமாக குழு சந்திப்பு இடம்பெறுகிறது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஜ. வெளியகக் கணக்காய்வாளர்களின் முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமையின் பதில் ஆகியன குழுவினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஒ. வங்கியின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு குறித்து பின்வரும் நடவடிக்கைகளைக் குழு எடுக்க வேண்டும்: (i) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமானதன்மையினை மீளாய்வு செய்தல், மற்றும் திணைக்களமானது அதன் பணியை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது என்பதில் சுய திருப்தி கொள்ளுதல்.	இணங்கப்பட்டது கணக்காய்வு குழு, உள்ளக கணக்காய்வுப் பிரிவின் நோக்கம், செயற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமான அளவு குறித்து மதிப்பாய்வு செய்து பரிந்துரை செய்கிறது. உள்ளக கணக்காய்வு பிரிவின் நோக்கம், செயற்பாடு என்பன கணக்காய்வு குழுவினால் பரிசீலிக்கப்படுகிறது.
	(ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செய்முறைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், மற்றும் அவசியமானவிடத்து, உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகளின் பேரில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல்	இணங்கப்பட்டது. குழு உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமை தன்மையை மீளாய்வதுடன் அவை சம்பந்தமான தேவையான பரிந்துரைகளை மேற்கொள்கின்றது.
	(iii) உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களின் ஏதேனும் செயல்நிறைவேற்ற மதிப்பீட்டினை அல்லது கணிப்பீட்டினை மீளாய்வு செய்தல்	இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு பிரதான உள்ளக கணக்காய்வாளரது செயற்திறனிலான மதிப்பீடு கணக்காய்வு உபகுழுவினால் மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டு முக்கிய முகாமைத்துவ உறுப்பினர்களின் செயற்திறன் மதிப்பீடு பணிப்பாளர் சபையில் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைக்கு அமைய பிரதான உள்ளக கணக்காய்வாளர் அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டது.
	(iv) தலைவர், சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டிற்கான வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் ஆகியோரின் ஏதேனும் நியமனம் அல்லது பதவி முடிவுறுத்தல் குறித்துப்பரிந்துரை செய்தல்	இணங்கப்பட்டது. பிரதான உள்ளக கணக்காய்வு அதிகாரி மற்றும் வெளியிலிருந்து நிமிக்கப்பட்ட கணக்காய்வு அதிகாரிகளது விபரம் தரப்பட்டுள்ளது. ஏனைய உறுப்பினர்கள் வங்கியின் ஊழியர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
	(v) பிரதம உள்ளக கணக்காய்வாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களினதும் யாரேனும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்களினதும் பதவி விலகலினை குழு மதிப்பீடு செய்வதையும் அத்துடன் பதவி விலகும் சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பு சேவை வழங்குனர்கள் அதற்கான காரணத்தினை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதையும் உறுதிசெய்தல்.	இணங்கப்பட்டது. இவ்வாறானதொரு நிலை இவ்வருடத்தில் ஏற்படவில்லை.
	(vi) உள்ளகக்கணக்காய்வுத்தொழிற்பாடானது அவை கணக்காய்வு செய்யும் செயற்பாடுகளில் இருந்து சுயாதீனமானது என்பதையும் இத் தொழிற்பாடானது பாரபட்சமற்றதாகவும் திறமையாகவும் மற்றும் உரிய தொழில்சார்ந்த கவனத்துடனும் ஆற்றப்படுவதையும் உறுதி செய்தல்.	இணங்கப்பட்டது வங்கியின் அமைப்புக் கட்டமைப்பின்படி பிரதான உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழு மூலம் நேரடியாக சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார். மேலும் அவர் வங்கியின் எந்த ஒரு செயற்பாட்டிலும் சுயாதீனமாக இருக்கிறார்.
	ஒ. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் குழு கருத்திற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. உள்ளக விசாரணைகளின் பிரதான முடிவுகளினையும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் கணக்காய்வு குழு மீளாய்வு செய்துள்ளது.
	ஒள. பிரதம நிதியியல் அதிகாரி, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் ஒரு பிரதிநிதி ஆகியோர் சாதாரணமாக கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். ஏனைய சபை உறுப்பினர்களும் பிரதம நிறைவேற்று அலுவலருங்கூட குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாம். எவ்வாறாயினும், ஆண்டுக்கு குறைந்தது இரு தடவையாவது, குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் பிரசன்னமின்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் சந்திப்பினை மேற்கொள்ள வேண்டும். எனினும், உபகுழுவானது வருடத்திற்கு இருமுறை பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமல் சுயாதீனமாக வெளியகக் கணக்காய்வாளாகளைச் சந்திக்கின்றது.	இணங்கப்பட்டது. பிரதம நிதியியல் அதிகாரரி/மேலதிக பொது முகாமையாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம இடர்நோக்கை அலுவலர் மற்றும் இணக்கப்பாட்டு அலுவலர் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் பிரதிநிதிகள் உபகுழு கூட்டங்களில் பங்கேற்கின்றார்கள். உபகுழுவின் அழைப்பின் பேரில் பொது முகாமையாளரும் கூட்டங்களில் பங்கேற்கின்றார். அவசியமாயின், ஏதேனும் விளக்கங்களுக்காக முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் மூடிய கதவு கூட்டங்கள் உள்ளடக்கப்படுவதுடன் இது கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் பிரதிநிதியால் தீர்மானிக்கப்படுகின்றது. மேலே "h" இல் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வருடத்தில் நிறைவேற்றுநர்களது பிரசன்னமின்றி கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் பிரதிநிதிகளுடன் இரண்டு மூடிய கதவு கூட்டங்கள் இடம்பெற்றன.
	க. குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்: (i) எந்தவொரு விடயத்தையும் அதன் ஆய்வெல்லைக்குள் விசாரணை செய்வதற்கான வெளிப்படையான அதிகாரம் (ii) அக்குழு அவ்வாறு செய்வதற்குத் தேவையான வளங்கள் (iii) முழுமையான தகவல் கிடைப்பனவு அத்துடன் (iv) வெளியக தொழிற்துறை ஆலோசனையை பெறுவதற்கு மற்றும் தேவை ஏற்படின் அதனுடன் தொடர்புடைய அனுபவத்துடன் கூடிய வெளியாட்களினை வரவழைப்பதற்குமான அதிகாரம்.	இணங்கப்பட்டது.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ங. குழுவானது கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்து உரிய கவனத்துடன் கிரமமாக கூட வேண்டும் என்பதுடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது அதன் முடிவுகளைப் பதிவு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது. கணக்காய்வு குழு கிரமமான கூட்டங்களினை அட்டவணைப்படுத்தியது. தேவைப்படின் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. குழுவானது ஆண்டுக் காலப் பகுதியில் 10 தடைவைகள் கூடியது. கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் சம்பந்தமாக உரிய கவனத்துடன் குழுவின் உறுப்பினர்கள் சேவையாற்றினர் அத்துடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போதான முடிவுகளானவை சபையின் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளரால் பேணப்படும் கூட்டக் குறிப்புக்களில் பதியப்படுகின்றன.
	ச. சபையானது பயனுறுதி வாய்ந்த தகவலளிப்பு முறையொன்றில் பின்வருவனவற்றை வெளிப்படுத்த வேண்டும்: (i) கணக்காய்வுக் குழுச் செயற்பாடுகளின் விபரங்கள் (ii) இவ் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை அத்துடன் (iii) அத்தகைய கூட்டங்களுக்கு ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரும் வருகைதந்த விபரங்கள்	இணங்கப்பட்டது. கணக்காய்வுக்குழு அறிக்கையில் 122இ123ம் பக்கத்தில் குழுச் செயற்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. குழுவின் வருகை தொடர்பான விபரங்கள் 116 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.
	ஞ. குழுவின் செயலாளரானவர் (கம்பனிச் செயலாளராகவோ உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் தலைவராகவோ இருக்கக்கூடியவர்) குழுக் கூட்டங்களின் விபரமான அறிக்கைகளைப் பதிவு செய்து பேண வேண்டும்.	இணங்கப்பட்டது. சபை செயலாளர் அல்லது இலங்கை வங்கியின் செயலாளர் குழுவின் செயலாளராகவும் இருப்பதுடன் அறிக்கைகளினை பேணுகின்றார்.
	ட. சாத்தியமான முறையற்ற நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு, அல்லது ஏனைய விடயங்கள் சம்பந்தமாக வங்கியின் ஊழியர்கள் நம்பிக்கையுடன் கரிசனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குகளை குழு மீளாய்வு செய்ய வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய விடயங்கள் குறித்து நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணைக்கும் பொருத்தமான தொடர் நடவடிக்கைக்கும் உரியவாறான ஒழுங்குகள் அமுலில் உள்ளன என்பதையும் வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாகச் செயற்படுவதையும் குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் அம்சங்களை உள்ளடக்கும் விசில் பிளோவர் கொள்கையொன்று அமுலில் உள்ளதுடன் பொருத்தமான தொடர் நடவடிக்கை கருதி முக்கியமான முடிவுகள் 2023ஆம் ஆண்டு கணக்காய்வுச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கியின் உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாக கணக்காய்வு குழு உள்ளது.
3 (6) (iii)	மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்: அ. வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பிலான ஊதிய கொள்கையை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதிசார் கொடுப்பனவுகள்) குழு வரையறுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பணிப்பாளர்களின் ஊதியமானது, இலங்கை அரசாங்கத்தினால் உரிய அமைச்சினூடாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்/கடிதங்கள் மற்றும் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைய உள்ளது. வங்கியானது மேலே கூறிய சுற்று நிருபங்களின் அடிப்படையில் ஓர் ஊதியக் கொள்கையையும் 2023ஆம் ஆண்டில் ஏற்படுத்தியுள்ளது. முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்களுக்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியக் கொள்கை நடைமுறையில் உள்ளது. இந்த குழு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முக்கிய முகாமைத்துவ அங்கத்தவர்களிற்கான ஊதியத்தினை பரிந்துரை செய்கிறது. இவ்வாண்டு இரு முறை இக்குழு மீளாய்வு செய்ய கூடியுள்ளது.
	ஆ. பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை குழுவானது வகுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான (KMP) முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் முழுச் சபையின் பங்குபற்றலுடன் நிறுவப்பட்டது. KMPக்கான குறிக்கோள்களும் இலக்குகளும் வங்கியின் கூட்டாண்மைத திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. KMP ஊடாக கூட்டாண்மைத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு பொது முகாமையாளர் பொறுப்பாளியாவார். மேற்குறிப்பிட்ட திட்டங்களின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டுக்கு பொதுமுகாமையாளர் மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களுக்கு நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை உபகுழுவானது பரிந்துரைத்துள்ளது. பணிப்பாளர்களர் நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்களாதலால் அவர்களுக்கு அத்தகைய குறிப்பிட்ட குறிக்கோள்கள் நிறுவப்படவில்லை.
	இ. வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்குரியதாக பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியின் செயல்நிறைவேற்றத்தினை காலக்கிரமமாக குழு மதிப்பிட வேண்டும் என்பதுடன் ஊதியம், நலன்கள் மற்றும் செயற்றிறன் அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான அடிப்படையினையும் வரையறுக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பிரதான உள்ளக கணக்காய்வாளர் பிரதான இடர் அதிகாரி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கப்பாடு) தவிர பொது முகாமையாளர் உட்பட கூட்டாண்மை நிர்வாகத்தின் உறுப்பினர் ஆண்டு இறுதி மதிப்பீடு இந்த குழுவில் மேற்கொள்ளப்பட்டது.
	ஈ. பிரதம நிறைவேற்று அலுவலர் குறித்த விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தை தவிர குழுவின் அனைத்துக் கூட்டங்களிற்கும் பிரதம நிறைவேற்று அலுவலர் வருகை தரவேண்டும்.	இணங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (6) (iv)	நியமனக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்:	பெயர்குறித்த நியமன மற்றும் கூட்டாண்மை ஆட்சிக் குழுவொன்றை வங்கி உருவாக்கியுள்ளது. இவ் வழிகாட்டலின் கீழ் தரப்பட்ட பெயர் குறித்தான நியமனக் குழுவின் கடமைகளுக்கு மேலதிகமாக, ஏற்புடைய கூட்டாண்மை ஆட்சித் தத்துவங்களை உறுதிப்படுத்தலுடன் தொடர்பான ஏனைய சில கடமைகள் இக் குழுவின் விடய ஆய்வெல்லையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக் குழுவின் சாசனம் 2023இல் மீளாய்வு செய்யப்பட்டது. மீளாய்வுக்காக இக் குழு ஆண்டுப்பகுதியில் பத்து முறை கூடியுள்ளது.
	அ. புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கான/ நியமிப்பதற்கான நடைமுறையொன்றைக் குழு அமுலாக்க வேண்டும்.	வங்கியானது எந்த அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வருகின்றதோ அந்த அமைச்சரினாலேயே பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். கூறப்பட்ட அமைச்சரின் அனுமதியுடன் சபையினால் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பிரதான முகாமைத்துவ ஆளணியினை நியமிப்பதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுவான நடைமுறை/திட்டம் உள்ளது. இலங்கை வங்கியின் ஆணைகளது ஏற்பாடுகளுக்கமைய, குறித்த அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையானது பொது முகாமையாளரை நியமிக்கின்றது. பொது முகாமையாளர் மற்றும் KMP ஆகியோரது நியமனத்திற்கு சபை அங்கீகரிக்கப்பட்ட செயல்முறை/திட்டம் காணப்படுகின்றது.
	ஆ. சபையின் ஒட்டுமொத்த பொறுப்பு நிறைவேற்றம் நோக்கியதாக சம்பந்தமுறும் பணிப்பாளரினால் செய்யப்படும் செயற்றிறன் மற்றும் பங்களிப்பினைக் கவனத்தில் எடுத்து, தற்காலப் பணிப்பாளர்களின் மீள் தேர்வினை குழுவானது கருத்திற்கொண்டு பரிந்துரை செய்ய (அல்லது பரிந்துரை செய்யாமலிருக்க) வேண்டும்	பணிப்பாளர்கள் உரிய அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை.
	இ. பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளிற்கு நியமிப்பதற்காக அல்லது பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ளப்படவுள்ள தகுதிக்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் அடிப்படைப் பண்புகள் போன்ற தகுதிவிதிகளை குழு வகுத்தமைக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கமைய, பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். ஏனைய பிரதான முகாமைத்துவப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பதவியுயர்த்தப்படுவதற்கு தகுதியுடையதாக இருப்பதற்குத் தேவையான பண்புகளை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுத் திட்டங்கள் விதித்துரைக்கின்றன. ஏனைய முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது பதிவியுயர்விற்கு தகுதியடைவதற்கு தேவையான பண்புகளை சபை அங்கீகரித்த பதவியுயர்வு திட்டங்கள் குறிப்பிடுகின்றன.
	ஈ. வழிகாட்டல் 3 (3) இல் தரப்பட்ட தகுதி விதியில் குறித்துரைக்கப்பட்டவாறும் நிதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாக உள்ளனர் என்பதை குழு உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கப்பட்டது. வழிகாட்டல் 3(3) இல் தரப்பட்டுள்ள தகுதிவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச்சட்டங்களில் விதித்துரைக்கப்பட்டவாறும் பதவியினை வகிப்பதற்கு பணிப்பாளர்கள் தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வருடாந்த பிரகடனம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பிரதான முகாமைத்துவ ஆளணியினரானோர், அவர்கள் பிரதான முகாமைத்துவ ஆளணியினராக பதவியுயர்த்தப்படும் அல்லது நியமிக்கப்படும் போது, அவர்களின் பதவிகளை வகிப்பதற்கு தேகாரோக்கியம் பொருந்திய பொருத்தமான ஆட்களாகவுள்ளனர் என்பதையும் குழு உறுதிப்படுத்துகின்றது.
	உ. மேலதிக/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகள் பற்றியும் ஓய்வுபெறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் சார்பில் அடுத்துவரும் பதவிக்கான ஒழுங்குகள் பற்றியும் குழுவானது காலத்திற்குக் காலம் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது. KMP களுக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்வுத்திட்டம் காணப்படுகின்றது. அவசியமான மேலதிக அல்லது புதிய நிபுணத்துவம் ஒன்றில் சபை உபகுழுவினால் சிபாரிசு செய்யப்படுகின்றது அல்லது சபையினால் தீர்மானிக்கப்படுகின்றது.
	ஊ. குழுவுக்கு சுயாதீனமான பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும் என்பதுடன் சுயாதீனமான பணிப்பாளர்களின் பெரும்பான்மையுடன் அது பொருத்தமுடையதாக உருவாக்கப்பட வேண்டும். பிரதான நிறைவேற்று அலுவலரானவர் அழைப்பின் மூலம் கூட்டங்களில் சமுகமளிக்கலாம்.	இணங்கப்பட்டது.
3 (6) (v)	ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்: அ. குழுவானது குறைந்தது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற பரந்துபட்ட இடர் வகுதிகளை மேற்பார்வை செய்கின்ற பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை கொண்டிருக்க வேண்டும். குழுவானது பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்பதுடன் குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் சபையின் சார்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.	இணங்கப்பட்டது. குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் கடன், சந்தை, செயற்பாட்டு, மதிப்புசார் மற்றும் தந்திரோபாய இடர்களை மேற்பார்வை செய்கின்ற பிரதம இடர் அலுவலர் ஆகியோரை கொண்டுள்ளது. குழுவின் வேண்டுதலின் பேரில் பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதம நிதி அலுவலர், மற்றும் இணக்கப்பாட்டு அலுவலர் ஆகியோர் அனைத்துக் குழுக் கூட்டங்களிற்கும் வருகை தருகின்றனர். வேறு எவரேனும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் பங்குபற்றல் குழுவுக்குத் தேவைப்படும் போது அவர்கள் அழைக்கப்படுவர். குழுவானது அதற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்புக்குள் பிரதான முகாமைத்துவ ஆளணியுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	ஆ. பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் தகவல்களுக்கூடாக மாதாந்த அடிப்படையில் வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் போன்ற சகல இடர்களையும் குழுவானது மதிப்பிட வேண்டும். துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, வங்கி அடிப்படையிலும் குழு அடிப்படையிலும் இடர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது. வங்கியின் சுயாதீன ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, தந்திரோபாய, மற்றும் மதிப்புசார் இடர்களை இக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஆவணங்களின் அடிப்படையில் மாதாந்தம் மதிப்பிடுகின்றது என்பதுடன் சுருக்கமான அறிக்கைகள் குழுவின் ஒழுங்குமுறையான கூட்டங்களில் குழுவுக்கும் அதன் பின்னர் அடுத்த உடனடியான சபை கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்படுகின்றன. துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் குறித்து, இடர்களைக் கவனிப்பதற்காக ஒரு இடர் முகாமைத்துவ கட்டுப்பாட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சபை அங்கீகரித்த குழு இடர் கொள்கை ஒன்று அமுலில் உள்ளது.
	இ. குறித்த இடர்களைக் கவனத்திற் கொள்வதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணிய மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்குள் அவ் இடர்களை முகாமை செய்வதற்கும் கடன் குழு மற்றும் சொத்து-பொறுப்புக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமான தன்மை மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை குழு மீளாய்வு செய்ய வேண்டும்.	இணங்கப்பட்டது. இந்த பணி ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகிறது. 2022ம் ஆண்டிற்கான மீளாய்வு 2023ம் ஆண்டில் செய்யப்பட்டது. 2023ம் ஆண்டிற்கான மீளாய்வுக்கான கூட்டம் ஏப்பிரல் மாதத்தில் கூட திட்டமிடப்பட்டுள்ளது
	ஈ. வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் விவேக மட்டத்திற்கு அப்பால் உள்ள மட்டங்களில் குறித்த இடர்கள் காணப்படும் பட்சத்தில் குறிப்பிட்ட இடர்களின் தாக்கத்தினை குறைப்பதற்காக குழுவானது உடனடியான சீராக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.	இணங்கப்படவில்லை எல்லைகளுக்கு அப்பாற் சென்ற குறித்த கணிய மற்றும் பண்புசார் இடர்கள் பிரதம இடர் அலுவலரினால் கண்காணிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட இப் பிரச்சினைகளின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடப்படுகின்றது.
	உ. இற்றைப்படுத்தப்பட்ட வியாபாரத் தொடர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக சகல இடர் முகாமைத்துவ அம்சங்களையும் மதிப்பிடும் பொருட்டு குறைந்தது காலாண்டு ரீதியில் குழு கூட வேண்டும்.	இணங்கப்பட்டது. இவ் ஆண்டின் போது குழுவானது ஆறு (06) கூட்டங்களை நடாத்தியுள்ளது. கூட்டங்கள் மற்றும் வருகை குறித்த விபரங்கள் 116 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன
	ஊ. குறிப்பிட்ட இடர்களினை அடையாளம் காண்பதற்கு அல்லது குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு அத்துடன்/அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் நெறிப்படுத்தப்பட்டவாறு உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறிய பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை குழு எடுக்க வேண்டும்.	வங்கியில் முறைசார்ந்த ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை செயல்முறை அமுலில் உள்ளது.
	எ. சபையின் கருத்துக்கள், இணக்கம் அத்துடன்/அல்லது குறித்த வழிகாட்டல்களைக் கோரி சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் ஒரு வரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை குழு சமர்ப்பிக்க வேண்டும்.	இணங்கப்பட்டது. பரிந்துரைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அறிக்கைகளுடன் சேர்த்து அடுத்த உடனடியான சபைக் கூட்டத்தில் கூட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.
	ஏ. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு ஒரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை குழு உருவாக்க வேண்டும். பிரதான முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்படும் அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் இணக்கப்பாட்டு தொழிற்பாட்டினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் காலக்கிரமமாக குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.	இணங்கப்பட்டது. வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குறுத்தல் வழிகாட்டல்கள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடும் பொருட்டு தனியானவொரு இணக்கப்பாட்டு தொழிற்பாட்டை வங்கி உருவாக்கியுள்ளது. இத் தொழிற்பாட்டிற்கு அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவர் தலைமை வகிப்பதுடன் அவர் காலாண்டு ரீதியான இணக்கப்பாட்டு அறிக்கைகளைக் குழுவுக்கும் மாதாந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளைச் சபைக்கும் சமர்ப்பிக்கின்றார். வியாபார செயற்பாடுகளின் சகல துறைகள் தொடர்பிலும் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடனான வங்கியின் இணக்கப்பாட்டினையும் இணக்கப்பாட்டு தொழிற்பாடு மதிப்பிடுகின்றது.
3 (7) தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்		
3 (7) (i)	யாரேனும் ஆளுடன், அத்துடன் குறிப்பாக இவ் வழிகாட்டலின் நோக்கங்களுக்காக 'தொடர்புடைய தரப்பினர்' ஆக கருதப்பட வேண்டிய ஆட்களின் பின்வரும் வகுதிகளுடன் வங்கியின் ஏதேனும் கொடுக்கல் வாங்கலிலிருந்து எழக்கூடிய ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும்:	இணங்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் இது குறித்தான ஏதேனும் ஆதாய முரண்பாட்டினைத் தவிர்க்கும் பொருட்டு தொடர்புடைய தரப்பினர், அவர்களின் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கூடுதல் சாதகமான கவனிப்பை வழங்குதல் மீதான மட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை ஒன்று உள்ளது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
	அ. வங்கியின் துணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று ஆ. வங்கியின் இணைக் கம்பனிகளில் ஏதாவதொன்று இ. வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவர் ஈ. வங்கியின்பிரதானமுகாமைத்துவஆளணியினரில்யாரேனுமொருவர் உ. வங்கியின்பணிப்பாளர்களில்யாரேனுமொருவரின்அல்லதுபிரதான முகாமைத்துவ ஆளணியினரில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் ஊ. வங்கியில் பொருண்மையான ஆதாயத்தைக் கொண்டுள்ள பங்குதாரர் ஒருவர் எ. ஒரு கவனத்தின் மீது கணிசமான பணிப்பாளர்களில் யாரேனுமொருவர் அல்லது வங்கியின் பணிப்பாளர்களில் யாரேனுமொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது அதன முக்கியமான பங்குதாரர்களின் யாரேனுமொருவர்.	தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் அக்கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் வேண்டப்படுகின்றனர். இக் கொடுக்கல் வாங்கல்கள் தன்னியக்க முறைமையொன்றின் ஊடாகக் கண்காணிக்கப்படுகின்றன.
3 (7) (ii)	இவ் வழிகாட்டலினால் தழுவப்பட வேண்டிய தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வகை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்: அ. ஆகக்கூடியகடன்வசதிபற்றிநாணயச்சபையின் வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறான கடன்வசதி வகை எதனையும் வழங்குதல், ஆ. வைப்புக்கள், கடன் பெறல்கள் மற்றும் முதலீடுகளின் வடிவில் வங்கியில் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல், இ. வங்கிக்குவழங்கப்பட்டஅல்லதுவங்கியிலிருந்துபெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக்கொண்ட ஏதேனும் சேவைகளின் ஏற்பாடு, ஈ. அந்தரங்கமான அல்லது வேறு வகையான பரகசியப்படுத்தப்படாத காப்புத் தகவல்களை பகிரக்கூடிய, வங்கிக்கும் அத்தகைய தொடர்புடைய தரப்பினர்களுக்கும் இடையிலான அறிக்கையிடும் ஒழுங்குமுறையினை மற்றும் தகவல் பாய்ச்சல்களை உருவாக்குதல் மற்றும் பேணுதல்.	இணங்கப்பட்டது. இது குறித்தான தகவல்களானவை ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
3 (7) (iii)	ஒரே வியாபாரத்தினை நடாத்திச் செல்கின்ற வங்கியின் ஏனைய கூறுகளுக்கு வழங்கப்பட்டவற்றை விட ஷகூடுதல் சாதகமான கவனிப்பை தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கும் ஒரு விதத்தில், மேல் 3 (7) i ஆம் இலக்க வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு அத்தகைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களில் வங்கி 'கூடுதல் சாதகமான கவனிப்பு' என்பது பின்வருவனவன உள்ளடங்கலான கவனிப்பு எனப் பொருள் கொள்ளப்பட்டு அதனையும் உள்ளடக்க வேண்டும்: அ. சபையினால் வரையறுக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்குறுத்தல் மூலதனத்தின் மதிநுட்மான சதவீதமொன்றை விஞ்சி, தொடர்புடைய தரப்பினருக்கு 'மொத்த தேறிய கடன்வசதி' வழங்கல். இவ் உப வழிகாட்டலின் நோக்கங்களுக்காக: (i) கடன்வசதி என்பது ஆகக்கூடிய கடன்வசதி தொகை தொடர்பில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான கடன்வசதி எனப் பொருள்பட வேண்டும். (ii) ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் கொண்ட முதிர்ச்சியுடன் வங்கியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் ஆவணங்களில் அத்தகைய தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட காசு பிணையம் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றை மொத்தக் கடன்வசதியிலிருந்து கழிப்பதன் மூலம் 'மொத்த தேறிய கடன்வசதி' கணிப்பீடு செய்யப்பட வேண்டும் ஆ. தொடர்புபடாத ஒப்பிடக்கூடிய இணைத் தரப்புடனான ஒப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்காக, வங்கியின் சிறந்த கடன் வழங்கல் வீதத்தினைக் காட்டிலும் குறைவான வட்டி வீதமொன்றை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தினைக் காட்டிலும் கூடுதலாகச் செலுத்துதல் இ. ஒரு மதிப்பீட்டு நடைமுறையில்லாமல் தொடர்புடைய தரப்பினர் ஒருவருக்கு சேவைகளை வழங்குதல் அல்லது அவரிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்தல். உ. உரிய மதிப்பீடுகளின்றி யாராவது தொடர்புடைய தரப்பினரிடம் சேவைகளைப் பெறுவது அல்லது சேவைகளை வழங்குவது ஊ. முறைப்படியான கடமைகள் மற்றும் செயற்பாடுகளை செயலாற்றுவதற்கு தேவையானவை தவிர, அறிக்கையிடல் வரிசைகள் மற்றும் தகவல் பாய்ச்சல்கள் சாத்தியமான தனியுரிமை, இரகசியமான அல்லது இல்லாவிடின் உணர்திறனான தகவல்கள் பகிரப்படுவதற்கு இட்டுச் செல்லலாம்.	இணங்கப்பட்டது. வங்கியானது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயல்முறை ஒன்றின் மூலம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிக்கின்றது. இணக்கப்பாட்டு அலகு மாதாந்தம் தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல்களை பணிப்பாளர் சபைக்கு மாதாந்தமும், கணக்காய்வு உபகுழுவிற்கு ஒவ்வொரு காலாண்டும் அனுப்பி வைக்கின்றது. ஏதேனும் இணக்கப்பாடின்மையானது பணிப்பாளர் சபைக்கு கொண்டு வரப்பட்டு அவர்களினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
3 (7) (iv)	யாதாயினுமொரு கடன்வசதியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளரை விட ஏனைய பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாமல், அத்தகைய கடன் வசதிக்கு சாதகமாக வாக்களித்து வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்படாலொழிய, வங்கியானது அதன் பணிப்பாளர்களில் எவருக்கேனும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அத்தகைய கடன்வசதியினை வழங்கலாகாது. அத்துடன் இக் கடன்வசதியானது நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் வரையறுக்கப்படக்கூடிய அத்தகைய பிணையின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்	இணங்கப்பட்டது.
3 (7) (v)	(அ) ஒருவருக்கு அல்லது ஆளொருவரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஆள் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு வங்கியொன்றினால் யாதாயினுமொரு கடன்வசதி வழங்கப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய ஆள் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக அதற்குப் பின்னர் நியமிக்கப்படுமிடத்தும் இந் நோக்கங்கருதி நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அவசியமான பிணையினை, பணிப்பாளர் ஒருவராக அவ் ஆளின் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், பெற்றுக்-கொள்வதற்கு வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	இணங்கப்பட்டது.
	ஆ. மேலுள்ள வழிகாட்டல் 3(7)(v)(அ) இல் தரப்பட்டவாறான காலப்பகுதியில் அத்தகைய பிணை வழங்கப்படாதவிடத்து, கடன்வசதி வழங்கல் காலத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி அல்லது அத்தகைய பணிப்பாளரை நியமிக்கும் திகதியிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதி ஒன்றின் நிறைவுக்காலம் இவையிரண்டில் எது முதலில் வருகின்றதோ அக் காலப்பகுதிக்குள், கடன்வசதி குறித்தான ஏதேனுமொரு நிலுவைத் தொகையினை வட்டி ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுக்க வேண்டும். இ. மேற்போந்த உப வழிகாட்டல்களுடன் ஒத்திசையத் தவறுகின்ற யாரேனுமொரு பணிப்பாளரானவர் பணிப்பாளர் பதவியிலிருந்து நீங்கியுள்ளதாக கருத்தப்பட வேண்டும் என்பதுடன் அவ் விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஈ. வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான திட்டமொன்றின் கீழ் அக் கடன்வசதி வழங்கப்பட்டும் அத்துடன் அக் கடன்வசதி வழங்கல் காலப்பகுதியில் அத்தகைய வங்கியின் ஊழியரொருவராக இருந்த பணிப்பாளரொருவருக்கு ஏற்புடையதாகாது.	
3 (7) (vi)	வங்கியொன்றின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான திட்டமொன்றின் அடிப்படையிலான சந்தர்ப்பத்தை விட அல்லது மேலுள்ள வழிகாட்டல் 3(7)(v) இற்கமைவாக வழங்கப்படும் கடன்வசதி தொடர்பில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான பிணையின் மூலம் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்தை விட எவரேனும் ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அவ் ஊழியர் அல்லது நெருங்கிய உறவினர் கணிசமானளவு ஆதாயத்தைக் கொண்டுள்ள யாரேனும் சம்பந்தப்பட்டவருக்கு யாதாயினுமொரு கடன்வசதியை அல்லது கட்டணங்கள் அத்துடன்/அல்லது தரகுகளின் கைவிடலுடன் தொடர்பான கூடுதல் சாதகமான கவனிப்பை அத்தகைய வங்கி வழங்கலாகாது.	இணங்கப்பட்டது. வங்கியின் சகல ஊழியர்களுக்கும் ஏற்புடையதான பொதுவான அலுவலர் குழாமின் கடன் திட்டங்களின் கீழான சந்தர்ப்பத்தினை விட கூடுதல் சாதகமான நியதிகள் தொடர்பில் எதுவித சாதகமான கவனிப்பு மற்றும் கடன்வசதி வங்கியின் எந்தவொரு ஊழியருக்கும் வழங்கப்படுவதில்லை. இது குறித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வங்கி ஊழியர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும் சாதகமான கவனிப்பு/கடன்வசதி எதுவும் வழங்கப்படுவதில்லை.
3 (7) (vii)	மேலுள்ள வழிகாட்டல் 3(7)(v) மற்றும் 3(7)(vi) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட கடன்வசதியோ, அக் கடன்வசதியின் ஏதேனும் பகுதியோ, அதன் மீதான ஏதேனும் நிலுவை வட்டியோ நாணயச் சபையின் முன் அனுமதியின்றி இரத்துச் செய்யப்படலாகாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமின்றிய ஏதேனும் இரத்துச் செய்தலானது வெறிதாகவும் செயல்வலுவின்றியும் இருத்தல் வேண்டும்.	இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் போது அத்தகையதோர் சந்தர்ப்பம் எழுந்திருக்கவில்லை
3 (8) வெளிப்படுத்துதல்கள்		
3 (8) (i)	சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்: அ. மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்தல் அதிகாரங்கள் மற்றும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்க வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் என்பன தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படல், அத்துடன். ஆ. அத்தகைய நிதிக்கூற்றுக்களானவை சுருக்கமான வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதென்பதும்.	இணங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

பிரிவு	கொள்கை	2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இணக்கப்பாட்டு மட்டம்
